ஸ்ரீ

ஸ்ரீயாதவகிரிமாகாத்மியம்.

இதனை
பெங்களூர் ஸெண்ட் ஜோஸப்காலேஜில் பிரதம
தமிழ்ப்பண்டிதராகிய
கோழியாலம் சப்தம் வங்கீபுரம்
ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள்,

மைசூர் கமீஷனர் ஆபீசில் தப்தர் டிபார்டு மென்டு
பென்ஷன்மானேஜர்
ஆ. ப. ஏகாம்பரமுதலியாரும்,

ரெஸிடென்டு ட்ரெஷரி அகௌன்டன்டு
வே. தேவராஜ முதலியாரும்,

கேட்டுக்கொண்டபடி தமிழில் மொழிபெயர்த்து
கோயம்புத்தூர் ஜில்லா ஆப்காரி இஜாராதார்
ஆ. தொப்பை முதலியார்
குமாரர்
ஆ. தோ. திருவேங்கடசாமி முதலியாரவர்கள்
பேருதவியால்

பெங்களூர்:

ஆக்ஸ்போர்ட் அச்சியந்திரசாலையில்
பதிப்பித்தனர்.

கா-ஹு கார்த்திகை-மீ.

Copy right Registered.

ஸ்ரீ

ஸ்ரீயாதவகிரிமாகாத்மியம்.

முகவுரை.

புருஷர்கள் அடையத்தகும் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களில் நான்காவதான வீட்டின்பமே யென்றும் அழியாததாகையால் அதை அடைதற்கு விரோதமில்லாவண்ணம் மற்ற மூன்றையும் விரும்பி முயல்வதே புத்திசாலிகளான மேன்மக்களுக்கு அடுத்ததென்பது யாவர்க்கும் தெரிந்த விஷயமே. இங்ஙனம் வைதிகசமயத்தோர்களில்மதங்கள் பலவகைப்பட்டிருப்பினும் அவற்றிற்கெல்லாம் ஆதாரமாய் விளங்குவது வேதம். அதன் உண்மைப்பொருளை யுணர்ந்து தெளிதல் பெரும்பாலும் யோகிகளுக்கும் கடின மாகையால், அதற்கு முன்னோர்கள் தத்தம் புத்திக்கு எட்டியவாறு பலவிதமாய்ப் பொருள் செய்திருப்பினும் *"ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே வேதாச்சாஸ்த்ரம் பரந்நாஸ்திநதைவம்கேசவாத்பரம்" என்றும் † "நாராயணாத்பரம்தைவம் மந்த்ரமஷ்டாக்ஷராத்பரம் குரும்ததுபதேஷ்டுச்ச பரம்நோபலபேத்க்வசித்" என்றும் "இறக்கு மிறையிறுத்துண்ண வெவ்வுலகுக்குந்தன் மூர்த்தி நிறுத்தினன்றெய்வங்களாக வத்தெய்வநாயகன்றானே மறுத்திருமார்பன்" என்றும் "கறுத்தமனமொன்றும் வேண்டாகண்ணனல்லாற்றெய்வமில்லை" என்றும் "பேசநின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கு நாயகனவனே கபாலன் மோக்கத்துக்கண்டு கொண்மின் தேசமாமதில் சூழ்ந் தழகாயதிருக்குருகூர தனுள் ஈசன்பாலோர்வம் பறைதலென்னுவதிலிங்கியர்க்கே" என்றும் இன்னும் இவ்விதம் பலபெரியோர் பகர்ந்தருளினராகையாலும் + "ததஃ புராரிபுப்ராஹ ஸாக்ஷாந்மோக்ஷப்ரதோஹரிஃ மமாபிபத்மஜஸ்யாபி ரக்ஷகோபகவாந்ஹரிஃ" என்கிற சிவபிரானது திருவாக்கினாலும் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளைச் சரணமென்றடையும் பரமபாகவதர்களுக்கே மொக்ஷமுண்டென்பது திண்ணமாய்த்திகழ்கின்றது. அவ்வெம்பெருமா

---

* சத்தியம், சத்தியம், மறுபடியும் சத்தியம் கையை உயரவெடுத்துச் சொல்லுகிறேன்; வேதத்தைவிட உயர்ந்த சாஸ்திரமும்இல்லை கேசவனைவிட உயர்ந்த தெய்வமுமில்லை.

† நாரரயணனைக்காட்டிலும் உயர்ந்ததெய்வமும் திருவஷ்டாக்ஷர மந்திரத்தினும் உயர்ந்தமந்த்ரமும் அதைஉபதேசிக்கும் குருவைவிட உயர்ந்த ஆசார்யனும் எங்கேயும்கிடைப்பதில்லை.

+ எனக்கும்பிரமனுக்கும் ரக்ஷகர் ஸாக்ஷாத்ஹரியேயாகையால் மோக்ஷத்தைக்கொடுத்தருள்வோர் அவரேயாகின்றாரென்று புராரியாகும் சிவபிரான்செப்பினார்.

னது பரம் வியூகம் விபவம் அர்ச்சை அந்தர்யாமி என்னும் அஞ்சவிதஅவதாரங்களில், இக்காலத்தில் யாவர்க்கும் கண்களிக்கக்கண்டு வணங்குதற்கு ஸாத்யமானது அர்ச்சாவதாரமேயாம். அந்த அவதாரஸ்தலங்கள் இப்பூவுலகின் கண் அநேகமிருந்தாலும் அவைகளில் முக்கியமான ஸ்வயம் வியக்தஸ்தலங்களிற் சிறந்தயாதவகிரியின்மேல்திருநாராயணர் பெரியபிராட்டியாருடன் தம்மை அடைந்தவர்க்கு இங்கும் அங்கும் பேரானந்தத்தை அருளி வீற்றிருக்கின்றனர்.

துவாபரயுகத்தின்கடைசியில் வியாஸர்திருநிவர்கள் இனிவரலாகும் கலியுகத்தில் அக்கலிதோஷம் இன்றியாங்கள்வசிக்கத்தக்க வொருபுண்யஸ்தலத்தை அருளிச்செய்யவேண்டுமென்று ஸ்ரீயப்பதியைப் பிரார்த்திக்கையில், அவ்வெம்பெருமான் இந்த ஸ்தலத்தையே சுட்டிமொழிந்தருளினாராகையால்இக்காலத்தில் யாவரும் இதன்பெருமையைப் படித்துங்கேட்டும் இத்தலத்திற்குச்சென்றும் தாங்கடைத்தேறவேண்டியது மனிதஜந்மமெடுத்ததற்கு முக்கியபயனாகின்றது. முன்னோர்கள் நாரதபுராணாதிகளில் ஆங்காங்கு புகலப்பெற்ற இதன்பெருமைவாய்ந்த அத்தியாயங்களை ஒன்றாய்த் திரட்டிச் சேர்த்துள்ளதால் இதற்கு இப்பேர்வழங்கலாயது.

இது வடமொழியிலேயே விசதமாயிருப்பதாலும் இப்போது தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலார்க்குத் தமிழ்தவிரஸம்ஸ்கிருதத்தில் அவ்வளவு பயிற்சியின்மையாலும் யாவரும் தெரிந்துகொள்ளும்படி அதிலிருந்து தமிழில்மொழிபெயர்க்கப் பெற்றது.

இதையெல்லோர்க்கும் பொருள்விளங்குமாறு எளியநடையில் எழுதி மற்றுங் கொஞ்சங் கடினமாயுள்ள பதங்களுக்கும் பொருளெழுதிப்பின்னால் அமைத்திருக்கின்றேன்.

சிலர்க்கு வசனமேபடிப்பதோடு இடையிடையே செய்யுளுங்கலந்திருக்க இஷ்டமிருக்குமென்று அசனத்தோடு வியஞ்சனங்கலப்பதுபோல் அத்தியாயந்தோறும் பெரும்பாலுங் கடைசியில் ஆங்காங்குள்ள விஷயத்தையே யிரண்டொரு செய்யுளாகச் செய்து அவற்றிற்கும் ஒருவாறு உரையெழுதிச் சேர்த்திருக்கின்றேன். வடமொழி தென்மொழிகளில் ஏதோ எனகுள்ள சொற்பஞானத்தைக்கொண்டு வேட்கையின் தூண்டுகையால் மொழிபெயர்த்தேனாகையால் குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொள்கின்றமாசற்றார் இதில்பிழையுளதேல் அதைப்பாராட்டாது இதன் விஷய கௌரவத்தால் ஏற்றுக்கொள்கவென வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
கோழியாலம்.
வ. ஸ்ரீநிவாஸாசாரியன்.

ஸ்ரீ



ஸ்ரீமதேநாராயணாயநமஃ
ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

ஸ்ரீயாதவகிரிமாகாத்மியம்.

ஸ்ரீமஹா விஷ்ணு

ஓரானைமூலமெனப்பொதுவேயுணர்த்தோலமிடச்
சீரானதேவர்களுக்குமூலமன்றெனச்சேணொதுங்கக்
கூரானவாழியுடன்விரைந்தேகியக்குஞ்சாதனைக்
காரானதுவெனக்காத்தவன்றாளைக்கருதுவமே.

வானவர்மாமாமாமாதிகளிற்வடிவாயுறையும்
கானமர்மாமலராளுடனிற்றவக்கண்ணனுக்குத்
தானமதாந்திருயாதவசைலத்தைகைமதனை
நானுனைசெய்யவந்நாரணனுடிநணணினனே.

ஸ்ரீ நம்மாழ்வார்.

தாரணியோருய்யத்தமிழ்வேதந்தந்தளித்த
சீரணிபுமாறன்றன்சேவடியே—காரார்
எதுகிரியினேற்றமதை யின்றமிழினேற்றக்
கதியெனவே யானடைந்தேன் கா

எம்பெருமானார்.

யாதவசைலப்பெருமை யானறையவம்மலையில்
வேதமறைநாரணனாவீறதனை—யாதரித்த
பொன்வண்பொண்மிழற்றம் பூம்பொழில்சூழ்பூதூரான்
தன்வண்டுணையடியேதாங்கு

வேதாந்ததேசிகர்.

அரவாதிசேடனவதரித்தாற்றிய வம்மதத்தைப்
பரவாதியரசைக்காதவர் பாறப்படியதனில்
திரவாதிசிங்கமெனத்திகழ்தூ புலன் சேயடியைப்
பரவாதினந்தொழுவோமெமைக்காத்திடப் பான்மையினே.

தன்னாசிரியர்.

எட்டுமிரண்டு மிதுவெனறியாதவெனச்
சிட்டுமிருமைப்பயனுமின்னருள்செய்—திட்ட
அரங்கராமாநுஜன்றாளம் புயமேயென்றன்
சிரந்தனக்குப்பூஷணமாஞ்சீர்

ஸ்ரீமதேநாராயணாயநமஃ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

ஸ்ரீ நாரதபுராணத்தில் ஞானகாண்டத்திலுள்ள

ஸ்ரீயாதவகிரிமாகாத்மியம்.

க—வது அத்தியாயம்.

ஸ்ரீ வேதவியாசர் முதலான முனிவர்கள் ஸ்ரீ பதரி நாராயணர் சமீபத்திற்குச் செல்லுதல்.

முன்பொருகாலத்தில் ஸ்ரீமந்நாராயணரே கதியென்றடைந்தவரும், யுகங்கள்தோறும் வேதார்த்த தத்வங்களை நிர்ணயிப்பவருமான வேதவியாசர் வசிட்டர், கபிலர், மார்க்கண்டேயர், காச்யபர், அத்திரிமுநிவர், தக்ஷர், பரத்வாசர், விசுவாமித்ரர், சௌனகர், கௌதமர், ஜமதக்நிமுநிவர், வாமதேவர், வைசம்பாயனர், பார்க்கவர் முதலான மற்றுமுள்ள மகரிஷிகளும் ஒன்றாய்ச்சேர்ந்து பதரிகாச்ரமம் படர்ந்து ஆதிதேவனாகிய ஸ்ரீமந்நாராயணனையும் நரனையு நமஸ்கரித்து ஸ்துதிசெய்யத்தக்கவரும் தோத்திரப்பிரியருமாகிய அந்த இருடீகேசனை வேதவிதிப்படி பரவி ஓ பகவானே! தேவதேவேசா! திருமணாளா! நாராயணா! உமது திருவடியை வணங்கா நின்றோம்; நீரோ யுக்ங்கட்கெல்லாம் ரக்ஷகரும் சர்வசேஷியுமாகின்றீர்; சகல சேதனங்கட்கும் தாய்தந்தையினும் ஆயிரமடங்கதிகமான பிரீதியுள்ளவருமாகின்றீர்; அடியோங்கட்கு நுங்கருணையே யாதாரமாகின்றது; ஸம்ஸார தாபத்தைப்போக்குந் தேவரீரையே சரணமாயடைந்தவர் நித்தியசூரிகளுடன் ஸ்ரீவைகுண்ட வாழ்க்கையைப்பெறுகின்றனர்; மகா பாபிகளும் உமது திருவடியை யடைந்து தந்திவினையனைத்தையும் அனற்பொறிதீண்டிய பருத்தியைப்போல் அழிக்கின்றனர்; அவ்விதமே யடியேங்கட்கும் ஆதாரமாகின்றீராகையால், நுந்தாமரை மலர்போன்ற பாதங்களில் விசேஷபக்திபுரியு மெங்களைத் தயையாகிற அலையையுடைய கடாக்ஷமாகிற கடலாலே நனைத்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

இவ்வாறு நாநாவித தோத்திரங்களால் துதிக்கப்பெற்ற புருஷோத்தமர் அம்முநிநாதர்களை யருளொடு நோக்கி வெகுமான வார்த்தையாடத் திரு

வுளங்கொண்டு வர்ரீர் முனிவரர்காள் ! உங்கட்கு மங்களமும் ஒப்பற்ற சுக மும் உண்டாகுக. நுந்தரிசனத்தால் யாம் மிகக்களிப்புற்றோம். ஆத்ம ஞானியராகிய எம் பத்தர்கள் எமக்குப்பிராணனுள்ளவர். ஒருபோழ்தும் அவருடைய லாபத்தினும் எமக்குவேறுலாபம் கிடையாது. எம்மையடை ந்தவரைக்காப்பதற்கேயாம் பலவித ரூபங்களை யெடுக்கின்றோம். நீங்களி வ்விடம் போந்த செய்தி யனைத்துஞ் சிறிதும் விடாது செப்புமின் என்று திருவாய் மலர்ந்தருள, இருடிகள் வியாசபகவானையேவுகையில், அவர் அங்ஙனமே விண்ணப்பஞ்செய்யலாயினர்,

ஓ புருஷோத்தமா ! எல்லாமந்திரங்களிலு மேற்றமாயிலகுவது திருவ ஷ்டாக்ஷரம்; தேவரீர் அதற்குக்கர்த்தாவும் யாங்களுமக்கே சிஷ்யருமா கையால், எமக்குக்குருவும் தெய்வமும் தாய்தந்தையருமாகின்றீர்; அறிவுள் ளோர் ஆராயுமிடத்தில் ஸ்ரீமந்நாராயணனை யன்றி வேறுசுற்றமுமின்று; தேவரீர் திருவுள்ளமுணராதவையும் பிரவர்த்திக்கச்செய்யாதவையும் யாரி டத்திலுண்டு; ஆகையின் யாவையும் உமக்கே அதீனமாயுள்ளன; இங்ங னம் கலிபுருஷன் காசினியெங்கும் பிரவேசித்துக் கலந்துள்ளதால், அக்க லியின் தீங்கு சிறிதுஞ்சேராதவிடத்தில் இவ்விருடிகள் எவரும் பரமபக்தி யோடு பங்கயமலரில் வீற்றிருக்கும் பெரிய பிராட்டியார் தமது திருக்கரங்க ளால் தடவப்பெற்ற தேவரீரது திருவடிகளையடைந்து வாழும்வண்ணம் கிருபைசெய்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தனர்,

ஸ்ரீயாதவகிரிப்ரசம்ஸை.

இவ்வாறு திருச்செவி சேர்த்தருளிய தந்தாசரிடத்தில் தரமற்ற தயவு ள்ள தாமோதரன், திருவுள்ளக்களிப்புடன் திருவாய்மலர்ந்து தெரிக்கலாயி னர். கேளீர் தபோதனர்காள் ! தென்தேசத்தில் பொதியவரையின் கிழக் கில் காவேரியின் வடபுறத்தில் திருநாராயணகிரி யென்றொரு பருப்பதம் திகழ்கின்றது. அம்மலை ஆஸ்திகர் அடையத்தக்கதும் பவக்கடலிலழுந்தி யவரைக் கரையேறச்செய்வதுமாயுள்ளது. அதன்கண் துயர்க்கடற்குக்க ரைபோன்ற பல கொடிமுடிகள் தோன்றுகின்றன. அவிடத்தில் சமலா சனன் ஆதிதேவனை விதிப்படி யாராதித்துத் தவம்புரிந்து தனக்கிஷ்டமா னவைகளைப்பெறுகின்றனன். யாம் இப்பதரிகாச்ரமத்திலுபதேசஞ்செய் கிற வுருவத்துடனும் அம்மலையிடத்து உபதேசஞ்செய்யத்தக்க வுருவத்துட னும் உறையாநின்றோம். அன்றியும் அத்தலம் எமக்கு இருதயஸ்தானமா

யும் சுபகரமாகியும் வேதங்களுக்கு விழியாகியும் முக்திக்குமுதன்மையாயும் முநீச்வரருக்குச்சகல சம்பத்தாயுமொளிர்கின்றது. வடதிசைக்கு இதுவும் தென்திசைக்கு அதுவுமாகிய இவ்விரண்டு தலமுமே யெமக்கு விசேஷ ஆச்ரமங்களாயுள்ளன. அங்கு ஸத்வமே தலையெடுத்திருப்பதால் அதுமிக்க மேம்பாடுள்ளதென்றுணரத்தக்கது. இயற்கையாக மானிடர்க்குமுக்குணங்களும் மாறிமாறி வந்திடினும் நாராயணா சலத்திலிருப்போர்க்கு ரஜோகுணமே கிடையாதென்றால், தமோகுணமுமுதென்பதற்குத் தடையென்ன ?. கேளீர் முநிவர்களே ! ஸ்ரீரங்கம் வேங்கடாசலம் சத்யவிருதக்ஷேத்ரம் ஸ்ரீவைகுண்டம் இவ்விடங்களிலுள்ள விசுவாசம் எமக்கு அவ்விடத்துமுண்டு. அங்கு ஆதிசேஷன் வைனதேயன் முதலானவர்களோடு யுகங்கள் தோறும் சர்வசேஷியான வெமக்குக் கைங்கர்யம் செய்துகொண்டிருக்கின்றனன்.

அவன் முதலில் அனந்தனாகியும் அனந்தரம் லக்ஷ்மணனாகியும் பின்பு பலபத்திரனாகியு முருவெடுத்தும் இனிக்கலியிலுமோரவதாரஞ் செய்யப் போகின்றனன். யாம் துவாபர யுகத்தில் ராமகிருஷ்ணர்களால் பூஜிக்கப் பெற்றோமாகையால் அதை யாதவகிரியென்று முலகத்தாருரைக்கின்றனர். ஆயிரஞ்சிகரமுள்ள ஆதிசேஷரூபமான அத்தடங்கிரியில் வைகுந்தத்திலிருப்பதினும் அதிகமான பிரீதியோடு திருமகளுடன் வசித்திடுகின்றோம். திருவைகுந்தமாதியான சகல திவ்வியக்ஷேத்திரங்களின் மகிமையையுடைய அந்தத் திருமலையொன்றையே சேவிப்பவர் எமது திவ்விய தேசங்களையெல்லாந் தெரிசித்த பயனை யடைகின்றனர். வைகுண்ட வாசிகளாகிய வைனதேயன் ஆதிசேஷன் முதலானயாவரும் யதுகிரியில் தாவரசங்கமங்களாயுதிக்கின்றனர். யாமும் அதன் சிகரத்தின்கண் பதரீவிருக்ஷமாயவதரித்துச் சனகாதி முநிவர்களால் துதிக்கப்பெற்று வசிக்கின்றோம். அவிடத்திலுள்ள பசுபக்ஷிகளையும் பிராகிர்தமனிதர்களையும் பயங்கரராகிய யமதூதர் தூரத்திலிருந்தே தெண்டனிட்டுச்செல்கின்றனர். யாதவசைலத்திற்குப்போகவேண்டுமென்னும் விருப்புள்ளவர் அயல்தேயத்திலிருப்பினும் அவரையும் நமதூதரொருபோது நணுகமாட்டார். ஆகையின் நீவிரனைவரும் அவ்விடம்போந்து ஸம்ஸார தாபசாந்தியினிமித்தம் தக்ககாலங்களில் மிக்கவிசேஷமான கலியாண தீர்த்தத்தை யடைந்திடும். அதிக விரதசீலராயுள்ள யதிகளும் அத்தீர்த்தத்திலாடியிரைந்தெழுகின்றதிரைகளையுடையபவசாகரத்திலிருந்து வெளிக்கிளம்பாநின்றனர். விழுமியோர்க்குவிருப்பமாயுள்ளஅத்தீர்த்தத்திலெழக்கிருக்கும் விசுவாசம் புஷ்கரத்திலும் கங்கையிலுங் யமுனையிலுமிராது.

நாஸ்திகன் செய்ந்நன்றி குன்றியவன் பழிபகர்வோன் இதரர்குணங்களைப் புகழ்வதிலிஷ்டமில்லாதவன் தன்னைத்தானே மெச்சுபவன் வேள்விக்கு விக்கினஞ்செய்பவன் வேதமோதலைத் தூஷிப்பவன் அயன்மாதரிடம் ஆசைகொள்பவன் பந்திவஞ்சனைபண்ணுபவன் பிறருடைமையை யபகரிப்பவன் பாஷண்டாகமத்தைப் பக்திபண்ணுபவன் சூத்திரான்னத்தைப் புசிப்பவன் சுவா முதலியவையோடு பயில்பவன் தர்மத்தை விற்பவன் சிராத்தத்திற் புசிப்பவன் ஊர்ப்புரோகிதம்புரிபவன் தெய்வப்பொருளைக் கைவசஞ்செய்பவன் அகங்கார டம்பாதிகளுள்ளவன் நாடோறுந கரவாகஞ் செய்பவன் ராஜசேவையால் ஜீவிப்பவன் கன்னிகையை விற்பவன் காக்கையைப்போல் கண்டபடியுண்பவன் பசுக்களுக்குப் பருவரலாற்றுபவன் பார்ப்பாரைப்பழிப்பவன் விஷ்ணுபக்தி விகாதமிழைப்பவன் சூத்திரமாதைப் புணர்பவன் சௌசாசாரங்களைக்கைவிட்டவன் சரணாகதகாதகன் முதலான மற்றுமுள்ள பாவிகளும் அந்த நிர்மலதீர்த்தத்திலாடித் தத்தம்பாவங்களைப் பறக்கடிக்கின்றனர்.

அங்குச் சிறிது தூரத்தில் தன்னைத்தெரிசித்தவர் தீவினை யெல்லாந் தூரவிலகத்தக்க நரசிங்ககிரி யென்றோர் மலையுளது. அதையும் அன்போடு வணங்கக்கடவீர். அதன் மீது மகாபாகவதனாகிய பிரஹ்லாதாழ்வான் எமதிடம்விசேஷபக்தியால் சிங்கவுருவாய் விளங்கும் எம்மைப்பிரதிஷ்டை செய்துளன். எம்மைப்பணியவேண்டியதன் மேல் ஏறுபவர் பவக்கடலின் சுழியிலகப்படாதவராய் அறம் பொருளின்பத்தை முறையேயடைந்து கடைசியில் முக்தியையும் பெற்று வாழ்கின்றனர். கல்யாண தீர்த்தத்தின் மேற்புறத்தில் அஞ்ஞானவாரக மென்னும் அபிதான முள்ளவொரு அரசமரங் காணப்படுகின்றது. அதன்கீழ் அம்பரீஷன் விகுக்ஷிருக்மாங்கதன்சுகர் புண்டரீகர் இவ்வைவரும் முன்பொருகாலவிசேஷத்தில் எம்மை யுபாசித்தபடியால் அவ்விடத்திற்குப் பஞ்சபாகவதஸ்தானமென்று பேர் வாய்ந்தது. அந்தஸ்தலத்தின் தெரிசனத்தாலேயே பாதகமனைத்தும் போக்கடித்துக் கொள்ளும் எமது பக்தருக்கு இஷ்டமான பயன்களெல்லாம் உதவுகின்றோம். கலியாணதீர்த்தத்தின் கீழ்ப்புறத்தில் நரசிங்ககிரியின் அடிவாரத்தில் இஷ்டசித்தி பெறத்தக்க வாராகக்ஷேத்திர மிருக்கின்றது. வராகரூபியாகிய பகவான் பூமியை நோக்கி வேதத்தின் சிரோபூஷணமான இரண்டு சுலோகத்தை யங்கே பிரசாதித்தருளினர். அதை வைகுண்ட வர்த்தனமென்று முண்மையாயுரைக்கின்றனர். அந்தக்ஷேத்திரத்தினளவு இரண்டுயோசனை விஸ்தாரமென்றுணரத்தக்கது. அப்பர்வதம் எவ்வளவு தூரந்தோன்றுகி

ன்றதோ அதுகாறும் முக்திக்ஷேத்திரமென்று மொழியப்படுகின்றது. தபோதனர்களே! அங்ஙனம் சுத்தஸத்வமயமான ஆனந்தமயமென்று பேர்பெற்ற எமது விமானம் விளங்காநின்றது. அதன் கீர்த்தனத்தாலுந் தர்சனத்தாலுமே ஜன்மமுதல் மரணபரியந்தம் இழைக்குந் தீவினையாவுந் தொலைந்து விடுமெனில் வணங்குவதால் வரும்பயனை வாயினால் வழங்கிமுடியுமோ.

அது உலகங்களினுச்சீவனத்தின் பொருட்டு முதலாவதான கிருதயுகத்தில் வைகுந்தத்திலிருந்து எமது சங்கற்பத்தாலிறங்கி யங்கேயொளிர்கின்றது. அந்த விமானத்திற்குப்பின் பிராகாரத்தினிடையில் இஷ்டத்தைக் கொடுக்கவல்ல சுதர்சனமும் ஸ்ரீ தேவியும் விளங்காநின்றனர். அவ்விடத்தில் திருவலக்கிட்டு மெழுகிக் கோலம்வரைந்து தீபமேற்றுகிறவர் பக்கங்களில் பனிகிரணன் கதிர்க்கற்றைபோன்ற கவரிவீச வேண்குடையின்கீழ் வீற்றிருந்து சார்வபௌமபதம் பெற்றுப் புத்திரபௌத்திராதியரோடு சந்தோஷமாய் வாழ்ந்து முடிவில் எமதருளால் சேஷசேஷாசநாதியரினும் மேலான பலத்தைப் பெறுகின்றனர். சர்வசேஷியாகு மெமக்குச் சகல சராசரங்களும் இஷ்டமானவையேயாயினும் தேவதாந்தரபக்தி பண்ணுபவரைமாத்திரம் யாம் அவர் மனவுறுதியைச் சோதித்திடுகின்றோம். அத்தலத்தின்கண் மிக்க பரிசுத்தமாயுள்ள மிருத்திகையை லலாடத்திலும் மற்றதகுதியான அங்கங்களிலும் பத்தியோடுதரித்துக்கொள்ளும் பாகவதர்களுக்குத் தானவராதியாயுள்ள பூதப்ரேதபிசாசங்களும் பெதாளஜாதிகளும் வெருவியோடுகின்றன. அந்த ஸாத்விகப்ரகிருதியினும் சுத்தமான திருமண்ணை வைநதேயன் எமதாணையால்சுவேதத்தீவிலிருந்து கொணர்ந்து யாதவாசலத்தின்கண் வைத்திட்டனன். ஆகையின் சுத்தசத்வமயமாயிலகும் அந்த க்ஷேத்திரத்தை யடையக்கடவீர்.

அஷ்டதீர்த்தமகிமை.

அப்பருவதத்தின் வடபுறத்தில் நிர்மலமாகிய கலியாணியென்று கழறப்பெற்ற வேண்டியவைகளை வேண்டியாங்குதவும் தாரையொன்று வீழ்கின்றது. அதுவிஷ்ணுபதத்திலிருந்து வீழ்கின்றதால் விழுமியோர் வைகுண்ட கங்கையென்று வழங்காநின்றனர். அதைப்பருகுவோரும் அதன் தீரத்திலுறைவோரும் அஞ்ஞானம் அகன்று மெஞ்ஞானமடைந்து நித்தியசூரிகளோடு வைகுண்டத்தில் பேரானந்த முறுகின்றனர். சங்கரனது சடாமண்டல மாலையாய் வீழ்கின்ற விஷ்ணுபதியென்னுங் கங்கை திருவிக்கிரமஸவரூபியின் பாதாம்புயத்தை நான்முகன் துலக்குங்கால் உதித்தது. வைகுண்டவாசிகளான நித்தியசூரிகள் புண்யதீர்த்தவிருப்பத்தால் அத்திரு

வடியை மறுப்டியும் விரஜாநதியின் தீர்த்தத்தின் விளக்கியதால் யாதவகிரியின் பாங்கர் வீழ்கின்ற இதற்கு வைகுண்ட கங்கையென்னும் பெயர் வாய்ந்தது. எமதுபதத்தைத் துதிப்பதே விரதாமாயுள்ள பக்திஸாரரென்னு மகாயோகியானவர் அவ்விடத்தி லெமதடியைத் தியானித்துத்திருவைகுந்தத்தில் திகழ்கின்றனர். அவ்வைகுண்ட தீர்த்தத்தின் புரோக்ஷணத்தாலேயே யெம்பதத்தையடைதற்கு விரோதமான காமாதிதோஷங்கள் நசித்து ச்சமாதி சற்குணங்களுண்டாகின்றன. முக்திக்கு நயனமாகையால் அங்கே நயனஸ்தானமென்றோர் புண்யஸ்தலமிருக்கின்றது. ஆங்கு மகத்துக்கள் எக்காலும் கேசவசாந்நித்யம் பெறுகின்றனர். அந்த நயனஸ்தானத்தில் நாராயணஹ்ரதமென்றோர் புணயதீர்த்தமுண்டு. அதன் தடத்தில் அநாயாசமாய் மந்திரசித்தியடைகின்றனர். அதைத்தெரிசித்தபோதே துயரனைத்துந் தொலைகின்றன. விபுதோத்தமரும் விரக்தருமான விஷ்ணுசித்தர் அங்கு வீற்றிருக்கின்ற கேசவனைத்தியானித்து நாராயணனடியைச்சரணமாயடைந்து பரமபதத்தைப்பெற்றனர். நரகமாகிய நெருப்புக்கு நாசகரமான நாராயணஹ்ரதஸ்நானம், நரர்க்கு மரணகாலத்தில் நாராயணபதஸ்மரணத்தைச் செய்கின்றது.

இதற்குத்தென்புறத்தில் கலியாணதீர்த்த வடபாரிசத்தில் தீம்புனலான பாராசரமென்னும் புண்யதீர்த்தமுளது. முன்பொருகால் எமதுபக்தரான பராசரர் அத்தீர்த்தக்கரையிலிருந்தே விஷ்ணுபுராணத்தை யியற்றினர். தென்னாட்டிலுறையுஞ் சிலபெரியோர் அதைமைத்ரேயகுண்டமென்றும் வழங்காநின்றனர். அத்திருமலையின் வடமேற்கில் யாதவியென்னுமொரு தரங்கிணியொழுகுகின்றது. அதன்தீரத்தின்கண் தூய்மையானயஜுஞவிருக்ஷமும் கதிரவிருக்ஷமும் பலாசமரமும் கும்பல்கும்பலாய்ச்செழித்துள்ளன. அத்தலத்திலெம்மை யாராதிப்போர் எமது மீளாகதிக்குஆளாகின்றனர். அந்நதிக்கரையில் யாதவேந்திரனென்னும் நரேந்திரன் தவமிழைத்துமுன்னர் இந்திரபதத்தையும் பின்னர் பரமபதத்தையும் பெற்றனன். அவ்வெதுகிரியினடியில் தென்புறமாகப்பரிதான சிலையென்று பகரத்தக்கவொரு பாறையிருக்கின்றது. அதை அந்தணச்ரெஷ்டர்கள் கண்டு வணங்காநின்றனர். அதைத்தொழுபவரெல்லாம் சுராசுரர்களால் வணங்கப்படுகின்றனர். சுத்தஸத்வமயமாகிய அச்சிலை, தன்னைநமஸ்கரிப்போர்க்கு அங்கனே ஸத்வத்தையுதவுகின்றது.ஆதியில் சாக்கியபாஷண்டகாணாதர்முதலானவேறுமதஸ்தர்பூதலத்தின்கண் வக்ரவசனங்களால் வேதத்திற்கு அபார்த்தத்தைச்சொல்லி வருத்துகையில் யாம் திருதண்டந்தரித்துக் காஷாயமுடுத்துயதிவேஷத்தோடு தத்தாத்ரேயரொன்றுபேர்பூண்டு ஆரணங்களாகும் அந்தேவா

சியருடன் அவிடத்திருந்தே அப்பரமதஸ்தனைப்பறக்கடித்தோம். அங்ஙனம் அப்பாறையின்கண்ணே யாம் காஷாயபரிதானம்புரிந்ததால் அதற்குப் பரிதான சிலையென்று பேர்வாய்ந்தது. அதனிடையே காஷாயம்பெறுபவர் எமதடியார்க்குள் உத்தமோத்தமராய் நாமாகவே பாவிக்கப்படுகின்றனர். சிஷ்யருக்கு மறைகளையங்கேயதார்த்தமாயுபதேசித்தோமாகையால் அவிடத்தில் வேதபுட்கரணியென்றோர் தீர்த்தமுள்ளது. அப்பொருப்பினருகே வேதபுட்கரணியின் மேற்புறத்தில் யாம் சந்நியாசி யுருவத்தோடு தர்ப்பங்கொய்துகொண்ட விடமாகையின், அங்கேதர்ப்பதீர்த்தமென்று சொல்லப்பெற்ற மகாமகிமையுள்ள புண்யதிர்த்தமொன்றுபிரசித்தமாயுளது. அங்கு முன்பொருகால் பாஞ்சராத்ரவிதிகர்த்தாவும் பாஞ்சகாலிகதருமத்தை விசதம்பண்ணவருமாகிய சாண்டில்யமுனிவர் எம்மைவழிபட்டனர். கடைசியில் அக்குசங்களைக்கொணர்ந்து பரப்பியதன்மேற் சயனிப்பவர்பவதுக்கத்தை யொழித்து விழுமிதான வெம்பதத்தையணுகாநின்றனர்.

பற்றொழித்தபரமரிஷகாள் ! பூதரத்தின் மேற்புறத்தில் பெரியோரால் பலாசதீர்த்தமென்று கொண்டாடப்பெற்ற வொருமகாதீர்த்தமுண்டு. ஆதியில் கௌசிகமுநிவராற் சாபமுண்ட வசிஷ்டபுத்திரர்கள் அங்கே யெமதனுக்கிரகத்தால் தமது சாபத்தை யொழித்து மகிழ்ச்சியடைந்தனர். அதற்குச் சிறிது வடபாகத்தில் அம்புயமலர்களடர்ந்ததும் அதிகமகிமையுள்ளதுமான பதுமதீர்த்தமென்று ஒன்றுண்டு. ஸனத்குமாரர் சனகாதி முனிவரோடுமெம்மை யம்மலர்களால் அர்ச்சித்தனர். அத்தடாகத்திலுள்ள தாமரைமணிமாலையை நாடோறுங்கண்டத்திலணிபவர் ஸ்ரீவைகுந்தத்தை யணிகின்றனர். இங்ஙனம் கலியாணதீர்த்தத்தைச்சூழ்ந்து பரிசுத்த ஜலமுள்ளதும் அஷ்டாக்ஷரமயமானதும் சகலதீர்த்தங்களிலுமேலானதுமான அஷ்டதீர்த்தமுண்டென்று சிறந்தவர் செப்புகின்றனர். இத்தீர்த்தங்களை நெஞ்சினால் நினைப்பவரோ தந்தீவினைமுற்றுமகன்று புனிதராவரொன்றால், அவைகளில் ஆடுபவர் பெருமைக்கோரளவுமுளதோ ? அவற்றின்கரைகளிற் செழிக்குந்துளசி மணிவடம்புனைந்திடுவோரைத் தெரிசித்தலாலே மர்பாவிகளும் தந்தீவினையைக்கழிக்கிறன்னர். யதுசைலசிகரத்தில் யதிகளெல்லோருமெம்மையெக்காலும் அடைகின்றனர். வேறிடத்திற்புரியும் புண்யத்தினும் புண்யக்ஷேத்திரங்களிலாற்றுவது பதின்மடங்கதிகம் அதினும் புஷ்கரத்திற் செய்வது நூறுபங்கதிகம் அதைவிட ப்ரயாகையிலிழைப்பது ஆயிரமடங்கு விசேஷம் அதனினும் சாளக்கிராமத்திற்செய்வது கோடிபங்குமேல் அதுநீங்க யாதவ

கிரிக்கண் புரிவது சதகோடி யதிகம் அதிலும் எமதடியார்க் கெதிரிலிழைப் பது அவர்பார்வையாற் பரிசுத்தமுற்றுக்கோடிகோடிகுணஞ்சிறக்கின்றது.

சத்துருக்களுக்குத் துர்த்தரிசனமும் எம்பத்தருக்குச் சுதரிசனமுமாகும் சக்கரத்தாழ்வான் யதுசைலத்தைக்காக்கு நிமித்தந்தனதொளியைவீசியெப் போழ்தும் அதைச்சுற்றி வருகின்றமையின், அங்கு எமதடியாரைப் பீடிப்பவர் அச்சுதர் சன மகாஜ்வாலையின் வரிசைக்குச் சலபமாகின்றனர். துவாபரயுகத்தின் இறுதியில் அங்குப்ரவேசிப்பதற்கு விரைவாயோடிவரு கின்ற கலிபுருஷன் கைப்பிரம்புடைய எமது கிங்கரரால் அப்போதேயடி யுண்டு திரும்புகின்றனன். ஒருவருஷமாயினும் ஒருதிங்களாயினும் ஒரு பக்ஷமாயினும் ஏழுதினமாயினும் அன்றி மூன்று இரவாயினும் ஒரு நிசியா னாலும் யாதவசைலத்தில் வசிப்போரே யெமக்கு உவப்பான பக்தரன்றி மற்ற வராகார். அன்றியும் பங்குனி மாதம் பௌர்ணமியில் ஒருயாமமாயினு ம் அதிற்பாதியானாலும் அவ்விடத்திலெம்மைப் பஜிப்பவரைக் குழவியை அன்னை யளிக்குமாறு அளிக்கின்றோம். நீவிரனைவரும் அவ்விடத்திற்கேகி ப் பரமபக்தியோடெம்மைப் பூஜித்துப்பவசாகரத்தின் கரைகாணக்கட வீர். அறங்களெல்லா மனுஷ்டிப்பவர் வெவ்வேறு பதவியை அடைந் தடைந்து திரும்பாநின்றனர். அங்ஙனமன்றி அச்சைலத்தில் எம்மையடை பவர் எக்காலுமீளாகதியைப் பெறுகின்றனர் என்றுதிருவாய்மலர்ந்தருளிய பகத்ரக்ஷகளாயிருடிகளெல்லோருங்கை கூப்பியடிபணிந்து ஸ்ரீமந்நாரா யணா! தேவரீர்க்குத் தெண்டன் சமர்ப்பிக்கின்றோம்; மானிடர்யாவர்க்குந் தேவரீரேகதியாகையின் எமக்கும் பரம பந்துவும் பரங்கதியுமாகின்றீர். இங்ஙனம் யாதவசைலப்பெருமையைநுட்பமாயுரைத்தருளினீர்; அதனை மற்றும் விவரமாய்க்கேட்க விருப்புற்றோமென்று விண்ணப்பஞ்செய்ய, எம் பெருமான் ஓமுநிவர்களே! சனற்குமாரர் சகலத்தையும் பிரமனிடஞ் செவியுற்றுப் பின்பு நாரதருக்குநவின்றமையால், அவரிடம் நும்மிஷ்டப்படி கேட்டறியுமென்று பிரசாதித்து அம்முநிவர்கட்கெதிரில் பூர்ணமான அறு வகைக்குணமுள்ள அப்புண்டரீகாக்ஷர் அந்தர்த்தானமாயினர்.

முநிவரர்க்கிவ்வாருரைத்தெதுகிரியின் முதமுடனெழுந்தருள்புரிந்து
பனி மலர்த்திருவின்வேண்டியபயத்தின் பரிணதமெனத்திகழ்ந்திடுமண்
தனிமை யிற்புரந்தவெதுகுலத்தவர்தந்தனமெனவெகுமதித்தடைந்த
கனைகுரான் முகிலின் கருநிறத் தரியைக்கருதினன் மதியங்கரத்தோன்.

(இ-ள்.) தபோதனர்களுக்கு இந்தப்ரகாரம் உரைத்து யாதவகிரியில்

ஆனந்தத்தோடு எழுந்தருளிக்குளிர்ந்ததாமரைமலரில் வீற்றிருக்கும்பெரியபிராட்டியார் வேண்டிய பலத்துக்குப்பரிபக்குவமாய் விளங்கும் உலகத்தையேக சக்ராதிபத்யமாய் ஆண்டு வந்த யதுகுலத்தோர் தமக்கு உயர்ந்த தனமென்று ஆராதித்து வரப்பெற்ற சப்திக்கின்றமேகம் போன்றதிருமேனியுற்ற திருநாராயணரை மகதியென்னும் வீணையைக்கரத்திலுடைய நாரத பகவான் சிந்தித்தார்.

உ-வது அத்தியாயம்.

வியாசாதிமுநிவரிடம் நாரதர்வருதல்.

அதன் பின் எக்காலுங் கரதலத்துவிளங்கும் வீணையைமீட்டுத்வின் கண்ணெ விருபபமுள்ளவராய்த்தபோராசியாய்ஸத்வமேதலையெடுத்தவராய் ஞானவைராக்யபக்திக்கு உறைவிடமாய்வைகுண்டநாதன்பாதம்புயத்தைத் தெரிசிப்பதிலேயே அவாவுள்ளவுயர்ந்தவர் பக்கலில் எஞ்ஞான்றும்உறை பவாரயுமுள்ள நாரதபகவான் சுருதியின் சிரத்தின் சீமந்தத்திற்குஅணியாய் விளங்கும் மணியையொத்ததேவதேவராகிய திருநாராயணரை விஞ்ஞானம் புரிவதற்கு அம்முநிவர் குழாத்திற்கெழுந்தருளினர். அப்பரமபதநாதன், சங்கீர்த்தனத்தால் சந்தோஷிப்பதுபோல் மற்றயாகங்களாலும் வணங்குவதாலும் நஞ்ஞானத்தாலும் அருச்சனையாலும் யோகத்தாலும் உவப்படையார். ரஸாயனம் மானிடர்நாவிற்கு மிகுந்த மதுரத்தை விளைப்பதாயினும் நாராயணக்ஷரம் உலகங்கட்கெல்லாமுயர் துணையாகின்றது. அவ்வளவில் அங்கிருந்த இருடிகளெல்லோரும் ஒருங்குசேர்ந்து பத்தியால் தழதழத்தவாக்குடன் கருடக்கோடியோனைக்கானம் புரிகின்ற நாரதனைக்கண்ணுற்றனர். அவரும் அத்தவசிகளையன்போடு நோக்கிப் புண்யபுருஷர்களாகிய நும்மைத் தெரிசித்தலால் யான்கிருதார்த்தனானேனென்றுஉபசாரவார்தையாடஅவர்களும் அகமகிழ்ந்துஅறையலாயினர்.

ஓ மகாமுநிவரே! இனிவரலாகுங்கலியுகத்தில்யாம்உறைவதற்குத்தக்கவொரு புண்ணியஸ்தலம் வேண்டுமெனத்தேடாநிற்க, அங்ஙனம் வைகுந்தநாதன் பிரத்தியக்ஷமாய்ச்சகலகுணவைபவங்களாலுமுயர்ந்த நாராயணகிரியென்று ஒருதிவ்வியக்ஷேத்திரமுளது. அதனருகேநீங்கள் வாசம் புரிந்து கலிநாலத்தைக்கழிக்கலாமென்று அதன் மகிமையைச் சுருக்கமாய்மொழிந்து தேவரீரிடம் பெருகக்கேட்கவென்று பிரஸாதித்தருளினர். தேவரீர் மாமகிமையுள்ளவரும் பகவானுடைய ஞானயோகியராகியமுநிவரிலுயர்ந்த

வரும் நிர்மலமாகிய ஸத்வமூர்த்தியுமாகையால் அச்சைலத்தின் மாட்சிமையை நுமதகங்கேட்க் வேண்டுமென்னும் எமதாசையைப் பூர்த்தி செய்யப் பிரார்த்திக்கின்றோம். ஆதியில் ஆதிமூலம்அவிடத்தில்சுயமாயெழுந்தருளியதையும் அப்பருபதத்திற் கலிதோஷம் அடையாமையின் காரணத்தையும் அப்பகவானை அருச்சிக்கத்க அதிகாரியையும் அங்குள்ளபுண்யதீர்த்தத்திற்குக் கலியாணதீர்த்தமென்று பேர்வந்தவழியையும் ஆங்கொளிருந்திருமண்ணுக்கு அத்தகையமகிமை நேர்ந்த நிமித்தத்தையும் அங்கேநரசிங்கமூர்த்தியாலயமுண்டான மூலத்தையும் அதற்கு வைகுண்ட வர்த்தனமென்று அபிதானமானதிறத்தையும் நயனஸ்தானத்தில் வாசஞ்செய்து விஷ்ணுபதமடைந்தவர் விவரத்தையும் அத்தலத்தின்கண் பாகவதாவருத்தித்துன்புற்றவர் செய்தியையும் அங்குநாராயணபகவான் இத்திறத்தால் துஷ்டியடைகிறாரென்பதையுந்தெற்றெனத்திருவாய்மலர்ந்தருள வேண்டுமென ப்ரார்த்திக்க, அம்முநிநாதரும் அங்ஙனமே யானந்தமாய்அறையலாயினர்.

நாரதபகவானுலகசிருஷ்டி முதலியவுரைத்தல்.

ஓ பற்றற்ற பரமபாவனர்காள்! அஞ்ஞான சர்ப்பத்தால் தீண்டப்பட்டவர்க்கு அதைப்போக்கவல்ல ஆசிரியரைவிடவேறுமருந்துகிடையாதென்று நிச்சயிக்கின்றேன்; ஆகையின் சர்வஞானக்கடலான சனற்குமாரரிடம் யான் முன்னர் கேட்டவண்ணம் வழங்குகின்றேன் கேட்பீராக. ஆதியில் சராசரத்தோடுகூடிய வுலகமெல்லாம் புருஷோத்தமலீலையால் அந்தகாரரூபமாகவேயிருந்ததுமன்றி அதுவும் பரப்ரும்மத்தின்கண் வேற்றுமையின்றியொன்றாகவேகிடந்தது.அவ்வேம்பெருமானுடையசரீரம்பிரதானமென்றும் புருஷனென்றுமிருவகையாகையால், தாரகனும் நியந்தாவும் சர்வசேஷியுமாய்விளங்கும் அவருக்கு ஆதேயவிதேயசேஷத்வங்களால் அகிலலோகமும் திருமேனியாகின்றது. ஆகையின், அந்தப்ரதானபுருஷர் விச்வகாரணமென்றும் தம்மிற் பிரிவதில்லையென்றும் வேதமுறையிடுகின்றது. அக்காலத்தில் ஆத்மகோடிகள்புருஷார்த்தங்களைவிட்டுஅசித்துக்களைப்போல்துக்கித்துக்கொண்டிருககக்கண்ட எம்பெருமானுக்கு இப்புருஷர்கள் போகங்களையிழந்துபிரகிருதியில் வருத்துகின்றனரேயென்றுகருணைபிறந்துகாக்கும்படிதிருவுள்ளம் பற்றியமாத்திரத்தில் அவரது ஸங்கற்பத்தால் மூலப்பகுதிதோன்றிமஹத்து முதலியபேதங்களாலும் குணங்களாலும் உலகங்களைச் சிருட்டிக்கலாயது. சாத்விகாதிகுணங்களால் மகத்திலிருந்து அகங்காரந்தோன்றியது. அக்குணபேதத்தால் அகங்கார மூவகையாகின்றன. சாத்விகா

கங்காரத்திலிருந்துஇந்திரியங்கள் பிறந்தன. தன்மாத்திரையுடன் தாமஸாகங்காரத்திலிருந்து பூதங்கள்தோன்றின. ராஜஸாகங்காரம் அவ்விரண்டிற்கும் உதவியாயுள்ளது. பஞ்ச பூதங்களுக்குச் சப்தாதி விஷயங்கள் ஒன்றினொன்று மேன்மேலும் விசேஷித்துளவாகையின் பூமிமாத்திரம் பஞ்சகுணத்தோடுங்கூடியுளது. இத்தன் மாத்ரா பூதபேதம் சூக்குமமென்றும் ஸ்தூலமென்றும் இருவகையாம். பால்பிரியிடுவதால் தயிராகமாறுவது போல் தன்மாத்ரா ரூபமே பூதத்தன்மையையடையாநின்றது. இவ்வைம்பூதங்களும் சேர்க்கையின்றி அண்டத்தைச் சிட்டிக்க அசாத்தியமாயுள்ளதால், சத்திய சங்கல்பனாகிய நாராயணபகவான் மேல் காரியத்தை நடத்துகைக்கு இவைகளில் பஞ்சீகரணஞ் செய்தருளினர்.

அஃதெவ்வாறெனில், ஒவ்வொன்றிலும் அதனதன் அளவிற்பாதியும் மற்ற நான்கிலுந் தனித்தனி யெட்டிலொருபாகமுஞ் சேர்ந்ததென்றெண்ணத்தக்கது. அதிகபாகமான பூதசம்பந்தமுள்ளதற்கு அக்காரணத்தாலேயே அதனதன் பேரிடலாயது. அப்புறம் ஆதிநாராயணர் ஒன்றினொன்று பதின்மடங்கதிமான சப்தாவரணங்களாற் சூழப்பட்டதும் கனகபிண்டம் போன்றதுமாகிய அண்டத்தை யுண்டுபண்ணினர். பூதங்களாலும் பூதாதியாலும் மகத்தாலுமுண்டானஇவ்வண்டம்அகண்டத்துக்குக்காரணமாகின்றது. இது ஆதியில் சேர்க்கையான சிருஷ்டி ; பின்னரேவெவ்வேறு சிருஷ்டியாகின்றது. அதன்பின் அனைத்துக்குங் காரணமான பரமபுருடன் இவ்வண்டத்திடையில் ஆரணங்களால் பரவப்பெற்றுப்பெருங்கடலிற் சயனித்தருளினர். ஆயிரநாமங்களாற்றுதிக்கப்பெற்ற அச்சுதனுக்கு நாராயணபதம்போல் மற்றவைகள் மனதிற்கினியவாகா. இதுவாக்கிற்குத் தூய்மைசெய்வதும் வேதத்திற்காதாரமும் எல்லாப்பண்டிதர் செவிக்கும் அமுதப்பெருக்குமாகின்றது. இப்பதம் எவனது நாவின்முனையிலிடைவிடாது வர்த்திக்கின்றதோஅவனைஸ்ரீமந்நாராயணபகவான்பெரியபிராட்டியாருடன் அநிமிஷமும் அகலாது காத்தளிக்கின்றனர்.

நாராயண சப்தநிர்வசனம்.

இதன் பொருளையுணராமலுச்சரிப்பதாலேயே மகத்தான பயமெல்லாநீங்குமெனின் சாதுக்களைச் சார்ந்து பணிந்து அவர்களால் அதன் அர்த்தத்தையும் அறிந்துஉச்சரிப்பவர்க்கு என்னகுறைசம்பவிக்கும் ? வாரீர்முநிதிலகரே ! அதன்பொருளையுஞ்சிறிது புகல்கின்றேன் கேட்பீராக. நாரமென்பது அப்பு ; அது விஷ்ணுபகவானிடத்துண்டாயது. அதுஅவர்க்கு அய

னமாகையால் நாராயணனென்று நவில்கின்றனர். அனைத்துக்குங் காரணமாய் அவரதுநாபியிலுற்பவித்த நளினமலருக்கு நாரமென்று நாமமுளதாலும் நாராயணனென்கின்றனர். ஜீவன்களெல்லாம் அழியாதவையாகையால் அவற்றிற்கு நரமென்று பேராகையின் அவைகளின் சமூகத்துக்கு நாரமென்பது நாமம்; அவைகட்கிவர் அயனமாகையாலும்நாராயணனென்று புகலுகின்றனர். பெருமாளுக்கு நரன் என்று திருநாமம்; அவரிடத்திலுற்பவித்தவர்க்கும் அவரது சம்பந்தம் பெற்றவர்க்கும் நாரரென்று பெயர்; அவர்கட்குஅயனமாகையாலும்நாராயணனென்றுபுகழ்கின்றனர். அன்றியும், நரனென்று நவிலப்பெற்ற இந்தபகவான் அனைத்துக்குங் கர்த்தாவாகையின் இவரானைக்குட்பட்ட சராசரங்கட்கெல்லாம் நாரமென்றுநாமமாகும்; இவைஅவர்க்கு வாசஸ்தானமாகையாலும் நாராயணனென்று வாழ்த்துகின்றனர். ஞானசக்தியாதி குணங்களுக்கு நாரமென்று அபிதானமாம்; இவர் அந்தஷாட்குண்ய பரிபூரணராகையாலும் நாராயணனென்கின்றனர்.

ஷாட்குண்யமானது வாசுதேவனுக்கு வியூகத்திலும் சமமாயுள்ளது போல் ஸங்கர்ஷணாதிபேதமும் ஞானசக்தியாதி அறுவகைக்குணங்களாலும் அவைகளின் பிரிவாகிய கருணாதிகளாலும் சாயாமாத்திரமாய் விளங்குவதால் ஸ்ரீமந்நாராயணனெவ்விடத்திலும் பரிபூரணமாய்த்துலங்காநின்றனர். மகாப்பிரளயத்தில் உலகத்தையெல்லா முதரத்துளடக்கியோராலிலையிற்சிறுகுழவியாய்ப்பள்ளிகொள்ளும் பகவான் வயிற்றிற்செகமுழுதுமொடுங்குவதுபோல் குணகோடிகள் அறுவகைக்குணங்களில் அடங்கியுள்ளன. பின்பு சாகரத்திடையே பள்ளிகொண்டபகவானதுநாபியிலிருந்து அதற்கு ஆபரணம்போன்றவோர்அம்புயந்தோன்றியது. அதினின்றும் அஞ்சலிபந்தத்தோடும் பக்தியால் வணங்கினசிரத்தோடும் அதிகமாய்ச்சொலிக்குமானனத்தோடுஞ்சதுமுகக்கடவுள் சம்பவித்தனர். இவர்நான்குபுயமுள்ளநாராயணபகவானிடந்தோன்றியதால் நான்கு சிரத்துடன் விளங்குவது தகுதியேயென்று நாவிருதிசையிலு நான்மறைகளாலிசைக்கலாயது.

அந்நான்முகனை நாரணனார் கருணையே பெண்ணுருவாய்ப்ரகாசிக்கும் பெரியபிராட்டியார் தமது காருண்யமாகிற முலைப்பாலையூட்டி வளர்த்தருளினர். அவ்வுலகமாதாவின் கருணையுண்டாகுமேல் இம்மை மறுமைப் பயன் எளிதிற்கிடைக்கின்றன. அதன்பின் அபாயமின்றி யளிக்கும் அப்பிராட்டியாரும் அச்சதனைநோக்கி இச்சிறுவற்கு வேதோபதேசஞ்செய்தருள வேண்டுமென ப்ரார்த்திக்க, அவரும் ஆனந்தத்தை விளைக்கும் மனைவியின் மொழியால் மனமகிழ்ந்து ஓம் என்றுரைத்தருளினர். அதைக்கேட்டபிதா

மகன்பாலியத்தால் ஓம் ஓமென்றுவிடாது மொழிந்து தமதுதாய்தந்தையருக்கோர் வேடிக்கையை விளைத்திட்டனர். அங்ஙனம் மாதவனார் வியந்து நகைத்து அ! என்று மொழிந்தருளவே அதையுங்கேட்ட அயனார் பிரணவமும் பிரணவத்திற்காதியுமான இரண்டெழுத்துக்களையும் விடாமலுச்சரித்துத்தாய்தந்தையரான திவ்விய தம்பதிகளால் கொண்டாடப் பெற்றிருந்தார். ஆரணங்களுக்கு ஆதிப்ரணவமும்அதற்குக் காரணம்அகாரமும் அதன் பொருள் ஸ்ரீமந்நாராயணனே பரப்ரும்மமென்பதுமாம். எம்பெருமான் அநவரதம் பிரணவத்தையுச்சரிப்பதால் மநோகரமானதிருமுகத்தையுடைய முதற்புதல்வனை நோக்கிக்கருணைகூர்ந்து களிப்புற்று வேதத்திற்குக்காரணமும் பவக்கடலுக்குத் தாரணமுமான தமது திருவஷ்டாக்ஷர மந்திரத்தை யுபதேசித்தருளி நான்மறையுமோதுவித்து அனர்த்தத்தைப் போக்குகின்ற அவைகளின் பொருளையும் நன்றாயுணரத்தெருட்டினார். மூத்த புதல்வற்கும்மெய்யுணர்வும்அன்புமுள்ளசிடனுக்கும் விழுமியோர் தம் மனதிலுள்ளவிசேஷங்களைவிளம்புவதுஉலகவழக்கன்றோ? அவ்விதம்அநுக்கிரகித்த பகவான், மற்றும் வாராய் மதலாய்! சரீரத்தைத்தேராகவும் பிராணன்களைத்துரகமாகவும் எமக்குஅனுகுணமானகுணங்களைக்கயிறாகவும் எம்மைச் சாராதியாகவுமுணர்ந்து சர்வதர்மங்களிலு நானென்பதை நீக்கி அவறறிற்கெல்லாம் எம்மையே சாதனமும் பயனுமாய் நினைத்திடென்று உபதேசித்தருளியபின் திசைமுகக்கடவுள் தாம் அறியாதது உலகத்திலொன்று மிலதாய்ச் சர்வஞானியாய் விளங்கக்கருணையோடலர்ந்த கண்களுள்ள கமலாநாயகர் மற்றுந்திருவஷ்டாக்ஷரமகிமையைத் தெரிக்கலுற்றனர்.

அஷ்டாக்ஷரமகிமாநு வர்ணனம்.

தாமரையிற் பிறந்த தனயசிகாமணியே! இத்திருமந்திரம் நான்மறைகட்கு நயனமும் நான்குவர்க்கத்திற்குச் சாதனமுமாகின்றது. பலவிதமந்திரங்களாலும் யந்திரங்களாலும் கருமங்களின் தந்திரங்களாலும் செய்யப்பட்ட வனைத்திற்கும்இதன்ஸாந்நித்தியமேமுக்கியமாயுள்ளது. இதுசாதாரணமாய் ஸர்வமூர்த்திகளிலுமுண்டு. எல்லாமூர்த்தி மந்திரங்களுமிதன் அனுகூலத்தையே அடைகின்றன. வியாபகமாயுள்ள மூன்று மந்திரங்களிலும் இதுவே சிறந்ததாகையின், விஷ்ணுகாயத்திரிக்கும் ஆதியிலிதையேயுச்சரிக்கத்தகும். இம்மகாமந்திரத்தைச் சற்குருவின்கண் உபதேசம்பெறவேண்டுமேயன்றி இதரரிடத்திற்கேட்கலாகாது. அவ்வணங்கேட்கின் ஓரந்தகனுக்கு மற்றோர் குருடன்கோல்கொடுப்பதுபோலாகும். எவ்வாறுஸ்ரீநிவா

ஸத்வம் எமக்குச்சாதாரணமாய் வழங்கப்படுகின்றதோ அங்ஙனமே நாராயணபதத்தை நாமமாகக்கொண்ட வொருவனைப்பெற்றதாயார்க்கு வீட்டின்பம் அநாயாசமாய்க் கிடைக்கின்றது. கேளாய்பிரமனே! ஆசனத்திலும் சயனத்திலும் போசனம்புரிவதுமுதலான கருமங்களிலும் இத்திருமந்திரத்தை மனத்தின்கண் நிறுத்தககடவை. இதன் மகிமையாலுலகங்களைச் சிட்டித்துக்கொண்டிருந்து உனது அதிகாரமுடிவில் எமதுபதத்தையே நிச்சயமாயடையப் போகின்றனையென்று திருவாய்மலர்ந்தருளக்கேட்ட கமலாசனன் களிப்புடன் கமலையோடு கூடிய கமலக்கண்ணனைவணங்கி அம்மூலமந்திரத்தைத்தியானித்துக்கொண்டே சராசரமயமான சகலலோகங்களையும் படைத்திட்டனர். பின்பு பிரமனுக்குத்தலைப்பிள்ளையாயுதித்த விரூபாக்ஷரென்பவர் விஷ்ணுபக்தரின் முதன்மையானவரென்றும் புரந்தரன் முதலான தேவர்களால் எஞ்ஞான்றும் பரவப்பெறறவரென்றும் தேவதேவனென்னுந் திருநாமமுளளவரென்று முணரத்தக்கது.

பிதாமகன், உயர்ந்ததும் உத்தாரகமுமான தாரகமந்திரத்தை அவருக்குபதேசித்து வேதங்களையுமோதுவிக்க, அச்சிவபிரான் அவைகளை விதிப்படியோதி யுணர்ந்து திவ்வியசம்பத்தையடைந்து விஷ்ணுபக்தராய் அனைவராலும் பூஜிக்கப்பெற்றுத்தம்மைப்ரார்த்திப்போர்க்கு இம்மை மறுமைப் பயனை அளித்துக்கொண்டிருக்கின்றனர். சகலதேவரும் சகலரிஷிகளும் பிரமனிடத்திருந்துண்டானவர்களே. சராசராத்மகமான பரந்தவுலகமனைத்தையும் அவரேபடைத்திடுகின்றனர். படைத்தலைப்பரமேட்டியும் காத்தலைக்கண்ணனும் அழித்தலையரனும் புரிகின்றனர். தேவரின் முதல்வரான பிரமனும் சங்கரனும் முறையே பீதாம்பரனுடையபிரசாதகுரோதங்களாற பிறந்து அவராணையால் படைத்தலும் அழித்தலுமியற்றுகின்றனர்.

அதன்பின் அம்புயத்தோன் தக்ஷர் முதலான புத்திரரோடு அரவிந்தாக்ஷனுடைய அர்ச்சாரூபத்தை யாராதிக்க ஆசைகொண்டுஸ்ரீமந்நாராயணர் பயனளிப்பவரும் தாமேயொரு பயனாகவிளங்குபவருமாகையால், அவரிடத்திருந்தே அவருருவத்தை யடைவோமென்று தமக்குள்ளே யுறுதிகொண்டு புளகாங்கிதராய்ப்பயோததியிற் பணிபதிசயனராய்ப் பத்மநாபராய்உபநிஷத்திற்குச் சிரோபூஷணமாய் அடியார்தாபத்தை யகற்றுபவராய்ச்சங்கசக்கரசின்னத்தையுடையவராய்த்தம்மை யடைபவர்க்குச் சரணமும் அழியாச் செல்வமுமாய்ப் புன்னகையோடும் ஆதரவோடும் புகல்பவராய்த்துலங்கும் புராணபுருஷனைத்தியானித்தனர்.

கமலமாவிழியோன்றன்னைக் கமலமீதுறைவோனுங்கே
அமலமாமனத்தினூடேயச்சைவுருதிருத்தியன்னேன்
விமலமாமந்திரத்தை விழைவுடன்பயின்றேயோகம்
மும்மலமாறடக்கியெண்கண் மூடிடாதிருந்து செய்தான்.

(இ-ள்.) தாமரைமலரிலிருக்கும் பிரும்மா, புண்டரீகாக்ஷனைத்தமது நிர்மலமான மனத்துக்குள் இருத்தி அவ்வெம்பெருமானது திருமந்திரத்தை அன்போடு அனுசந்தித்து மும்மலங்களையும் அடக்கி நயனங்களை மூடாமலிருந்தேயோகம் புரிந்தார்.

௩-வது அத்தியாயம்.

பிரும்மாவினெதிரில் பகவானுவிர்ப்பவித்தல்.

அதன்பின் ஆகாயத்தில் கலகலவோசையுடன் சிறுசின்னமும் தேவதுந்துபியுமுழங்கும் பேரோசையும் வேதாந்தங்களாற் பின்செல்லப் பெற்றதும் அநேககோடி சுபங்களுக்குக் காரணமும் வைரிகளுக்குத்தாரணமுமாயுள்ளது மானபாஞ்சஜன்னியத்தின் தொனியுங்கேட்டன. எல்லாவுலகங்கட்கும் சரண்யரான ஸ்ரீமந்நாராயணர்வருகின்றார் ; சங்கசக்கரகதாபாணியான ஸ்ரீமந்நாராயணர் வருகின்றாரென்று காதுக்கு அமுதப்பெருக்கைச் செய்கின்றதிருச்சின்னவோசையால் அஷ்டாக்ஷரதவம் புரியுநான்முகக்கடவுள் யோகத்தைவிட்டு அஷ்டநயனங்களினும் அஷ்டதிக்கிலும் பரவிய திவ்வியகண்காட்சியைத் தெரிசித்தனர்.

அச்சமயத்தில் வைகுண்டவாசிகளானசிலர், கரத்திற்பிடித்த பிரம்புடன் சீக்கிரம்போ போவென்று புகன்றுகொண்டுகாணப்பட்டனர். புதிது புதிதாய்ப்பாடவல்ல சிலபாடகர் மாதவன்மகிமையைக்கானஞ்செய்து கொண்டு மாகமெங்குந்தோன்றினர். அதன்பின்அங்கையிற்பிடித்தபொற்பிரம்போடு சூத்ரவதிநாயகரானசேனைமுதலியார் பரபரப்புடன் காணலாயினர். அவரருகேசண்டப்ரசண்டாதிகளான எண்மரும் கமலாசனரது நாலிருநயனங்களிலுந்தெரியலாயினர். உடனேசிங்கம்போன்றகம்பீரகதியுள்ள கஜானனன் முதலியகருடபகவான் அமைச்சருந்தோன்றினர். மற்றும்பலபராக்கிரமங்களால் கீர்த்திபெற்ற புயங்களிலணிந்த பணிகளுடன் விளங்கும்

பக்ஷிராஜனாகிய பன்னகாசனனையும் பார்த்தனர். அங்ஙனமே ஆயிரம்பணமணிகளாலும் அரவிந்தாக்ஷனுக்கு நீராஜனவிதியைச்செய்கின்ற ஆதிசேஷனுந்தோன்றினர். பெரியபிராட்டியாருக்கு விளையாடத்தக்க தாமரைமலரையொத்ததும் பூரணசந்திரனைவெல்வதுமான திருநாராயணர் வெண்கொற்றக்குடையை விண்ணகத்திற்கண்டனர். அப்புறம்விரஜாநதியிற்படிந்து வரும்மந்தமாருதத்தால் அசைக்கப்பட்ட பட்டிகையையுடைய வைகுண்ட விஜயத்வஜராகிய பரமபதநாதன் கருடாரூடராய்க்காணப்பட்டனர். மதுவைப்பருகிமதுரமாய்ப்பாடுகின்ற மதுகரங்கள்மொய்த்தமாலைகள் நாற்புறத்துந்தொங்குவதால் மின்னலையுடைய மேகவரிசையால் மூடப்பெற்றதுபோன்றதும் திவாகரர்ஆயிரவர்க்குந்தன்னியத்தைத்தருகின்ற பொற்கலசங்களால் தூரத்திலேயே சூசிப்பிக்கின்ற ஐச்வரியவைபவத்தையுடையதும் அடிக்கடிசெவிக்கினிமையான நாதத்தாலே முக்திமார்க்கத்தைக்காட்டுகின்றவேதத்தைவழங்குங் கிங்கிணிஜாலங்களால்அலங்கரிக்கபபெற்றதும்கம்பீரநாதமும்வணக்கமுமுள்ளஅஞ்சலியோடுகூடிய திவ்வியமாகிய பஞ்சாயுதங்களின் ஜயசப்தத்தையுடையதுமாய் ஆகாயத்திற் பிரகாசிக்கும் விஷ்ணுவிமானத்தைஅண்ணாந்துபார்த்துக்கண்கூசலடைந்தனர். அங்ஙனம்சத்தியலோகத்திலுள்ள சனகாதியர் பரபரப்போடுகருடத்வஜராகியகருணாகரனைக்கண்ணுற்று அடங்காமகிழ்ச்சியும்அதிகவிம்மிதமும் அடைந்தனர். கமலயோனியும்மிக்கவியப்புடன்இருக்கைவிட்டெழுந்து மிகக்களிப்பால் மதிமயங்கி ஆனந்தக்கூத்தாடினார். அவ்வமையத்திற்சேநாநாயகர் புவனங்கட்குப் பூஷணமான அந்தவிஷ்ணு விமானத்தைத்திசைமுகக்கடவுட்கெதிராக நிறுத்திச்சுபகரமாய்அமுதப்பெருக்கைநிகர்த்தவார்த்தையைவழங்கியருளினார்.

கேளுங்கமலாசனரே! ஆச்சர்யகருணாநிதியாகும் இந்தலக்ஷ்மீ நாயகர் உமதுபக்தியால் பரமபதத்திலிருந்துஇங்கெழுந்தருளினார். ஆனந்தவாரிதியிலழுந்தியநீர் திருத்துழாய்ப்படலையின் மணக்கப்பெற்ற மார்புள்ளஇச்செகந்நாதரையினியாராதித்திடும்; இவருமக்கு எல்லாச்செல்வமும் பவக்கடலுக்கு மரக்கலமும் நீர்இழைத்ததவத்துக்கெல்லாம்இறுதியில் தக்கபயனுமாகின்றனரென்றுவிளம்புகையில், அமரர்க்காதியானஅன்னவாகனர்ஸேநேசரைத்தொழுது காட்சிக்கு இணையில்லாத பெரும்பலனுள்ளவராய்இனிமையாயொலிக்கும் மணிகளிழைத்த பணிகளுள்ளனவாகிய பங்கயமலர்மானும் பெரியபிராட்டியின் திருக்கரங்களால் வருடப்பெற்ற பாதாம்புயமுள்ளவராய்க்கதிரெரிககுங் கிரீடமகுடங்களாலும் நூபுரத்தாலும் இன்னும்ஆங்காங்கிடத்தக்க பூஷணங்களாலும் திருவாழியாதியலங்காரார்த்தமாயுள்ள ஆயுதங்

களாலும் அலங்கரிக்கப்பெற்றவராய் வைஜயந்திமாலையும் ஸ்ரீவத்சமறுவும் பதுமரூபமாகிய மணிபீடமுமுடையவராய்ப்புண்டரீகதளம்போன்றவிசால நேத்திரங்களும் பூர்ணசந்திரன் பொலிவைவென்றமுகாம்புயமும்கம்புபோற்கழுத்தும் கடினமாய்ப்பரந்துள்ள மார்பும்சதுப்புயமும்கம்பீரகாத்திரமும் பீதாம்பரந்தரித்தவிடையும் எஞ்ஞானறும் எவ்வுலகுக்குஞ் சரண்யமான சராணும்புயமும்உள்ளவராய்விளங்கும்புண்டரீகாக்ஷரதுசௌந்தர்யத்தைத்திருமுடிமுதல் திருவடியளவாய்க்கண்டுகளித்து வணங்கித்துதித்துக் கூத்தாடிக்குதித்தும் சற்றுநேரம் அசையாதிருந்தும் எம்பெருமான் இணையடித்தாமரையைச்சிரஸாவகித்தும் பதேபதேதூரத்திற்படர்ந்துதிரும்பியும் உத்தரீயத்தை யுயர வுயர வெறிந்தும் தழதழத்தவாக்குடன் கானம்புரிந்தும்இவ்வாறுமற்றும் பலபலவகையான ஆனந்தவிளையாட்டால் பரவசரான பரமேட்டியைப்பரமபதநாதர் கருணாரஸக்கடல் போன்ற கமலக்கண்களாற்கடாக்ஷித்துக்களித்தனர்.

பின்புகந்தர்வகின்னரரோடுசகலதேவரும் அங்குப்போந்தனர். நாற்புறத்திலும்அரம்பையர்அன்புடன்நர்த்தனம்புரிந்தனர். இனிமையானதாளத்தொனியாலும் மாகத்தைப்பிளக்குமத்தளவோசையாலும் நடனப்பெண்கள் கரத்திலணிந்த கங்கணவொலியாலும் கானத்திற்கைபோயபாடகரின்சுருதியோடுசேர்ந்த பாட்டிசையாலும் கந்தருவரின்ஹாஹாகாரமுழக்கத்தாலும் விமானத்திடையெழுகின்ற பிரதித்தொனியாலும் ஜயாவிஜயீபவாவென்னும்ஆரவாரத்தானும் ஜகமெங்கும் சப்தமயமாய்விட்டன. அவ்வளவில் அன்னவூர்தியும் ஆனந்தக்கூத்தடங்கிச் சாந்தமாய் ஜயஜயவென்று அபௌர்ஷேயவாக்கியங்களால் பரமபக்தியுடன் புளகாங்கிதராய்ப் பரமபுருஷரைப்பரவலாயினர்.

நான்முகன் நாராயணனைத் துதித்தல்.

நாராயண வாசுதேவா உலகமெல்லாம் வியாபித்தொளிரும் விஷ்ணுவே அச்சுதா அனந்தாபுவனங்களைப்புரக்கின்ற கோவிந்தா பரவ்யூக விபவரூபமாய் விளங்கும் பரமாத்மா அனைத்திலும் அந்தர்யாமியாயுள்ள ஐயனே அர்ச்சாரூபியே எல்லாவற்றுக்குங் காரணபூதனான பரம்பொருளே; வந்தனம் புரிகின்றேன். அடியாரகங்களையபகரிப்பவனே வைகுந்தத்தைவழங்குபவனே ஸ்ரீநிவாஸா சரணாகதவற்சலா! தேவரீர்க்கு நமஸ்காரம் இன்னு நமஸ்காரம். செகத்துக்கெல்லாந்தாரகராகின்றீர். உமக்குக் கர்மவசத்தாலும் பிரகிருதி சம்பந்தத்தாலும் பிறப்பில்லாவிடினும் பலவிதமாயவதரிக்

கின்றீர். தேவனுமாகிறீர்; மனுஷ்யனுமாகின்றீர்; பசுபக்ஷியாதிகட்குப் பந்துவுமாகின்றீர். மும்மூர்த்திகளிலொருவருமாகிறீர்; அங்ஙனமாயினும் உமக்கொருக்காகலும் யாங்களொப்பாகோம். கடாக்ஷத்தாலும் தியானத்தாலும் பரிசத்தாலும் ஜனங்களைப்பரிபாலிக்க மீனுமைவராகமுதலிய அவதாரங்கள் செய்து விளையாடுகின்றீர். தேவரீர் கருணாரூபமானபெரியபிராட்டியாரோடு யுகங்கடோறும் உலகங்களையளிக்கின்றீரேயன்றி வேறெவராயினும்புரக்கின்றனரோ? லக்ஷ்மீநாயகாமதுசூதனு! அடியேனுமதுதாஸனும் மற்றதேவர்க்ள் யாவரும் எனக்குஅடங்கியவருமானதால்தேவரீரேயெவ்வுலகத்துக்குமீசனுகின்றீர். பிதிர் தேவர்முதலியயாவரும் உமக்குக்கஞ்சுகம் போலாகின்றனர். நமோவாகரானவைதிகர்கள்காக்கும்பொருட்டுநரபாலரை வணங்காமல் உமது திருவடியை உபாசிக்கின்றனர். மோக்ஷத்தை விரும்புவோர் உம்மையன்றிமற்றேருவரையு மடைகிறதின்று. அவரவர்க்கு வெவ்வேறு அதிகாரங்களில் கருமபலனை யனுபவிக்குமரறு தேவரீரேயுதவுகின்றீராகையின், யானும் சங்கரனும் என்வசத்திலுள்ள இதரதேவர்களும் உமக்கேயதீனமாயுறைகின்றேம். மாதவாமதுசூதனு! சரணுகதருக்குச் சரண்யனுயிலகாநின்ற தேவரீரையான் சரணமா யடைந்தேனுகையால் என்னையும் என்னையிணைந்த சகலத்தையும் அங்கீகரித்துத்தேவரீரை அருச்சிக்கவிரும்பிய வெனதெண்ணத்தைப் பூர்த்திசெய்தருளுமென்று பிரார்த்திக்கின்ற ஞானசாகரரான பிதாமகனைப்பெருமாள் கடாக்ஷித்தருளி மலர்ந்த திருமுகத்தோடு வாராய்நான்முகனே! எம்மையிவிடத்திற் பதினுயிரம் வருஷமளவும்நீஅர்ச்சித்துப்பின்பு உன்புத்திராதியராற் பூமியின்கண் வெகுகாலம் பூஜிக்கச்செய்குவையென்றுதிருவாய்மலர்ந்தருளினுர்.

ஆங்கதன்மேலம்புயத்தோனம் மலராளருள்பொழியுமலர்ந்தபார்வைத்
தேங்குவளைமலர்கின்றதிங்களுமாய்த்தம்மடியைத்தினமும்வீழ்வோர்க்
காங்கருளுமைந்தருவுமாயொளிருங்கண்ணனைத்தந்தனயரோடும்
பாங்குபெறப்பலவகையின்பதமலரினருச்சனைசெய்தடைந்தான்மன்னே.

(இ-ள்.) அதன்மேல் பிரும்மா, பெரியபிராட்டியாரதுதயாரசம்பெருகாநின்றமலர்ந்தநயனங்களாகிற நீலோற்பலங்கள் மலர்தற்குக்காரணமான சந்திரனுய்த்தமது திருவடியைத்தினமும் இச்சிப்போர்க்கு வேண்டியதையுவுதம் கல்பதருவுமாய் விளங்காநின்றபெருமானைத் தம்புத்திரர்களோடு நன்மையாக நாநாவிதமாய்ப்பாதத்தைப் பூஜித்துக்கொண்டிருந்தார்.

ச-வது அத்தியாயம்.

பகவான் பூலோகத்திற் கெழுந்தருளல்

செவிக்கின்பஞ்செய்யும் உமதுவாக்கினால் அரவிந்தாக்ஷன் ஆவிர்ப்பாவத்தைக்கேட்டு யாம்தன்யராயினோம். பக்தவற்சலராகும் அவ்வெம்பெருமான் அவனியிலெழுந்தருளி அனைவர்க்கும் ஆனந்தம் விளைத்ததையும் விரிவாய்ப்ரசாதித்தருளவேண்டுமெனப்ரார்த்திக்கின்ற முனிவர்களைநோக்கி நாரதபகவான் மற்றும்நவிலத்தொடங்கினார்.

பின்பொருகால் கலசாம்போதியினின்றும் போந்தமுநிச்ரேஷ்டரும் நாராயணபரருமான சனற்குமாரர் சனகாதியருடன் சதுமுகனைக்கண்டுபத்தியாய் அஞ்சலிசெய்துதொழுது எனதையனே! யான்உமக்குப்புத்திரனும் சிஷ்யனுமாகின்றேன்; தயாளுவாய்ப்பக்திவைராக்கியஞானத்தையருள்பவருமாகியதேவரீரால் என்இதயத்திலுள்ளகலக்கமெல்லாம் ஒழிந்தன. முன்னரேஉமதிடத்துவேதாந்தத்துடன் வேதங்கள்யாவும்ஓதிவிட்டேன். கர்மப்ரும்மவிசாரங்களால் எனக்குள்ளசந்தேகத்தையும்போக்கியருளினீர். சகலஞானியர்க்குமேலான உமதிடத்திருந்தேமறைவும் வெளிப்படையுமாகும் அனைத்தையும் யான்தெரிந்தமையின் எனக்குத்தேவரீரைவிடவேறு ஆசாரியரில்லையென்பதுதிண்ணமன்றோ? தேவரீர் இங்ஙனம்ஆராதிக்கின்றஸநாதனரான நாராயணபகவானையான்பூஜிக்கவிரும்புகின்றமையின் பெரியபிராட்டியாரோடுபெருமாள் வீற்றிருக்கின்ற திவ்வியவிமானத்தையடியேற்குஅருளவேண்டுமென ப்ரார்த்திக்கையில், பரமேட்டிசற்றுயோசித்துஅவ்வாறேயுதவும்படி நிச்சயித்து மகிழ்ச்சியோடு மதலையைநோக்கியெனக்குப்புதல்வர் பலரிருப்பினும் பகவஞ்ஞான பக்திமுதலியவற்றால் நீயேவிசேஷப்பிரீதியுள்ளவனாகின்றனை; ஜனனமுதன்மரணபரியந்தம் ஸ்ரீமந்நாராயணனேதனமென்றுநினைப்பவன்புத்திரனேயன்றிமற்றவன்பிள்ளையாகானென்றுபுகன்று பெருமாளைப்பிரியமனமில்லாமல் சற்றுமனதில் சிந்திக்கையில், புண்டரீகாக்ஷன் அமுதப்பெருக்கென அழகியவாக்கினால் அறைகின்றனர்.

நீ கிஞ்சித்துஞ்சஞ்சலப்படாது பாகவதசிரோமணியான சனற்குமாரனிடம் எமதுமூர்த்தியைத்தந்திடு; இதோஎமது சங்கற்பத்தாலுண்டான வேறுமூர்த்தியொன்று தருகின்றோமெனத்திருவாய்மலர்ந்துபெரியபிராட்டியின் கண்ட பூஷணசின்னத்தோடிலகுந்தமது திருக்கரத்தாலொரு சுந்தரமூர்த்தியைத்தந்தருளினார். அங்ஙனம் அயனார் ஸ்ரீபூமியுடன்சேர்ந்த அந்த

மூர்த்தியைப்பெற்றுக்கொண்டு பரமபக்தியாய் ஸரஸ்வதி ஸாவித்திரியுடன் வணங்கிச்சனற்குமாரரைநோக்கி வாராயென்கண்மணியே! மலயபருவதத்தின் கிழக்கிலொருபுண்யமயமான பூதரமுளது; அதனிடையேசுத்தஸத்வமயமும் சுபகரமுமானதிருமண்காணப்படுகின்றது; அவிடத்திலிவ்விமானத்தை ஸ்தாபித்து நாராயணபதாம் போஜத்தையருச்சிக்கக்கடவை. ஒப்பொழிந்த இவ்வற்புதவிமானம் ஸ்ரீவைகுண்டத்திலிருந்துசுயமாகவேயீங்கு வந்தது. விஷ்ணுபக்தியற்றவன் வேதத்தை நிந்திப்பவன் நாஸ்திகன் துராசாரன் பாகவதரைப்பழிப்பவன் வர்ணாச்ரமத்தை வரைந்தவனாகிய இத்தீவினையாளராலிது வொருபோதுந்தீண்டத்தக்கதன்றென்று புகன்று அதையன்போடுகொடுத்தருளினர்.

சனற்குமாரர்அதைப்பெற்றுத்தரமற்ற முதமுற்றுவிமானத்துடன் மேருவினுச்சியில் வரும்போது அதனொளியால் அப்பொன்வரையின்சிகரமெல்லாம் மழுங்கிவிட்டன. அதைக்கண்ட தேவரனைவரும் இமையாநேத்திரம் பெற்றபயனையடைந்தனர். ஸ்துதிசாலிகளானவிண்ணவர் விழிகளில் ஆனந்தநீர்தளும்பஎதிராகநின்று வந்தனம்புரிந்தனர். பின்புவாசவன்முதலியயாவரும் தெய்வப்பெண்களின் கூட்டத்துடன் தத்தம்வாகனத்தில் இவர்ந்து விமானத்தின் பின்தொடர்ந்தனர். கந்தர்வஸித்த ஸாத்தியர்களும் அரம்பையருமுன்பாகச் சென்றனர். பின்புசரற்காலமேகம்படிந்த கொடிமுடியுள்ள கைலாசகிரிகாணப்பட்டது. அப்போது விஷ்ணுபக்திபராயணரான சிவபெருமான் விஷ்ணுவிமானத்தைக்கண்டதும் ஆனந்தக்கூத்தாடித் தேவதேவரைத்துதிக்கத் தொடங்கினர்.

ருத்ரன்பகவானைத்துதித்தல்.

ஓ அரவிந்தாக்ஷா அனைவரும் ஆராதிக்கின்ற தாமரைத்தாளா! பெரியபிராட்டியாருடன் வீற்றிருக்குந்தேவரீரைத் தெரிசிக்கிறவர் பாக்கியமேபாக்கியம்; மகோததியின் மணலையும் மழைத்துளிகளையும்அளவிடலாம்; உமது நாபிகமலத்திலுற்பவித்திறந்தசிருஷ்டிகர்த்தாக்களை யொருபோதுமொருவராலும்எண்ணலாகாது. தேவரீரைஷாட்குண்யபூர்ணரென்றும்சகல்காரணபூதரென்றும் மோக்ஷமுதவுகிறவரென்றும் சர்வோத்தமரென்றும் சாற்றுகின்றனர். நீரேயனைத்தினும் அதனதன் உள்ளிருந்துநடத்துகின்றீர். பிரமன் முதல்கிருமியளவர்யுள்ள சகலஜீவராசிகளும் லீலாவிபூதியில் உமக்குப் புத்திரராக ஆசரிக்கப்படுகின்றன. பெரியபிராட்டியின் பயோதரபரிசத்தால் மணக்கப்பெற்றதடம்புயமுள்ள தேவரீர்க்கு நமஸ்காரம்; சரணாகதரு

க்கு ஸகலமும்உதவுகின்ற சரணும்புயமுள்ள சர்வேச்வரா ! நமஸ்காரமென்று பலபடியாய்ப்பரவி யிடபவாகனமேறித்தாமும் பின்போந்தனர்.

அதன்பின்விமானம் அளகாபுரியையடையப், புருஷோத்தமன் குபேரனுலுந்துதிக்கப்பெற்றுப் பூலோகவைகுண்டமாய் இருடிகளெக்காலுஞ் சூழ்ந்ததாய் மனதிற்கினியதாய் நரநாராயணர்முநிரூபத்துடன்வாசஞ்செய்வதாயுமுள்ள வதரிகாச்ரமத்திலெழுந்தருளினர். சனற்குமாரர் சனகாதிமுநிவரோடு விமானத்தையங்கேயிருத்தித் திருநாராயணரை மூன்றுதினம்ஆராதித்தபின் சகலவிண்ணவருடன்அங்கிருந்து எழுந்தருளப்பண்ணிக்கொண்டு தென்றிசைக்கோர்திலதமும் திருத்தூழாய்வனம் அடர்ந்ததுமாயுள்ள பிரமனுற்சொல்லப்பட்டபருப்பதத்தைப்பார்த்து மிகமகிழ்ந்து விஷ்வக்ஸேனராற்கொண்டாடப்பட்டு எம்பெருமானுக்குச் சேஷபூதமாயிலகும் அதைப் பக்தியுடன் தொழுது அதனிடையிலோர் சிகரத்தின்கண் விழுமியோரடையப்பெற்ற திவ்வியமான கலியாணதீர்த்தத்தைக்கண்டுஇதுவேமிகச்சிறந்தபுண்ணியஸ்தலம் ; ஸர்வேச்வரரும்சகலமுந்தருபவருமான ஹரியை யிங்ஙனே ஆராதிப்பேனெனநிச்சயித்து அத்தீர்த்தக்கரையில் விதிப்படிவிதியினுற்பூசையுண்டவிமானத்தை ஸ்தாபித்தனர்.

கேளீர் முநிவரர்காள் ! அவ்விமானம் ஆதியில்அயனுடையபவனத்தில் ஆராதிக்கப்பெற்றிருக்கையில் அஞ்சுலக்ஷம் யோசனைவிஸ்தாரமாயிருந்தது இங்ஙனம் அஞ்சுபுருஷப்ரமாணமாய் மனிதற்குக்காணப்படுகின்றது. பக்தபராதீனனுகியபகவான் தமது விளையாட்டினிமித்தம் விமானம் அவ்வுலகத்திலிருந்த விசாலத்துக்குத்தக்கரூபம் ஆபரணம் ஆயுதமுதலானவைகளை விட்டு இங்ஙனமிருக்கும் அளவுக்குத்தக்க ரூபாதிகளுடன் அதற்குள்எழுந்தருளியிருக்கின்றனர். அப்போது அதைக்கண்ட இருடிகளெவரும் அதிசயித்து அகோ ! ஆச்சர்யம் ; இதுநல்லவாச்சர்யம் ! திருநாராயணர் அக்காலில் அயனுலகில் அவ்விதமிருந்தார் ; இப்போது இவ்வுலகில் இங்ஙனம் இலங்குகின்றனரென்றுவஸ்திரத்தைஉயரவெறிந்தெறிந்து எழும்பியெழும்பித்தெண்டன் ஸமர்ப்பித்து ஆனந்தக்கூத்தாடினர்.

அவ்வளவில் அங்கிருந்தயாவரும் திருநாயணர் திருமகளுடன் திருநாட்டிலிருந்து சுயமாகவே யிங்கெழுந்தருளினரர்கையின், அகோ, நமக்கின்றைக்குக்கலியாணம் கலியாணமென்று களிப்போடு கழறியதால் அத்தீர்த்தத்துக்கு அதேபெயர் வாய்ந்தது. அவ்வாறு சனற்குமாரர் விமானத்தில்வீற்றிருக்கும் புருஷோத்தமனைக் கிழக்குமுகமாகவெழுந்தருளப்பண்ணிப் பாஞ்

சராத்ரவிதிப்படி பக்தியாய் ஆராதனம் புரிந்து தேவர்முதலியயாவர்க்கும் பகவானது ஸ்ரீபாததீர்த்தம் வழங்கினர். அதைப்பெற்றுகொண்ட அனைவரும் ஆமோதத்துடன் எம்பெருமானிணையடிகளில் சாஷ்டாங்கமாய் வணங்கினர். அண்டர்கள் அனேக கோடிரத்னங்களாற் கண்ணெச்சில் கழித்தனர்.

பகவான் சனகாதியருக்குக் கல்யாணதீர்த்த மகிமை கூறல்.

அங்ஙனம் ஔதார்யகருணாநிதியானபகவான்அமுதவெள்ளத்தால்மநோகரமாயுள்ள கடைக்கண்ணால் அவர்களைநோக்கி மதுரமாய் மொழிந்து வாரீர் எமதடியவர்காள்! பூர்வத்தில் பூமியைப்புரக்குமாறு யாம் வராகரூபமெடுக்கையில் அவ்வுருவத்தோடு இக்கல்யாண தீர்த்தத்தின் கீழ்க்கரையிலிருந்தோம். அவ்வேனரூபத்தொடு கடலில்மூழ்கிக்கிளம்புகையில் எமதுதேகத்திலிருந்து வழிந்தஜலத்தாலித்தடாகம் நிறைந்தமையின் இதுபுராதனமாகிய புண்யதீர்த்தமாகின்றது. ஆகையின்இத்தூய்மையாயுள்ள தோயத்தைச்சிரஸாவகித்திடுமின். அங்ஙனம்உளர்த்வகதியை யிச்சிப்பவரும் உளர்தவரேதசுள்ளவரும் வராகரூபியானவெம்மைச் சேவிப்பவருமான முநீச்வரர்களுக்குஊர்த்வபுண்டரந்தரித்துக்கொள்ளயாங்கருடனையேவ, அவர்சுவேதத்தீவிலிருந்துசுத்தமாயுள்ளமிருத்திகையைக்கொர்ணந்துஇக்கலியாணதீர்த்தத்தின் மேற்புறத்தில் வைத்திட்டனராகையின், எல்லாமிருத்திகைகளினும் இது வேசிறந்தமையால் நீவிர் இத்தீர்த்தத்திலாடி யித்திருமண்ணைத்தரித்துஎமது பக்தியோகத்தால் எமதுசாயுஜ்யத்தை யடைந்திடும். இத்தலத்தில்தத்தஞ்சத்திக்குத்தக்கபடி யெம்மைப் பக்திபண்ணுமவர் எமதுகிருபையால்இஷ்டமானபயன்களைப் பெறுகின்றனர். இத்தடாகக்கரையில் பிதிர்க்களுக்கு விதிப்படி பிண்டம் போடுபவர்க்கு அத்தென்புலத்தோர் அதிகபிரீதியாய்த் தருமத்தில் விருப்பமுள்ளவரும் ஆத்மகுணமுள்ளவரும் மோக்ஷத்தில் அவாவுள்ளவருமாகும் புதிரபௌத்திரர்களை யுதவுகின்றனர். ஈங்குமகம்புரிவோர்தமதிஷ்டங்களையாயிரமடங்கதிகமடைந்து மற்றும்எமதனுக்கிரகத்தால் அபவர்க்கத்தையும் பெறுகின்றனர். இங்ஙன மொருபயனையும் விழையாமல் எம்மையனுஷ்டிப்பவர்க்கு ஸகலஸம்பத்தையுந்தரத்தக்கயாமே உத்தபலமாகின்றோம். இக்குளக்கரையின்மேல் தானம்புரிபவர் நாற்கடலாகு மேகலையையுடைய நானிலத்துக்குநாயகராய்ஸார்வபௌமபதத்துடனுண்டு புத்திரபௌத்திராதியர் தமமைச் சூழமழ்கின்றனர். இத்தலத்தில்புண்ணிய

விரதமனுஷ்டிப்போர் சத்தியலோகத்தைச்சார்ந்து பிரமனோடு பேரானந்த முறுகின்றனர். செல்வமும் புத்திரபாக்கியமும் ஆரோக்கியமாதியாவும் இத்தலத்தில் எமதனுக்கிரகத்தாலுடனே யுண்டாகின்றன.

கேளீர் விண்ணவர்காள்! பங்குனிமாதத்தியபௌர்ணமியில்யாமிங்கு எழுகின்றமையின்பருவமனைத்தினும் அதுவேமேன்மையுள்ளதாம். ஆகையின் இனிஆண்டாண்டு தோறும் அப்பௌர்ணமிதினத்திலெல்லோரும் இவ்விடம்போந்து இத்தோயத்திலாடிப் புனிதராய்ச் செல்லக்கடவீரென்று திருவாய்மலர்ந்தருளிய பகவத்வாக்கியத்தைக்கேட்டபாகசாசனன்முதலான பண்ணவரனைவரும் அகமகிழ்ச்சியோடும்அவரவரிடம் போய்ச்சேர்ந்தனர். ஓ முனிவர்களே! அதன்பின் சனற்குமாரர் என்னுலும் சனகாதிமுனிவராலும் சூழப்பெற்றுப்பச்தியதிகரிக்கப் பெரியபிராட்டியாரின் பயோதரங்களிலெழுதிய மகரிகாசின்னத்தைத்தந்தடம்புயத்திலுடைய மாதவனைக்குலதெய்வமென நினைந்துபயனென்றுங் கருதாமல் பலகாலும் ஆராதித்து வந்தனர்.

தேவநாயகன்றிருமகள் விழிமலர்தமக்கும்
மேவுபுண்ணியருலகமூன்றுள்ளவர்விழிக்கும்
தாவிலஞ்சனம்போன்றவன்றருமமேபுகலும்
நாவினர்களுங்காணுதற்கரும்பெருநலத்தோன். ... ... (க)

அன்னநாயகனருட்கடற்பரம்பொருணலத்தை
மன்னுமேனலின்குரல்களைமடக்கிளிகறிக்கும்
பொன்னெடுங்கொடிமுடியெதுகிரிதடம்புனத்தின்
மன்னுமாதவர் மலர்விழிமடுத்திடுந்தினமும். ... ... (உ)

(இ—ள்.) தேவர்களுக்கு நாயகரும் பெரியபிராட்டியாருடையநீலமலர் போன்ற நேத்திரங்களுக்கும் மூன்றுஉலகத்தினுமுள்ள புண்யசாலிகள் கண்களுக்கும் அழிவில்லாத அஞ்சனம் போன்றவரும் தருமத்தையே மொழியுநல்லவாக்கினருங்காணுதற் கரியபெருங்குணத்தருமான, அப்படிப்பட்ட அருட்கடலாகிய பரப்ருமத்தினது நலத்தைக்கொல்லையில் மிகுந்ததினைக்கதிர்களை யிளங்கிளிகள் கடிக்கின்ற பொன்தாதுக்களையுடைய உயர்ந்தசிகரத்தோடுகூடியய தூகிரியின் தாழ்வரையில் பொருந்தியுள்ள மாமுனிவர்களின் விழிகள் நாடோறும் அனுபவிக்கின்றன.

ரு-வது அத்தியாயம்.

சுசரிதோபாக்கியானம்.

அம்முநிவரர் அனைவரும் பதரிகாச்ரமத்தில் நாரதவாக்கியத்தால்பரமானந்தமுற்று மற்றும்மகானுபாவரே! பிரும்மபுத்திரரே! அனந்தசயனன் ஆகமனமுதலானயாவுங் கேட்டதால் தன்யராயினோம். மோக்ஷத்திற்கேதுவாய்ப்புனிதமாயுள்ள திருமண்ணின் பெருமையும் கல்யாணதீர்த்தமகிமையும் வராகரூபியான நாரணன்சந்நிதியும் வழங்கியருளினீர். இன்னுமுள்ள சேஷத்தையும் இசைத்தருளவேண்டும். காசினியிலுள்ள தீர்த்தங்களிலெல்லாங்கங்கை விழுமிதென்று பேர்பெற்றிருக்கத்தேவரீர் கலியாணதீர்த்தஞ் சிறந்ததென்று செப்பியதின் காரணமென்னவென்றுகேட்க நாரதபகவான் நவிலலாயினர்.

புலனைந்தும்வென்றபுனிதர்களே! கலியாணதீர்த்தமகிமையைவிளக்கலான புராதனகதையொன்று புகல்கின்றேன்கேட்பீராக. முன்பொருகால விசேஷத்தில் மிக்கதவசியான சுசரிதரென்னுமொரு பிராம்மணோத்தமரிருந்தனர். அதிகபதிவிரதையான அவர்மனையாட்டிக்குச் சுசீலையென்றுபெயர். அவர்க்குச்சுமதியென்றும் சுவிருத்தியென்று மிரண்டு புதல்வரிருந்தனர். அவர் சகுடும்பமாய்ப்பற்பல திவ்வியதேசங்களுக்கும் புண்யநீராட்டத்துக்கும் போக விரும்பிப்புறப்பட்டுக்காவேரி துங்கபத்ரை தாமிரபர்ணிஸரஸவதி சோணைகோதாவரி கிருஷ்ணை நர்மதை ராமஸேது முதலானதீர்த்தங்களிலாடிப்பாண்டுரங்கம் குருக்ஷேத்ரம் புருஷோத்தமம் அனந்தசயனம்ஸ்ரீகூர்மம் சிங்கபூதரம் கோகர்ணமாதியான மற்றுமுள்ளபுண்யஸ்தலங்கட்கும்படர்ந்து அங்கங்கே சிலபகல் வசித்து நாராயணகிரிக்குநடவாமலும் கலியாணதீர்த்தத்தின் மூழ்காமலும் பாரேதிக்குச்சென்றனர். அங்ஙனஞ்சென்றுகங்கைக்கரையணிகியும் அதுகண்ணுக்குப்புலப்படாமையால் அங்குள்ளவரை நோக்கி மந்தாகினியெங்கிருகிறதென்று கேட்கையில், அவர்கள் அரனார் முடிக்கு ஆபரணமான வரநதியிதோஉமக்கெதிராகவே யிருக்கின்றதெனவுந்தம்பார்வைக்குத்தட்டாமையால் வருத்தமுற்று இதுஎன்ன தௌர்ப்பாக்கியம்? அரிபாததரங்கிணியெனக் கெதிரில் நிச்சயமாய்ப்பெருகாநின்றனள். யானித்தனைதூரநடந்துவந்தும் என்விழிக்குப்புலப்படவில்லையென்று சிந்தித்து மனநொந்து முகம்வாடி யோகங்காதேவியே! ஸ்ரீவிஷ்ணுபாதாரவிந்தசங்கமமானமங்களரூபிணீ! என்தீவினையையகற்றுமாறு நீபிரசன்னமாகவே

ண்டுமெனப்பிரார்த்திக்க, ஒருகன்னிகையானவள்நீலநிறமானமற்றொருமங்கையுடன் அவ்வேதியர்க்கெதிரில் தோன்றிப் பூசுரோத்தமரே! நீர்யாதுகாரணத்தால் வருந்துகின்றீரென்று மதுரரூபத்தோடு மதுரவசனத்தால் வினவினாள்.

அதைக்கேட்ட அந்தணர், அம்மாதைநோக்கிக் கங்கையிலாடவந்தவென் கண்ணுக்கவள் தெரிசனங்கிடைக்கவில்லை; முயற்சியால் வருந்தியும் பயனடையாதபிராணிகளின்கஷ்டமேகஷ்டமென்று விளம்புகையில், அவள்பாவிகளின் கண்ணுக்குவரநதிகாணப்படாளென்ன, அவர்தாயே! யான் அவ்விதபாவியாம் பக்ஷத்தில் அத்தரங்கிணி யிங்ஙனம்பிரசனன்மாயெனதுதீவினையையொழித்தருள்க; அரிபாதநதியிலாடாமல் அகமெல்லாமெவ்வாறு தொலையுமென்ன, அதற்கவள் வாரீரந்தனளரே! யானேவைகுந்தவாசன்பாதாம்புயத்திருந்து பெருகும்வரநதி; இவள் எனதுசகியாகியயமுனை; முன்புநீர் சிறிதுதகாத காரியமிழைத்துவிட்டீர்; தென்தேயத்திலுள்ள சகலபுண்யஸ்தலங்களுக்கும்போய் ஆங்காங்குள்ள புனிதநீரின்மூழ்கி நாராயணகிரியை நணுகாமலும் கலியாணதீர்த்தத்திலாடாமலும் வந்துவிட்டீர்; புண்யதீர்த்தத்தை நிக்கிரகிக்குந் தோஷத்தினுங் கொடியது வேறொன்றுளதோ? அத்தீர்த்த மெல்லாவற்றினும் மிகமேன்மை யுள்ளது; யான் அரி பாத சம்பந்தத்தால் அனைத்திற்குமேலானவள்; அதுவராகரூபியான அந்தபகவானுடைய சகலாங்கத்தினின்றும் பெருகியதால் மிகச்சிறந்துள்ளது. அன்றியும் அதன்தீரத்தில் எஞ்ஞான்றும் நாராயணபகவான்சுயமாகவேயெழுந்தருளியிருக்கின்றனர். நாராயணபராயணராகியபாகவதர்கள் அதில் எக்காலுமிடைவிடாது ஸ்நானம்புரிந்து அதைவிடாமலிருக்கின்றனர். சகலபுண்யநதிகளும்அதில்எப்போதுங்கலந்துள்ளன. யான் சாந்திரமான சித்திரைமாதத்தில் ஸரோவரத்திலும் வைசாகத்தில் அனந்தசரசிலும் ஆஷாடத்தில் துங்கபத்திரையிலும் புரட்டாசியில் சுவாமிபுட்கரணியிலும்கதிரவன் துலாத்திற் பிரவேசிக்கையில் காவேரியிலும் மாதங்களிலுத்தமமான பங்குனியில் அக்கலியாணதீர்த்தத்திடையும் வசிக்கின்றேன். அங்ஙனம்அத்தீர்த்தத்தில் எல்லாநதிகளின் ஸாந்நித்யமுமாகின்றது. அச்சமயத்தில் அரிபக்தியோடு அதிலாடுபவர் சகலபுண்யநதிகளிலும் மூழ்கும்பயனை ஐயமின்றியடைகின்றனர். ஆகையின் நீர் முன்னையவ்விடம்போந்து அதனிடையே நீராடிப்பின்னை யிவ்விடம்வருகுவிரேல், மதுசூதனன் பாதத்திலிருந்து பெருகும்யான் உமக்கு நதிரூபமாய்த் தரிசனந்தருவேனென்றுபுகலக்கேட்ட பூசுரர் வினயத்தோடு எனதன்னையே! யான் தூரதேயங்களிற்சென்று சுழ

ன்று வந்ததால் மிக்கவாட்ட முற்றிருக்கின்றேன், இங்ஙனம் நடந்தேயவ்வி டமேகுதற்குத்திடமின்று; இப்புதல்வரும் சிறுவர்கள்; நீயேகலியாணதீர்த்த மாயிருந்து காத்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

இவ்வாறு பக்தியால் ஆதரவோடு வணங்கிக்கேட்கக்கண்ட வரநதி யமு னையின் முகமதியை நோக்கிப்புன்ன கைபுரிந்துதனது நதிரூபத்தையவர் நயனங்கட்குத்தெரியும்படி கருணை கூர்கையில், பெருகாநின்றகங்கையைக் கண்டமறையவர்ஆனந்தமீறியடிக்கடி துதிக்க, அத்தரங்கிணியவரைநோக்கி நீர்சகுடும்பமாய்க்கலியாணதீர்த்தத்தின்பெயரையுச்சரித்துக்கொண்டுமூன்று தரம் இதில் மூழ்குவிரேல் உமதிஷ்ட மெல்லாங்கைகூடுமென்று மதுரமாய் மொழிந்தனள். அங்ஙனம் வேதியர் அவ்விதமேயதன் பெயரைஆவர்த்தி செய்து கொண்டேகங்கை யின்மூழ்கி நன்றாய்விகசித்ததாமரைமல டர்ந்த கல்யாண தீர்த்தத்தின் அலைகளிலிருந்துசகுடும்பமாய்க்கிளம்பி அதிக வியப்புடன் யதுகிரியின் விப்வமனைத்துங்கண்டனர். அப்போது அதன் கரையிலிருந்த தவசிகள் அவரைக்கண்டு ஆச்சர்யமுற்றுநீங்களார்? என்னகா ரணத்தாலித்தோயத்திலிருந்துகிளம்பினிரென்றுவினவ, அவ்விதமேயவர்தஞ் செய்தியாவுமுரைக்க,அடங்காமகிழ்ச்சியும்ஆச்சர்யமுமுற்றஅத்தபோதனரை நோக்கியோசுவாமிகாள் ! இது எந்தஸ்தலம்? இதன்வரலாறென்னவென்று கேட்கையில் அவர்கள், அத்தீர்த்தத்தின்பெருமையையும் எதுகிரியின் ஏற் றத்தையும் அத்தோயத்தின் ஸ்நாநாங்கம் முதலான மற்றுமுள்ள சகலமேன் மையையும் விடாது விளம்பினர். சுசரிதர் பின்புகாலோசிதகருமமனைத்து முடித்துக்கொண்டு ஆனந்தமயவிமானத்திடையெழுந்தருளியிருக்கும் பக்த பராதீனராகுந் திருநாராயணரைச் சாஷ்டாங்கமாய்ப் பணிந்து அத்திவ்விய தேசத்தின்கண்ணே நாராயணகிரியின் தாழ்வரையில் அயலாரிடம் போய் அவாவினால் அஸ்தத்தையேந்தாமல் கிடைத்தமட்டுந் திருத்தியடைந்து திரு நாராயணருக்கு நிவேதனஞ் செய்தவையையே புசித்துக்காலங்கழித்து வந்தனர்.

அங்ஙனம் நடக்கையில்அங்கேயவருக்குஅதிமேதாவி யானமூன்றாவது குமரனொருவனுதித்தனன். அவனுக்குப்பிதா ஜாதகருமமுதலியசெய்து நா ராயணனென்று நாமமுஞ்சாற்றினர். அக்குழந்தைதிருநாராயணர் அமுது செய்த சேஷத்தை நாடோறும் அயின்று பிதாவினும் பெரிதான விஷ்ணு பக்தியோடுவளர்ந்துவந்தனன். அத்தருணத்தில்தேசமெங்கும்பஞ்சம்பிறந்து கன்மாரியாற் பயிரெல்லாம்பாழடைந்துபயன்குன்றியாவரும்பருவரல்எய்து

கையில், சுசரிதர்மனைவியான சுசீலைநாயகனைநோக்கி யென்பிராணநாதரே! நாடெங்கும் கருப்போகைகலந்து விட்டது; தகாத செய்கையினாயினும் தனயரையுந்தாரத்தையுங்காப்பது புருஷரின்கடமை; தேவரீரோ அவ்வாறு செய்யத்தக்கவருமன்று; சர்வதருமங்களுமுணர்ந்த தேவரீர்க்கு அடியாள் புகலத்தக்கது மொன்றுளதோ? ஆயினும் இங்ஙனம்பெண்டுகளுக்கு அடுத்த பேதைமையால் சபலசித்தமுள்ள யானொன்றுரைப் பதைக்கேட்டருள்க. தாரித்ரிய வாரணனென்னுந்தமிழ் நாட்டரச னொருவ னிருக்கின்றனன்; அவன்கேட்போராசைக்கதிகமாய்த் தருபவனாகையால் அங்கெழுந்தருளும் பக்ஷத்தில் தேவரீர் விரும்பியவனைத்தையுங் கொடுப்பானென்று புகலக்கேட்ட சுசரிதர் புத்திரரில் மூத்தவரிருவரையுங் கூட்டிக்கொண்டுபோய் அத்தேசத்தையடைந்து அரசன் அரண்மனையையணுகி அவன்ராஜகாரியத்திலிருக்கவே மன்னனைக்காணவொல்லாமையால் நகரவாசத்தாற்டலவிததுன்பமுற்று அங்கிருக்கமுடியாமல் தமக்குக்கிடைத்த சிறிது திரவியத்தைக்கொண்டு புத்திரரோடு தமதகத்திற்குத்திரும்பிவருகையில், மார்க்கத்திற்கள்ளர் வழிமடக்கித் தடியாலடித்துக் கைப்பொருளையும் பறித்துக்கொண்டு போயினர்.

சுசரித புத்திரனுக்கு ரத்நபிச்சையிடுதல்.

அங்ஙனம் வருத்தமுற்றுப் பார்த்தீர்களா பரமபுருஷனாகியஸ்ரீமந்நாராயணனைவிட்டுப் பொருளாசையால்அயல்தேயம்படர்ந்து அடைந்தபயனை யென்று புத்திரருடன் புகன்றுகொண்டு மெல்லமெல்லத்தமதகத்திற்கெழுந்தனர். அதுநிற்க, வீட்டில் தாயாரிடத்திருந்த சிறுவனாகிய நாராயணன் பெற்றவளைப்பார்த்து அம்மா! எனக்குப்பசிக்கின்றது; அன்னம்வேண்டுமெனக்கேட்க அவள் பாத்திரத்திற் கொஞ்சம் பாளிதமிட்டுஇதைப்புசியென்றுசொல்லச்சிறுவன் தாயே பெருமாளுக்கு நிவேதனஞ்செய்யாதஇதையெவ்வாறுபுசிப்பேனென்ன, அவள் அப்பா! உன்னிஷ்டப் படியேயெம் பெருமானுக்கு நிவேதனம்புரிந்து பின்பு புசியென்றுபுகன்றனள். அங்ஙனம் கேட்டநாராயணன் அதையெடுத்துக்கொண்டு மாதவன் சந்நிதியைக் குறுகி யெம்பெருமான் எதிரில்வைத்து நாராயணா! இதைக்கிருபைசெய்து அமுதுசெய்யவேண்டுமெனத்தெளிந்தமுகத்துடன்பிரார்த்தித்துச் சாஷ்டாங்கமாய்த்தண்டன்ஸமர்ப்பிக்க, நான்முகனாதி தேவர்களாலும் அர்ப்பிதஞ் செய்யப்பட்ட நான்குவிதமான நைவேத்தியத்தை அநாதரத்துடன் தரிசனமாத்திரத்தாலே அங்கீகரிக்கின்ற பகவான், பாலகன் பக்தியாலிட்ட அவ்

வுணவைமுற்றும் பாத்திரத்திற் சிறிதும் சேஷமின்றித்திருமாதுடன் திருவுளமுகந்து அமுதுசெய்துவிட்டனர். அதைக்கண்டவள் எம்பெருமான் எல்லாவுணவையுந் திருவமுதுசெய்தனரேயென்கிற சந்தோஷத்தோடு இல்லத்திற்கேகிமற்றும் என்தாயே! எனக்குப் பசிக்கின்றது; ஆகாரம்வேண்டுமென்ன, அவள் முன்னர் அளித்தவடிசில் எங்கேயென்ன, அவன் அதை முழுதும் அச்சுதன் அமுதுசெய்துவிட்டாரென்ன, அவள் புதல்வன் பேச்சைநம்பாமல் அசனத்தைப் பூனைமுதலானவைதின்று விட்டிருக்குமென்றெண்ணிச்சினந்து வாக்கினால் அதட்டி வெருட்டி யொருபாத்திரத்தைக் குழந்தைகையிற் கொடுத்து எங்கேயாயினும் பிச்சையெடுத்துப் பிழைபோவென்றனள்.

அதற்கவன் மனமகிழ்ந்து மாதிர்வாக்கியப்படி அப்பாத்திரத்தைக் கையிலேந்திச்சென்று பிச்சையெடுக்கப்புகும் அகந்தோறும் அனைத்துலகங்களுக்கும் அன்னையாய் மதுசூதனருக்குமானினியாய் விளங்கும் மாமலராள் தாமேசென்று தந்திருக்கரங்களாலேயே சட்டுவத்தாற்பிச்சையிட்டருளினர். அங்ஙனம் அவர்பிரசாதித்தவையெல்லாம் ரத்தினக்குவியலாகவே அதிக பாரத்தால் சீமானாகிய அப்பாலகன் அதையொருகையாலெடுக்கமுடியாமல் இருகரங்களாலுந்தூக்கித் தலைமேல்வைத்துக்கொண்டு களிப்புடன்தன்தாயிடம் படர்ந்து அவள்கரத்திற்கொடுத்தனன். அம்மாதரசிஅதைப்பெற்றுக்கொண்டு மதலாய்! மறுபடியும்போய்ப்பிச்சையெடுத்து வாவென்றுபாத்திரத்தைத்தந்தனுப்ப, அவன்அவ்வாறேநுழைந்தவீடுகள்தோறும்அப்போதும் அவ்வுலகமாதவான பெரியபிராட்டியார் அவ்விதமே யளித்தருளினர். இவ்வண்ண மேழுதரம் பெற்றவ ளனுப்பவும் பிள்ளைபோய்ப் பிச்சையெடுக்கவும் அம்மங்களதேவதைகனகமும் மணியுமாகவே தந்தருளியபின் எட்டாவதுதரமும் ஒருபெரியபாத்திரத்தைத்தந்தனுப்ப அங்ஙனம் புன்னகையோடுபோனகமாகவெ அளித்தருளினர். அதைப்பெற்றுக்கொண்ட சுசீலைஅதிகசந்தோஷமாயதை மைந்தனுக்குத்தந்து அவன்புசித்தமிகுதியைத்தானும் அயின்று நிசிமுழுதும் புதல்வன் பிச்சையெடுக்கச்சென்றதும்அங்கேஅம்புயத்தாள் அய்யமிட்டதுமுதலான சகலவிருத்தாந்தங்களையும் விசாரித்துக்கொண்டு விடியுந்தனையுந் தனத்தைக்காத்துக் கொண்டிருந்தனள். இதுநிற்க, நெறியிற்கள்வராலடியுண்டு பலங்குன்றி உடம்பிளைத்துவருந்திய சுசரிதர்பசியினால் வயிறுமுதுகுடன் முதுகாயொட்டிக்கண்கள் குழிந்துதளர்ந்தமக்களுடன் தூரவழியைச்சாவகாசமாய் மெல்ல நடந்துநடந்து தமதகத்தையடைந்தனர்.

அங்ஙனங்கண்டபத்தினியும் அதிகநாணமுற்றுத்தேக மெங்குங்காயத்தையுடைய பர்த்தாவுக்கு மெல்ல உபாசாரம் புரிந்து தன்வீட்டில்நடந்த சந்தோஷஸமாசாரத்தையுரைக்கையில், தஞ்சிறுவன் செய்திமுழுதுஞ்செவியுற்ற செந்தீவளர்ப்பவர், சிந்தித்துப்பிச்சையிட்டவர் பெரியபிராட்டியாரென்றேநிச்சயித்து அகோ, எனதுமூடத்தனத்தை யென்னென்று இயம்பலாம்? அசேஷபதார்த்தங்களுக்கும் ஆதாரமானவரும் எல்லாவற்றையும் ஈந்தருளத்தக்க இந்திரையோடு எக்காலும் இணைந்திருப்பவரும் பத்ரபுஷ்பங்களாலும் பழங்களாலும் மகிழ்ந்து புருடர்களுக்கு வேண்டியவற்றை வேண்டியவாறே யருள்பவரும் தேவதேவருமாயுள்ள திருநாராயணரைவிட்டு வேறொருவனிடத்தில் ஏதுக்கு விரைந்தோடினேன்; கிருபையால் பூரணமாகிய கிருஷ்ணமேகமிருக்க, அயலானிடம் யாசிக்கப்போன நாணங்கெட்டவெனக்கு நமஸ்காரம் நமஸ்காரமென்று தம்மைத்தாமே நொந்துநாராயண பகவானை யெஞ்ஞான்றுந் தியானித்துக்கொண்டிருந்தனர்.

அப்புறம் அவர்குமாரனாகிய நாராயணனுக்குவேதங்களையோதுவித்து ச்சகலசாஸ்திரங்களையும் பயிற்றுவித்துப் பெரியபிராட்டியார்அருளியதனத்தையும் அடைந்துசந்துஷ்டராய் மனைவியோடு எச்சமயத்தும் நல்லொழுக்கத்தினின்றும் வழுவாதுநடந்து கலியாணதீர்த்தக்கரையில் தவம்புரிந்து அச்சுதனுக்குஆனந்தம்விளைத்துத்தினந்தோறும் ஆயிரம்பூசுரர்க்குச் சமாராதனஞ் செய்துகொண்டிருந்தனர். இவர் இவ்வாறுதனிகராயிருப்பதைச் சிலசோரர்கள் தெரிந்து அத்தனத்தைஅபகரிக்கவெண்ணிக்கபடவேஷந்தரித்து வந்து கலியாணதீர்த்தத்திலாடி நெற்றிமுதலியசகல அங்கங்களிலும் தக்கபடி சுத்தமானதிருமண்தரித்து ஸ்ரீமந்நாராயணருடைய திருநாமத்தையடிக்கடி ஆவர்த்திசெய்து நிர்மலரான ஸ்ரீவைஷ்ணவர்களைத் தொழுது நின்றனர். அவரைக்கண்டசுசரிதர்போஜனத்துக்குவரும்படிபிரார்த்திக்க, அவர்கள் அங்ஙனமே பெருமாளுக்கு நைவெத்தியஞ்செய்த அடிசிலையுண்டு திருவடித்தாமரைகளைச் சுத்திசெய்த தீர்த்தத்தையும் பருகியதால் தங்கள் மனம்மகாசத்வகுணமுள்ளதாய் மாறிவிட்டது. சுசரிதருடைய திருஷ்டியினாலும்சுத்தமானபோஜனத்தாலும்பதேபதேகலியாணதீர்த்தம்பருகியதாலும் ஸத்வந்தலையெடுத்துப் பரிசுத்தரான அவர்கள்சுசரிதரைநோக்கியோசுவாமி! யாம்தேவரீருடையசெல்வத்தை யபகரிக்கக்கபடவேஷம் பூண்டுவந்தகள்வர்கள்; எமதுவஞ்சகபக்தியாலெம்மைஉபசரிக்கின்றீரென்று விளம்பக்கேட்ட சுசரிதர் எனது அழியாச்செல்வமாகி யொளிருந் திருநாராயணர் திருவடித்தாமரைகளைத் திருடிக்கொள்ள ஒருவராலுமொல்லாதென்றனர்.

அங்ஙனம் அப்பொருள் கவரவந்தவர் ஆனந்தக்கண்ணீர் ஆறுபோற் பெருகப்புளகாங்கிதராய் அந்த பாகவத சிரோமணியின் பாதத்தில்வீழ்ந்து சாஷ்டாங்கமாய்ப்பணிந்து ஓமகாநுபாவரே! அடியேங்களுக்கு அச்சுதன் பதத்தைஅடையத்தக்க வுபாயத்தையிங்ஙனமேஅருள் செய்யவேண்டுமென அஞ்சலிபந்தத்துடன் அடிக்கடி பிரார்த்திக்கவே, அவரும் அதற்கிரங்கி அனந்தசயனன் அடியிணைமலரை யுபதேசித்தருளினர். கேளீர் முனிவர்காள்! நினைத்தபொழுதேபவக்கடல்கடந்து முத்திபெறவிரும்புவோர்க்குத் திருமணாளன் திருவடியன்றிவேறுஉபாயமுமுளதோ? அவர்கள்அவ்வுபதேசத்தைப்பெற்றதும்எம்பெருமான் இணையடியிற்சரணாகதஞ்செய்துஅப்பொழுதேபரமபதமடைந்தனர். பின்புசுசரிதர் புத்திரபௌத்திராதி யருடனும் பத்தினியுடனுங்கூடி ஸ்ரீமந்நாராயணனைஅத்தலத்திலேயே ஆராதித்துக்கொண்டிருந்து கடைசியில் ஸ்ரீவைகுண்டஞ்சேர்ந்தனர். இச்சுசரிதோபாக்கியானத்தைப்படிப்பவரும் கேட்போரும் சுசரிதர்புதல்வன் நாராயணன்போன்ற புண்ணியசாலியான சுதனையும் செல்வத்தையும் பெற்று அன்னதாதாக்களாய் ஆனந்தமுற்று வாழ்ந்திடுவர். அன்றியும் அவரகத்திற் புகிப்பவரும் நற்கதிநணுகாநின்றனர்.

சுசரிதனென்னுநாமச்சுருதியேனெதுசைலத்தில்
வசையறுபுதல்வரோடும் வாழ்த்துநாரணனார்சார்பில்
திசைமுகன்முதலாமற்றதேவருந் தெரிக்கவொண்ணா
மிசையுறுதிருவைகுந்தமேவினன்முடிவின்மாதோ.

(இ-ள்.) சுசரிதரென்று பேருள்ளவேதியர் யாதவகிரியில் குற்றமற்ற புத்திரரோடும் திருநாராயணர் பக்கலிலேவாழ்ந்து கடைசியில்திசைமுகன் முதலான மற்றதேவர்களாலும் புகலவொல்லாத அண்டத்துக்கும் மேலாயுள்ள பரமபதத்தையடைந்தார்.

சு-வது அத்தியாயம்.

ஸ்ரீராமருக்கு நேர்ந்த நாராயணமூர்த்தி லாபம்.

இவ்வண்ணங்கேட்ட விருடிகள் நாரதபகவானைநோக்கிஸ்வாமி! எங்கள் செவிக்கு இனிய அமுதம்போன்ற கதைகளை யிசைத்தருளினீர்; வாசுதேவன் கதையைவழங்குவதற்கு நும்மைவிட வேறு வல்லவருமுளரோ? மற்றவையுந் திருவாய் மலர்ந்தருளவேண்டுமெனவினவ, அம்முநிநாதர் உமக்குக்கேட்க விருப்பமுள்ளவற்றை வினவினால் அவைகளைவிரித்துரைக்குவேன்; வினவாதவற்றை விளம்புதல் விழுமியோர்கொள்கையன்றேயென அவர்கள், முன்பு பிதாமகற்குப் பெருநிலமளந்த பெருமாள்அருச்சிப்பதற்கு அருளிய திவ்விய மூர்த்தி முன்புசத்திய லோகத்திலும் பின்பு பூதலத்திலுமிருந்தவிதத்தை நன்றாய்மொழிந்தருளவேண்டுமென, நாரதரும்அவ்வண்ணமேஅறையத் தொடங்கினர். பெருமையாந்த இருடிகளே! காலத்துக்கு அனுகுணமாய் நடக்கத்தக்க உங்களால் இப்போது என்கண்ணுக்குப்பாரணையாக அந்தரூபத்தை நினைக்கப்பெற்றேன்; புண்யமான பூர்வவிருத்தாந்தமொன்று புகல்கின்றேன்; அதைப்பக்திக்கேபாத்திரமான நீங்கள் கவனமாய்க்கேட்டிடுக.

ஆதியில் காகுத்தரான ஸ்ரீராமபிரான்காதளவோடிக்கடைசிவந்தகன்றகண்களை யுடையகாதலியோடு நாடோறும் அந்தநாராயணனைஆராதித்திருந்தனர். அவர் முன்புதேவியாரோடும் இளையபெருமாளோடும் வனம்புக்கபொது நாராயணகிரியின் தாழ்வரையில் வசிக்கையில் ஒருதினம் அம்மலைமுழுதும் பார்த்த இலக்குமணர் பர்ணசாலையைக்குறுகி அண்ணனைநோக்கி மணிவண்ணா! இத்தடங்கிரியின் சிகரத்திலொரு நிர்மலமான தடாகமுளது; அதன்கரையில் மனோகரமான வொருவிமானம் விளங்காநின்றது. அதனிடையேவிஷ்ணுமூர்த்தியொன்று ஒளிர்கின்றது; தனக்கு ஈடுமெடுப்புமில்லாத அந்த ரூபம் தேவரீரையேஒத்திருக்கின்றது; காணவிருப்பமிருந்தாற் சென்றுகடாக்ஷித்தருளலாமென்றனர். இதைக்கேட்டதாசரதிதுஷ்டியுடன் பொள்ளெனவெழுந்து சானகியோடும் அவ்விடம் போந்து பரந்தகன்றபதுமம்போன்றபார்வையுள்ளவராய் நிறைமதியொத்த வதனமுள்ளவராய் நவமணியிழைத்தகுண்டல முடையவராய்க் கிரீடமகுடாதி பூஷணங்களால் அலங்கரிக்கப்பெற்ற ஆகிருதியுள்ளவராய்அஞ்சனவரைபோற்பிரகாசிப்பவ

ராய்ப்பார்ப்பவர் பார்வைக்குப் பரமானந்தம் விளைப்பவராய்ச்சகலவுலகங்களுக்கும் சௌபாக்கியமாய் ஆபரணங்களுக்கு மோராபரணமாயொளிர்பவராய் அற்புதமான ஆயுதங்களாற் சூழப்பட்டவராய் ஜகந்நாதரும் தேவதேவருமாயுறைகின்ற திருநாராயணனைத் தெரிசித்து வணங்கிநிற்கச் சீதாபிராட்டியாரும் அதிகவியப்புடன் செவியளவுநீண்ட கன்ற விழிகளைத்திறந்து தெரிசித்தனர்.

ஸ்ரீரகுநாதர் பின்பு சிலதிங்கள் அளவும் அந்த பகவானை யிளையபெருமாள் கொண்டுவரும் குசேசயமலர்களால் அருச்சித்துவருகையில், அத்திருநாராயணர் திருவாய்மலர்ந்து ரணரங்கசூரரானராகவனைநோக்கி நீர் அரக்கர்குலத்தைஅடியோடு மடித்து அயோத்தியையடையும் அமையத்தில் யாம் அம்சத்தால் அங்கேஎழுந்திடுவோமென வழங்கியருளினர். இவ்விதங்கேட்டருளிய இராமபிரான் வனவாசம்புரிந்து சிலபகல்கழித்து இருங்கடலடைத்து இலங்கையிற் புகுந்து இராவணுதியிராக்கதகுலத்தைவேரொடும் பறித்து விண்ணவர்தாமே மண்ணினிற் பிறந்த வாநரப்படையுடன் பதினான்குவருடங்கழித்து வண்டுகள் தேனையுண்டெங்கும் பாடுந்தண்டலைசூழ்ந்ததமது சாகேதபுரியிற் பிரவேசித்து மகுடாபிஷேகம் பெற்று அரசாளத்தொடங்குகையில் சரணாகதவற்சலரான தம்மைப்பிரியமனமில்லாமல் வருந்திய விபீஷணழ்வானுக்கு முன்பு தாம் ஆராதித்த அரங்கநாதனைத்தந்தருளி நாம் பூஜித்த இந்தபெருமானை யினிநீர் ஆராதித்துக்கொண்டிருமென்று திருவாய்மலர்ந்தருளிஅவனையனுப்பிவிட்டுரங்கநாதர்வியோகத்தைச்சகிக்காதவராய்ச் சிறிதுபோது சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

அத்தருணத்தில் அன்னவூர்தி விமானத்துடன் தம்முலகிலிருந்து அவ்விடம்போந்து காகுத்தகுலத்திலுதித்த கருணாகரரே! நீர் சிறிதுஞ்சிந்தியாது இத்திவ்விய மூர்த்தியையேற்றுக் கொள்ளும்; இவர் முன்புநீர்நாராயணகிரியிற் பூஜித்தவிஷ்ணு அம்சமாய் விளங்குபவர்; நானும் இவ்வெம்பெருமானை அருச்சித்துவந்தேன்; என்று விளம்பக்கண்ட ரகுநாயகர் திடீரென்றெழுந்து பரமானந்தத்தோடும் பரமபக்தியோடும் அம்மூர்த்தியைப் பெற்றுக்கொண்டு இளையபெருமாளுடன் வெகு காலம் பூஜித்துவந்தனர். அவ்வாறு நடக்கையிலொருநாள் தமயனார் தம்பியாரைநோக்கிக்குழந்தாய்! இம்மூர்த்தியை முன்புநாம் கானகத்துறையும் போது அருச்சித்த ஆதிநாராயணரென்றே கருதுகின்றேன்; இதற்கெள்ளளவும் அய்யமில்லை யென்று அறையக்கேட்ட ஆஞ்சனேயர்அவ்வெம்பெருமானெழுந்தருளியிருக்குமிடம் எவ்விடமென்று இலக்குமணனைக்கேட்க, அவரும் அந்தஸ்தலத்தை அடை

யாளமாய் மொழியக்கேட்டு அப்போதே அங்கிருந்துகிளம்பி அதிவேகமாய் அவ்வரையின்கண் சென்று அம்மூர்த்தியைத்தெரிசித்து மறுபடியுந் தாசரதியையடைந்து என் ஆண்டவனே! அடியேன்அவ்வெம்பெருமானைத்தெரிசித்தபின்அவரும்தேவரீரும்தேவரீர் ஆராதிக்கின்றஇம்மூர்த்தியும்ஏகரூபமாகவேயென்கண்ணுக்குப் புலப்படுகின்றீரென்று விண்ணப்பஞ்செய்கையில், அவர் சந்துஷ்டராய் வாராய்மாருதியே! இங்கு நீ தினந்தோறும் எமைச் சேவிப்பதுபோல் அங்குச்சென்று அந்த எம்பெருமானையும் அந்தந்தகாலங்களில் சேவித்து அவருக்குஉவப்பாக நடந்துகொண்டிருவென்று ஆஞ்ஞாபித்தனர்.

ஆஞ்சனேயர் அவ்வாணையைச் சிரசாவகித்துச் சென்று இப்போதும் அம்மலைமிசையே யெம்பெருமானைத் தெரிசித்துக்கொண்டிருக்கின்றனர். பின்புரகுநாயகர்பூமாதுடனும்புவிமாதுடனுங் கூடிய புருடோத்தமரானதங் குலதெய்வத்தை மகிழ்வுடன் பூஜித்துக்கொண்டிருந்து தாம் சராசரங்களை வைகுந்தத்திற்கேற்றியபோது அனுமானிடந்தந்தருள, அவர் சிலபகல்கழிந்து சிராமர் புதல்வரான குசரிடத்திற்கொடுக்க அம்மகாராஜனும் அம்மூர்த்தியைத்தம்பிதிரார்ஜிததனமெனநினைத்து ஆராதித்துவந்தனர்.

கனகமாலினியுபாக்கியானம்.

அவ்வாறு நிகழ்கையில் அக்குசசக்கரவர்த்திக்கு வனப்புங் குணமும் அதிகமாய் வாய்ந்த வொருகன்னிகைகழுத்திற் கனகமாலையோடுபிறக்க அதைக் கண்டவுறவினர் அவளுக்குக் கனகமாலினியென்று பேரிட்டனர். கார்போன்றகருங்குழலும்கருமையார்ந்தகடைவிழியும் சிலைபோன்றபுருவமும் உடுக்கையையொக்குமிடையும் சுபதர்சனமும் நீர்ச்சுழிநிகர்க்கும் நாபியும் கரும்பையுங்கைப்பிக்கும்மதுர வசனமும்குமிழம்பூவையொத்தநாசியும் சிறுநகையும் அன்னம்போல் அழகியநடையும்பங்கயமானும் பாதங்களும் பவளமானும்அதரமும்வாய்ந்துவிஷ்ணுபக்தி விசேஷித்து விளங்காநின்ற தங்கன்னிகையைக்கண்டு குசர் அடங்காமகிழ்ச்சியடைந்து தங் குலதெய்வமாகிய ராமப்பிரியருக்கு எதிரில் தினமானம் பாடகருடன் உடன்பிறந்தோனுந் தாமும் கூடியிருந்து ஸ்ரீராமாயணத்தைக்கானஞ்செய்கையில் அப்பெண்மணியும் பெருமாளுடைய வடிவழகைக்கண்டு களித்து அவர்க்குப்பரிசாரகம்புரிந்து வருவது வழக்கம்.

இவ்வாறு நிகழ்கையில் குசமகாராஜன் தம்மகளுடைய மெல்லன விழி

க்குங்கடைவிழியழகையும் குரும்பைபோலெழும்புங் குயங்களின் வனப்பையும் புதியதாய்த்துலங்குந்தேக காந்தியையும் ஒவ்வோ ரவயவங்களிலு முண்டான விலாசத்தையுங்கண்டு இவள் யௌவனபருவம்வாய்ந்துஅனங்க தேவதைபோலொளிர்கின்றமையின், இவளுக்குத்தக்க புருஷனைநாடவே ண்டுமெனக்கருதிப்புவியெங்குந் தேடியும் மனதிற்கியைந்த வொருவனையுங் காணாமையால் சிந்தையுற்றிருந்தனர். அத்தருணத்திலொருநாளிரவில் தாம் நித்திரைபுரிகையில் கனவின்கண் ஸ்ரீராமபிரான் சீதாலக்ஷ்மண பரதசத்து ருக்னசமேதராய்த்தெரிசனந்தரத்தந்தையைப்பக்தியோடு மகிழ்ந்து வணங் கியபின் அவர் தனயனைநோக்கித் தாபத்தையரிக்குஞ் சந்திரிக்கையையொ த்த நிர்மலவசனங்களால் புன்னகையோடு புகல்கின்றனர். குசங்களினுனி போற்கூர்மையான புத்தியுள்ள குசனென்னும் பெயர்வாய்ந்த குழந்தாய் யாம் புகலும் இதமானவசனத்தைக்கேட்டிடுக. நின்கல்யாணரூபிணியான கன்னிகையை நாராயணபரனையதுசேகரனென்னும் ராஜகுமாரனுக்கு க்கன்னிகாதானம் செய்திடு என்கையில் மாதாவான சீதாபிராட்டியும் என் கண்மணியே! பெண்களுக்குப் பிதாவால் தரப்பெற்ற பேறேபெருமகிழ்ச் சிக்கிடமாகையால் அவள் சீதனத்தையிச்சிப்பாளாயின்நின்குலதெய்வத்தை க்கொடுத்திடென்று வழங்கியதுங்கனவுநீங்கிநனவுடன் எழுந்து களிப்புற் றுத் தந்நாயகியை அழைத்து நடந்தயாவும விளம்ப அவளும் கண்விழித்தெ ழுந்து கணவனுரைக்குங் கன்வின்செய்தியை அடிக்கடிகேட்டு அடங்கா மகிழ்ச்சியுற்றனள்.

கேளும் முநிவரர்காள்! அது நிற்க, யான் கலியாணமகிழ்ச்சியால் யதுசேகரன் செங்கோல் செலுத்துகின்ற நகரத்தைக்குறித்து நடந்தேன். அவ்வரசன் முற்பிறப்பில் முநிவருடன்கூடி நாராயணகிரியிலெழுந்தருளி யிருக்கும் நாராயணபகவானை ஆராதித்துப்பின் சார்வபௌமபதம் பெற்ற வன்; அவன் பிதாவாகிய யாதவபூஷணன் புதல்வனுக்குத்தக்ககுணதிசயங் களுள்ள கன்னிகையைத் தேடிக்கொண்டிருந்தனன். அவ்வமையத்தில் அவ்விடஞ்சென்றயான் அம்மன்னனை நோக்கி நின்மைந்தன் குணத்துக் கேற்ற பெண் குசமகீபதியின் குமாரத்தியே யென்று மொழிந்ததைக் கே ட்டதும் அப்பெண்மணியை நிச்சயிக்க அயோத்திக்கெழுந்தனன். அதற்கு முன் அநேகஅரசர்கள் அப்பெண்கொடியைக்கேட்டும் உடன்படாமல் வந் தவர் வந்தவழியேமீண்டேகும்படி பார்த்திருந்த குசர்தந்தை தாயார் வசன த்தால் யாதவபூஷணன் வினவியதற்கு ஒப்புக்கொண்டு யதுசேகரனுக்கு நல்ல முகூர்த்தத்தில் கன்னிகாதானம் செய்து விட்டனர்.

அங்ஙனம் மக்களுக்கு மகிழ்ச்சியுடன் சீதனங்கொடுக்க நினைத்து நூறு தேர்களும் முந்நூறு தாசிமாரும் ஆயிரங்கஜேந்திரமும் பதினாயிரம் புரவியும் நூறாயிரநவரத்னங்களும் நூறு நூறாயிரம் பொன்னும் பயிர் செழித்தோங்குகின்ற நூறுயோசனை விஸ்தாரமுள்ள பூமியுங்கொடுத்தனர். அவ்விதம் அளித்துங்கனகமாலினி தந்தையை நோக்கி நீர் இங்ஙனந் தந்தவையெல்லாம் யான்விரும்பியவளல்லள் என்று மொழியக்கேட்டுத் தனத்தினால் தனதனுக்கு முயர்ந்தகுசர் இவளுக்கு இன்னமும் பொருளாசையுளதெனக்கருதி முன்னிலும் இருமடங்கதிகமாயளித்தும் அவள் அப்பனே! இவைகளிலெனக்கு இச்சையே யில்லையென்று மறுபடியுமுரைக்கவே, மகளின் மதிமுகத்தைப்பார்த்து அம்மா! உனக்குப்பின்னை யென்ன வேண்டுமென்று வினவ அப்பெண்ணரசி நீர் தருவது நிஜமானால் எனதிஷ்டத்தை இயம்புகிறேனென்ன, அங்ஙனே யுனதிஷ்டத்தை யுரையென்று சொல்ல, ரகுநாதரால் அர்ச்சிக்கப்பட்டுத்தினகரகுலத்தைத்தினந்தோறுஞ் செழிக்கச்செய்யும் அந்த அருமையானதனமே யெனக்கு வேண்டுமென்று யாசித்தனள்.

உடனே குசப்பெருமான் தந்தை தாயர் கனவின் கணுரைத்ததை நினைந்து அந்தத்திவ்விய மூர்த்தியையும் முன்கொடுத்த சிறப்பையுமுவந்து தரப், புரந்தரன்போன்ற வலியுள்ள யதுசேகரன் பெருமாள் முதலான சீதனங்களைப்பெற்றுக்கொண்டு கனகமாலினியோடு தன்னகரத்திற்குத்திரும்பிச்செல்கையில் துஷ்டராகிய வேற்றரசர் அப்பெண்மணியைக்கவர்ந்துகொள்ள நினைந்து சினந்து நடுவழிமில் நரபதியைத்தடுக்கவே, இருதிறத்தோர்க்கும் இனியில்லையென்னும் பெரும்போர்விளைந்தது. அச்சண்டையில் யதுசேகரன் பராக்கிரமமாகுங் காட்டுத்தீயினால் பகையரசரென்னுஞ் சலபங்கள் அடியோடே மாண்டொழிந்தன. அச்சமையத்தில் இலங்கையைச்சுட்டெரித்த மாருதி இராகவதெய்வத்தை அணுகிய மாற்றலரையடித்துப்பெருமாளைக் காத்துக்கொண்டிருந்தனர். ஒருமுனிவர்களே! என்கண்களுக்கு அவ்விதமான பாரணையொன்று அப்பொழுது நேர்ந்தது. அவையெல்லாம் ஸ்ரீமகாவிஷ்ணுவின் மகிமையால் நிகழ்ந்ததென்றே நினைக்கற்பாலது. நாராயணனே தெய்வமாக நம்புவோர்க்கும் பரிபவஞ்சிறிதேனும் அணுகுமோ? பின்பு யாதவபூஷணன் தன்மகனுக்கும் மருமகளுக்குமெதிரில் சீதனமாகக்கிடைத்த பெருமாளை நவமணியாலாகிய ஊசலில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சகலரோடும் மதுரமாய்விளங்கும் மதுராபுரியைக்குறுகினன்.

இவ்வண்ணம் இலக்குமியுடன் எம்பெருமாள் எழுந்தருள்வதைச்செவி

யுற்றதும் நகரமாதர்கள் மங்களத்துடனெதிர்சென்று சலந்தனர். அங்ஙன ம் பெண்களின் கங்கணதொனியால் அடங்கிய மணிகளிழைத்த நூபுரங்க ளின் சிஞ்சிதத்தால் அவர்களொருவர்க்கொருவர் பேசிக்கொள்ளும் சம்பா ஷணையும்மறைந்தன. மாதவனெழுந்தருளுந் திருவிழாவிலுண்டான வீணை யின் இசையோடுங்குழலிசையோடுங் கூடிய மத்தளத்தினொலி, குறுந்தடி யால் மோதப்பட்ட பேரிகையோசையோடு எவ்விடங்களிலுங் கேட்கப் பட்டன. வந்தியர் வைகுந்த நாதனைத் தெரிசித்துக்கொண்டே ரகுயாதவ வம்சங்களைப்புகழ்ந்து பாடினர். இவ்வாறு சர்வாடம்பரத்துடன் யாதவபூ ஷணன் திருச்சின்னவோசையோடு கலந்து கலகலவென்றிருக்குந் தன் பட்டணத்துட்பிரவேசித்தனன். பின்பு யதுசேகரன் கனகமாலினியுடன் கூடித் தம்மையடைபவர்க்குத் தரமற்ற பயனைத்தருகின்ற தாமோதரனை நாடோறும் பூஜித்து அவர் அருளால் பெரும் பீடும் பெருஞ்செல்வமும் பெ ற்று மட்டற்றமக்கட்பேற்றுடன் மகிழ்ந்திருந்தனன்.

அதுமுதல் யதுவம்சத்தில் ஒவ்வொருவராலும் முறைப்படி ஆராதிக் கப்பெற்றிருந்த கமலக்கண்ணன் வாசுதேவர் பவனத்திலும் வீற்றிருந்து தேவகிவயற்றில் வாசமும் தம்வயற்றில் உலகதரிசனமும் அயலார்பந்தத்தை ச்சேதித்தலும் தாமுரலுடன் கட்டுண்ட பந்தமும் புதல்வன் விஷயமாய்ச் சென்ற யாத்திரையும் கண்டாகர்ணன் மோக்ஷமும் காலயவனரின் ஓட்டமு ம் முசுகுந்தனது மோக்ஷமும் கோவலமாதர் ஆலிங்கனமும் பிரும்மசர்யத்தி ன் பாலனமும் தம்புதல்வனைத் தளரவிட்டதும் அயலார் புதல்வனை யாதரித் ததும் விசுவரூபத்தை வெளியிட்டதும் அருச்சுனன் தேரிடை அமர்ந்திருத் தலும் அனிருத்த கிரீடத்தையும் மயிற்றோகையையுந்திருமுடியிற்றரித்தலு ம் சத்தியத்தை நிலைநிறுத்தலும் நவநீத சௌரியமும் அழியாச்செல்வத்தை உக்கிரசேனர்க்கு அளித்தலும் பிரும்மருத்திராதியரால் அருச்சிக்கப்பெற்ற தும் குந்தி முதலானவர்களின் நமஸ்காரமும் ஆதியான சகல விசித்திரங்க ளையும் கடாக்ஷித்துக்கொண்டிருந்தனரென்று புகலக்கேட்ட தபோதனர்கள் யாம் அச்செய்தி அடையவும் அறிந்திருக்கின்றோம் ; அனிருத்தகிரீடத்தைக் கண்ணபிரான் சூடிக்கொண்டதுமாத்திரம் நன்றாய்த் தெரிந்திடோமாகை யால், அதை விவரமாய் விளம்பிடவேண்டுமென்று கேட்க, நாரதபகவான் நவிலத்தொடங்கினர்.

அநிருத்தகிரீடவைபவம்.

முன்பொருகால் பிரஹ்லாதாழ்வான் குமாரனை விரோசனன் பாற்க

டலிடையில் பாம்பணைமேற் பள்ளிகொள்ளும் பரந்தாமனை யடைந்து பிரஹ்லாத வம்சத்திற்பிறந்த சம்பந்தத்தால் உண்டான பக்தியைவகித்துச் சேவித்துக்கொண்டிருந்தனன். அங்ஙனமொருநாள் அனந்தசயனன் யோகநித்திரைபுரிகையில் அங்கிருந்தமுநிவர்முதலியயாவரும்வெளியிற்போந்தபின் அந்தரங்கமாயிருந்த அவ்விரோசனன் சமயம்வாய்ந்ததென நினைந்து பரந்தாமன் கிரீடத்தைப்பறித்துக்கொண்டுபோய்ப் பாதாளத்திற்பதுங்கிவிட்டனன். உடனே பெருமாள் பிராட்டியுடன் விழித்தெழுந்ததும் பணிவிடைபுரியும் பக்தரெல்லாரும் பஞ்சாயுதனை யணுகித்தெரிசிக்கையில் திருமுடியில் கிரீடமில்லாததைக்கண்டுபயபக்தியால்நடுநடுங்கி அய்யனே! முடியில்விளங்கும் மகுடமெங்கேயென்று மெல்ல வினவ, நித்திரையிலிருந்தவெனக்கு என்னதெரியுமென்று எம்பெருமானிசைக்கக்கேட்டு அனைவரும் ஒன்றுசேர்ந்து இதற்கு ஏதுசெய்யலாம்? பெரும்பாலும் விரோசனனே யபகரித்திருக்கவேண்டும்; அவன் அசுரவம்சத்திற் பிறந்தவன், எக்காலுங் கள்ளப்பார்வையேபார்த்துக்கொண்டிருப்பவன். அன்றியும்சேவகராகிய யாம் இங்ஙனமேயிருக்கின்றோம்; அவனொருவனே அகன்றுவிட்டமையின் அவனேதிருடனாகின்றானென்று துணிந்து சகலரும் வைனதேயரை நோக்கி நமக்குள் நீரோருவரேவிறலும் வேகமும் விசேஷமாயுள்ளவராகையால் அவ்விரோசனனைவென்று கிரீடத்தைக் கணப்பொழுதிற் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

அதைக்கேட்ட சீமானாகிய கருடபகவான் அங்ஙனேயாகுகவென்று கிளம்பி மூன்று முகூர்த்தத்தில் மேதினி முழுதுஞ் சுற்றிப்பார்த்துக்காணாமல் கீழுலகத்திற்சென்று தேடி அவிடத்திலொருமூலையிற் பதுங்கியிருக்கக்கண்டு அவனுடன் பேரமர்புரிந்து கடைசியில் கூர்மையாய்வளைந்துள்ள தமது மூக்கினால் அவன் சிரத்திலடித்து வீழத்திச்செயித்துக் கிரீடத்தைக் கைக்கொண்டு மீண்டு ஆகாயவீதியிற் பரபரப்புடன் பறந்து சென்றனர். அவ்வாறு செல்லுகையில் பிரும்மலோகபரியந்தம் பரந்து விளங்குமோர் அற்புதமான நீலவர்ணமுள்ள சோதியைக்கண்டு வியப்புற்று நான்குபுறத்திலுஞ் சுற்றிப்பார்க்குங்கால் தமக்கு நேர்முகமாயுள்ள பிருந்தாவனத்தில் காதளவுநீண்டகன்ற கமலக்கண்களுடன் நிர்மலமான பங்கயமொத்தவதனமுள்ளவராய்ப்பாதத்தின் மேற்பாதம்வைத்து வீற்றிருந்து மயிற்பீலியைச்சிரோபூஷணமாயணிந்து குன்றி மணிமாலைபூண்டு செவியிற்செங்காந்தண்மலர்தரித்துப்புன்னகையோடு நீலோற்பலத்தின் காந்திகளுக்கு உபதேசஞ்செய்கின்ற கோபிகளின் விழிகளால் அதிக நீலமாயுள்ள திருமேனியுடையவரா

ய் ஆனந்தத்தால் இளைப்பின்றித்தமது அதராமிர்தத்தை அருந்துகின்ற புள்ளங்குழலின் துளைகளிற் செந்தளிர்பொன்ற விரல்களைவைத்துக் கோவலச்சிறுவர்கூட்டத்திடையில் கானஞ்செய்து பசுக்களால் பாதிபுற்களைக்கடித்துக்கொண்டே யடிக்கடி சந்தோஷத்துடன் பார்க்கப்பெற்றுக்கபடமாக இடையர்வேஷம் பூண்டு விளங்குங் கண்ணபிரானைக்கண்ணுற்றனர்.

அவ்வாறு கண்குளிரநோக்கித் தாங்கொண்டடைந்த கிரீடத்தை அவ்வாசுதேவன் திருமுடியிற் சூட்டிக்கலசாம்போதியில் இரண்டரை லக்ஷம் யோஜனை யளவாகப்பள்ளிகொண்டிருக்கும் பெருமாளது திருமுடியில் அணிந்திருந்த அந்த கிரீடம் சிறுபிள்ளையாய் விளங்கும் இப்பொதுவர் மகன் சிரத்தில் மயிற்றோகையாகும் பூஷணத்துடன் திட்டமாய்த் திகழக்கண்டு மனங்களித்துப்பயபக்தியாய் அப்பாலகனுக்குத் தென்டன்சமர்ப்பித்துவிட்டு மறுபடியும் வெகு விரைவாயப்பறந்து போய்ப்பாற்கடலணுகி முனிவர் கூட்டத்திடையில் முராரியுடன் நடந்தயாவையும் விளம்பினர். கருணாகரராகிய கலசாம் போதியிற் சயனித்த கமலாநாயகர் கருடபகவான் கழறியகதையாவுங் கேட்டுக் கருத்துகந்து அவரைத்தயையோடு கடாக்ஷித்துச் சந்தோஷித்தருளினர். அதன்பின்யது குஞ்சரராகிய கண்ணபிரான் அவ்வனிருத்தகிரீடத்தைத் தமதகத்தெழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமப்பிரியருக்குச் சாத்தி நாடோறும் ஆராதித்து வந்தனரென்று சொல்லக்கேட்டு முனிவரெலலோரும் ஆராவமுதம் பருகியபேரானந்தமடைந்து பின்னுங்கேட்க விருப்பதையறிந்த நாரதபகவான்மற்றும் நவிலத்தொடங்கினர்.

ஸ்ரீகிருஷ்ணரும் பலராமரும் நாராயணகிரிக்குச் செல்லுதல்

அவ்விதம் நடந்துவருகையில் ஒருகால விசேஷத்தில் பலராமர் தீர்த்தயாத்திரையினி மித்தந்தேசமெங்குஞ் சஞ்சரித்து ஆங்காங்குள்ளதூய்மையான தோயத்திலாடியதுகிரியை யடைந்து அதன் சிகரத்திலேறி முனிகணங்களோடு கல்யாணதீர்த்தத்தில் மூழ்கிப்பவரோகத்துக்கு மருந்தாய் விளங்கும்திருகரணங்களாலுஞ்சேவிக்கத்தக்கதிருநாராயணர்க்குத் தெண்டனிட்டு மீண்டும் ஸம்ஸாரஸாகரத்திற்குநாவாய்போன்றதுவாரகையையணுகிக் கண்ணனை நோக்கி வாராய்மணிவண்ணா ! தென்திசையில் பெரியோர் மனத்தையிழுத்தற் குரியவொருபருப்பதமுளது. அதனுச்சியில் அகவேக்காட்டைஅவிக்கத்தக்க வொருபகவான் எழுந்தருளியிருக்கின்றனர். அப்

பெருமாள் உருவமும் நமது குல்தனமாயிலகும் இப்பெருமாளின் சுந்தர மூர்த்தியும் சிறிதும் பேதமின்றி யொன்றாகவே யொளிர்கின்றனவென்று புகலக்கேட்ட தேவகிநந்தனர் அண்ணா! இதென்னபுதுமையாகப் புகல்கின்றீரென்ன, அதற்குப்பலவான்களிலுயர்ந்தபலதேவர்யான் ஒருபோதும் வீணாகவிளம்பேனென்று அநுசனை அங்கையால்தொட்டு ஆணைப்படி அறைகின்றேனென்றுசொல்ல, இவ்விதம் இருவருங்கலகப்பட்டுப்பின்னர் நாமிருவோரும் அவ்விடம்போய்த் தெரிசித்துத் தெளியலாமென்ன நிச்சயித்துத் தங்குலதெய்வத்தை யெழுந்தருளப்பண்ணிக் கொண்டு குதூகலமாய்ப்புறப்பட்டுச்சென்று நாராயணகிரியை நணுகி நாகத்தையளாவிய அதன்சிகரத்திலேறி நளினையோடு வீற்றிருக்குந் திருநாராயணர்முன் தமது எம்பெருமானையெழுந்தருளப்பண்ணி யிரண்டு திவ்வியமங்கள விக்கிரகங்களுக்கும் எள்ளளவும் பேதமின்மையைக்கண்டு சந்தேகமுங்கலகமு மொழிந்து சந்துஷ்டர்களாய் ஒன்றாய்ச்சேர்ந்தபின்முன்னிலும்மூரியவைபவத்தையுடைய அம்மூர்த்திகளைத் தாங்கள் வெகுகாலம் பூஜித்துக்கொண்டிருந்தனர். அது முதல் யதுகுலத்திற்றோன்றியயாவரும் அத்தடவரையை அடைந்தமையின், முன்பு நாராயணகிரியென்று நவிலப்பெற்றிருந்தும் பின்புயாதவகிரியென்று வழங்கலாயது.

ஓதபோதனர்காள்! இந்நாராயணமூர்த்திலாப சரித்திரத்தைக்கேட்பவரும் வழங்குவோரும் குணசாலியும் தனசாலியும் தர்மசாலியும் பிதிர்க்கள் முதலியோர்க்கு உத்தாரகனும் நாராயண பராயணனுமான நற்புதல்வனையும் கனகமாலினிக்கொப்பான கன்னிகையையும் பெற்றுக்கடைசியிற் பரமபதத்தின்கண் இந்திரையோடு வீற்றிருக்கும் இருடீகேசன் இணையடித் தாமரையையும் அடையாநின்றனர். இங்குப்பலதரம்பகர்வதிற்பயனென்ன? அவர்க்கு ராமகிருஷ்ணர்களின் கடாக்ஷத்தால் அங்ஙனேயளவற்ற செல்வமும் வளர்கின்றது. அவர்க்கு அவுணரும்பயப்படுகின்றனர். அமரர்வணங்காநின்றனர். அவர்மாட்டு உபசாரம் புரியத்தக்கதேயல்லது அபசாரத்தையொருபோதும் ஆற்றலாகாது. அவர் குலத்தின் முன் பிறந்த பதின்மரும் பின்பிறந்த பதின்மரும்பவத்தை யொழித்துப்பரமபதம் பெறுகின்றனர்.

மாமலையின் சேகரமாய் மண்டலமும் விண்டலமும்
சேமங்கொளவிலகிச் செம்பொன் வெண்பொன்முதலாம்
காமர்கனிகளுடன் கதிர்முடிகளோங்குமந்த
வாமவெதுகிரியினிவ்வண்ணம் வந்தருளும் ... ... (க)

முத்தொழிலு முக்குணமு மூவுருவுந்தானாகி
அத்திதனையளித்தோனன்றகலுமீருருவம்
பத்தரெமைமகிழப்பண்ணியிடப்பின்னுமிவண்
வித்தகமாயொன்றிவிளங்குவது மெந்தவமே. ... ... (உ)

(இ-ள்) பெருமைதங்கிய மலைகளிற் சிறந்ததாய் இவ்வுலகத்தோரும் அவ்வுலகத்தோரும் உச்சீவிக்குமாறு விளங்கிப்பொற்கனி வெள்ளிக்கனி முதலான அழகிய தாதுக்களையுடைய பிரகாசிக்குங் கொடிமுடிகளுயர்ந்த அந்தயதுகிரியில் இவ்வாறெழுந்தருளிய, படைத்தன்முதலியமூன்றுதொழிலும் ஸத்வம் முதலிய மூன்றுகுணமும்மும்மூர்த்திகளும் தாமேயாய்க்கஜேந்திராழ்வானைக்காத்தருளிய திருநாராயணருடைய மூன்பு பிரிந்த இரண்டு ரூபமும் பக்தரான எங்களைமகிழச்செய்யப்பின்னும் அம்மலையின்கண்உபாயமாச் சேர்ந்து விளங்குவதும் எமது தவப்பயனேயாம்.

எ-வது அத்தியாயம்.

ஹரிராதோபாக்கியானம்.

வீணையில் வல்லவேதமா முனிவரே! இங்ஙனந் தேவரீர்திருவாய்மலர்ந்தருளிய திருமணுளரது ஆகமம் எமக்கெதிரில் தேவரீரைப்போலவே தெரிகின்றது. உமதுவாக்கியத்தால்யாம்நல்வினையாளரும்தன்னியருமாயினோம். ஆயினும் இன்னும் சிறிது செவியுறவிரும்புகிறோமாகையின் அதையும்இசைந்தருள்க. யாதவசைலததில் திருநாராயணரை அடைந்துள்ள விழுமியோர்க்கு அபராதம் இழைக்கலாகாதென்று இசைத்தருளினீர்; இதற்கு முன்யாராயினும் ஆவ்வாறுசெய்துளரேல், அவரடைந்த அநுபவத்தையுமொழிந்திடவேண்டுமென ப்ரார்த்தித்த இருடிகளைப்பார்த்து ஸகலகுணசம்பன்னரான பிருகுமகாரிஷியின்கண் முன்புயான் அடிக்கடிகேட்டுள்ள புராதனமான கதையொன்று புகல்கின்றேன் கேட்டிடுங்களென்று கூறலாயினர்.

ஆதியில் சதுர் வேதியென்று பேர்பெற்ற வொரு ராஜ்புரோகிதன் சகலகருமங்களிலும் வல்லவனும் சகலகலைகளையுந் தேர்ந்தவனுமாயிருந்தனன். அவன் நாராயணபக்தரிடத்து ஒருபோதும் பக்திபண்ணினவனல்லன். நாநாதெய்வங்களையு நாடுபவனாயே நன்குமதித்திருந்தனன். அவன் தாரணியில் ஆகாரநியமத்தோடிருக்கும் பெரியோரை நிச்சலும் நிந்திப்பது

வழக்கம். தான் ஸர்வாதித்தியனென்று தன்னைத்தானே கண்டவிடமெங்கும் கழறிக்கொண்டிருந்தனன். அவனுக்கு அரசனது அனுசரனையால் அளவற்றசெல்வமும் அணுகியது. தந்தையின் குணத்துக்கனுகுணமான புதல்வரும்நால்வரிருந்தனர். அவன் அரசனுக்கும் அரசசேவகருக்கும்வருஷந்தோறும் டம்பமாகப்பொருட்செலவுசெய்துவெகுமதிபுரிவதும்வழக்கம். இவ்வண்ணம் நிகழாநிற்கையில்ஒருதினந்தான்பிதிர்க்கடன்முடிக்கத்தன்னைப்போன்ற வேதியருடன் வீட்டிற்குள்ளிருக்கும்போது அவிடத்திலொரு பரமபாகவதரெழுந்தருளினர். அவர் மகாமகிமையுள்ளவரும்விஷ்ணுபக்திவிசேஷித்தவரும் வர்ணாச்ரமதர்மம் வழுவாதவரும் சலனமற்ற மனதுள்ளவரும் எப்போதும் பாகவதரிடத்திற் பத்தியுள்ளவரும் நாராயணாசலவாசத்தால் விண்ணவராலும் நன்குமதிக்கத்தக்கவரும் மானுவமானங்களை யொருதன்மையாயுணர்பவரும் அரிராதரென்று அவனியில் பேர்பெற்றவருமாய் விளங்கியவர். அவர் மூப்பினால் அசக்தராகையின் மற்றும் வழிநடப்பால் இளைத்துத்தன்புத்திரனாகிய சிறுவனுடன் அவ்வேதியன் குணத்தைமுன் அறியாதவராகையால் அவன்மனைக்குட்புக்குஅவனைக்காணும் போழ்தேவேஷத்தான்மட்டும் வைதிகனென்றெண்ணி ஆவினும்பார்ப்போமென்றுதுணிந்து நாராயணபதாம்புயசம்பந்தத்தால் மணக்கப்பெற்ற திருத்துழாய்த்தளத்தைக்கையிலேந்தி அவனுக்குக்கொடுக்க யத்தனிக்கையில், அவனைக்கண்டவன் கருவத்தால் அவமதித்து யான் இங்ஙனம் ஸ்நாநம்புரிந்து பரிசுத்தனாயிருக்கின்றேன்; நீர் வழிநடந்து வந்தமையால் அசுத்தராயுள்ளீர்; ஆகையின் உமது கரத்திலிருக்கும் இத்துளசியை யான் பரிசிக்கவுமாட்டேன்; இல்லாவிடில், இச்சிறுவனாகிய என் புதலவன் அநுபநீதனாகையால் இவன் கரத்திற்கொடும்; அதுவுமின்றேல்உமதுகையிலேயேவைத்துக்கொள்ளும்; எனக்கென்ன வேண்டியதுளசி சுலபமாக்கிடைக்கும்; யான் இப்போது வைதிககருமத்திலிருக்கிறேனாகையால் எனது அநுஷ்டானத்திற்கு இடையூறுசெய்யாமல் வந்தசெய்தியைத் தாமதியாது சீக்கிரம் வழங்குமென்று வெகுடம்பமாய் வினவினன். இவ்வண்ணம் இயம்பிய பிரும்மபந்துவைப் பார்த்து அந்தபாகவதர் வெகு தூரத்திலிருந்துநடந்துபோந்தமையின், இப்பாலகன் இளைத்திருக்கின்றனனென்னக்கேட்டவன் எமதகத்திலின்று பிதிர்தினமாகையால் அன்னம் அளித்திடேம்; இன்னம் எங்கேயாயினும் போய் இரந்திடுமென்றனன். அதற்கவர் நின் வீட்டிலுள்ளசோற்றையான் விரும்பவில்லை; வழிநடந்து வருத்தமுற்ற குழந்தைக்குச்சிறிது தண்டுலமாவது தருகுவையேல், அதையார்மனையிலாயினுஞ் சமைத்துண்பனென்கையில் யாம் இன்றைக்குத்தண்டுலமுந் தந்திடோம் போமென்றுகொடுமையாய்ப்

புகன்றபின், சர்வாதித்தியனென்றும்சதுர்வேதியென்றும்பேர்பெற்ற நீயிவ்விதம் சாற்றுதலுந்தகுதியோ? நீதருமமனைத்தும் உணர்ந்தவனாகையின், உன்மனத்தினாற் சேவ்வனே ஆராய்ந்துபார்; உன்வீட்டிலிருந்து ஒன்றுமுதவாவிடினும் உன் உறவினர் அகத்திலாவது இச்சிறுவனுக்குச்சிறிது ஈந்திடும்படியிசைத்திடு; உன்வளவிலேயே வேண்டுமென்னும் அவா எனக்குச் சிறிது மில்லையென்று செப்புங்கால் அவன் கோபாவேசத்துடன் கடுகடுத்து ஓய் நீயார்காணும்? இல்லையென்றால் பிசாசுபோல் பின்னும் யாசிக்கின்றனை; இவ்வூரிலின்னும் அநேக வீடுகளில்லையோ? எங்கேயாயினும் போய்விசாரித்திடு; இவ்விடம் விட்டுநடநடவென்று பிதற்றினன்.

இதைக்கேட்ட கிழவைஷ்ணவர் இளைப்பினால் நடக்கச்சக்தியில்லாமல் புதல்வனுடன் அவன்வீட்டு அங்கணத்திற் சற்று உட்கார்கையில், அவன் அதிகசினங்கொண்டு தன்புத்திரரால் அவரைச்சிறுவனுடன் வெளியேதள்ளிக்கவாடத்தைச்சாத்தித்தாள் போட்டுக் கொண்டனன். கதவை மோதிய விசையினால் புறம்பேபோய் மயங்கிவீழ்ந்த சிறுவன் கண்ணீர்விட்டழுது நீநசித்திடுகவென்று தள்ளியவனைச் சபிக்கையில், ஹரிராதர்குழந்தையைக் கரத்தினாலெடுத்து நிறுத்தியுடம்பைத்தடவிச்சமாதானஞ்செய்து என் கண்மணியே! இவ்விதம் இயம்பவேண்டாம்; விஷ்ணுபக்தருக்குக்கோபலோபமானங்கள் எள்ளளவும் இருந்திடா. சுடரின்முன் இருளெங்குமில்லையன்றோ? விஷ்ணு பக்தரையவமதிப்பவருடைய வீட்டிலிருப்பதினும் சர்ப்பமிருக்கும்வன்மீகத்திலும் வன்னியின் சிகையிலும் வாசம்புரிவது நன்மையென்றுநவின்றுகொண்டே அவ்வீட்டின்கடைத்தலையினின்றும்புதல்வனுடன் அப்புறஞ்சென்றனர். பிதிர்கருமத்துக்குச் சேர்த்ததிரவியங்கள் அயலொருக்குத்தரத்தகுவனவல்லவென்று பெரியோர்புகல்வதால் அகோ! இது அளிக்கத்தகாத விரதமாகின்றது.

ஓ முநிவர்களே! அரிராதர் அகன்றுவிட்டதால் அந்த அதமவேதியன் ஆனந்தமடைந்து தென்புலத்தோர்கருமத்தையத்தனித்தனன். கல்வியின் மதத்தினால் இருளடைந்தகருத்துள்ளவனும் தனத்தினாற் கொழுத்தவனும் ராஜசேவகனுமான அவனுக்கு நன்மை தீமையென்னும் பகுத்தறிவின்மை இயற்கையேயாம். அதன்பின் அரிராதர், புதல்வனது வாட்டத்தால் அடிக்கடிவருத்தமுற்றுநிர்த்தயைக்கிடமான அந்நகரத்தினின்றும்புறப்பட்டுப் போகும்போது வழியில் ஒருபாகவத சிகாமணி இவரைக்கண்டு பளபளென்று துலங்கும் ஊர்த்துவபுண்ட்ரமும் சங்கசக்கரங்களின் முத்திரையும் தாமரைமணித்தாழ்வடத்தால் தயங்குகின்ற கந்தரமுமுடைய இவர் ஆரோவென்றெ

ண்ணி அருகிற்சென்று ஓ சுவாமீ! தேவரீருடைய திருப்பதியெதுவோ? இச்சிறுவன் யாவனோ? இவனேதுக்குத்துன்பப்படுகிறானென்று உசாவுகையில், அவர்நடந்தயாவும் விளம்பககேட்டு மகிழ்வுடன் மற்றுங்கைகுவித்து ஆதரவோடு சுபவசனங்களால் சொல்லலுற்றனர். அடியேன்விஷ்ணுபக்தரின் ஸ்ரீபாததூட்களால்பவித்திரமான சிரத்தையுடையவன்; தேவரீர் அடியேன் குடிலுக்கு எழுந்தருளலாம்; தினந்தோறும் முஷ்டியளவாயாசித்துப்புத்திரருடன் சுகசீவனஞ்செய்துவருகிறேன்; தாசனானவென்னை விஷ்ணுராதனென்று விளம்புகின்றனர்; அடியேனுக்குக்கேசவாதிபன்னிருதிருநாமம்பெற்ற அத்தனைபுதல்வருண்டு; அவர் திருநாமங்கள் அகிலலோகங்களிலும் அதிகமாயொளிர்கின்றன; நாராயணனையன்றிமற்றொருதெய்வத்தையும் ஆராதிப்பதின்று; அடியாளானஎனதுகுடும்பினியும்இவ்விரதத்தை யொருபோதும் விடுபவளல்லள்; என்று பலவாறு பிரார்த்திக்கவே அரிராதர் மகனுடன் விஷ்ணுராதர் வீட்டிற்குச்சென்றனர். விஷ்ணுபக்தருக்கு விஷ்ணுபக்தர் வீட்டிலுறைவதுதகுதியே; பால் அக்காரத்துடனன்றி வேப்பங்கனியோடுகலந்து விசேஷிப்பதின்று.

அங்ஙனம் விஷ்ணுராதர் மனைவி சுமுகியென்னுங்கற்புடையாள் பரமபாவனமான பாத்திரங்களில் அரிராதர் அமுதுசெய்ய அடிசில் அடும் அமயத்தில் அவர் புதல்வனுடன் மாத்தியான்னிககருமத்தை நிறைவேற்றித் தூயமனத்தராய்ப்பக்குவமான வுணவுகளைப்பரமபத நாதனுக்கு நிவேதனம் புரிந்து அமுதுசெய்யப்புகுந்தருணத்தில் ஒரு சந்நியாசி நான்கு சிஷ்யருடன் அவிடத்திற்கெழுந்தருளினர். ஒப்புயர் வொழிந்த வாசுதேவன்போல்வந்த யதியை அந்தபாகவதரிருவரும் பூமியில் வீழ்ந்து வீழ்ந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து மிகக்களித்து அகோபாக்கியம் அகோபாக்கியமென்று இரைந்து துதித்தபின் விஷ்ணுராதர் துறவியின்திருவடிகளைத்தூயநீரால்துலக்கி அத்தீர்த்தத்தைமுன்பு அரிராதருக்கு அளித்துத்தாமும் அருந்தியபின்சன்னியாசியும் சீடர்களும் அரிராதரும் புதல்வனுமாகிய எழுவரும் சமபந்தியாயிருந்து புசித்துக்கரங்கழுவிவாய்பூசி ஆசனத்தில்வந்திருந்தனர். அத்தருணத்தில் விஷ்ணுராதர் புதல்வரிலோருசிறுவன் பிதாவைப்பார்த்துஎனக்குமிகுதியும் பசிக்கின்றதென்று ரோதனஞ்செய்ய, அவர் மனைவியை அழைத்து அடிசில் ஆக்கியகலத்தில் மிகுந்திருக்கும் அன்னத்தையிப்பாலகனுக்குப் படைத்திடென, அவ்வுத்தமிபாத்திரத்திற் சிறிதுஞ் சேஷமில்லையென்று செப்பப், பாலகன்வருத்தத்தையாற்றமுடியாமல் மறுபடியும்போய்ப்பார்த்திடு; ஏதாவதிருக்குமென்றியம்பக்கேட்டுக்கணவன்மொழிக்குமாறு உணா

யாத கற்பினளாகையால் அங்ஙனமேபோய்க்காண்கையில், அப்பாத்திரங்களெல்லாம்முன்போலவேஉணவினால் நிறைந்திருக்கக்கண்டு விம்மிதம் அடைந்து பர்த்தாவுடன் பகர்ந்து தாமிருவம் ஈராறுபுதல்வருடனும் இஷ்டப்படிபரிபூர்ணமாயுண்டனர். கேளும் இருடிகளே! அன்றுமுதல் அவர்க்கு அவ்வாறே அடிசில் அடும்பாத்திரங்கள் அநாயாசமாய் அறுசுவையுணவுகளால் தாமேநிறைந்துவிடும். அவற்றை அதிதிகளாய்வரும் வைஷ்ணவர்க்கு அன்போடு அளித்துத்தாமுந்தெவிட்டப்புசித்துக்கொண்டிருந்தனர். அங்ஙனம் சுமுகியென்னும் பெண்மணி சமைத்தகலங்களெல்லாம் வெண்பொன்னாய் விளங்கின. அத்துறவி அமுதுசெய்தவிடத்தில் விஷ்ணுராதர்க்கு அளவற்றநிதியுங்கிடைத்தன. அவளாயாரென்று நினைக்கின்றீர்; ஆதியில் பாஷண்டநிரசனஞ்செய்ய நான்மறைகளான சீடருடன்திருதண்டதாரியாய்த்தத்தாத்ரேயரென்னுந்திருநாமத்தோடெழுந்தருளிய திருநாராயணரே பக்தபராதீனராகையால்அந்தரூபமாயங்கேயெழுந்தருளினர். ஆகையின், ஸ்ரீமந்நாராயணபராயணரானபாகவதர் எங்குபுசிக்கின்றனரோ அங்கு ஆரணப்பொருளான ஆதிநாராயணர் தாமேயெழுந்தருளிஅமுது செய்கின்றனர்.

விஷ்ணுபக்தாவமானத்தால் சதுர்வேதியாதனைப்படுத்தல்.

பின்பு சதுர்வேதியென்னும் புரோகிதன் சிராத்தத்தில் நிமந்த்ரணத்திலிருந்த பூசுரரைப்புசிக்கச்செய்தனன். அவர்க்குச்செய்திருந்தபாயசத்தில் ஆரும் அறியாமல் பணியொன்றுவந்துவிஷத்தைக்கக்கிவிட்டுப்போனதால், அவர்கள்புசித்தெழுந்ததும் பொருக்கென மரணமடைந்தனர். தங்களுக்கு வேறுபாத்திரத்திற் செய்திருந்ததால் தானும்துர்முகியென்னுந்தன் மனையாளும் மக்களுமே பிழைத்திருந்தனர். உடனே யிறந்தவரின் புத்திரபௌத்திராதியர் அக்கிரமமாய்ச்சதுர்வேதி எம்மவரைமாத்திரம்நஞ்சிட்டுக்கொன்றுவிட்டானென்று மூலைக்குமூலைமுறையிடத்தொடங்கினர். அதைக்கேட்டுப் பயங்கரராயுள்ள ராஜபடர்கள் ஓடிவந்து சதுர்வேதியைப்பற்றி யிழுத்துப் பலவிதமாய்ப்புடைக்கையில் அவன்மர்மஸ்தானங்களில் அடிபட்டுமரித்துவிட்டனன். அவன் புத்திரரில் மூத்தவன் பீதியால் வனத்திலோடிப்பதுங்க, அங்கேயிருந்தவேங்கையொன்று பாய்ந்து அறைந்துமடித்துவிட்டது. அவனுக்கிளையவன் ஒருமரத்திலேறுகையில் அவனேறியகிளை மளமளென்று முறிந்து பூமியில்வீழ்ந்து தலைசிதறி யுயிர்மாய்ந்தனன். மூன்றும்புதல்வனைக் காட்டானை யொன்றுகாலிரண்டையும் பிடித்துத்தரையிலறைந்து மாய்த்து

விட்டது. உபநயனம் புரியாதநான்காம் புதல்வன் பயத்தினாலிங்குமங்கு மோடிப்பன்னகங்களும் புற்கொடிகளும் நிறைந்தவொரு பாழ்ங்கிணற்றில் வீழ்ந்துமாய்ந்தனன். அவன் துணைவியானதுர்முகி, பதியும்புத்திரரும்பாழாயி றந்தமையைநினைந்துபதைபதைத்துப்பார்த்திபன்தூதர்பிடித்துக்கொள்ளு வார்களேயென்று பயந்து வீட்டின்புறக்கதவுகளை முடித்தாள்செறித்து உள் ளிருந்தபடி வீட்டில்தீயையிட்டுக்கொண்டுஅதனிடையேதானும்இரண்டுகன் னிகைகளும்தகிக்கப்பட்டுஇறந்தனர். அந்தநெருப்புசடசடவென்னுமொலி யுடன்குபுகுபென்றுகிளம்பும்புகையோடும் அவ்வூரெங்குஞ்சூழ்ந்துகொண்ட தால் விஷ்ணுராதர் வீடொன்றுதவிர மற்றமனைகளெல்லாம் பற்றியெரிந்து சாம்பலாயின. அவனைச்சேர்ந்த மற்றயாவரும் அரசனாணையால் அருஞ்சி றையில் அடைக்கப்பட்டு அவ்வாறே அழிந்துவிட்டனர். கேளும்தவச்ரேஷ் டர்களே! அரிராதனை அவமதித்தமூன்றுதினத்துக்குள் அவ்வளவுசெய்தியும் நடந்துவிட்டன. ஆசாரியனையொத்த பெரியோர்களின்அவமானத்தாலும் அகத்தில் அதிகமமதையாலும் அரிபக்தர் அவமதிப்பாலும் அசேஷ செல்வ மும் அங்ஙனேயழிந்துவிடுகின்றன. விஷ்ணுபக்தனை வெகுமானிப்பவர் இம்மைமறுமைப்பயனையெள்ளளவும் அய்யமின்றியேற்றமாயடைகின்றனர்

சர்வாதித்திய யமசம்வாதம்.

பின்புயமகிங்கரர் சதுர்வேதியையும் இறந்தபுத்திரமித்திரகளத்திராதி யரையும் வடகயிற்றாலிரண்டு காலையும்பிணித்து அதோமுகமாய்ப் பறபறெ ன்றிழுத்துக்கொண்டு பிதிர்பதியின் சமீபத்திற்கு ஏகும்போது அவ்வேதி யன் அந்தகனைநோக்கித்தர்மராஜனே! மகாராஜாவே! சமவர்த்தியே! உம க்கெதிரில் நடக்கும் இந்நடக்கை அஞ்ஞாயம் வெகுஅஞ்ஞாயமென்று வெகு வாய் முறையிட்டனன். அப்பயங்கரமான இரைச்சலைக் கேட்டசமனன் சாந்தமாய் அவனைப்பந்தத்திலிருந்து விடுவித்துச்சமீபத்தில் வரவழைத்து வேதியனே! இங்கே என்ன அநியாயம் நடக்கின்றது? அதையெனக்கு விவரித்துரையென்றுவினவ, அவன் அஞ்சலிபந்தத்தோடு வணங்கி அய்ய னே! அடியேன் நான்மறைகளையும்நன்றாயோதி அதன் பொருளையும் நன் குணர்ந்து மீமாம்சையும் மேன்மையாய் அறிந்து வைதிககருமங்களையும் வகையுடன் புரிந்திருக்கின்றேன். இதோ இருக்கும் என்புதல்வரும் என் னினும் ஏற்றமாய்த்தெரிந்தவர். இந்த என்மனைவியோ என்னிஷ்டத்திற் குச் சிறுதுந்தவிராது நடப்பவள். ஆகையின் யாங்கள் நரகவேதனைக்கு அருகராகோம். ஆயினும் உமதானைக்குட்பட்டோமாகையால் சித்தத்தின்

படிசெய்யத்தக்கதென்று செப்பக்கேட்டதருமராஜன் வழங்கலாயினன்.

அடதுர்மதியே! நீ யுரைத்தவையாவும் உண்மையே ; ஆயினும்விளம்புகின்றேன்கேள். நாராயணபரரும் தாந்தரும் இளைத்தவரும் நாராயணாசலத்திலிருந்து நடந்துவந்தவருமான ஒருபாகவதரை நீ அறிவையோ அறியாயோ ? அடபாபீ! ரமாபதியின் பதாம்புயத்திற் சூடியமணமிக்கதிருத்துழாயை நீ அவமதித்தது தெரியுமோ தெரியாதோ ? அப்பாகவதசிரோமணி நடந்திளைத்தபாலகனைக் காட்டியாசித்தால் அவரைப்பிசாசமென்று பிதற்றியது கருத்தில் உளதோ இல்லையோ ? விஷ்ணுபக்தரில் விசேஷித்தவரும் யான்வணங்கத்தக்க வருமான அப்பெரியவரிடம் நீ பிதற்றிய பலவிதமான அபசாரவார்த்தைகளையும் அறிந்தனையோ மறந்தனையோ ? அடஅதமவேதியா! அங்ஙனம் அசுத்தமாகும் உனது அங்கணத்தில் அவ்வுத்தமர் நடந்து போந்த அயர்வினால் உட்கார்ந்ததை உணர்ந்தனையோ உணர்ந்திலையோ ? அவரைநின்கொடுமையான புதல்வரைக்கொண்டு புறம்பேதள்ளிக்கவாடத்தை அடைத்ததைக்கருதினையோ கருதவில்லையோ ? அட துஷ்டா! அவ்வாறுதள்ளுகையில் கதவின்விசையால் அவர்புதல்வன் கீழ்வீழ்ந்துகதறியதைக் கண்டனையொகாண்கிலையோ ? அப்பரமபாவனரைஅவ்விதந்துரத்தியபின் உன்னிஷ்டருடன் பரிகசித்ததுதெரிந்துளதோ தெரிந்திலதோ ? நினக்கு அரசன் அன்புள்ளசெருக்கினால் சங்கசக்கரதாரணஞ்செய்து விளங்கும் பெரியோரை அறிந்திருந்தும் அடிக்கடிநிந்தித்தது நினைவுளதோ நினைவிலதோ ? அடமூடா! முத்திமார்க்கத்தையுபதேசித்தருளும் முநீச்வரர் வசனங்கள் வீணென்று பழித்ததை உணர்ந்தனையோ வுணர்கிலையோ ? விழுமியோர் வேதங்களால் மெய்ம்மையாக விஷ்ணுவேபரப்ரம்மமென்று விளக்குகையில் நின்வதனங்கறுத்தது நினைவுளதோ நினைவிலதோ ? அடஅசாதுவே! நாள்தோறும் ராஜசபையில் நாஸ்திகரைத்துதித்ததும் ஆஸ்திகரை அவமதித்துப்பழித்ததும் அறிந்தனையோ அறிந்திலையோ ? இங்ஙனம் வெகுவாய் விளம்புவதிற்பயனென்ன ? பூபதிமுன்பு சரணாகதிசாஸ்திரத்தைத்துஷித்ததையும்நன்குயோசித்தறியென்று நாநாவிதமான அவனதுநடத்தைகளை வினவும்போழ்து அவன் ஓ மகாராஜனே! நீர்வழங்கியயாவும் வாய்மையே! மூடனாகியயான் புரிந்தபாவத்தினின்றுங்கடைத்தேறுமாறு கருணைகூர்திடவேண்டுமெனக்காலில் வீழ்ந்து அடிக்கடிபிரார்த்திக்கின்ற அந்தணனை நோக்கியெவ்விததீவினைகட்கும் பிராயச்சித்தமுண்டு ; விஷ்ணுபக்தரிடத்திற்செய்கின்ற அபராதத்திற்குமாத்திரம் யான் ஒருபரிகாரமுங்காண்கிலேனென்ன, அம்மறையவன் மற்றும் அந்தகன் அடிகளிற்சிரத்தைவைத்து

நும்மையேயான் சரணமடைந்தேனாகையால், எவ்வாற்றானாயினும் இரக்ஷித்தருளவேண்டுமென்று இரந்திடுகையில் சற்றுயோசித்துச்சாற்றுகின்றனன்.

சதுர்வேதி முதலானவர்க்குப் பிரும்மரக்ஷஸ் ஸத்வப்ராப்தி.

கேளாய் சதுர்வேதி! உனதுமரணகாலத்தில் அந்தஅரிராதர்கருணையுடன் ஏழுதரம்கோவிந்த கோவிந்தவென்று அத்திருநாமத்தையுச்சரித்தருளினார். அக்கருணையாலுனக்குக் கொடுமையான நரகவேதனை யிங்ஙனம் நீங்கலாயது. ஆயினுமுனது கோரமானசெய்கையால் பிரும்மரக்ஷஸாகப் பிறந்துநிர்ஜலமானபாலைவனத்தில் நெடுநாள்வசித்திடக்கடவை. அப்போது உன்மனைவியாகுமிவள்மகத்தாயவொருபிரும்மராக்ஷசியாயும் இப்புத்திரர் அனைவரும்அச்சென்மத்திற்குரியநின்புதல்வராயும்அடைந்திடக்கடவர். அப்போது உன்னகத்திற்புசித்த பூசுரரெல்லோரும் கழுகுகளாய் உற்பவித்துநின்னால்வதையுண்ட பிராணிகளின் இறைச்சிகளைப்பிடுங்கித்தின்னுவரென்று இயம்பியபின்சதுர்வேதிஅலமந்துபல்லைத்திறந்து கெஞ்சிக்கெஞ்சிஅய்யனே! தயாநிதியே! இந்த ஜனனம் எனக்கு எக்காலத்தொழிந்திடுமோ அதையுங்கிருபைசெய்யவேண்டுமெனக் கேட்கப்பிரேதநாயகன், மகாபாதகனாகுஞ்சதுர்வேதி! நீ அந்தரூபத்தோடுஅரணியத்தில்அலைந்திடுங்கால் சிலவிஷ்ணுபக்தரின்சேவையுனக்குநேரிடும்; அதனால் அச்சென்மமொழித்திடுமென்று அறைந்துதன்தூதரை நோக்குகையில், அக்கணமே அவரிடத்திலிருந்து விடுபட்டுப்பிரும்மராக்ஷஸரூபத்தோடு பெண்டுபிள்ளைகள் தற்சூழ விந்தியமலையைச்சேர்ந்தவிபினத்திற்பிரவேசித்தனன்.

இந்த அரிராதருபாக்கியானத்தை அன்புடன் கேட்போரும்படிப்போரும் எக்காலும் நாராயணபகவான் தாமேதமதகத்திலெழுந்தருளி அமுதுசெய்யத்தக்கபாக்கியத்தையும்பெற்று நாடோறும் வளரத்தக்க செல்வமுமுள்ளவராய் அன்னதாதாக்களாய் வாழ்ந்திடுவதுமன்றி அவர்மாற்றலரனைவரும் மாய்ந்தொழிந்திடுவர்.

மதுரிபுபதமலர்மகிழ்ந்தடைந்ததின்
பதமுறுமனதுடன் பருப்பதத்திறை
யெதுகிரிதடமுறையினையில்வைணவர்
பதியொருமறையவர்பரமபாவனர். ... ... (௧)

அதியவமதியவர்க் காற்றியவ்வணம்
விதிமுறைகெடுஞ்சதுர்வேதியென்னுமோர்
மதியிலமறையவனதனின்மாழ்கியே
சிதைவுறுமிடும்பையோர்செம்மலாயினன். ... ... (௨)

(இ-ள்.) மதுசூதனுடையதாமரைமலர்போன்ற பாதத்தைமகிழ்ச்சியுடன் அடைந்ததால் பரிபக்குவமாயுள்ளமனதோடு பர்வதச்ரேஷ்டமாகிய யாதவகிரியின் தாழ்வரையில் வசிக்கின்ற ஒப்பில்லாதவைஷ்ணவச்ரேஷ்டரும் பரமபாவனருமான வொருமறைவாணர்க்கு, அதிக அவமானத்தைச் செய்து அதுபோல வேதசாஸ்திரமுறைமையுந் தவிர்ந்தசதுர்வேதியென்னும் ஓர்மதிக்கெட்டமறையவன் அவ்வபசாரத்தால் மதிமயங்கிக்கெடுதி மிகுந்தயாதனுசக்ரவர்த்தியாயினன்.

அ-வது அத்தியாயம்.

சதுர்வேதியின் பிரும்மராக்ஷஸத்வ நிவிர்த்தி.

அதன்மேலிருடிகளனைவரும்ஆனந்தத்தால் அகங்குளிர்ந்துமுகமலர்ந்து முநிநாதரைச்சூழ்ந்து சுவாமீ ! அம்மறையவனுக்குப்பிரும்மராக்ஷதரூபம் எவ்வாறுவிலகியதோ அதையும் அருளிச்செப்பவேண்டுமெனப்ரார்த்திக்க, அவ்வண்ணமே அறையத்தொடங்கினர். அவன் அங்ஙனமே அங்கமெங்கும்வரிகளுள்ளவனாய்க் கொடூரமானதெரிசனத்துடன் சிரமெங்குநெருப்பின் சிகைபோன்ற செம்மயிர்நிறைந்துகறுத்தசரீரமும் சிறுத்தகண்டமும் வாய்ந்து தீப்பட்டெரிந்த மரங்களையுடைய மலைபோற்றோன்றிப்பன்னகம் போன்றபயங்கரமானநாவும் பாதாளத்தை நிகர்த்தவாயும்பெற்றுக் கண்டவர்யாவரும் வெருவத்தக்ககோரதந்தங்களோடுகூடிய கடைவாயிலுள்ள புலாலை அடிக்கடிநாவினால் நக்கிக்கொண்டு தொங்குகின்றவுதடும் பாழியையொக்கும் விழிகளும் சூர்ப்பம்போன்ற செவிகளும் படைத்துச்சுபத்துக்குமாறானவனாய் மேடுபள்ளமும் வக்கிரமுமானமூக்கும் விகாரமாய் முற்புறம் நீண்டுள்ள நெற்றியும் கோணற்பார்வையும் கோழயினுரம்போன்றமார்பும் பனந்தாள் போன்றபாதங்களுமுள்ளவனாய் எக்காலும் இறைச்சியைஇச்சித்துவிகாரமாயூளையிடும்நரிகளாற்சூழப்பட்டுக்கரத்திற்பிடித்தகத்தியுடன்பிணத்தின்மேல் மூடிமாசுபடிந்தசீலையையுடுத்துக்கர்ணத்தில் தொங்குங்கபாலத்தோடு எலும்புமாலைபூண்டு இயற்கையாலுமன்றிச்சாம்பலாலும் உடலந்து

மிரவர்ணமுற்றுப்பாவிகள் பார்வைக்கேகோசரமாய்க்குடரினால்உபவீதமும் நரம்பினால் அரைஞாணும்பூண்டு பைரவமான தொனியுடன் சுகமனைத்துக் குமாருனவனாய்க்கூர்மையான முட்களடர்ந்து கனிகிழங்குகள் சிறிதுங் காணப்படாததாய்க்கால் வைத்தவிடமெல்லாந்தகிக்கின்றமணல்மிகுந்த பாலைவனத்திடையில் தாரபுத்திரருடன் தாரமற்றதுன்பங்களோடு ஐயாயிரம் வருஷம் அலைந்துகொண்டிருந்தனன்.

அங்ஙனம் அவன்பிராணிகளை வதைத்துத்தின்று வருகையில் முன்பு அவன்வீட்டிற்புசித்த மற்ற வேதியரும் கழுகுருவத்தோடு அவன் அயின்று சேஷித்தமாம்சத்தைத்தினந்தோறுந்தாமும்உண்டுவந்தனர். ஓதபோதனர்களே! பிரும்மத்துவேஷிகளுக்கு இவ்வளவுபோதுமோ? அவர்களுக்கு அழியாநரகமேஅடுத்ததாம். அவன்கதியவ்வாறிருக்க, அந்தஅடவியின்கண் மகாமகிமையுள்ள இரண்டுபாகவதர் எழுந்தருளினர். ஒருவர்க்குச்சத்யநிஷ்டரென்றும் மற்றொருவர்க்கு வைகுண்டப்ரியரென்றும்அன்வர்த்தநாமங்கள் வழங்கலாயின. அப்பரமபாவனர்கள் காச்மீரத்திலிருந்துநாராயணகிரிக்குச் சென்று அந்த எம்பெருமானைச்சிலதினம்ஆராதித்துமற்றுந்தந்தேசத்திற்கேக மீண்டு அரிபக்தர்களும் திவ்வியதேசவாசியரும் அரிகீர்த்தனத்தில் அவாவுள்ளவருமான சிலவைஷ்ணவருடன் போந்திடுகையில் வழிநடந்தஆயாசத்தால் அவ்வரணியத்திலுள்ளவொருதடாகக்கரையில் இறங்கி வேதவிதிப்படித் தமதுகருமத்தை நிறைவேற்றிக்கேசவனையாராதித்துப் பெருமாள்பிரசாதத்தையுட்கொண்டுஆனந்தமாயிருந்துகூடப்போந்தபாகவதர்களுக்கு அரிகீர்த்தனமாலையாகிறகாலக்ஷேபத்தைநடத்திக்கொண்டிருந்தனர். சுருதிஸ்மிருதிபுராண இதிகாசமயமாயுள்ள அக்காலக்ஷேபம் தீவினைகளெல்லாவற்றையும் தகிக்கத்தக்க பிராயச்சித்தமாய்விளங்குவதாம். அச்சமயத்தில் அந்தபிரும்மராக்ஷதன் புத்திராதியரோடு அரணியத்தில் அங்குமிங்கும் அலைந்துதிரிகையில், தூரத்திலிருந்தே அக்காலக்ஷேபத்தைக்கேட்கும் அவ்வைஷ்ணவர்களைத்தெரிசித்ததும் அவன்மனந்தெளிந்துமற்றும் அப்பாகவதர்களின் பாதபங்கயசம்பதத்தால் தூய்மையான தீர்த்தமும்கண்ணுக்குப்புலப்படவே அதையும் ஆதரத்தோடுபருகினன். அவர் அமுதுசெய்தபாகவதசேஷம்கலங்கழுவுகையில் ஆங்காங்குசிந்திக்கிடக்க, அருகிலிருந்த கழுகுகளெல்லாம் அதைப்புசித்திட, அங்ஙனம் அனைவர்க்கும் பூர்வஜன்மஉணர்ச்சியுண்டாய் முன்புயமதர்மராஜன் இசைத்ததும் இதயத்தில் விளங்கியது. ஓ ரிஷிகளே! விஷ்ணுபக்தரின் ஸ்ரீ பாததீர்த்தத்தினால் மோக்ஷமே உழுது பயிர்செய்யாது தானேபலித்தபயன் போற்கிடைக்குமேல் மற்றபயனைக்குறித்துஞ்சந்தேகிக்கவேண்டுமோ? அப்புறம் அவன்முற்பிறப்பின் உணர்வினால் உள்

ளங்குளிர்ந்து பூதலத்தின் சௌபாக்கியசமூகம்போலவிளங்கும் இப்பாகவதர்கள் முன்புதருமராஜன் மொழிந்திருந்தபெரியோர்களே; இல்லாவிடில் இங்கு நமக்குப் பூர்வஜன்மஞானமுண்டாவதற்கு வேறுமார்க்கமின்று; இவர்களிடையில்விளங்காநின்ற இவ்விரண்டுபரமபாகவதரின்கருணையாலேயேயாம் அகமொழிந்துகடைத்தேறுவோமெனத்துணிந்து சிறிது தூரத்திலிருந்தே அவரைத்தரைமீது வீழ்ந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தனன். அங்ஙனம் அவர் அவனைநோக்கிநீயார் ? உன்னருகிலுள்ள இந்தரராக்ஷதர்யாவரென்றுவினவ, அவன் அதிகவினயத்துடன் அஞ்சலிசெய்து அவர்கட்கெதிரில் ஆதியோடந்தமாய் அனைத்தையும்மொழிந்து அடியோங்கள்ஈடேறும் வண்ணங்கடாக்ஷித்தருளவேண்டுமெனப்ரார்த்திக்க, அவ்விருவரும்அதற்கிரங்கி அவன்உய்யும்வண்ணம் உள்ளத்திலுறுதிசெய்கையில் சத்யநிஷ்டர்சாற்றுகின்றனர்.

வாராய்பிரும்மராக்ஷதனே ! உனக்குஉண்மையாய்விஷ்ணுநாமசங்கீர்த்தனம்போல் வேறுஆதாரங்கிடைப்பதின்று. அதனால் பஞ்சமாபாதகமும் பறந்திடுமெனில்மற்றதீவினையின்கதியைக்கேட்கவும்வேண்டுமோ ? ஸ்ரீமந்நாராயணன்கதைகளைவிட்டுவேறுகதையைவிரும்புவோன் அமுதத்தைநீக்கி ஆரநாளத்திலாசைகொள்பவனாகிறான். கடலிற்றோன்றும் அமுதம் மந்தரமலையாகும்மத்தைக்கொண்டுமதித்தலால் தோன்றுகின்றது. அவ்வாறன்றி அரிகீர்த்தனரசாயனம் நினைத்தபோதெல்லாந்தானே நுனிநாவிலுதிக்கின்றது. பவமாகும்மருகாந்தாரத்திடை அலைந்துவருந்துவோர்க்குப்பாவனமாகும்அரிகதாமிர்தமேகுளிர்ச்சியைக் கொடுத்திடுகின்றது. தீவினையாகுங்கொடும்பாம்பால்தீண்டப்பட்டவர்க்குக்கேசவன்கீர்த்தனமே கிடைத்தற்கரியமருந்தாய்க்கிளர்கின்றது. துன்பக்கடலின் அலைகளில் அலைபவர்க்குத்திருநாராயணர் திருநாமங்களே தெப்பமாய்த்திகழ்கின்றன. சொலிக்கின்றதாபத்திரயங்களின் சிகையைச்சமனஞ்செய்தற்கு வாசுதேவன் குணகீர்த்தனமாகிறபெருவெள்ளமே உரியதாகின்றது. புண்யஸ்வரூபமாய்ப் பொலியுநாராயணபதத்தையொருபோதும் உச்சரியாதவாயைவன்மீகமென்றும் அதிலுள்ளநாவை உரகமென்று முயர்ந்தோர் உரைக்கின்றனர். மாகந்தத்தைவிட்டு நிம்பத்தைப்புசிப்பவரையொத்ததீவினையாளர்க்கு அரிகீர்த்தனையை அவமதித்தலும் அடுத்ததாம். அவ்வாறுஅரிகீர்த்தனையைஅவமதிக்கும் அரும்பாவிகளை அந்தகன்தூதுவர் அவர்முகத்தைப்பாராமல்கொஞ்சமுந்தயையின்றி நரகயாதனைக்குள்ளாக்கிநசுக்குகின்றனர். கேளாய்பிரும்மராக்ஷதா ? அச்சுதானந்த கோவிந்தவென்று எஞ்ஞான்றும் இயம்புவோர் பவசாகரத்தின் சுழியில்ஒருபோதும்அகப்படார். அரிகீர்த்தனத்தால்அடை-

யும்பயனை ஆரணத்தாலும் கருமத்தாலும் ஞானயோகங்களாலும் அடைந்திடார். ஆகையின்றின் அகமனைத்தையும்நீக்குதற்குநாராயணவென்னுந்திருநாமத்தையெக்காலும்நாநுனியில் ஒருநிதியாகநாட்டக்கடவையென்றுநவின்று சற்றேசும்மாவிருக்கையில்; வைகுண்டப்ரியரென்னும்விபுதோத்தமர் விளம்பலாயினர். கேளாய்ராக்ஷதனே ! யான்சாற்றுவதே சத்தியமாகநினைந்து இனிச்சிறிதுந்தாமதியாது நடந்துபோய் நாராயணகிரியைநணுகிவிண்ணவர் சிரத்தில் வகிக்கத்தக்க விஷ்ணுபக்தரின் திருவடித்தூள்களால் புனிதமாயுள்ள தீர்த்தத்தைப்பத்தியுடன் சிரத்தில் புரோக்ஷித்துக்கொண்டு பானம்பண்ணிப்பரிசுத்தனாகி அந்த வெற்பைவலம்வந்து வணங்கி வாயினாலும் எம்பெருமான்குணங்களைப்பாடுவையேல், அந்த பகவான் திருவுள்ளமுவந்து உன்னையீடேறச்செய்குவரென்று இசைத்தருளி அவ்விருவரும்ஆனந்தத்தோடுதந்தேசத்தைக்குறித்து நடந்தனர்.

சதுர்வேதி நாராயணகிரி கமனத்தால் மோக்ஷமடைந்தது.

வாரீர்முனிவர்களே ! அதன்பின்பு அவ்வாறே அந்தபிரும்மராக்ஷதன் அக்கணமேதாரபுத்திரரும் கழுகளுந்தன்னைச்சூழவிரைவுடன் போந்து நாராயணகிரியைச்சார்ந்துகிரிபிரதக்ஷிணம்புரிந்து அங்குள்ளவிஷ்ணுபக்தரின் ஸ்ரீபாததீர்த்தத்தையும்பருகி அவ்வாறேஜந்து திங்கள்கழிகையில், கருணைக்குக்கலசாம்போதிபோன்ற திருநாராயணர் அவர்கள்செய்யும் பிரதக்ஷிண நமஸ்காரங்களால் பக்தபராதீனராய் முன்பு அவனாற்செய்யப்பட்டகொடுமையானதீவினையைநினைந்து ஜயவிஜயரைநோக்கிச்சாற்றுகின்றனர். சதுர்வேதியென்னும் மறையவன் ஆதியில் அரிராதரிடம் புரிந்த அபராதத்தால் தாரதனயருடனும் பந்துவர்க்கத்துடனும் பிரும்மராக்ஷதனாயிருந்து இங்ஙனம் எமதுபக்தரின் பாததீர்த்தம் பருகியதால் பரிசுத்தனாகிப்பருப்பதத்தின் பாரிசத்தில் எமது நாமத்தையே இசைத்துக்கொண்டிருக்கின்றனன். பதேபதேபாகவதரின் பாததீர்த்தம் பருகுவதாலும் எமதுநாமசங்கீர்த்தனம்செய்வதாலும் எம்மைவசப்படுத்துகின்றமையின், நீவிர் அங்குச்சென்று அவனையும் அவனைச்சேர்ந்தவரையும் முறைப்படி யெமதுதீர்த்தங்களின் மூழ்கச்செய்து விரைவினில்எம்மையடையுமாறுபுரிந்திடும். நம்பக்தரின் பாததீர்த்தத்தால் பரிசுத்தமான பாகவதரொதிரில் பாதகமனைத்தும் பஞ்சானனத்தின்முன்பகடுபோற் பறந்தொழியுமன்றோ ? என்று திருவாய்மலர்ந்தருளக்கேட்டு உடனே அவ்விருவரும் அவனிடம் போந்து நீயிங்ங

னம் உன் கூட்டத்தாரோடு நாராயணபகவானை நாவினால் நன்றாய்த்துதிப்பையேல், எம்பெருமான் இலக்குமியோடு பிரசன்னமாகுவர். அவர்க்கு நாமசங்கீர்த்தனத்தினும்வேறொன்றும் விசேஷமன்று. முதலில் அஷ்டதீர்த்தத்தில் மூழ்கி அதன்பின் கலியாணதீர்த்தத்தில் ஆடக்கடவையென்று கழறினார்கள். அவ்வாறு துவாரபாலகர் புகலக்கேட்ட சதுர்வேதி சந்துஷ்டனாகி முறையே அவர்களால் காண்பிக்கப்பட்டதோயங்களின் மூழ்கத்தொடங்கி முதலில் வேதபுட்கரணியிலும் பின்பு தர்ப்பதீர்த்தத்திலும் அதன்பின் பலாசதீர்த்தத்திலும் அதன்மேல் யாதவியிலும் அதற்குமேல் பதுமதீர்த்தத்திலும் அப்புறம் பராசரத்திலும் அதற்குப்பின் நாராயணமடுவின்கண்ணும் பின்பு வைகுண்ட கங்கையிலும் சாத்விக மனதுடன் ஆங்காங்கு மூழ்கும் போது மாதவன் திருநாமத்தை மும்மூன்றுதரம் உச்சரித்துத்தன் கூட்டத்தாரோடு முறைப்படி மூழ்கியெழுந்தனன்.

அப்போது அவரெல்லோர்க்கும் பழமையான கோரரூபமொழிந்து பிராம்மணவுருவமுண்டாயது. அந்தணர்க்குரிய அங்கமெல்லாந்தோன்றின. அவ்வேதியன் குடுமியும் பூணூலும் தண்டகமண்டலமும் குண்டலமும் பவித்திரமுமுள்ளவனாய்த் தர்ப்பாசனம் பெற்றுத் தௌதமாயுள்ள உத்தரீயத்துடன் மிகவுந் தர்மபராயணனாகி மென்மையானமொழியும் நடையும்மனமுமுள்ளவனாய் மந்திரங்களில்மிக்கபக்தியோடு ஜபசீலனும் சாந்தகுணத்தனுமாகி யெல்லோரிடத்தும் இன்சொல் வழங்குபவனும் எக்காலும் சத்வமே தலையெடுத்தவனுமாகி இவ்வாறு அந்தணர்க்குரிய குணங்களோடுநின்ற மற்றபுத்திராதியருடனுங் கலியாணதீர்த்தத்தில் ஆடத்தக்க அதிகாரமடைந்தமையால் அதனிடத்தே மூழ்கியெழுந்ததும் அவனுக்கு ஆதியிலிருந்த கல்வியனைத்துங் 'கரதலாமலகமாய்க்கருத்தில் விளங்கின. கேளும்முநிவர்களே! கலியாணதீர்த்தத்தின் மகிமை யெல்லாவற்றினும் வேறன்றோ? அதன்கண் மூழ்குவோருடைய ஸ்ரீபாததீர்த்தத்திற்கு அமரரும் ஆசைப்படுகின்றனர். அதன்பின்செயவிஜயர் அகமனைத்தையும் அழிக்கத்தக்கதுளசிமணிமாலையுடன் பதுமாக்ஷமாலையும் அவன்கழுத்தில் தரிக்கச்செய்து கேசவாதிஸ்தானங்களில் ஊர்த்வபுண்ட்ரமும் சாத்தியபின்விஜயன்தபிக்கப்பெற்ற சக்கரலாஞ்சனம்புரிந்தனன். நான்குவருணத்தாரில் யாவரேனும் சக்கராதிலாஞ்சனம் இல்லாதவர் விஷ்ணுவின்கிருபைக்குப் பாத்திரராகாரென்று வேதம் முறையிடுகின்றது. தமதுநாயகனுக்குரியஅடையாளத்தாலும்கருமங்களுக்கு அங்கமாகையாலும் பிரகிருதியின் முடிப்பைத்தகிப்பதாலும் ஆத்மாக்களுக்கு இதமாகையாலும் தனக்கும்பிரியமானதாலும் தேகத்தையும் தேகியையும் திருத்துவதாலும் நல்லினஞ்சேர்கைக்கும் சிற்றினமொழிதற்கும்

இயமதூதர் இரிந்தோடுதற்கும் ஏதுவாகையாலும் புகழும்முக்தியும் புணர்த்தலாலும் சக்கராதிலாஞ்சனம் முக்கியமாய்த்தரிக்கத்தக்கது. அன்றியும் அஃதில்லாதவர் விஷ்ணுபக்தரின் போஜனாதிகருமங்களில் அந்தகோஷ்டியில் புகுதற்கும் அருகராகார். சக்கராதிதாரணமுள்ள அரிபக்தரை நிந்திப்பவன்பாஷண்டியென்று பகரப்படுகின்றனன். அவ்விதம் அவ்வேதியன் சக்கராதிலாஞ்சனத்தாலும் ஊர்த்வபுண்ட்ரத்தானும் துலங்கியெம்பெருமான் இணையடியையெக்காலுந்தரிசித்து ஸ்ரீவைஷ்ணவர் சேவையால் தூயமனதுள்ளவனாய்த்தாரபுத்திராதியருடன் திருநாராயணர்க்குத்திருவாராதானம் புரிந்து அவரனுக்கிரகத்தால் இம்மைப்பயனையும் ஏற்றமாயடைந்து அந்தத்தில் அழியாது சோதிமயமாய்த்திகழும் ஸ்ரீவைகுண்டத்தைச்சேர்ந்தனன். இவ்வுபாக்கியானத்தை அனுதினமும்யாவரேனுங்கேட்டிடுவரேல், அவர் தீவினையனைத்து மொழித்துக்கிடைத்தற்கரியபரமபதத்திற் கிளர்கின்றனர்.

அரிநாமசங்கீர்த்தனத்தானுமமுதென்னுமவர்தாளிறைஞ்சுமடியார்
பெருமாபதத் தூயநீருண்டபேரானும்பேயாயலைந்தவொருவன்
மருவாரெனக்கொன்றவினைமாளவெ துசைலமஞ்சாடுசிகரந்தனில்
திருமாதுடன்மின்னுமொளிசாகரங்கண்டுதெரிசித்தடைந்தனனரோ.

எதுசைலசிகரத்தினிருகேதுகச்சுற்றமெனநிற்குமுயிர்கட்கெலாம்
மதுசூதனன்சக்கரக்கையனுலகத்தைமகிழ்செய்யுமருள்வாரியே
மதுமானவொழுகுங்கடைக்கண்ணினாலெந்தவழியானுமனதின்புற
முதமோடுபசுபக்கிகளையும்படுந்துன்பமுழுதுங்கெடுத்தாள்வரே (உ)

(இ-ள்.) அமுதம்போன்ற அரிநாமசங்கீர்த்தனத்தாலும் அவரதுதிருவடியைவணங்காநின்றதாசர்களுடைய மிகப்பெருமைவாய்ந்தபரிசுத்தமான ஸ்ரீபாததீர்த்தத்தைப்பருகிய பெருமையாலும் (அதற்குமுன்) பிரும்மராக்ஷதனாய்அலைந்தவொருமறையவன்சத்துருக்களைப்போல்தன்னைவருத்திய பாவந்தொலைந்து யாதவகிரியின்மேகந்தவிழ்கின்றசிகரத்தில் பெரியபிராட்டியாரோடு பிரகாசித்துள்ள பிரகாசத்திற்கிருப்பிடமாகும்பெருமானைத்தெரிசித்துச்சரணமாயடைந்தான். யாதவகிரியில் ஆத்மகோடிகளுக் கெல்லாம் காரணமற்றபந்துவாய்வீற்றிருக்கும்சக்கரபாணியானமதுசூதனன், உலகத்தோரைமகிழச்செய்யும் தயாரசப்பெருக்கு அமுதம்போல் பெருகாநின்ற கடாக்ஷத்தால் பசுபக்ஷிகளையும் எந்தவியாஜத்தாலாயினும் மனமகிழுமாறு சந்தோஷத்துடன் அவைபடுகின்றதுன்பத்தை யெல்லாங்கெடுத்துக் காப்பாற்றுகின்றனர்.

௯-வது அத்தியாயம்.

தத்தாத்ரேயர் பாஷண்ட நிரஸனம்புரிதல்.

வீணையில்வல்லவேத முனிவரே! அரிபக்தரிடம் புரிந்த அபராதவிஷயமான ஆக்கியானத்தைக்கேட்டு அமுதம்பருகியவர்போல் ஆனந்தமடைந்தனம்; இனிநாராயணாசலத்தில்தத்தாத்ரேயர் நான்மறைகளாலும் பாஷண்டநிரஸனஞ்செய்ததையும் அங்ஙனம் பராசரர்புராணம் புகன்றதையும் இசைத்தருளவேண்டுமென ப்ரார்த்திக்கும் இருடிகளைநோக்கி அவ்விதமே அறையலாயினர். முன்பொருகால் காணாதசாக்கியபாஷண்டராதியான துஷ்டவாதிகள் நாராயணபதத்திற்கு அனுகுணமானஞானமின்றிஉண்மையுணராதுகண்டபடியெல்லாங்கழறத்தொடங்கினர். சிலர், ஆத்மாதேகத்தைவிடவேறன்று; தேகமேநாமாகையால் அறிவுள்ளவர் அதற்கனுகுணமாக வேநடத்தவேண்டியதால் தவமும் யாகாதிகருமமும் யோகமும்அர்ச்சனையும் புரிவதுதத்வமாயுணர்ந்திடின் பயனற்றதுன்பமேயன்றி வேறொன்றுமில்லையென உலகத்தைமோகிக்கச்செய்தனர். வேறுசிலர், தர்க்கபலத்தினால் ஆத்மாவுந்தேகமும் வேறென்பதைச்சம்மதித்தும் அந்த ஆத்மா க்ஷணப்போழ்தில்நசித்துவிடுகின்றதென்று நவின்றனர். மற்றுஞ்சிலர் தேகத்தினின்றும் வேறான ஆத்மாநிலையென்பதை நிச்சயித்து அதற்குள்பரமபுருஷன் அந்தர்யாமியாகின்றானென்றனர். பின்னுஞ்சிலர், அப்புருஷனையே அசேஷகாரணமாயெண்ணி அவன்பிரும்மாவென்றும்வேறொருவனென்றுங்கண்டபடி கழறினர். வேறுசிலர், சித்அசித்துக்களின் ரூபபேதத்தாலும் ஜீவேச்வரவிபாகத்தாலும் பிரமாணசித்தமாயுள்ளசகலமும் ஏகமென்றேவிளம்பினர். அந்த ஆத்மாசின்மாத்ரரூபமாயுள்ளது; அதுசீவனுமன்று ஈச்வரனுமன்று; வெவ்வேறாயுள்ளஅகிலமும் அதற்குவேறானதென்றும் சிலர் செப்பினர்.

இவ்விதம் பூதலத்தில் மாயவன்மாயையால் மோகித்துப்புத்தியினால் உளகிக்கத்தக்கயுக்தியேசரணமாயடைந்து வெவ்வேறுவிதமாய்க்கண்டபடி விளம்புவோருடைய வீண்வாதமேயுலகெங்கும்பரவிக்கண்கெட்டலைகையில், வேதமனைத்துந்திருப்பாற்கடலை அணுகிவியாகுலத்துடன் விஷ்ணுபகவானைநோக்கிவிளம்பாநின்றன. ஓமாதவா! புருஷோத்தமா! சித்தும் அசித்துமாயுள்ள சகலபொருட்கும் தேவரீரேசேஷியாகின்றீர்; இவ்வர்த்தத்துக்கு ஆதியந்தம் அற்றயாங்களேபிரமாணமாவதன்றிஸத்வநிஷ்டர்களேயிதைவெளியிடுபவருமாகின்றனர். ஓ மாதவா! புருஷோத்தமா! சித்தும்

அசித்துமாயுள்ள சகலபொருட்கும் தேவரீரே சேஷியாகின்றீர் ; இவ்வர்த்தத்துக்கு ஆதியந்தம் அற்றயாங்களே பிரமாணமாவதன்றிஸத்வநிஷ்டர்களே யிதைவெளியிடுபவருமாகின்றனர். எவன் எதைச்செய்யினும் அவற்றிற்கெல்லாம் தெய்வமேகாரணமென்று கழறப்படுகின்றது. அங்ஙனமிருக்க, மிலேச்சதேசவாசிகளான பாஷண்டர் மீறித்தேசிகர்களாய்த்தோன்றிச் சுத்தனுக்கு ஆத்மசுத்திஸ்நாநாதிகளாலுண்டாவதில்லையென்றுஅவைக்ளெல்லாம் முற்றுந்தொலைத்துவிட்டனர். வர்ணாச்ரமதருமங்களும் ஒழிந்தன. வீடுகள்தோறும் ஆத்மஞானவாதமும் வெவ்வேறாயின. ஆகையின் மெய்ஞ்ஞானமும் யாங்களும் பாஷண்டாகமபங்கத்தில் அழுந்திவிடாவண்ணம் கரையேற்றியருளவேண்டுமெனப் பிரார்த்தித்த வேதங்களின் விருத்தாந்தத்தைத் திருச்செவிசேர்த்தியதிருமணாளர் தெரிக்கலாயினர்.

வாரீர்நான்மறைகாள் ! யாம் அவனியின்கண் ஆசாரியராய் அவதரிக்கின்றோம் ; நீவிரெல்லோரும் அங்ஙனம் சிஷ்யராயுதித்திடுங்களெனத்தயையுடன் திருவாய்மலர்ந்து துஷ்டர்களால் சாளக்கிராமாதிகளும் தள்ளுண்டதையுங்கண்டுபாவத்தொழிலில் அவாவுள்ளபாஷண்டாகமவாதியரைப்பறக்கடிக்கநினைந்து எக்காலும் சத்வமேதலையெடுத்துத்தாம்வீற்றிருக்கப்பெற்ற திருநாராயணகிரியில் நான்காவது ஆச்ரமத்தையடைந்து உபவீதம்திருதண்டம் கௌபீனம் சிக்கம் கவசமாகியபஞ்சமாத்திரையைத்தரித்து வேதபுஷ்கரணியின்தீரத்தில் விசாலமானவொருசிலாதலத்தின்கண் காஷாயபரிதானஞ்செய்துகொண்டனர். அங்ஙனம்ஆரணம்நான்கும் சிஷ்யராய்த்தோன்றிருக்வேதி ஸாமகன் யஜுர்வேதி அதர்வணிகனென்றுஅபிதானங்களைமுறையேதரித்து யதிரூபமாய்த்திகழும்சரணாக்தவற்சலரை அடைந்தன. ஆறங்கமும் புராணாதிகளும் மனிதவுருவத்தோடு அந்தவேதங்களுக்குச்சீடராயமைந்தன. கேளீர்தாபதர்காள் ! ஆரணங்கள் அந்தேவாசிகளாய் அந்தஎம்பெருமானையடைந்ததடாகத்திற்கு அன்றுமுதல்வேதபுஷ்கரணியென்றும்அந்தபகவான்காஷாயத்தைப்பரிதானமாகத்தரித்தபாறைக்குப்பரிதானசிலையென்றும் பேர்வாய்ந்தது. இவ்விதம்யதிரூபமெடுத்தபகவான்பலசிஷ்யவர்க்கங்களால் சேவிக்கப்பெற்று ஞானமார்க்கத்தை நிலைநாட்டத்தொடங்கவெ பாஷாண்டரனைவரும் ஆங்காங்கு அபசெயப்பட்டுத்துரத்துண்டுபுறம்பேயோடிவிட்டனர். பின்புசாண்டில்லிய முநிவரும் தர்ப்பதீர்த்தக்கரையிலிருந்து பாஞ்சராத்ரப்ரமாணங்களால் வேதார்த்தத்தைவெளியிட்டனர். அங்ஙனம் பாஷண்டர் துரத்துண்டுதொலைந்தபின்னர் ராகுவால் வீடுபெற்றசசாங்கன்

போலும் பனியால்விடப்பெற்றபகலவன்போலும்மெஞ்ஞானமுலகெங்கும் பரவியது. அத்தருணத்தில் ஆரணங்கள்பயோததிவரைக்கும் படர்ந்து பாஷண்டகண்டனஞ்செய்து வெற்றிபெற்றுத்திரும்பிக்கலியாண தீர்த்தக்கரையைச்சார்ந்துசாண்டிலியருடன் வீற்றிருக்குந்தத்தாத்ரேயரைத்தெரிசித்து ஐயனே! நாங்களோரதிசயங்கண்டோமென்ன, எம்பெருமான் ஒன்றுமறியாதவர்போல் அதென்னவென்றுவினவ, அதனை விண்ணப்பஞ்செய்ய வாரம்பித்தன.

வியாக்ரவாநரஸம்வாதம்.

ஒரு கானகத்தில் வானரமொன்று உயர்ந்தமரத்தின்மேலிருக்கையில், ஒரு வேடன் அங்கிருந்தவொருபுலியைக்கண்டு பயந்து அத்தருவின் மீதேறியபின் அந்தவியாக்கிரம் அவ்விருக்ஷத்தின் கீழ்வந்துமர்க்கடத்தையேறெடுத்துப்பார்த்து வாராய்வலீமுகமே! யான் இங்ஙனம் பசியுடன் வந்தவன்; இக்கிராதனே எனக்குப்பக்ஷனமாகின்றான்; ஆகையாலிவனைப்பாதபத்திலிருந்து தரையில் தள்ளிவிடென்னக்கேட்டகுரங்கு அப்பாசார்த்தூலமே! இவ்வனசரன் பீதியால் எனதுவாஸஸ்தானத்தை வந்தடைந்தான்; உத்தமர்தம்மையடைந்தவரை யொருபோதுங்கைவிடாராகையால், நான்இவனைத்தள்ளமாட்டேனென்று மொழிந்து சற்றுநேரத்துக்குள் மரக்கிளையிலிருந்தே கொஞ்சங்கண்ணயர்ந்து நித்திரைசெய்தது. அவ்வமையத்தில் குடிலமனதுள்ள அவ்வேங்கை வேடனைப்பார்த்துநீயெனக்காகாரமாகவேண்டுவதில்லை; இப்போது இக்குரங்கையே புசிக்கலாமென்று நிச்சயித்திருக்கிறேனாகையால், இதைச்சினையிலிருந்து சீக்கிரம்தள்ளிவிடென்றுசெப்பக்கேட்டவனசரன் அங்ஙனமே தூங்குகின்றவானரத்தைத்திடீரென்று தள்ளிவிட்டனன். தம்மைரக்ஷிக்கிறவரையேபக்ஷிக்கிறதுமறவர்களுக்கு இயற்கையன்றோ? நன்றுதீதென்னும்பகுத்தறிவில்லாதவர்எந்தப்பாவந்தான்இயற்றார்கள்? அவ்வாறு அவனிமேல் வீழ்ந்தகேசகத்தைப்பிடித்துக்கொண்டுநகைத்து உன்னையிப்போது தின்னாமல் விட்டுவிடுகிறேன்; துஷ்டனாகியஇந்தவியாதன் உன்னைத்தள்ளினவனாகையால் நின்வைரியாகும் அவனைநீதள்ளிவிடென்று செப்புகையில் அவ்விதமேசெய்கிறேனென்று ஒப்புக்கொண்டுவியாக்கிரத்தினின்றும் விடுபட்டுப்பூரிப்போடுபூருகத்திலேறிஅவனைவீழ்த்தாமல்சும்மாவிருக்கக்கண்டபுண்டரீகம் ஏன்கொலைஞனையின்னுந்தள்ளவில்லையென்ன, வானரம் எனதகத்தில்வந்தவனையான்தள்ளமாட்டேன்; சத்துருவாயினும்மித்திரனாயினும் இளைத்தவனாயினும் கொழுத்தவனாயினும் தன்வீட்டுகுவந்தவனைக்கைவிடுவோன் மாகாபாபியாகிறானென்று மொழிந்துவிட்டுத்தான்சுகமுற்

றிருந்தது. இவ்விம்மிதத்தையாங்கள் கண்காட்சியாய்க்கண்டோமென்று கழறக்கேட்டபகவான் சாண்டில்லியர்வதனத்தைப்பார்த்தருள அம்முனிவர், அந்தேவாசிகளாயுள்ள ஆரணங்களைநோக்கி இதுதான் அழியாமையான சரணாகதி சாஸ்திரமென்று சாற்றப்படுகின்றது; சகலதருமங்களிலுமுயர்ந்த இது உங்களுக்குந்தெரிந்தவிஷயமேயென்ன, ஆம்நீர்சொல்வது சரியே; எமக்குந்தெரிந்ததேயாயினும் இவ்வுத்தமஞானம் அஃறிணையிலுமிருக்கின்றதேயென்று வானரவிஷயத்தில் அதிசயித்தோமென்னச்சாண்டில்லியர் மற்றுஞ் சாற்றலாயினர்.

நாளீகஜங்கோபாக்கியானம்.

சரணாகதரைக்காக்கின்ற இத்தருமம் உயர்திணைக்காயினும் அஃறிணைக்காயினும் சாதாரணமாயுள்ளது. இங்ஙனம் யாம் புகல்வதைக்கேளுங்கள். கந்தர்வராஜனுக்கு நட்பாயுள்ளநாளீகஜங்கனென்னும் நாமமுடையவொரு ராஜஹம்ஸமிருந்தது. அந்தணனொருவன் வறுமையால் தளர்ந்து அங்குமிங்குந்திரிகையிலொருநாள் அந்தமராளத்தருகுசெல்ல, அதுஅவனைநோக்கி நீயார்? வேதியன்போற்காண்கின்றனை; இங்கேயெதற்குப்போந்தனை? என்னலாவது ஏதேனுமுளதேல்இயம்புகவென்கையில், அப்பார்ப்பான்தனது தரித்திரத்தைச்சொல்லிக்கொண்டனன். அதைக்கேட்ட ஒதிமம் அறுதொழிலாளனே! எனக்கு இஷ்டனாகியகந்தர்வராஜனிடஞ்சென்றுயான் அனுப்பியதாயுரைத்து நின்குறைகளையுங்கூறுவையேல், இச்சையுள்ளமட்டும் ஈந்திடுவனென்று இசைக்கக்கேட்டவன் அக்கணமேபுறப்பட்டு அத்தேவனிடத்திற்கு எகித்தான் போந்தவரலாற்றைவழங்காநிற்க, அவன் நாளீகஜங்கனது நட்பினால் வேண்டியதனத்தைத்தந்தனன். அம்மறையவன்தானெடுக்கத்தக்கபொருளைச்சுமைசெய்து தூக்கிக்கொண்டுதிரும்பிவருகையில்அந்தஎகினத்தின் இருப்பிடத்தில் வந்துபார்க்கும்போதுஅது தூங்கக்கண்டுதனக்குமிகப்பசியாயிருந்ததால் அதைக்கொன்று புசித்துவிட்டுப்போயினன். அத்தருணத்தில் கின்னரசேவகர் சிலர் அன்னமிருக்குமிடத்தை வந்துபார்த்து அதைக்காணாமல் அதன்இறகுகள்மாத்திரங்கிடக்கக்கண்டு அங்குமிங்குஞ்சுற்றிப்பார்க்கையில்பார்ப்பான்பணச்சுமையால்வருத்தத்துடன் செல்வதைநோக்கி இங்கிதத்தால் இவனேயன்னத்தைக்கொலைசெய்தவனென்று நிச்சயித்துக்கோபாவிஷ்டராய் அவனைப்பிடித்துப்புடைத்துமடித்துவிட்டபின், அவன்நரகத்திலும்அன்னஞ்சுவர்க்கத்திலும்போய்ச்சேர்ந்தனர். அமராவதியை அடைந்தவோதிமம் இந்திரன் சபையிலுள்ள விண்ணவரைநோக்கியென்னைப்பூமியின்கண்வதைத்தவேதியனெங்கேயென்றுவினவ, அவர் நின்னை

வதைத்தவன் எங்கிருந்தாலென்ன ? நீவேன்கேட்கின்றனையென்ன, அது மற்றும்விடாது வினவுகையில் அவன்நரகத்தையடைந்தனனென்று நவின்றனர். அங்ஙனம் அமரரைவணங்கியான் செய்ததருமத்தையெல்லாந்தத்தஞ் செய்கின்றேன் ; அதைக்கொண்டு அவனைநரகத்தினின்று விடுவித்துச்சுவர்க்கத்தில் வசிக்குமாறு கிருபைசெய்யவேண்டுமெனப்ரார்த்திக்க, அவர்நின்னைக்கொலைசெய்தவன் எவ்விதம்இங்குவரக்கூடுமென்றுதடுக்க, அதுமற்றும் அடிக்கடியிரந்துவேண்டிக்கொள்ளவே விண்ணவர் அவ்வாறே மராளத்தினது நிர்ப்பந்தத்தால் அக்காதகனாகிய வேதியனைநரகலோகத்திலிருந்து நாகலோகத்திற்சேர்க்க, நாளீகஜங்கனது தருமத்தால் அவன் சுவர்க்கத்திற் சுகித்திருந்தனன். ஆகையின் அன்போடுகூடிய பெரியோரை யொருவனொருகாற்சரணமடைகுவனேல் அவன் எவ்விதத்திலும் அவர்களால்அளிக்கப்பெறுகின்றனன். இது நாராயணபகவான்திருவாய்மலர்ந்தருளியபாஞ்சராத்ரவிதியின்சாரமான சரணாகத ரக்ஷணமாம். என்றுசம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அவர்கட்கெதிரில் பராசரமுநிவர் சிஷ்யவர்க்கத்துடன் போந்து எல்லாஞானிகளுக்கும் ஒப்புமையுரைக்கத்தக்க பகவானாகுந்தத்தாத்திரேயமுநிவரை ஸாஷ்டாங்கமாய்நமஸ்கரித்தனர்.

மைத்ரேயருக்குப் பராசரர்விஷ்ணு புராணோபதேசம் புரிதல்.

அங்ஙனம் அந்த ப்கவான் பராசரரைநோக்கிவசிஷ்டகுலநந்தனராகும் முநிச்ரேஷ்டரே ! கூசலமா ? இங்குவந்ததற்குக்காரண மென்னவென்று கேட்டருள, பராசரர், சுவாமீ ! புலஸ்தியர் வசிஷ்டர் இவர்களின் வரதானத்தாலடியேனுக்குத்தத்துவமனைத்தும் தெளிவுடன் விளங்கியது. இம்மைத்ரேயர் அவைகளைக்கேட்க விரும்பியதால் நல்லதலத்திலேயே சொல்லவேண்டுமெனக்கருதி நாராயணருக்கு வாஸஸ்தானமாயுள்ளபதரிகாச்ரமத்தைநணுகி அக்கருணாநிதியைத்தெரிசிக்க, அவர் இதைவிட எம்மனதிற்கு இஷ்டமாயுள்ள நாராயணாசலத்தை அடைந்து புத்திமானாகும் நின் சீடனுக்குமிக்கமேம்பாடுள்ளவிஷ்ணுபுராணத்தைவிளம்புகவென்று திருவாய்மலர்ந்திட இவ்விடம்படர்ந்துவேதசாஸ்திரபுராணாதிகளுக்குப்பல ரூபமாய்விளங்குந் தேவரீரது தெரிசனத்தையிங்கு அடியேன் கண்களுக்குப்பாரணையாக்கினேன். அங்குந்தேவரீரது திருவுருவத்தையே தெரிசித்தேனாகையின், எனக்கினியென்னகுறைவிருக்கின்றதென்றுஇசைக்கக்கேட்ட எம்பெருமான் தத்துவத்தைத்தக்கபடியுரைப்பதில் உம்மைவிட

யார்வல்லவர் ? ஆகையின் சத்வமயமான அப்புராணத்தை அடிதொடங்கி முடியளவும் இங்ஙனேயாங்கேட்கும்படியிசைத்திடுமென்றியம்பியருளினர். பராசரர் அவ்வண்ணந்தத்தாத்ரேயரனுமதிபெற்று அவர் திருச்செவிசேர்த்தருளாநிற்க, மைத்ரேயருக்குமகாவிஷ்ணுவின் பாரம்யதர்சகமாயுள்ள புராணத்தைப்புகன்றனராகையால் கலியாணதீர்த்தத்துக்குச்சிறிதுவடபுறத்தில் பராசராச்ரமமென்னுமோரிடம் இருக்கின்றதென்று சகலருஞ்சாற்றுகின்றனர். அத்தீர்த்தத்திற்குமேற்புறத்தில் பஞ்சபாகவதஸ்தானமும் பூர்வபாகத்தில் வராகஸ்தானமும் தென்புறத்தில் சீதாரண்யமுமிருக்கின்றன. அத்தலத்தில் முன்பு இளயபெருமாள் ரகுநாயகருக்கு ஜானகிக்குச்சந்தோஷகரமானவொருபர்ணசாலைசமைத்தனராகையின் அதற்கு அப்பெயர்வாய்ந்தது. கேளீர் முநிமணிகாள் ! இவ்விதமானநான்குபுண்யக்ஷேத்திரம் அங்கிருக்கின்றன.

துளசீமாகாத்மியம்.

அதன்பின் மெஞ்ஞானியாகும் பராசரர் மைத்ரேயருடன் சாண்டில்லிய முநிவரைப்பார்த்துத் தேவரீர் பாஞ்சராத்ரவிதியை விளக்கியவராகையால் அதிலுள்ள அனைத்தையும் யாங்கேட்குமாறு திருவாய்மலர்ந்தருளுக. ஸ்ரீபரமபுருஷரான நாராயணர் வேதங்களின் மறைந்துள்ளபொருளையெல்லாம் பாஞ்சராத்ரவிதியாக விளக்கியருளினரன்றோ ? ஏகாதசிமகிமையையும் திருத்துழாயின் பெருமையையும் அனந்தசயனன் அனுக்கிரகவிசேஷத்தையும் அறைந்தருளவேண்டுமென்கையில், சாந்தமனத்தரானசாண்டில்யர் அவ்வாறே ஆனந்தமாய் அறையலுற்றனர். பரம்பொருளானவர் சகலவுலகங்களுக்குங் காரணமாய் பவதாரணமாய்ச்சாந்தானந்தமஹாநந்தமயமாயும் சத்தியஞானமயமாயுமுள்ளவொரு தேஜோராசியாயெங்குமொளிர்கின்றனர். குணபூஷணாதிகளால் மனத்திற்கினிய திருமூர்த்தியுடன் திருவைகுண்டவாசிகளால் அங்குங்காணப்படுகின்றனர். யதேச்சையாய்த் திருவிளையாடல் செய்கின்ற அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவின் அம்சத்தையுடையரூபங்கள்இன்னும் அநேகங்காணப்படுகின்றன. திருமகளோடுதிடமாய்க்கூடிய அவ்வுருவங்களில் சிலவாசுதேவாதிகள் ; சிலசேசவாதிகள் ; சிலபதுமநாபாதிகள் ; சிலராமகிருஷ்ணாதிகள். அநுரூபமானவிபவரூபத்தோடுகூடிய திருமகளுந் திருநாராயணருமாகிய திவ்வியதம்பதிகளுக்குப் பிரமன்முதலியசகல தேவகணங்களும் தாசதாசிகணங்களாகின்றன. அத்தகையபெருமாள்விளையாட்டினிமித்தம் அனைத்தையும் ஆதியிற்சிட்டித்து ஸங்கற்பத்தால்ரக்ஷித்து அந்தத்தில் அரித்தருளுகின்றனர். பிதிரராகும் யானத்தையுடைய கருமமாகுங்

கயிற்றோடுகூடியகடயந்திரத்தில் ஏறியிறங்கிஉழன்றுகொண்டிருப்பவர்க்குச் சக்கராயுதரான சர்வேச்வரரே அக்கருமமாலையைச் சேதிப்பவராகையின், அப்பெருமானுடைய திருவடியையேதினந்தோறும் அர்ச்சித்தல் அமையும். வர்ணாச்ரமதருமத்தினின்றும் வழுவியவர் அரிபூஜைக்கு ஒருபோழ்தும் அருகராகார். அவராராதனத்திற்கு முக்கியசாதனமாயுள்ளது துளவமேயாம். அதுபூஜாகாலத்தில் அகப்படாவிடின் அதன் திருநாமத்தையுச்சரிக்கினும் அதனால் எம்பெருமான் பேரானந்தமுறுகின்றனர். கோவிந்தன் அத்திருத்துழாயால் அடைகிற துஷ்டியைத்தாமரைமலரினுங்கல்லாரத்தினும்பொன்மலராலும் அடைகிறதில்லை. இங்ஙனம்பூர்வவிருத்தாந்தமொன்றுபுகலுகின்றேன் கேட்டிடுக.

தர்மகேதூபாக்கியானம்.

ஆதியில் தர்மகேதுவென்னும் அரசனொருவன் சார்வபௌமனாய் அரசளித்துக்கொண்டிருந்தனன். அவன் தர்மமனைத்துஞ்செய்து பின்பு புண்யகீர்த்தியென்னும்புரோகிதனையழைத்து யான்எல்லாத்தர்மமும்இழைத்துச் சகலவிரதங்களையும் ஆசரித்தேன்; புராணங்களிலெல்லாம்விஷ்ணுபூஜையே விழுப்பமுள்ளதென்று விளம்புவதால், இனி நாகத்தையளாவிய நாராயணகிரிக்கேகி நாராயணார்ச்சனம்புரியவென்மனம்இச்சிக்கின்றது ; அதற்குச்சாதனமாயும் அந்த எம்பெருமானுக்குப்பிரீதியாயுமுள்ள பொருள்களைப்புகலுமென்று கேட்க, அப்புரோகிதன் நாநாவிதசூக்திகளாலும் பொன்மலரைக்கொண்டு அர்ச்சித்து அறுசுவைபதார்த்தங்களோடு அன்னத்தைநிவேதனஞ்செய்யவேண்டுமென்று புகன்றனன். அதைக்கேட்ட புரவலன், தாமரைகுவளை செண்பகம் வகுளம் மல்லிகை முல்லை புன்னாகம் சதபத்ரம் முதலான சகல புட்பங்களினும் வகைக்கோராயிரமும் பொன்மலராயிரமுங்கொண்டு கனகமாலையும் விசித்திரமாய் விளங்கு நவரத்னமாலையுஞ்சாத்தி ஐயிருநாள் ஆயிரநாமனை ஆராதித்து அதிகசுவைபடச்சமைத்த வுணவுகளை ஆயிரம் பாரங்கொணர்ந்து நிவேதனம் புரிந்தான்.

அத்தருணத்தில் அத்தலத்திற்கு மூன்றுயோசனைதூரத்திலுள்ள யதாலாபர் என்னுமொருபாகவதர் ஏகாதசியிலுபவாசமிருந்து துவாதசியின்காலையில் துளசியின்தளங்களாற்செய்த வொருவடத்தைச்சாதி யெம்பெருமானை அருச்சித்து ஒருபடியளவாயுள்ள நைவேத்தியத்தைநிவேதனஞ்செய்து அந்த சேஷத்தைத்தாமுமுண்டுசந்துஷ்டராயிருந்தனர். அதன்பின்பூபதிபுருஷோத்தமனைப்பூஜித்துத்தானும் பூர்ணமாய்ப்புசித்துமாகத்தையளாவியமாளிகை

யின்மேல் மறையவர்சூழமகிழச்சியோடு அரிகதையைக்கேட்டுக்கொண்டிருக்கையில், ரத்நாங்கதன் விசித்திராங்கனென்னும் இரண்டு கந்தர்வர் திருநாராயணருக்கெதிரில்திவ்வியகானம்புரிந்துசேவைசெய்துவிட்டு ஒருவரோடொருவர் ஆகாயவீதியில் பேசிக்கொண்டுபோகையில், ஸ்ரீமந்நாராயணர் தர்மகேதுவின்பூஜையைச்சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை; யதாலாபர்செய்ததைமட்டுமே நன்றாய் அங்கீகரித்தருளினர்; அவர்சாத்திய திருத்துழாய்மாலைமட்டுமேயெம்பெருமான் திருமுடியில் இலங்காநின்றது; அரசன் சாத்திய பொன்மாலை பொன்மலரொன்றையும் விரும்பவேயில்லையென்றுபுகன்றதைக்கேட்ட பூபாலன் வியப்புற்று அக்கணமே விரைவாய்ப்படர்ந்து திருநாராயணரைத்தெரிசிக்கையில், தான் சூட்டிய பொன்மாலை மணிமாலையொன்றையுங்காணாமல் திருமுடியில் திருத்துழாய்மாலை யொன்றையுமே கண்டு திகைத்து அப்படியே அதிசீக்கிரமாயதாலாபரிடம் போந்து அவரை நமஸ்கரித்து நாராயணபராயணராய் விளங்கும் ஐயன்மீர்! தேவரீர் அசேஷ குருவும் அசுரகுலவைரியுமாய்த்திகழுந் திருநாராயணர்கிருபைக்குப்பாத்திரராகின்றீராகையால், அப்பரந்தாமன் அடியேன் பூஜையை விழையாமல் தேவரீர் இயற்றியதையே திருவுள்ளம்பற்றியருளினர். ஆகையின் அவர்க்குச்செய்யத்தக்கமார்க்கத்தை அடியேற்கருளவேண்டுமென ப்ரார்த்திக்கையில், அவ்வுத்தமவேதியர், அரசனே! யான் தரித்திரன்; மேலும்பொருள் தேடவும் சக்தியற்றவன்; என்னால் எம்பெருமான் ஆராதனத்திற்குச் செய்யத்தக்கது என்ன விருக்கின்றது? ஏதேனும் சிறிது பொருள் கிடைக்குமேல், அதை அந்தபகவானுக்கெதிராகவைத்துப் பூஜிப்பதுதான் யானறிவேன்; வேறொன்று மறிந்திலேனென்கையில், மற்றும் அவன் மாதவன் சங்கற்பத்தாலேவப்பட்டவனாகி அடியேன் மீதுகருணைகூர்ந்து அதையுண்மையாய்த்திருவாய்மலர்ந்திட வேண்டுமென்று திடமாகப்பிரார்த்திக்கவே அவரும் அவ்விதமே அறைய ஆரம்பித்தனர்.

வாராய்மன்னனே! எம்பெருமானுக்குத்திருத்துழாய்மாலையைச்சாத்தி நைவேத்தியத்தை அஷ்டாக்ஷரமந்திரத்தோடுசமர்ப்பிக்கவேண்டும். நாராயணரிலும்மேலானதெய்வமும் அஷ்டாக்ஷரத்தினுமுயர்ந்தமந்திரமும் அதையுபதேசிக்குங்குருவினுமேம்பட்ட ஆசாரியனும் எவ்விடத்தினுங்கிடைப்பதின்று. இங்ஙனம் யான் இசைப்பதைக்கருத்துடன் கேட்டிடுக. ஒருகையால் நமஸ்கரிப்பதும் வஸ்திரத்தைத்தலைமேல் சுற்றிக்கொள்ளலும் எண்ணெயிட்டு நீராடுதலும் கறுப்புக்கம்பளம் தரித்தலும் நகத்தையுரித்தலும் கேசத்தையாற்றலும் எச்சிலுமிழ்தலும் பரியங்கபந்தனமும் தாம்பூலசர்வண

மும் இடம் மாற்றியிருத்தலும் கோழையைப்பெருக்கலும் அரிகதையைஅச ட்டைசெய்தலும்சந்தியைவிட்டவன் அநாசாரன் நீராடாதவனாகிய இவர்க ளால் பூஜித்தலும் அந்நியதேவதைக்குரிய மலர்களால் அர்ச்சிப்பதும் அதை ப்புகழ்வதும் எம்பெருமான் முகாம்புயத்தை யிகந்து வேறொருவர் முகத் தைநோக்கலும் அகாலதர்சனமும் செருப்புடன் சேர்தலும் அரிகீர்த்தனத் துக்குத்தடைசெய்தலும் ராஜாங்கத்தின்செய்தி முதலியவற்றை வம்பளத்த லும் அரிபக்தரை அவமதித்தலும் அவரியற்றும் பூஜையைநீக்கலும் விஷ்ணு பக்தியில்லாதவரை யுபசரித்தலும் நன்காட்டிற்குச்சென்று மீண்டு நீராடா மல் செருக்கினால் அர்ச்சிப்பதும்மூர்க்கருக்கிடங்கொடுத்தலும் நைவேத்திய த்தைப்பார்த்தலும் பூஜைக்குரிய புஷ்பங்களை மோத்தலும்அதற்குச்சேகரித் தபொருளை அபகரித்தலும் மரியாதையின்றிப்பேசுதலும் யாரோடாயினுங் கலகம்புரிதலும் எம்பெருமானுக்குத்தீபமேற்றுகையில்வேறிடத்தைப்பார்த் துக்கொண்டு அயலாருடன் கொழுத்தமொழியைப்பேசுதலும்எழுந்திராமல் எம்பெருமான் பிரசாதத்தையேற்றலும் சயனம் முதலியபுரிதலும் துளசியை அவமதித்து வேறுமலர்களால் அர்ச்சித்தலும் இதரருடன் ஏகாந்தமாய்இயம் புதலும் புத்திராதியரைச்சிந்தித்தலும்பெண்களுடன் இனிமையாய்ப்பேசுத லும் விஷ்ணுகதையைவிட்டுவேறுகதைகளைப்புகழ்தலுமுதலானகருமங்களை விஷ்ணுமந்திரத்தில் நடத்துபவன் பிரும்மகல்பமளவும் நரகத்திலழுந்து வதுமன்றி அவன் புரிந்தபூஜையையும் புருஷோத்தமர் ஏற்றுக்கொள்ளார். கேளாய் மன்னனே! இங்ஙனம் இயம்பியதோஷங்களிலேதேனு மொன்று நின்னாலாயினும் நின் ஏவலாளராலாயினும் சம்பவியாமல் டம்பத்தையொ ழித்துக்கேசவனை அர்ச்சிப்பையேல், அப்பூஜையைமாதவன் அங்கீகரிப்ப ரென்று சாற்றக்கேட்ட நரபதி அங்ஙனே அவரிடம் விடைபெற்று மீண்டு களிப்புடன் அவர்புகன்றபடியே பயபக்தியோடு விரும்பியதையளிக்குந் திருத்துழாயைக்கொண்டு ஆராதிக்கையில்எம்பெருமான் எல்லாவற்றை யும் அருளத்தக்க உவப்புடன் அப்பூஜையை அங்கீகரித்தருளினர். ஆகை யின் திருத்துழாய்க்கிணையானதொன்று மூக்காலத்தினுங்கிடையாது. மாரு தம் துளசிவனத்தில் அளைந்து அந்தமணத்துடன் எதுவரையில் வீசுகின்ற தோ அதுகாறும் அந்தகன் தூதுவர் அணுகார். துளசி துளசி யென்று எக்காலும் உச்சரிப்போர் அந்தத்தில் வைகுந்தத்தையடைந்து கருடத்வஜ னைத்தெரிசிக்கின்றனர். பாவனமானதிருத்துழாயை யொருவன் தரிசிப் பினுங்கேட்பினும் பரிசிப்பினும் நினைப்பினும் வாயினாற்புகல்கினும் அவ னுக்கு முன்பதின்மரும் பின்பதின்மரும் முத்தியைப்பெறுகின்றனர். சங்கசக்கரகதாதரரானசரணாகதவற்சலர் துளசிவனத்திலும் அரிகீர்த்தனம்

புரியுமிடத்திலும் அகலாது சீமானுய்த்திகழ்கின்றனர். வாரீர்பராசரமுநிவரே! நீரும்திருத்துழாய்த்தளங்களால் இங்ஙனம் எம்பெருமானை அருச்சித்துப்பரமபதமடைந்திடுக.

ஏகாதசிமாகாத்மியம்.

கேசவனுக்குத் திருத்துழாயெவ்விதமோ அவ்விதமே யேகாதசியும் அதிக ஆனந்தத்தை விளைக்கின்றது. ஒருவன் எக்காரணத்தாலாயினும் ஒரேகாதசிதினத்தில் உபவாசமிருந்தால், அவன் அநேகயாதனைக்கிடமான நரகத்தையொருபோதும் நணுகவேமாட்டான். "எமது உத்தானத்திலும் சயனத்திலும் அங்கபரிவர்த்தனத்திலும் உபவாசமிராதவன் எமது இதயத்தில் முளையடிப்பவனுகின்றான்" என்கிற எம்பெருமான் வாக்கியத்தையுணராதவர் சகலகுணக்கேடராய் ஸர்வேச்வரன் கட்டளைக்குப்புறம்பாய் விடுகின்றனர். ஏகாதசியைவிட்டு வேறுவிரதங்களை யனுஷ்டிப்பவன் செய்கின்ற சகலகருமமும் சாம்பலிற்செய்த ஆகுதிபோல் அவமாய் விடுமென்று வேதமுறையிடுகின்றது. ஏகாதசியை இகழ்தலும் குருவானையைக்கடத்தலும் சரணுகதனைவதைத்தலும் சமமானவையென்று சான்றோர் சாற்றுகின்றனர். ஆகையின் சகலமான ஏகாதசியிலும் உபவாசம் விசேஷம்; அன்றிச்சுக்கில ஏகாதசியிலாயினும் கிருஷ்ண ஏகாதசியிலாயினும் உபவாசமிருந்து பக்தியோடு நாராயணபரராகுவீர். திருத்துழாயுதகத்தோடுகூடிய உணவைத்தினந்தோறும் புசிப்பவரே வைஷ்ணவரென்று வழங்கப்பெறுகின்றனர். பீர்க்கு சுரை கோவை அத்தி கலிங்கம் கதகம் ஆகிய இவைகளை விஷ்ணுபகவானுக்கு ஸமர்ப்பிக்கலாகாது. வெள்ளைப்பூண்டுண்ணும் பசுவின்பாலும் நெய்யும் எம்பெருமானுக்கு ஒருபோதும் நிவேதனம் புரியலாகாது. ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குநிவேதனஞ்செய்த சேஷத்தாலேயே யாவரும் பிராணுகுதி செய்யத்தகுமேயன்றி வேறுவிதமாய்ப்புரிதல் அமையாது. மாதவன்கண்டுகந்தசேஷத்தைப் பரமபக்தியுடன் வைகலும் புசிப்பவரே பவசாகரத்தின் கரைகாண்கின்றனரென்று இவ்வாறு பலதருமங்களும் இயம்பக்கேட்டபராசரர் மைத்ரேயருடன் தத்தாத்ரேயசாண்டில்லியமுநிவர்களோடு திருநாராயணர்க்கு உறைவிடமாகும் நாராயணகிரியில் அத்தருமமனைத்தையும் நடத்தியெம்பெருமானைச் சேவித்துக்கொண்டிருந்தனர். இவ்வாறு சுயதந்திரங்களாலேயே செயிக்கப்பட்ட பரதந்திரங்களையுடையபாஞ்சராத்திரங்களாலும் வேதாந்தசாரமாகும்முநீச்வரர்வாக்கியங்களாலும் வியாப்தமாய் விளங்கும் யதுகிரிசிகரத்தில் விச்வகாரணரான முராரி பெரியபிராட்டியாருடன் பெட்போடு விலாசமாய் வீற்றிருக்கின்றனர்.

குருவின்னருள்விழியாலொருபரமப்பொருள்கொண்டு
பெருகுந்திருகங்கைப்புனல்பேராரெதுகிரியின்
அருகின்னுறையோகிக்குலமதனுண்முதலாகும்
மருவுந்திருவெட்டும் மொருமகிமைக்கிரியன்னான். ... ... (க)

பரதந்திரமுழுதுந்நிலைகுலையும்படி பண்ணி
அரியின்குணவாதங்களினகலங்கொளவளரும்
கரைகண்டிடலரிதாகியகழறும் மறைமுழுதும்
உரைகொண்டுதமுறுதிப்பட வுண்மைப்பொருள் செய்தான். (உ)

(இ-ள்.) ஆசார்யகடாக்ஷத்தால் ஒப்பற்றபொருளையடைந்து பெருமை வாய்ந்த வைகுண்ட கங்கைபெருகாநின்ற பிரசித்தமாயுள்ள யதுகிரியினருகில்வசிக்கின்றவரும் அஷ்டைச்வரியமும் பொருந்தியவரும்ஒப்பற்றமகிமைக்கு ஒருமலைபோன்றவரும் யோகிகளுக்குள் முதலானவருமாய் விளங்கும் சாண்டில்யமுநிவர், பரதந்திரங்களையெல்லாம்நிலைகுலையச்செய்து ஸ்ரீவிஷ்ணு பகவான் கலியாணகுணங்களை விளக்குவதால் விசேஷமாய் வளர்கின்ற கரைகாணுதற்கரிதாகிய ஓதப்பட்டவேதமுழுதும் தமதுவசனங்களாலுறுதிப்படும்படி அதற்குண்மையான அர்த்தங்களை விளக்கினார்.

௰-வது அத்தியாயம்.

விஷ்ணுசித்தோபாக்கியானம்.

நான்முகன் பெற்றநாரதமுநிவரே! தேவரீர்நாராயணகதாமிர்தத்தால் யாவர்க்கும் ஸம்ஸாரதாபத்தைத்தணிப்பவராகின்றீர்; இதுகாறும் யாங்கேட்டயாவையும் விளம்பியருளினீர்; இன்னமுஞ்சிறிதுகேட்க எமதுமனம் இச்சிக்கின்றது; எவராயினும் வைகுண்டகங்காதீர்த்தத்தினால் தங்கல்மலத்தைக்கழுவிநாராயண இருதவாசஞ்செய்து பரமபதத்தையடைந்ததுண்டாயின், அதையும் மொழிந்தருளவேண்டுமெனப்பிரார்த்தித்த முநிவர்களைநோக்கி அவ்வாறே மொழியலாயினர். நீவிர்கேட்கவேண்டியவற்றைக்கேட்டிடும்; யானுங்கேசவாராதனரூபமாகும் வர்ணனையால் என்வாக்கைப்பயனுளதாய்ப்பண்ணுகின்றேன். முன்பொருகால் ஆசாரபாலகரென்னுமொரு பிராம்மணோத்தமர்சாரித்திரவர்த்தினியென்னும் மனையாளுடன் இல்லறம் நடத்திவந்தார். அவ்விருவரும் புண்யசீலராய் விஷ்ணுபூஜாரூபமாயுள்ள

வர்ணாச்ரமத்துக்குத்தக்க கருமமேபுரிந்துநூல்களில் விதித்தனசெய்து விலக்கியன விலக்கி மதுசூதனன் ஆணைக்கு நெருப்புக்கும் சர்ப்பத்திற்கும் பயப்படுவதுபோல் பயந்து தமக்குற்ற தருமங்களைப்பரிபாலித்து உத்தமபதார்த்தங்களால் உரகசாயியையுபசரித்து அப்பிரசாத்தையேநுதினமும் அயின்று தேகதாரணம் செய்து புண்டரீகாக்ஷன்குணங்களாகுந்தந்திரத்தால் கட்டுண்டு இருவகைப்பற்றையுநீக்கி மனம் அடங்கியொழுகாநிற்கையில் அவர்க்குச்சிரகாலமளவும் புத்திரபாக்கியமில்லாதிருந்து பின்புசார்ங்கவில்லியின் கருணையால் ஒருபரமபாகவதருதித்தனர். அவர் சாந்தரும் தாந்தரும் ஸதாசாரசீலரும் ஸத்வகுணமுள்ளவரும் ஸாதுக்களுடனே பழகுபவரும் டம்பமில்லாதவரும் நிர்மலரும் அகங்காரம் அழுக்காறுஆக்கிரகம்என்பவை அறியாதவரும் கேவலம் விஷ்ணுபக்தருமாய் விளங்கியதைக்கண்டயாவரும் அதிசயித்து அவர்க்கு விஷ்ணுசித்தரென்னும்அழகியதிருநாமமுந்தரித்தனர். அவ்விஷ்ணுசித்தர் பின்புதக்ககாலத்தில் உபநயனம் செய்யப்பெற்றுவேதங்களையோதிவேதாங்கமுணர்ந்துசகலமுந்தெரிந்தசன்மார்க்கதேசிகரென்னும் ஆசார்யரிடத்தில் யோகசாஸ்திரமும் பயின்று அனைத்தையுந்தரும் அஷ்டாக்ஷரவடிவாய்விளங்கும் பெரியதிருமந்திரமும் உபதேசிக்கப்பெற்றுக்குன்றெனத்துலங்கினர். இத்தகையபுதல்வரையிருமுதுகுரவருங்கண்டுகளித்துக்கலியாணஞ்செய்யத்தனிக்கையில், அவர்தாய்தந்தையரைவணங்கியென் அப்பனே! என்தாயே! எனக்குவிவாகம்வேண்டுவதில்லை; யான் ஸ்ரீமந்நாராயணபதாம்புயத்தையிச்சித்தவனேயன்றிப்புத்திரரையுஞ் சுற்றத்தாரையும் விரும்பியவனன்று; எனக்கொருநன்மைபுரியுமெண்ணம் உமக்கிருக்குமாயின் எனதிஷ்டம் இவ்வாறிருப்பதால் ஸம்ஸாரமார்க்கத்திற்செல்லும் அவாவை உண்டுபண்ணவேண்டாமென்றுவிளம்பி அக்கணமே புறப்பட்டு முநிகணங்கள் அடரப்பெற்றுவிசேஷமாய்விளங்கும்நைமிசாரண்ணியமடைந்து அவிடத்திலோராதனத்திலிருந்து பிராணாயாமாதிகளுடன் பகவத்தியான நிஷ்டராய்ப்பக்தியுடன் புண்டரீகாக்ஷனை மனதிடையேநிறுத்திவெகுகாலந் தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

விஷ்ணுசித்தர் விக்கிரமாபரணனை நிக்கிரகித்தல்.

அங்ஙனமிருக்கையில் ஒருதினம் விக்கிரமாபரணனென்னும் வேந்தனொருவன் வேட்டைநிமித்தங்காட்டையடைந்து அவ்விடம் வந்துவிஷ்ணுசித்தரைக்கண்டு யாரிந்த அந்தணச்சிறுவன்? இவன்மௌஞ்சிமான்தோல் முதலானவைதரித்திருப்பதால் பிரும்மசாரியென்றே நினைக்கின்றேன்; கலியாணரூபியாய்விளங்கும் இவனுக்குச்சந்தானவிருத்தியின்பொருட்டுஎனது

சந்தானமஞ்சரியானகன்னிகையைக் கொடுப்பேனென்றுதனக்குள்ளேநினைந்துசந்தோஷத்துடன் விரைவாய் அவரிடம்அணுகிச்சுபவசனங்களாற்சொல்லத்தொடங்கினன். ஓ பிரும்மசாரியே! யான்மனுகுலத்திற் பிறந்த மண்டலத்தைக்காக்கின்றமகிபன்; எனக்குமனதிற்கினிமையாயுள்ளவொருகன்னிகையிருக்கின்றனள்; அவள் முல்லைமுகைபோலும்பல்வரிசையும் வேலினைபோலும்விழிகளும் காரைநிகர்க்குங்கருங்குழலும் குயில்போலினியகுரலும் வில்லைநிகர்க்கும் புருவமும் பவளத்தையொக்கும் அதரமும் பொற்கொம்புபோலுந்தேகமும் நிறைமதிமானும்வதனமும் சங்குபோலுங்கந்தரமும் நீர்ச்சுழிநிகர்க்கு நாபியும் ஆலிலைபோலும்அடிவயிறுமுடையவள். இப்போதுதான் இளங்குரும்பைபோல் இரண்டுகுயங்களும் எழும்புகின்றன. யான் அதிகமாய்ச்சொல்வதிற் பயனென்ன? உனக்கொருபாக்கியமஞ்சரிபோல் ஒளிர்கின்றாள். அவளையுனக்குத்தாரைவார்த்தளித்து எனதரசாட்சியிற்பாதியுந்தருகின்றேன். எனக்குப்புத்திரனும் நீயேயாகையால் பெண்ணையும் மண்ணையும் பெற்றுப் பெருவாழ்வுவாழக்கடவையென்று பேசிய பெருமகன்வார்த்தையைக்கேட்ட பிரும்மசாரி தனக்குள்ளே நகைத்து மன்னனுக்கு மறுமாற்ற முரைக்கலாயினர்.

வாராய் அரசனே! யான் எக்காலும்பரப்பிரும்மத்தியானத்தால்சந்தோஷத்தையடைந்திருக்கும் பிரும்மசாரியாகையால் போர்க்களத்தில்கழுகுகளின்சிறகாகுங்குடையின் கீழ்ப்பகைவரதுபாணத்தாலடிபட்டுப்படுத்துக்கிடக்கின்றக்ஷத்திரியமார்க்கத்தைவிரும்பியவனன்று. ஆதியில்கபிலமுநிவரின் வெகுளியானகாட்டுத்தீயின் சிகையால்தகிக்கப்பட்டுச்சாம்பற்குவியலாய்க்கிடந்தசகரசக்ரவர்த்தியின்புதல்வர்செய்திநீகேட்டிலையோ? சார்வபௌமசிகாமணியானமாந்தாதாமுன்பு லவணாசுரன் சூலத்தின் கூர்மையால் உடலம்பிளப்புண்டதை நீயறிந்திலையோ? காவலனே! அதுபோகட்டும் இதைச்சொல்; தசகண்டனைவென்றும் பின்பு பரசுராமரின்மழுவால்வெட்டுண்டபுயங்களுள்ள கார்த்தவீர்யன் இப்போது எங்கிருக்கின்றனன்? அப்பரசுராமரால் மூவேழ்தலைமுறைவெட்டுண்டமன்னர்செய்திநின்மனதின்கணில்லையோ! விரோசனன் புதல்வனைக் கபடபிரும்மசாரிபாதாளத்தில் அழுத்தியதையேன் மறந்துவிட்டனை? நரபாலரிற் சிறந்தவனாகியநகுஷன் இந்திரபதவியினின்றும் வழுவிமலைப்பாம்பாய் வீழ்ந்தனனென்று பூர்வீகர்புகல்கின்றனராகையால் உனது அரசாட்சியும் கன்னிகையும் யானொருபோதும் விரும்பியிடேன். அவள்எனக்கொருதோல் துருத்திபோல் தோன்றுபவள். நீயாருக்காயினும் அளித்திடு. அன்றியும் அவளதுசுபகரமான சரீரம் கோ

ழை இரத்தம் சீழ் இறைச்சி எலும்பு மேதை முதலியனவற்றால் நிறைந்துள்ளதன்றோ? எனக்கு அவ்விதமான பெண்ணும் வேண்டாம் மண்ணும் வேண்டாம். என்மனம் ஸ்ரீவைகுண்டநாதரது கைங்கரியசாம்ராச்சியத்தையே விரும்பியதென்று விளம்பக்கேட்ட வேந்தன் மனம்வெறுத்துத்தன் சேனையோடு நகரம் போய்ச்சேர்ந்தான்.

இந்திரதிரஸ்காரம்.

விஷ்ணுசித்தர் பின்பு உக்கிரமாய்த்தவம் புரிகையில் புரந்தரன் முதலானதேவர்கள் அவரிடத்தில் சங்கையுறும்போது அத்தேவராஜன் தெய்வப் பெண்கள்அநேகரைஅவர்தவத்தைஅழிக்குமாறு புகன்றனுப்ப,மந்தாரமாலி கை ரம்பை கலியாணகௌமதி வசந்தவல்லரி வீணாவிநோதினி திலோத்தமை ரதிசலாகினிஊர்வசி அம்லானமாலினி மேனகை யென்னும் பதின்மரும் அப்பெண்களுக்கு முன்னாகநடந்தனர். அங்ஙனம் பஞ்சபாணனும் வசந்தனுடன் கைகோத்துக்கொண்டு ரதிதேவியுடன் தேவமகளிராற்சூழப் பெற்றுக்கம்பீரமாய்நடந்தனன். அவ்விதம்செருக்குடன் புறப்பட்ட தேவ சமூகம், ஸத்வசாலிகளுக்குச்சரண்யமாயும்உலகத்திற்கெல்லாம் உயர்ந்ததாயுமுள்ளநைமிசாரண்யத்தைஅடைந்தபின் அமரமாதர் தவசியின் மனத்தை வசப்படுத்துமாறு துணிந்து அவர்க்கெதிராக நர்த்தனஞ்செய்துகாதிற்கினிமையான கானம்புரிந்து வாத்தியங்களை யிசைத்துப்பலவிதசிங்கார சேஷ்டிதங்களைச்செய்கையில், பருவங்களிற்சிறந்தவசந்தமும் அவர்கட்குஉதவிசெய்யஆரம்பிக்க, அங்குள்ளசோலைகள் உதாரமானமலர்கள் விகசித்துமணங்கமழ்ந்துசெந்தளிரீன்று விருக்ஷங்கள்தோறுங்குயில்கள்கூவும் இனியவோசை நிரம்பித்திகழ்ந்தன. அதனிடையில் அனங்கனும் மாகந்தமலராகுஞ்சரத்தைச்சந்தானஞ்செய்யப்பெற்றகருப்புவில்லுடன் அங்குமிங்குமாயுலவினான். அத்தனைக்கும் அத்தபோநிதியின் மனம்கிஞ்சித்துஞ் சலித்திடவில்லை. கேசவனடிகளில் அர்ப்பிதஞ்செய்த மனதுள்ளவரிடத்தில்காமனுடையஜபம்சாயுமோ? அச்சமயத்தில் தம்மைவஞ்சிக்குமாறு பலவிதமுயற்சிசெய்கின்றகாமினிகளை அவர்இனியவசனத்தால் பலவாறுமொழிந்துதடுத்தும் கேளாமல் குரங்குசேஷ்டிதஞ்செய்யயத்தனிக்கையில் கோபங்கொண்டு நீவிரெல்லோருங் குரங்காகக்கடவீரென்று சபிக்க, அக்கணமே மங்கையரனைவரும் வாலுடனும் விகாரவதனத்துடனும் மரக்கிளைகளில் கிலகிலாசப்தம் செய்ய வாரம்பித்தனர். காமரூபதாரிணிகளாகிய நாரிகள் தங்கள் சுயரூபம்மாறிக் கபிரூபமானதைக்கண்ட காமன் நாணத்தால் தலைவணக்கிக்கொண்டு தேவலோகத்தை யடைந்தனன். வானரவுருவானமானினிகளும்வெட்கத்தோடு

விண்ணுலகம்போந்து அமராவதியிலுள்ள நந்தனவனத்தில் வாசஞ்செய்கையில், அங்குச்சென்ற வசந்தனும் தர்மத்திற்கிருப்பிடமான சுதர்மமென்னும் சபையிற்புகுந்து புருகூதனுடன் நடந்தயாவையுஞ் சிறிதும் விடாதுசெப்பினான். அமரர்கள் மத்தியில் அதைக்கேட்டஆகண்டலன் மேல்செய்யத்தக்கதொன்றுந்தோன்றாமல் மதிமயங்கி யொருவண்ணந்தேறிப்பிராம்மணவடிவத்துடன் விண்ணுலகத்திருந்து விஷ்ணுசித்தர் தவமியற்றும் விபினத்திற் சென்று அவர்க்கெதிராகநின்று ஓ பிரும்மசாரியே! உமக்குக்கொடுமையான கோபங்கூடுமோ? தேவமங்கையரைஉருமாறும்படி சபிப்பதேனென்றுசாற்றக்கேட்ட தவசி வாய்திறந்துயானென்செய்வேன்? அவரதுவானர சேஷ்டையைக்கண்டு அவசத்தால் சபித்துவிட்டேன்; கோபாவேசமுள்ளவன்எதைத்தான் செய்யமாட்டானென்று செப்ப, மருத்துவன் மறையவர்வேஷத்தைவிட்டு நிஜரூபத்தோடு தோன்றி வாரீர் தவச்ரேஷ்டரே! தேவரீர் தெய்வமங்கையர் சாபத்தைப்போக்கிப்பழையவடிவம் வரும்படி கிருபை செய்தால் எனக்குரியதில் அர்த்தாசனந்தருகின்றேனென்று விளம்பினான்.

அதைக்கேட்டஅந்தணர், எனக்குச்சுயராஜ்யமானதுதிருவைகுந்தமே. அதைவிடமற்றபதவிகள் யாவும் அநேக அல்லலுடைய நரகமென்றே நினைத்தேனாகையால்உன்அர்த்தராஜ்யம்யான்அடையத்தக்கதன்று. விச்வரூபவதையாலுண்டான பிரும்மகத்திதோஷத்தால் அடைந்தநின்துக்கத்தை அளவிட நின்னாலும்முடியாதுஎன்னாலும்இயலாது. துர்வாசர்தந்த பகவத்பிரசாதத்தை நீ அவமதித்ததால்அவரதுகோபத்தாலுனக்குநேர்ந்தபலதுன்பங்களையும் நீநினைக்க வில்லைபோலும். உலகத்திற்கெல்லாம் வேறொரிந்திரனையாயினும் சிட்டிக்கிறேன்; இந்திரனே யில்லாத விதமாயினும் புரிகிறேனென்றெழுந்த முநிவரை அப்போது கலங்கிய மனதில் இப்போது மறந்தனைபோலும். வாராய்வலாரியே! கௌதமரிஷியின் சாபத்தாலுனக்கு நேர்ந்த வாயினால் வழங்கத்தகாத செய்தியை யென்வாயால் இயம்பவும் வேண்டுமோ? அன்றியும் ஒரு நிசாசரச்சிறுவனால் பலமாகக்கழுத்திற்கட்டுண்டாயென்று பலரும்பகர்கின்றனர். அது மெய்யோபொய்யோயானறியேன். ஆகையின், நரகத்துக்கு நிகரான நின்அர்த்தாசனத்தை யானெவ்விதம் இச்சிப்பேன்? நீ வந்தவழியெந்தவழியோ அந்தவழியே போவென்று புகலக்கேட்ட புரந்தரன் அப்பரிபவத்தை நினைந்து மற்றும் அவ்வுத்தமநோக்கிச்சுவாமி! அரம்பையர்க்குஅச்சாபவிமோசனம்எப்போதோவேன்று வேண்டுகையில், அவர்அவன்இரக்கத்துக்குத்தயைசெய்துஅத்தெய்வப்பெண்கள் என்னைமூன்று நாளளவும் வஞ்சித்தமையின், அவர் மூன்றுவருஷம்

கவிபுருவோடிருந்து பின்பு சுயரூபம்பெறுவாரென்று அனுக்கிரகிக்கக் கேட்டுக்களிப்புடன் விமானத்திலேறி விண்ணுலகமடைந்தனன். கேளீர் முனிவர்காள்! அங்ஙனம் விஷ்ணுஆராதனத்தைவிடாதவிஷ்ணுசித்தர் அலையற்றகடல்போலநிறைவுற்று விளங்குங்கால் நாராயணபக்தரில் முதல்வரானசிவமூர்த்திஅவர்மனதைச்சோதிக்கநினைந்துகண்முகப்பேவந்து நன்மொழிபாராட்டிவாரீர்முனிகுலதிலகரே!உமக்கிஷ்டமானவற்றைஉதவுகின்றேன் வேண்டியவரத்தைவரித்திடும்; இம்மைமறுமைப்பயனாயினும் எனதுஉத்தமபதமாயினும் தருகின்றேனென்று இசைக்கக்கேட்டு யான் இல்வாழ்க்கையையிச்சித்தவனன்று. உமக்கு என்னிடத்தில் அன்புளதேல் அகிலாண்டநாயகனாகிய அனந்தசயனன் பதத்தை அடைந்திடும்உபாயத்தை யுரைத்திடுமென்னக்கேட்ட முக்கண் மூர்த்தி விளம்பலாயினர்.

ஸ்ரீவிஷ்ணுபகவான் சிவபிரானுக்கு நேர்ந்த விருகாசுராவமானத்தைப் போக்கியது.

மோக்ஷம் அருள்பவர் முராரியேயன்றி யானாயினும் நான்முகனாயினும் அதற்குவல்லவராகோம். கமலாசனனாதிஸ்தம்பபரியந்தமான ஜகம்அனைத்தும் யதேச்சையாய் விளையாடுகின்ற அவ்வெம்பெருமானுக்குச்சூத்திரத்தால் ஆட்டப்பட்ட பிரதிமையாகின்றமையின், சகலற்குந் தீவினை அனைத்தும் போக்கிநற்கதியை அளிப்பவர் அவரேயாகின்றனர். அவரேவுகின்றபணியையேயானும் அயனும் ஆற்றுகின்றோம். ஆதியில்எனக்கு நேர்ந்த பிரும்மகத்தி தோஷத்தையும் அந்தப்பகவானே அகற்றியருளினர். அன்றியும் விருகாசுரனாலெனக்குச்சம்பவிப்பதாயிருந்த மரணத்தையும் போக்கிக்காத்தருளினர். அதென்னவெனில் விவரமாய் விளம்புகின்றேன் கேட்டிடுக. முன்பொருகால் விருகாசுரனென்னும் ஒருகொடியன் என்னைக்குறித்துக்கோரமான தவம்புரிய, யான் பிரசன்னமாகி வேண்டியவரத்தைக்கேளென்கையில் தான் யார்தலையில் கைவைப்பினும் அவர்தலை ஆயிரஞ்சகலமாய்வெடிக்கத்தக்க வரத்தைவேண்டினன். அதற்குடம்பட்டுயான்அவ்விதமேதந்தேனென்று மொழிந்ததும் என்சிரத்திலேயே கைவைக்கயத்தனிக்கவே யான் வெருவியோடும்போது விடேனென்று பின்றொடர்ந்து போனபோன விடமெல்லாந்துரத்திக்கொண்டு வருகையில் பக்தவற்சலரும் ஜகந்நாதருமாயொளிரும் பத்மநாபர் நடுவழியில் வந்து தானவனைப்பார்த்து நன்மொழிபகர்ந்து அதிகவீர்யமுள்ள அசுரேந்திரா! நீயேன்வெகுவாய்விரைந்தோடுகின்றனையென்றுகேட்க,அந்த துர்ப்புத்தி நடந்தவிருத்தாந்தத்தை நவி

ன்றனன். அதற்குஅந்தபகவான்கைகொட்டிநகைத்துஅகோ! இப்பிச்சை யெடுப்பவன் பேச்சைநம்பி நீ யென்னமோசம் பொய்விட்டனை; இவனெக்காலும் பொய்யையே புகல்பவன்; நீயதிகமாயோடாதுநின்று உன்னுணைப்படி யான் உண்மையாயுரைப்பதைக்கேள்; என்வார்த்தை நிஜமோ அவன் பேச்சேமெய்யோ உன்தலையில் நீயேகையைவைத்துப்பரிக்ஷித்துப்பார்; நீதவத்தினாற் பரிசுத்தனாயிருப்பதால், வழிநடந்து அசுத்தனாயிருக்குமென் தலையைத்தொடுதல் உசிதமல்லவென்று மயக்கியமாயவனால் மதிமயங்கிய அவுணன் அங்ஙனமே தன் சிரத்திற் கையைவைத்ததும் அது அநேகவிதமாய்ப்பிளந்து சிதறுண்டு மாய்ந்து விட்டனன். ஓ பிரும்மசாரியே! ஜகதீசனாகிய அந்தபகவானுடைய திவ்வியசரித்திரங்கள் இவ்விதம் அநேகம் கேட்கப்படுகின்றன. இங்ஙனம் நீர்வீட்டின்பத்தைவிரும்பியதால் அவரடித்தாமரையையே விடாது பற்றுமென்று பகர்ந்து தமது வாசஸ்தானமான கைலாசத்திற் கெழுந்தனர். பின்பு பிதாமகன் சகலதேவகணங்களோடும்போந்து புராரி புகன்றது போலவே உமக்குவேண்டியதைக் கேளுமென்றுரைக்க, அதற்கும் அவ்வாறே மதுகைடபாரியின் பதத்தைத்தரக்கூடுமேல் தந்திடும்; நும்பதத்தைஅடைபவர்மறுபடியும் பிறப்பவரன்றோ? யானெக்காலும்மீளாக்கதியையேயிச்சித்தவனென்று அறியீரோ வென்று திரஸ்கரிக்கவே அன்னவூர்தியும்தம்முலகம்போய்ப்புக்கனர். அவ்வாறுசகலதேவர்களும் திரஸ்கரிக்கப்பட்டு மீண்டபின்வேறிடத்தில்மனத்தைச்செலுத்தாது நாராயணபரராயுறுகையில், கிருபையொன்றுக்கேவசப்பட்ட கேசவனையடைந்த சன்மார்க்க தேசிகர் தங்கண்முகப்பேவந்துதோன்ற அவரை ஸாஷ்டாங்கமாய் வணங்கும்போது ஆசாரியர் பூரிப்புடன்என்சிஷ்யரத்னமே! எம்பெருமான் திருவடியின்கண் உனக்குள்ளபக்தியாலும் வைராக்கியநிஷ்டையாலும் யான் மிக்க சந்துஷ்டனாகின்றேன்; நாராயணகிரியில் வைகுண்டவர்த்தனமென்று வழங்கலான வொரு திவ்யக்ஷேத்திரமுளது; நீயினிமேல் தாமதியாது அங்குச்சென்று சித்திபெறக்கடவையென்று செப்பியருளி அந்தர்த்தானமாயினர்.

விஷ்ணுசித்தர் பிரஹ்லாதர் இவர்களுக்குப் பகவான்பிரத்தியக்ஷ மாதல்.

அங்ஙனமே விஷ்ணுசித்தர் குருமொழிப்படியேநாராயணாசலத்தில் வைகுண்டவர்த்தனமென்னும் புண்யக்ஷேத்திரத்தின்கணுள்ள நாராயணமடுவின்கரையில் வாசம் புரிகையில், சுவதேத்தீவினில் வசிக்கின்ற முநீச்வ

ரர்கள் ஞானநேத்திரத்தால் விஷ்ணுசித்தர் வைபவங்களை யுணர்ந்து அதை முகுந்தனது சபையில் துதித்திட, அந்தபகவான் திருச்செவி சாத்திக்களிப்புடன் சிரக்கம்பஞ்செய்தருளினர். அப்போது அதைக்கேட்ட பிரஹ்லாதாழ்வான் அவ்வதிசயத்தைக்காணவிரும்பிப்புறப்பட்டுப்போந்து உலகெல்லாம் வணங்கத்தக்க அவ்வுத்தமவரையைச்சேர்ந்து அதன் தாழ்வரையில் தமது ஊனக்கண்ணை நாசியினுனியிலும் ஞானக்கண்ணைத்திருநாராயணர் பாதத்திலும்வைத்துச்சலியாதுதியானிக்கின்ற அப்பரமபாகவதரைக்கண்டு அவர் முகத்திற்கெதிராகநின்றனர். அவ்வாறு நிற்பதை யெம்பெருமான் இணையடித்தாமரையில்இதயத்தையிருத்திய அவர் அறியாமையால் இரண்யன்புதல்வர்அகோ! மஹாமகிமைவாய்ந்தவிஷ்ணுசித்தரே! யான்பிரஹ்லாதன்; பதுநாபரதுபரிக்கிரகத்தால் தேவரீர் எனக்குப்பூஜ்யராகையால் தேவரீரைக்காணும்படியிங்குவந்தேனென்று இயம்பக்கேட்டதும் அவர்திடீரெனவெழுந்து குதூகலத்தோடுஉபசரித்தனர். இன்னணங்கூடியபாகவத சிரோமணிகளிருவரும் ஒருவர்க்கொருவர் சல்லாபஞ்செய்துகொண்டு அவ்வுயர்ந்தக்ஷேத்திரத்தில் சிரகாலவாசஞ்செய்யும்போது பிரஹ்லாதாழ்வான் அங்கு ஆகாயமளவிச்சுபகரமாய்விளங்குங்கிரியைக்கண்டு அதன்கொடிமுடியில் ஆனந்தத்துடன் நரசிங்கவுருவாய் விளங்கும் எம்பெருமானைப்பிரதிஷ்டைசெய்தார். அதனுலன்றோஅதையனைவரும் நரசிங்ககிரியென்றுகவில்கின்றனர். வாரீர் இருடிகளே! அத்தடவரையிலேறிச் சிங்கவுருவாய்த்திகழும் ஸ்ரீமானைப்பூஜிப்பவர்க்கு அவ்வெம்பெருமான் பிரஹ்லாதர்போன்ற புத்திரரையும் இன்னம் இச்சிக்கின்ற எல்லாவற்றையும் ஈந்தருள்கின்றனர். அதன்பின் விஷ்ணுசித்தர் துபக்தியால் ஆனந்தமடைந்தமாதவனுர் அவர்கட்புலனுயெழுந்தருளினர். கீரீடகேயூரமணிந்துதாமரைத்தளம்போன்ற விழிகளும் ஸ்ரீவற்சமென்னும்மறுவார்ந்ததிருமார்பும் பூர்ணசந்திரன்போன்றவதனமும் அம்புயமலரின் அகவிதழ்புரையும் அதரங்களும் தூய்மையான தந்தபந்திகளும் இந்தீவரமலரொக்குஞ்சாமவர்ணமும் திருவரையிலுடுத்த பீதாம்பரமும் இணையடித்தாமரைகளுந்துலங்கத் திருவாழிதிருச்சங்குமுதலிய திவ்வியபடைகளாலும் விஜயீபவ என்று வாழ்த்துகின்றவைனதேயர்முதலியபரிஜனங்களாலும் சூழப்பெற்றுப்பெரியபிராட்டியாரோடுங்கருடாரூடராயெதிராகக்காட்சிதருகின்ற ஸ்ரீமஹாவிஷ்ணுவென்றும் அச்சுதனென்றும் அறையப்பெற்ற பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணரை அப்பரமபாகவதர் தெரிசித்துப் பேரானந்தவெள்ளங்கரைகடந்து பெருகச்சாஷ்டாங்கமாய்ப்படிமிசைவீழ்ந்து வீழ்ந்துபணிந்து நர்த்தனம்புரிந்துதோத்திரஞ்செய்து

திருமந்திரத்தாலெம்பெருமான்திருவடியிற் சரணமடைந்ததக்ஷணத்தில்அவரது சாயுஜ்யபதவி யென்னும் முத்தியைப் பெற்றனர்.

விழைவினைமுழுதும்போக்கி விழுத்தவம் புரிந்தமாணி
தழைவுறுபிரமபோகந்தன்னையுமணுவென்றெண்ணி
மழைதவழெதுசைலத்தின் மாயவன் மலர்த்தாணண்ணி
அழிவிலதிருவைகுந்தமடைந்தனனென்பமாதோ.

(இ-ள்.) ஆசையை முழுதுங்கெடுத்து மேன்மையான தவஞ்செய்த அந்தப்பிரமசாரி, மனமகிழத்தக்க பிரமனது ஆனந்தத்தையும் அசட்டை பண்ணி மேகங்கள் தவழ்கின்ற யதுகிரியில் வீற்றிருக்குந் திருநாராயணர் மலரடியைச்சரணமாயடைந்ததால் அழியாப்பதமாகிய ஸ்ரீவைகுந்தத்தை யடைந்தார்.

கக-வது அத்தியாயம்.

வசிஷ்டபுத்திரர் சாபவிமோசனம்.

அகோ! நாரதபகவானே! இங்ஙனம் தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய விஷ்ணு சித்தரது பெருமையைக் கேட்டயாங்களும் விஷ்ணுசித்தராகவே விளங்கப்பெற்றோம்; பகவத்பக்திக்கேபாத்திரமாயுள்ள தேவரீரது திருமுகமாய்அனைத்தையுங்கேட்டறிந்தோம்; முன்புமுராரி வசிஷ்டதனயர்அவிடத்திற்பரிசுத்தரானதாய் மொழிந்தருளினர்; அன்றியும்பஞ்சபாகவதஸ்தானமென்பதோரிடமிருக்கின்றதாம்; இவற்றையும் இன்னும் ஆங்குள்ள விசேஷங்களையும் இசைத்தருளவேண்டுமென்று வினவிய இருடிகளைநோக்கி இயம்பலாயினர்.முன்பொருகால்விசுவாமித்திரரதுசாபத்தால்வருந்தியவசிஷ்டபுத்திரர்கள் அத்திவ்வியக்ஷேத்திரத்தில் சதுர்வேதிசாபவிமோசனம்பெற்றதைக்கேட்டறிந்து பலாசதீர்த்தத்தின் பாங்கர் பக்தியோடிருந்து மார்க்கத்திற் செல்லும் பாகவதர்களின் ஸ்ரீபாததூள் காற்றினால்கிளம்புகின்ற விடங்கள் தோறுஞ்சென்று அவைகளைச்சிரசாவகித்து நாளடைவில் பெருமாள் திருவடித்துகளால் பரிசுத்தராய் விளங்கும் அப்பாகவதரின் பாததூட்களால் தம்பாவம்யாவுந்தொலைந்துபுண்யதீர்த்தங்களின் ஸ்நானத்திற்கு உரியவராயினர். ஆம்அதுதகுதியே; விஷ்ணுபக்தரின் பாததூளியால் பரமாணுவும் பர்வதமாகின்றது; அவரைஅவமதித்தலால்அசலமும் அணுவாகின்றது. பின்புசிலதினம் பலாசதீர்த்தத்திலாடித்தூயதன்மையராய்த்தோன்றி

மற்றுமுள்ள தீர்த்தங்களிலும் முறைப்படி யெவ்வேழுதினம் மூழ்கித்தந்தீவி னையாவும் சேஷமின்றி யொழித்தபின் கலியாணதோயத்திலுந்தோய்ந்தெழு ந்துஒழுகுகையில், தவத்தாலும்நல்லொழுக்கத்தாலும்கல்வியாலும் விஷ்ணு பக்தியாலும் வயதாலும் விருத்தராய் அங்கெழுந்தவொருவேதியரைக் கண்டு அவர் திருவடிகளில் ஆதரத்தோடு வணங்க, அப்பெரியவர் தம்மை வணங்கியவரை அன்போடுகடாக்ஷித்துநும்விருத்தாந்தம் யாதெனவினவ அவர்கள் தம்வரலாற்றைக்கிஞ்சித்தும் விடாதுவிளம்பக்கேட்டு மற்றும் புக லலாயினர்.

பஞ்சபாகவதக்ஷேத்திரமகிமை.

வாரீர் வசிஷ்டதனயர்காள்! இத்திவ்வியக்ஷேத்திரம் மகத்தானமகிமை பெற்றது. இங்கு முன்பு பஞ்சபாகவதர் வாசம்புரிந்தனர். என்னையெல் லோரும் லோமசமுநியென்று இயம்புகின்றனர். அந்தப்பாகவதர்களின் பிரபாவத்தால் புகழ்பெற்ற இத்தலத்தின்கண் யானும்ஆனந்தமாய்வசிக்கின் றேன். அவர்கள்யாரெனில், அம்பரீஷர் விகுக்ஷி ருக்மாங்கதர் சுகர்புண்ட ரீகர் ஆகிய இவ்வைவருமே. அப்பாகவதசிரோமணிகள் அவரவர்காலங் களில் அஞ்ஞானவாரகமென்னும் இந்த அச்வத்தமரத்தின் தென்புறத்திலி ருந்து வராகரூபியாய் விளங்கும் வைகுண்டநாதரைத்தியானித்தனர். இப் புண்யதீர்த்தத்தின் கீழ்ப்புறத்தில்புருஷோத்தமர்அழகியபூவராகரூபத்துடன் எக்காலும் எழுந்தருளியிருக்கின்றமையின், விஷ்ணுபக்தரநேகர் அந்த எம் பெருமானை யாராதித்து அவரது கருணையால் அஞ்ஞானத்தைவேரோடரி யும் விஞ்ஞானத்தைப்பெறுகின்றனர். இத்தலத்திலேயே யெம்பெருமான் அந்த ரூபத்தோடு பூமிப்பிராட்டிக்குப் புவனத்தின்மங்களகரமாயிரண்டு சு லோகம் பிரசாதித்தருளினர்.

மெஞ்ஞானியர்க்குள் மேலான அம்பரீஷர் எம்பெருமானை அனுஷ்டி க்கையில் இந்திரனைநோக்கி யோவலாரியே! நீ என்மீது வச்சிராயுதத்தை வீசினும் யான் கோவிந்தனை யன்றிவேறொரு தெய்வத்தை ஆராதித்திடே னென்று விளம்பியதாய் இன்னும் பகவத்பரரான பெரியோர்படித்துக் கொண்டிருக்கின்றனர். இங்ஙனம் அம்மகீபதி வராகரூபியான பகவானை வந்தித்துக்கொண்டிருக்கையில், அந்தஸர்வேச்வரர் அனுத்தமமான சகல தர்மங்களையும்சரணாகதிசாஸ்திரத்தையும்அவர்க்குஉரைத்திடத்திருவுளம்பற் றிப்பிரசன்னமாகி அறையத்தொடங்கினர். ஓ மகிமையிற்சிறந்த அம்பரீ ஷனே! வித்தைகளிலெல்லாம்விழுமிது நியாஸவித்தை. அது சரணாகதி

யென்றும் ஸந்நியாஸமென்றும் தியாகமென்றும் பிரபதனமென்றும் வேத வேதாங்கங்களில் விளம்பப்படுகின்றது. புராணங்களிலெங்கும் நியாஸ மென்றே வழங்கப்பெற்று வருகின்றது. யாம் பஞ்சராத்திரமெங்கும்சகல தருமத்திலும்நியாஸமே உத்தமமென்று மொழிந்திருக்கின்றோம். அன்றி யும் சத்தியத்தினுந்தவமும் தவத்தினுந்தமமும் தமத்தினும்சமமும்சமத்தினுந் தானமும் தானத்தினுந் தர்மமும் தருமத்தினும் பிரஜநநமும்பிரஜநநத்தினும் அக்கினிகளும் அவற்றினும் அக்கினிஹோத்திரமும் அதினும் மகமும் மகத் தினும் மானஸமும் மானஸத்தினும் நியாஸமும் முறையே ஒன்றிற்கொ ன்று உயர்ந்தனவென்று விழுமியோர் விளம்புகின்றனர். சகலதேவர்களுக் குள் யாமும் தெரிவைகளில் திருமகளும் சிறந்துள்ளதுபோல் தருமம் அனை த்திற்குமுயர்ந்தது நியாஸமென்று நினைக்கத்தக்கது. கர்மநிஷ்டராயினும் ஞானநிஷ்டராயினும் சரணாகதி நிஷ்டருடைய மகிமையின் கோடியிலொ ருபங்கும்பெற்றிடார். அகப்பற்றைநீக்கி வணக்கத்தோடும் மகத்தானவிசு வாசத்தோடும் செய்கின்ற சரணாகதி நிஷ்டையின்கண்ணே யெமதகம்வர்த் திக்கின்றது. கேளாய் அரசனே! எம்மையே சரணமென்றுயாரடைகின் றனரோ அவரையே சரணமென்று யாமடைந்து எக்காலும் அவர்மனத்தை விட்டகலாது உறைகின்றோம். எம்மிடம்அர்ப்பிதஞ்செய்பவர்பாரமனை த்தையும் இங்கும் அங்கும் யாமே வகிக்கின்றமையின் அவர் எப்போழ்தும் நிர்ப்பரராய் மகிழாநின்றனரென்று திருவாய் மலந்தருளிய பகவத்வாக்கியங் களைக்கேட்டபாகவதசிகாமணி, கிருதார்த்தமானமனதுடையவராய்ச்சரணா கதிமகிமையை ஸர்வகாலமும் அனுசந்தித்துக்கொண்டிருந்தனர். மற்ற நால்வரின் செய்திகள் வெகுவாய்க்கிடக்கின்றமையின் அவற்றை யிங்குப்புக லாதுவிட்டேன். இவ்விடத்தில் ஸம்ஸாரமருகாந்தாரஸந்தாபத்தையொழி க்கும்பொருட்டு வாசம்செய்தவர் இன்னும் அநேகமாயிரவருண்டு. ஆகை யால் நீவிரெல்லோரும் இத்திவ்விய க்ஷேத்திரத்திலுறைந்து பரிசுத்தராய் விளங்குமினென்று பகர்ந்தருளிய லோமசமுநிவர் வாக்கியத்தால் அந்தரிஷி புத்திரரனைவரும் பூரிப்புடன் அத்தலத்தில் வசித்துத்தூய்மையாளராய்முநி ச்ரேஷ்டராய்த்துலங்கி ஸ்ரீஸீதாரண்யத்திலுள்ள துளசீதளங்களைக்கொண்டு ஸ்ரீமந்நாராயணனை யாராதித்து மீளாக்கதியையடைந்து பேரானந்த முற்றனர்.

நாரதபகவான் மேல்வருகின்ற கலிதர்மத்தையுரைத்தது.

ஓ முநிஸத்தமர்களே! இதுகாறும் நடந்தவைகளைமொழிந்தேன்;

இன்னும்நடப்பவைகளில்சிலவற்றைமொழிகின்றேன் கேட்பீராக. இனி வரலாகுங் கலியுகத்தில் கலிபுருஷன் நாளடைவில்செழித்துப்பலமாயுள்ள பாஷண்டவாதங்களால் வேதமார்க்கத்துக்கு விரோதமிழைத்திடுவன். அக் காலத்திற் பாஷண்டிகள் தத்வபாஷண்டிகளும் விருத்தபாஷண்டிகளும் இவரினும் இன்னும் வேறுசிலரும்சேர்ந்து மூவகையாகுவர். அவர் விபரீத கற்பனையால் கர்மப்பிரும்மங்களைக்கழித்து ஞானசூன்னியராய் வைதிகவே ஷத்தோடு அவைதிகர்களாய் ஸாமான்யதெய்வங்களைப்பூஜித்து மாதவனை மறந்திவெர். சிலர் மீமாம்சையில் கபந்தத்தையும் வேறுசிலர்இராகுவைப் போல் சிரத்தையும் கைக்கொள்ளுவர். சிலர் நாமத்தாலேயே தம்மையாக சிலரென்று மொழிந்துகொண்டு டம்பவேஷத்துடன் தண்டகுண்டலங்க ளாலே தமது யோக்கியதையைக்காட்டிமயக்குவர். அனைத்தினு ம்விஷ்ணு பகவான் அந்தர்யாமியாய் ஆராதிக்கப்படுகின்றுரென்று வைதிககர்மங்க ளிலும் இவ்வாக்கியத்தை நிறுத்தியதிகளும் பட்டணமுதலானவிடங்களில் கண்டபடி கள்ளாசாரத்துடன்மிலேச்சராய்த்திரிகுவர். முன்புராமராவண யுத்தத்தில் அக்காகுத்தரேவலால் இளையபெருமாள் செலுத்திய பகழியா லிறந்தமாயாவிமறுபடியும் பிறந்து அக்கலிக்குப் பலத்தையுண்டாக்குவன். பிரும்மசாரிகள் ஸமிதாதானங்களை யொழித்துத்துரங்கப்பிரும்மசரியத் தோடு எவ்விடங்களிலும் சஞ்சரித்திடுவர். அந்தணரும் அரசனுணைக்குட் பட்டு ஆயோதம் முதலான அகிருத்தியங்களைச்செய்துதிரிகுவர். அப்போது பணமே பாவமனைத்திற்குங் காரணமாய்விடும். பூபாலரேசெல்வரது செல்வத்திற்குப்பங்குவினுய்ப்பறித்திடுவர். ஆடவர்களுக்கு அங்கனைமாரி டத்துள்ள அன்பு ஆசிரியரிடத்தும் தந்தைதாயாரிடத்தும் தெய்வத்தின்கண் ணும் அமையாது. பரதாதிசாஸ்திரங்களிலுள்ள வாஞ்சைவேத புராணுதி களிலும் இராது. நவயௌவனத்தாற் கொழுத்த நாரிகள் தங்கள் கிழமாம னுைப்போல் பரிகாசமாய் அடிக்கடி நடித்திடுவர். பார்ப்பாரும்நற்குண நற்செய்கையுள்ள தந்தாரத்தை விட்டுப்பரதாரவாஞ்சையால் பதிதராகுவர். பிரபுக்கள்தனத்தைத்தருமத்தின் பொருட்டுத்தக்கபாத்திரங்களில்உதவாமல் ஆடம்பரத்துடன் கண்டபடிகளைத்தொழிப்பார். அக்கலியுகஜநங்கள் மர ணகாலத்திலும் நரகோத்தாரகனுயுள்ள நாராயணபகவானை நினையாமல் மனம்நைந்துகண்ணீரைப்பெருக்கிக்காதலியைநோக்குவர். தனிகர், தூர த்திலிருந்து பொருளாசையால் வந்தமறைவாணரைத்தமது வாயிற்காப்பா ளராகுஞ்சூத்திரரைக்கொண்டு கைப்பிரம்பால் வெருட்டித்துரத்துவர். வெகுவாய் விளம்புவதிற்பயனென்ன? அரசசேவகத்தால் மதித்த அந்தணு தமர் அரிபக்தராயுள்ளபாகவதரை அவமானம் புரிகுவர். அனைவரும்தேவ தாந்திரசேவிகளாய் ஸ்ரீமந்நாராயணரை வணங்கிடுவர். அகோ! அக்காலக்

கேட்டையென்னென்றியம்புவேன்? வேதியரும்விஷ்ணுபகவானது ஆணையைக்கடந்து ஜீவவதைசெய்து துஷ்டவஸ்துக்களைக்கொண்டு துர்க்காதி தேவதைகளை ஆராதித்திடுவர். அறத்தையும் மறத்தையும் அறிந்தோரும் பெண்டுபிள்ளைகளினிமித்தம் மயானதேவதையையும் அர்ச்சித்திடுவர். அனைவரும் அயலான் பொருளை அபகரிப்பதிலேயே ஆசைவைத்திடுவர். வேந்தர்கள், வருவதையறிந்து வழங்குபவராயும் கண்ணோட்டமுள்ளவராயும் ஆஸ்திகராயும்சேர்க்காமல் துஷ்டவேதியரையேசேர்த்துக்கொள்ளுவர்கள். மானிடர், குருமொழிக்குள்ளாகாமலும் கோவிந்தன்பதத்தைநினையாமலும் இரவும்பகலும் வயிறுவளர்ப்பதேபெரும்பாடாய்அலைந்திடுவர். கவிஞரெல்லோரும் அண்டாண்டங்கட்கும்நாயகராகத்திருநாராயணர் வீற்றிருக்க, அவரைப்பாடாமல் இழிந்தமனிதனைப்புகழ்ந்து பாடித்திரிகுவர். அன்றியும் அக்காலத்தில் அங்கனைமார்க்கு அங்கமெங்கும் ரோமங்கள் அதிகமாய்வளர்ந்திடும். பெண்கள் வறியவனாகியதங்கணவனை விட்டு லீலையில் ஆசை கொண்டுயதேச்சையாய்த்திரிந்திடுவர். மழைகுறைந்து பயிர்கள் செவ்வையாகச்செழிக்காமல் பலனும் அற்பமாய்விடும், ஜனங்கள்அதர்மம்அதிகரிப்பதால் வாணாள் குன்றிவிடுவர்.

இவ்வாறு துவாபரயுகத்தின் கடையில் கலிதர்மம் கண்ணனது லீலையால் காசினியெங்குங்கலக்கையில் அக்கலிபுருஷன் வெகுவிரைவாய் யதுகிரியைக்குறித்துச் செல்லும்போது அங்குள்ள பிரம்புபிடித்தகரங்களையுடைய விஷ்ணுகிங்கரரால் துரத்துண்டு பயந்தோடுவனாகையால், அத்தடங்கிரியில் அங்ஙனம் வர்ணாச்ரமாசாரபரரும் நாராயணபராயணருமாயுள்ள பெரியோர்களேவாசஞ்செய்குவர். ஆதிசேஷனே அம்மலையுருவாயொளிர்கின்றனர். அவர் எம்பெருமானைச்சமயத்திற்கேற்றவுருவத்தோடு சேவிக்கின்றனர். முதலில் அனந்தனாகியும் திரேதாயுகத்தில் இலக்குமணராகியும் துவாபரயுகத்தில் சங்கர்ஷணராகியும் கலியுகத்துமோரவதாரஞ்செய்யப் போகின்றனர். ஓ முநிமணிகாள்! ஆகையின், நீவிரெல்லோரும் அந்தவநாயகத்தெழுந்து திருநாராயணரைத் தெரிசித்துச்சேஷசேஷாசனாதியரின் செல்வத்தைப்பெற்றிடுமென்று செப்பக்கேட்டதபோதனரனைவரும் அளக்கலாகாமகிழ்ச்சியடைந்தனர்.

இவ்விதமுநிப்புதல்வரெந்தையடியார்தம்
செவ்வடிமலர்ப்புழுதிசென்னியுறவெய்திக்
கவ்வைபுரியுங்கொடுவினைத்திரள்கடிந்து
தெய்வமுறுதீர்த்தமுறைதீண்டுதலுமுற்றார். ... ... (௧)

பின்னுமெதுசைலமுறைபீறவுறைந்து
மன்புகழுரோமசன்மனங்கொளநடந்து
மின்னுமெழிலாரணன்மலர்ப்பதமிடைந்து
பன்னரியவெண்ணருபரம்பதமடைந்தார். ... ... (உ)

(இ-ள்.) இந்தப்படி வசிஷ்டமுநிவரின் புதல்வர் எம்பெருமானது தாசர்களின் செம்மையான மலர்போன்ற பாததுளைச்சிரசாவகித்துத்துன்பத்தைச்செய்யுந் தீவினைத்திரளையொழித்துத்தெய்வத்தன்மைபொருந்திய தீர்த்தங்களில் முறையே தீண்டப்பெற்று மூழ்கி,மற்றும் யாதவகிரியில் கிரமப்படி பெருமையோடுவசித்து மிகுந்தபுகழுடையரோமசமுநிவர் மனதின்படி நடந்து விளங்காநின்ற அழகையுடைய திருநாராயணரது தாமரைமலர் போன்ற பாதத்தைச்சரணமாயடைந்து சொல்லுதற்கும் எண்ணுதற்கும் அருமையானபரமபதத்தைச்சேர்ந்தார்கள்.

கஉ-வது அத்தியாயம்.

நாரதாதிமுநிவர்கள் கங்கையைத்தாண்டி நாராயணகிரிக்குப்போதல்.

பின்பு முநிவரெல்லோரும்ஒருமிக்க நாரதபகவானுடன் நாராயணகிரிக்குச்செல்ல யத்தனித்துப்புறப்பட்டுக்குதூகலத்தோடு நடந்து திருவிக்கிரமப்பெருமாளின் பதபங்கயத்தினின்றும் பெருகாநின்ற மதுதாரையும் கரையுடன் மோதுந்திரையுடையதுமாகிய மநோகரமாயுள்ள பாரேதியைக் கண்முகப்பில்கண்டு அதைத்தாண்டுமாறு நாவிகராற்செலுத்தப்பட்ட ஓடத்திலேறி நட்டாற்றிற்போகும்போது திடீரென்றுமேல்காற்றுக்கிளம்பியுரத்து வீசியது. அங்ஙனம் ஓடம் விடுவோர் அதைச்செலுத்த முடியாமல்திகைப்பதைக்கண்ட தவசிகள் சிறிதுகலக்கமுற்று வியாசபகவானைநோக்கியிஃதென்னவிபரீதமுண்டாயது? நாம் நாராயணகிரியையடைந்து நடந்த இளைப்பாறி நாராயணபதாம்புயத்தையும் அடைவோமோவென்று நவின்றனர். எப்போதும் எம்பெருமானது சாந்நித்தியத்தையேயுடைய அப்பராசரபுத்திரர், அவ்விதம் இருடிகள் கலங்கி அறையக்கேட்டுத்தமது ஞானநேத்திரத்தால்இது பகவான் செயலெனத் தெரிந்து நாவிகனைநோக்கித்தோணியைச் சீக்கிரந்தள்ளுந்தள்ளுமென்றுசாற்ற, அவர்கள் எம்மாலாகவில்லையேயென்று

இரக்கமாயிசைக்க, ஆனால் ஓடத்தைச் செலுத்துங் கருவிகளைத்தோயத்தி லெறிந்துவிடுங்களென்று மொழிந்தருளக்கேட்டு அவர்களும் அவ்விதமே வியாசபகவான் திருவாய்மொழியால் சங்கையின்றிச்சாதனங்களையெல்லாம் ஜாங்நவியின் வெள்ளத்திலெறிந்து விட்டனர். அப்போது அம்முநிச்ரேஷ்டர் அம்பியோட்டுபவரை அவ்வாறு மொழிந்து தாம் வணங்கியவரை வாழ்விக்கும் வாசுதேவரைத்தியானித்துக்கொண்டிருக்கையில், அம்பியும் அபாயஞ்சிறிதுமின்றித்தானே அதிவேகமாய் அக்கரையை அடையவே அந்தணரெல்லோரும் அதிசயித்து அகோ! வியாசபகவான் பெருமையை யென்னென்றியம்பலாமென்று பேசிக்கொள்வதைக்கேட்ட அந்தப்பகவானும் வாரீர் முநிபுங்கவரே! இதுநம்மைச்சோதிக்குமாறு புரிந்தகேசவனது சேஷ்டிதம்; அவ்வெம்பெருமான் தம்மையடைந்தவரை ஆதரிப்பதேநித்தியானந்தமாய் நினைத்திருப்பவராகையின் யாராயினும் அகங்காரத்தைவிட்டுத் தம்மைவணங்கும்வணக்கத்தையேபார்த்துக்கொண்டிருக்கின்றனர்; அத்யாத்மசாஸ்திரத்தையுடையவரும் அசேஷகுணசம்பந்நருமாகிய பெரியோர்களின் விசுவாஸமே பெருமாளுடைய கருணைக்குக்காரணமாகின்றது; ஸம்ஸாரமாகும் விஷக்கடலைக்கணப்பொழுதில் கடக்கச்செய்யுங்கமலக்கண்ணனுக்குக்கங்காநதியைக்கடக்கச்செய்வதுங் கடினமோவென்று மொழிந்தருளினர். இருடிகளனைவரும் இவ்வாறு வார்த்தையாடிக்கொண்டு கரைசேர்ந்ததும் தோணியைவிட்டிழிந்து சுரநதியிலாடி வேதவிதிப்படி காலக்கடனைக்கழிக்கத் தொடங்கிச்சகல மந்திரங்களிலுஞ்சுத்தமான மனத்துடன் ஸ்ரீமந்நாராயணரைத்தியானித்துக் கொண்டேஅதைநிறைவேற்றினர்கள். அயலோர், நடத்தத்தக்ககருமங்களை ஒருவிதியென்றே யெண்ணி நடத்தினாலும் விஷ்ணுபக்தர், அவற்றை அவராணை யென்கிறஸங்கற்பத்தோடு நடத்துகின்றனர்.

உஞ்சவிருத்தி அதிதிப்பிரியரின் விருத்தாந்தம்.

அதன்பின் முநிவரெல்லோரும் அங்கிருந்து புறப்பட்டு நளினமுங்குவளையும்நிறைந்தநருமதையைத்தாண்டிக்கோவிந்தனைநினைத்துக்கொண்டே கோதாவரியைக்குறுகினர். அந்நதிக்கரையில் அதிதிப்பிரியனென்னும் அந்தணனொருவனும் உஞ்சவிருத்தி யென்னு மொரு விஷ்ணுபக்தருமுண்டு. அம்முநிவரைக்கண்ட அதிதிப்பிரியன் மகாத்மாக்களானநீவிர் அடியேன் வளவிற்கு எழுந்தருளவேண்டும்; யான் தினந்தோறும் ஆயிரம் வேதியர்க்கு அமுதூட்டுகின்றேன்; தேவரீர்களும் இன்றுஎன் வீட்டிற்புசிக்கவேண்டுமெ,

ன்று வெகுவாய்ப்பிரார்த்திக்கையில், அவர்கள், வேதியனே! நீஅரிபூஜை புரியாதவனாகையால்யாம்உன்னகத்தில் உணவுகொள்ளோம் ; விஷ்ணுவை ப்பூஜிப்பவரும் வைஷ்ணவரிடத்தில் பக்திசெய்பவருமேயெமக்கு உறவினரன்றி அனைத்தையுங் கலந்துகொண்டு திரிபவர் எமக்கு இஷ்டராகார்; கரவீராதிகளையுண்பவர்க்குத்தேகநாசமேநேரிடும்; விஷ்ணுபக்தியில்லாதவர் வீட்டிலுண்பவர்க்கு ஆத்மநாசமாகின்றது ; அவர்வீட்டிலுண்பதினும் தேகத்தை விடுதலும் தீயைப்புசித்தலும் விசேஷமாமென்று புகன்று மகிழ்ச்சியோடுஉஞ்சவிருத்தியென்னும்உத்தமர் அகத்தில்தாமேபுகுந்தனர். அதைக் கண்ட அதிதிப்பிரியன் இவர்கள் தனவானாகும் என் வார்த்தையைக்கேளாமல் வறியவன் வளவிற்போய் என்னபுசிக்கப்போகின்றனர் பார்ப்போமென்று தனக்குள்ளே நகைத்துக்கொண்டிருந்தனன். அங்ஙனமெழுந்தருளியதவசிகளைக்கண்ட உஞ்சவிருத்தி மிகவுங்களிப்படைய, அவர்மனைவியான லப்ததுஷ்டையென்னுங் கற்புக்கரசி வாராதவர் வந்தார்களே! நாம் இவரை உபசரிப்பதற்குப் பொருளில்லையேயென்று சிந்திக்க, நாயகன்வந்தவரைத்தலையால்வணங்கி உபசாரவார்த்தையுடன் சுவாமிகாள்! காய்கனிகந்தமூலமுதலியவை அடியேன் அகத்திலுள்ளமட்டும் பக்தியுடன்சமர்ப்பிக்கிறேன் ;தேவரீர்களையொத்தமஹான்களுக்குஅடைதற்குஅருமையானவையுமுண்டோவென்று மொழிந்து இவர்க்கு நான் இங்ஙனம் ஏதுசெய்வேனென்று தரித்திரத்தால் கலங்கியமனதுடன் வெகுநேரஞ்சிந்தித்துக்கொண்டிருந்தனர். அவ்வாறு சிந்திப்பவரும் தமது பக்தரின் ஆராதனத்தில்மனதுள்ள பக்தருமான உஞ்சவிருத்தியின் சித்தத்தையுணர்ந்தபகவான் முகமலர்ச்சியோடு நகைத்தருளக்கண்ட பெரியபிராட்டியார் தேவரீர் சிரித்ததற்குக்காரணம்யாதென்று வினவ, எம்பெருமான் உண்மையையுரைக்க, அக்கணமே ஜகன்மாதாவான எம்பெருமாட்டி அந்தபாகவதற்கு ஆகண்டலனும் விரும்பத்தக்க ஐச்வரியமுண்டாம்படி கடாக்ஷித்தருளினார். ஆம்அது தகுதியே; விஷ்ணுபக்தர் விருப்பமாக எவ்விடத்திலெழுந்தருளுகின்றனரோ எவ்விடத்திற்புசிக்கின்றனரோ அவ்விடத்திற் சகல சம்பத்துந்தாமேயடைகின்றன. உஞ்சிவிருத்தி அவ்வாறு தானேயடைந்தசெல்வத்தைப்பெற்றுப்பூரிப்போடு முநீச்வரர்களைநன்றாயுபசரிக்க, அவர்களும்அவாவுடன் பூர்த்தியாய்அமுது செய்து ஆதனத்திலிருக்கக்கண்ட அதிதிப்பிரியன் நாணமுற்று இருடிகள் அடியில் வந்து வணங்குகையில், விழுப்பமுள்ள விசுவாமித்திரர் அவனை நோக்கி அறையலாயினர்.

அதிதிப்பிரியனுக்கு விசுவாமித்திரர் பகவத்பக்தர்களின் தர்மத்தையுபதேசித்தல்.

இத்தவசிகள் தனவானை அவமதித்துத்தரித்திரன் வீட்டிற்குச் செல்கின்றனரேயென்று நீ முன்பு செருக்குடன் நினைத்ததையான் அங்ஙனமேயறிந்தேன். நாராயணபராயணருக்குச்செல்வம் பலவழியாலுந்தானேவழிகேட்டுக்கொண்டேவந்தடையும். திருமணாளன்திருவடியை அடையாதவனே வறியவனென்று தெரியவேண்டும். கேசவனைவிட்டு வேறொன்றைப்பரதெய்வமென்று நினைந்தடைபவன் கற்பகத்தைவிட்டு இலவமரத்தையிச்சிப்பவனாகின்றான். நாராயணனைவணாந்து வேறுதெய்வத்தைவணங்குவோன் பாற்கடலைவணாந்து உவர்க்கடலை அடைபவனாகின்றான். மாதவனைமறந்து மற்றொருவனைக் காப்பாகக்கருதுவோன்கங்கைக்கரையி லிருந்துந்தாகந்தணியக்கானலையிச்சிப்பவனாகின்றான். இரக்ஷிப்பதற்குக்கோவிந்தனை நீக்கிவேறொருதெய்வத்தை விரும்புவோன் நதியைக்கடக்க நாவாயைவிட்டு இல்லிக்குடத்தையிச்சிப்பவனாகின்றான். விஷ்ணுவை விட்டுப்பின்னொருதெய்வத்தைப்பேணுபவன் சிந்தாமணியைவிட்டுக்குருவிந்தமணியைக்கொள்பவனாகின்றான். மதுசூதனனையன்றி மற்றொருவனையாசிப்பவன் காளமேகத்தையொழித்துப் பனியையெதிர்நோக்கும்பயிர் செய்பவனாகின்றனன். திருவிக்கிரமனிருக்கத் தேவதாந்தரத்தையடைபவன் பால்கொடுக்கும் பசுவிருக்கப் பன்றியைக்கறப்பவனாகின்றான். வாமனனை வணாந்து வேறொருவனைவிழைபவன் இருளையகற்றச்சுடரையொழித்து மின்மினியின்பின்செல்வபனாகின்றனன். சீதரனைச்சேவியாது மற்றொருதெய்வத்தை நாடுபவன் கன்னற்கட்டியிருக்கக்களர்மண்ணைப் புசிப்பவனாகின்றான். இருஉகேசனிருக்க இதரதேவதையையிச்சிப்பவன் சந்தனநிழலிருக்கச் சதுரக்கள்ளிமரத்தை அடைபவனாகின்றான். பதுநாபனிருக்கப்பரதெய்வத்தைவணங்குவோன் கையிற்கிடைத்தபொருளைவிட்டுக்கஷ்டப்பட்டுச்சேர்ப்பவனாகின்றனன். தாமோதரனைத்தணந்து தானொன்றைத் தேடுபவன் கர்ப்பூரக்குவியலைக்கைவிட்டுலாங்கலீகந்தத்தை அடைபவனாகின்றான். வாசுதேவனைவணாந்து மறுதெய்வத்தைவணங்குவோன்கருப்பங்கழியையைவிட்டு ஆமணக்கந்தண்டைக் கடிப்பவனாகின்றான். ஸங்கர்ஷணனாயிகந்து தாமஸதெய்வத்தைநாடுபவன் நன்மருந்தையகற்றி நஞ்சுண்பவனாகின்றான். பிரத்யும்னனை அவமதித்து ராஜஸதெய்வத்தைச்சேர்பவன் ஏமகூடத்தை விட்டு ஆரகூடத்தில் ஆசைகொள்பவனாகின்றான். அநிருத்தனை அடையாமல்அயலாதாரத்தை ஆசரிப்பதுதாயின்ஸ்தனத்தைவிட்டு

ஆட்டின் கழுத்தின் அதனாஆசரிப்பதுபோலாகின்றது. கேளாய்வேதி யனே! முன்பொருகால் யான் வசிஷ்டமுநிவர் ஆச்ரமத்தருகுசென்றிருக் கையில், அவர் யான் வந்திருப்பதை யறிந்துதந்தேவியான அருந்ததியை அழைத்து விசுவாமித்திரர் நமது சூழலுக்கருகில்வந்து வழிநடந்ததளர்ச்சி யோடிருப்பதால் பாவனமாகிய அடிசிலைக்கொண்டுபோய்ச்சீக்கிரம் படை த்திடென்றுசெப்பக்கேட்ட அவ்வுத்தமியும் அவ்வாறே அன்னத்தையெடுத் துக்கொண்டு விரைவாய் வருகையில், குறுக்கேயோடுகின்ற வொருநதி நிறையவெள்ளம் பெருகுவதைக்கண்டு மறுபடியும் மீண்டுபோய்த்தன்பர்த் தாவுடன் சொல்ல, அதைக்கேட்ட அம்மகாதவசி நீஆற்றருகிற்போய் வசிஷ்டர்நித்திய பிரும்மசாரியென்பது மெய்யானால் எனக்கு நீவழிவிடவே ண்டுமென்று விளம்புவையேல் அத்தரங்கிணிஅய்யமின்றிமார்க்கந்தருமென அவள் அவ்விதமேசென்றுமொழிய, வருபுனல் அக்கணமே தடையின்றிநீ ரொதுங்கிநிற்க, அதைக்கடந்துவந்துபோஜனத்தையெனக்குஅளித்தனள். பகவான் அமுதுசெய்தசேடத்தைத்தூயமனத்துடன் யான் புசித்தபின் அம் மாதரசிதன்னிருப்பிடத்துக்கு மீண்டேகும்போது முன்போலவே அந்நதி பயங்கரமாய் அலைகளைவீசிச்சுழித்துக்கொண்டுகரைகடந்து பெருகுவதைக் கண்டு மீளவும் என்னிடம் வந்துசொல்லவே, விசுவாமித்திரன்நித்தியோப வாசியென்பது நிஜமாயின் வழிவிடவேண்டுமென்று செப்புகவென்ன, அவ் விதமேபோய்ச்சொல்ல முன்போலவேவழிவிடவே ஆற்றைக்கடந்துதன் சாலையையணுகி முநிவனாவணங்கி எனது ஐயனே! என்கணவரானதேவ ரீர் எவ்விதம் நித்திய பிரும்மசாரியாகுவீர்? யான் அளித்த அடிசிலைப்பூர்ண மாயுண்ட அம்முநிவர் எவ்வாறு நித்தியோபவாசியாகுவர்? அந்நதியோஉங்க ளிருவர் வசனத்தாலும் வழிதந்துவிட்டது; இதுவென்ன அதிசயமென்று வினவக்கேட்டமுநிவர், யான் பரதாரத்தை விரும்பாத சுயதாரத்தின்கண் ணே ஆசையுள்ள ஏகபத்தினீவிரதன்; அன்றியும், தக்ககாலங்களிலேயே யுன்னைக்கூடுகின்றேன்; விசுவாமித்திரரும் சாதியிருப்பிடம் முதலியவை களால் வருந்தோஷமற்றதும் தூய்மையுள்ளதுமான பதார்த்தங்களைத்திரும ணர்க்குநிவேதனஞ்செய்துஅதை அகங்காரமின்றித்தக்ககாலங்களில்கோ விந்தநாமோச்சாரணத்தோடு புசிக்கின்றனர்; ஆகையால் யானும் நித்திய பிரும்மசாரியே, அவரும் நித்தியோபவாசியேயென்று விளம்பக்கேட்டு அப் பெண்மணி சந்தேகமொழிந்து சந்தோஷமடைந்தனள். ஆகையால் உன தகத்தில்உண்பதுஉசிதமன்றென்று உஞ்சவிருத்திமனையில்ஸ்ரீமந்நாராயணன் அமுதுசெய்த சேஷத்தை அயின்றேமென்று அறைந்தருளினர். அவ்விதம் அனைத்துமுணர்ந்த கௌசிகர் கழறக்கேட்ட அதிதிப்பிரியன் அங்ஙனமே

அஞ்ஞானமகன்று மெய்ஞ்ஞானம் பிறந்து ஸாத்விகந்தலையெடுத்துஜகதீசனாகும் ஜநார்த்தனன் பாதபங்கயத்தில் பரமபக்தியடைந்து ஓ சுவாமி! முநிவர்க்கெல்லாம் உத்தமோத்தமரே! தேவரீரது திருவாக்கினால் யான் தன்யனாயினேனென்று குதூகலித்தனன். பின்பு அத்தவசிகளனைவரும் கோதாவரிதீர்த்தத்தில் முநிவர்போன்றஹரிணங்களைக்கண்ணுற்றனர். அகோ! அரிணங்களின் பாக்கியமேபாக்கியம்; விஷ்ணுபக்தர்களைத்தெரிசித்ததும் அவற்றின் மனம் அதிகநிர்மலமாயது. வேதவியாசர்முதலானவரும்அவ்வரிணங்களோடு அங்கிருந்து புறப்பட்டுக்கிருஷ்ணாநதியைச்சேர்கையில் அவ்விடத்தில் வீரத்வஜனென்னும் ஒருபாகவதசிகாமணி அவர்களைத்தெரிசித்து உத்தமமான பொருள்களைக்கொண்டு நன்கு உபசரித்துத்திருநாராயணர்க்கு அர்ப்பிதஞ்செய்யப்பொற்படாமும் இரத்தினக்குவியலாதியாய் இன்னும் அநேகபொருள்களுங்கொடுக்க, அவற்றைப்பெற்றுக்கொண்டு போகும் போது காட்டுவழியிற் சிலகள்ளர் முநிவர்களிடத்துள்ள பொருள்களை அபகரிக்கக்கூட்டங்கூடிவருவதையறிந்த கௌசிகர் மந்திரவித்துக்களிற்சிறந்த வராகையால் தமது வலச்கரத்தால் அவர்களைத்தடுத்தனர். அங்ஙனம் ஆயிரக்கணக்காய் வந்த அக்கொடியர் தங்கள் தங்கள் சஸ்திரங்களாலேயே ஒருவர்க்கொருவர் அடித்துக்கொண்டு பூமியில் வீழ்ந்துமடிந்துக்கிடக்கக்கண்ட முநிவரனைவரும் வியந்துகணக்கற்ற மகிமையுள்ளகாதிநந்தனரைக்களித்துக்கொண்டாடினார்கள்.

யதுகிரிநாராயணபுரவர்ணனம்.

அப்புறஞ்சிறிது தூரஞ்சென்றபின்உயர்ந்தகொடிமுடிகள்அடர்ந்ததும் நான்கு பக்கத்திலும் சாரிகைக்குலம் நெருங்கிய மரங்கள் செழித்துள்ளதும் மேலிருந்து வீழ்கையால்மிகவுஒலிக்கின்ற அருவிகளுள்ளதும்யாவர்க்கும் சரண்யரான எம்பெருமானால் அடையப்பட்டதும் புவனபாவனமுமாய்விளங்கும் நாராயணகிரியைத்தூரத்திற்கண்டு அண்டரும் வணங்கத்தக்க அத்தபோதனர்கள் தெண்டன் ஸமர்ப்பித்தனர். எம்பெருமாள்கோயிலெங்கிருந்து காண்கினும் அங்கிருந்தே நமஸ்கரிப்பது பரமதருமமாம். அதன்பின் அவர்கள் ஆனந்தத்தோடு சைலத்தையணுகி அதன்மீதுசகலசம்பத்தும் வாய்ந்துபக்கங்களில்சாலவிருக்ஷங்களின்சாலைகள்அடர்ந்துபுன்னைமரங்கள் வரிசைவரிசையாய்ப்பொலிந்து நித்தியோற்சவம் நடப்பதால் வீதிகள்தோறுந்துவஜங்களோங்கியெக்காலும்இனிமையானகாகளவொலியும் முரசுமுழவுமுதலிய பலவாத்திய வோசையுநிரம்பி விஷ்ணுபக்தர் முகத்திலிருந்தெழு

கின்ற ஜயசப்தமும் வேதகோஷமும் விடாது கேட்கப்பெற்று மேகங்கள் படியும் மாடங்களின்மேல் தீபங்கள் திகழப்பெற்று மணிதோரண முடிகளில் மனோஹரமான மாலைகள் தொங்கவிடப்பட்டுத்தெருக்களெங்குந்திங்கள்போன்ற வெண்குடைகளும் வீசுகின்றவெண்கவரிக்குழாமுந்துலங்குவதால் சுவேதத்தீவென விளங்கித்திவ்வியவாசத்திற்கு முதன்மையாயுள்ள திருநாராயணபுரத்தை அரிதர்சனத்தில் ஆசையாயுள்ள அரிணங்களோடு கண்களால்பருகுவதுபோற்கண்டு களித்தனர்.

ஸ்ரீமந்நாராயண திவ்வியமங்கள விக்கிரகவர்ணனம்.

யாவரும் அவ்விதம் ஆனந்தமுற்றுக்கலியாண தீர்த்தத்திலாடிக்காலைக் கடனைநிறைவேற்றித் திருக்கோயிலுள்புகுந்து பெரியபிராட்டியாரால் வருடப்பெற்றதும் மணிகளிழைத்த நூபுரம் அணியப்பெற்றதுமான பாதாம்புயமும் அழகாயுடுத்த பீதாம்பரமும் கௌசேயமும் திருவயிற்றில் விசித்த பொற்கச்சும் உத்தரீயோபவீதங்களும்ஸ்ரீவற்சமும் வைஜயந்தியும் ஸ்ரீமகாலக்ஷ்மி வீற்றிருக்குந்திருமார்புந்துலங்கச், செம்பொன்னாற்செய்ததோள்வளைமுதலான பூஷணங்களணிந்தபுயங்களுள்ளவராய்க் கரத்தில்தாங்கிய சங்கசக்ரகதாபத்மங்களால் மூவுலகுக்கும் பேரானந்தம் விளைத்துத்தாமரைமலர்போலுந்திருமுகந்திகழத்திருக்கண்மலர்ந்துகண்ணாடிபோலுங்கன்னங்களிலக மாணிக்கமிழைத்த மகரகுண்டலமும் மகுடமும் ஒளிரத்திருவடிதொடங்கித் திருமுடிவரைக்குநிறைந்த சௌந்தர்யவெள்ளத்தைக் கடக்கமாட்டாத நிகமாந்தங்களினேத்திரங்களால் சூழப்பட்டுப்பதுமைக்குப்பரமபாக்கியமாய்ப்பார்ப்பவர் விழிக்குப்பாரணையாய் மறைகளுக்குமான ஸமூர்த்தியாய்ச் சூரிகளுக்குத்தெய்வமாய் மோக்ஷத்தை விரும்புவோர்க்கு முன்னின்றபயனாய் ஸநாதனராய் அநாமயராய் ஆனந்தமயவிமானத்திடையில் வீற்றிருக்கும் ஆதிநாராயணரைக்கண்டு பக்தியோடும் பாதாம்புயங்களில் வீழ்ந்து சாஷ்டாங்கமாய்வணங்கிஆனந்தானுபவஞ்செய்துநர்த்தனம்புரிந்து தங்கல்மஷங்களை யுதறிப்பின்பு வீரத்துவசன் கொடுத்த இரத்னக்குவியல் பொற்குவை வஸ்திரங்கள் அரசர்க்குத்தக்க ஆசனம் சாமரம் சந்தனம் சந்திரனையொத்த சத்திரம் முதலான சகலபொருள்களையும் பெருமாள் திருவடியில் சமர்ப்பித்து விட்டுப்பரமபக்தியோடு கலியாணதீர்த்தக்கரையில் அத்திருநாராயணரை மூன்றுயுகமளவும் தெரிசித்துக்கொண்டிருந்தார்கள்.

பகவான் குசலம் வினவியதும் கலியாணதீர்த்தக் கரையிற் செய்யுந்தானப் பெருமையும்.

அங்ஙனம்வந்து அடியில்வணங்கிய அருந்தவரை அருட்கடலாகும் அச்சுதன் அன்புடன் கடாக்ஷித்து வாரீர்தபோதனர்களே! யாம்உமதுவருகையால் உவப்படைந்தனம். பக்தியில்பரபரப்புள்ள பக்தர்களேயெமக்கு அருமையானதனம். யாம்கிருபைக்கு வசப்பட்டனம். கிருபைபக்தருக்குவசப்பட்டது. பக்தர் பக்திக்குவசப்பட்டவர். அந்தபக்தியும்எமது அனுக்கிரகத்தாலேயேநேரிடும். யாம் பக்தருக்குப்பரவசமாவது எமக்குப்பெருமையேயன்றி வேறொன்றும் அவ்விதம் ஆகுதலின்று. உங்களைவிட்டு வைகுந்தத்தில் வசிப்பதும் எமக்கு விசேஷமன்று. இங்காயினும் அங்காயினும்உங்களோடுஉறைவதே எமக்கிஷ்டமாம். இங்குஎம்மைத்தியானித்துக்கொண்டு வெகுகாலம் வாசம்புரிந்து அதிகாரமுடிவில் வைகுந்தத்திற்கெழுந்து அங்கும் எம்மையடைந்திடும். விந்தியவரையைச்சேர்ந்தமகாரண்ணியத்தில் வசித்த இந்த அரிணங்கள் தூரதேசத்திருந்து வந்தன. இவையும் பரமபதத்தையடையட்டும். இதுவும் உமதுமகிமையே. இப்பசுக்களும் இங்கேயெமக்கெதிரில் புற்களைமேய்ந்து சஞ்சரித்துக்கொண்டு கலியாணதீர்த்தத்தைப்பானம்பண்ணி மறுபடியும் தாய்முலையைப்பருகாமல் உமதுசம்பந்தத்தால் அமரர்க்கும் அரிதானபரமபதத்தைத்தாமேஅடையப் போகின்றன. வைகுண்டவர்த்தனமென்னும் இத்திவ்விய க்ஷேத்திரத்தில் எம்மையடைகின்ற ஞானி அஞ்ஞானிபசுபக்ஷிமுதலானசகலசெந்துக்களாலும்வைகுந்தந்தழைக்கின்றது. இக்கலியாண தீர்த்தக்கரையில் செய்கின்றதானத்திற்கு உடனேஆயிரமடங்குஅதிகமானபலனுண்டாகின்றது. இங்குஒருகோதான்ஞ்செய்பவர்க்குக்கோடி கோதானபலன்வாய்க்கின்றது. இங்கேபூதானம் புரிவோர், அப்பூமியின்மேல் எவ்வளவுபுழுதியிருக்கின்றனவோ அத்தனைவருஷம் சுவர்க்கத்திலிஷ்டமான போகங்களையனுபவித்தாயினும் சார்வபௌமனாகியுலகமுழுதுஞ்செங்கோல்செலுத்தியாயினும்முடிவில் எம்மைச்சேர்கின்றனரேயன்றி அவரையொருபோதும் யாம்ஒழுகவிடோம். இவ்விடத்தில் அந்தணர்க்கு அன்னதானஞ்செய்பவர் நான்குதரம் நான்முகன் பதவியைப்பெறுகின்றனர். இங்குவஸ்திரதானம்பண்ணுவோர்வம்சத்தில் ஏழுவழிமுறைபளவும் உதிப்பவர் தனவான்களாய்ச்செழிக்கின்றனர். இத்தலத்திலொருவனுக்குப்போதுமான தனந்தருபவன்கற்பாந்தரதனேச்வரனாய் வாழ்கின்றனன். இத்தீரத்தில் தேர்யானைகுதிரைகள் தருபவன் இந்தராஜ்யத்தையாண்டு கடைசியில் அந்தராஜ்யத்தையும்அடைகின்றனன்.

தரளம்தருபவன் சுற்றத்தாரோடு துன்பமின்றி வாழ்ந்து தரளமாலைதயங்கும் மார்புடனேதாராமண்டலத்தைஅடைகின்றனன். வெண்கலமாயினும்வெள்ளியாயினுந்தருபவர் சந்திரமண்டலம்போய் சந்திரநக்ஷத்திரங்கள் உள்ளளவும் அங்குவாழ்ந்திருக்கின்றனர். இத்தடாகத்தில்ஒருகுடம்தீர்த்தங்கொண்டுபோய் எவர்க்காயினும்உதவுவோருடையபிதிர்க்கள், மனதில்மிகுதியும் திருப்தியடைகின்றனர். இங்கேசிறுவர்களுக்கு வேதமோதுவிப்போர் வாசாலகரும் புத்திசாலிகளும் புண்ணியசாலிகளுமாயுள்ளவெகுபுத்திரரைப் பெறுகின்றனர். இங்கு திலதானம் புரிவோர் தீவினையாவும் திலந்திலமாய் நசித்துவிடுகின்றன. அத்தியாத்மஞானந்தருகின்ற சாஸ்திரத்தைக்கற்பிப்போர் உபதேசகர்த்தாவாயிருந்து எமது சகாயத்தையடைகின்றனர். இக்குளக்கரையில் கனகாபரணம்முதலியவற்றால்அலங்கரிக்கப்பெற்றகன்னிகாதானம் புரிபவர் தனதானியஸமிர்த்தியுடன் தரணிதலத்தில் ஜீவித்திருந்து முடிவில் ஸ்ரீபூமிநீளையுடன் சேர்ந்து விளங்கும் எமதுபதத்தையடைகின்றனர். ஆகையின், நீவிரெல்லோரும் இத்தலத்தின்கண் எம்மையடைந்திருங்களென்று திருவாய்மலர்ந்தருளி அவ்வானந்தநிலயவிமானத்திடையே அம்புயத்தாளோடு ஆனந்தமுற்றிருந்தார்.

பின்பு நாரதபகவான் முநிவர்களைநோக்கி யாதவசைலத்தில் வீற்றிருக்கும்வர்சதேவனுடைய அற்புதமான சரிதமனைத்துங்கேட்டும் பார்த்துமாயிற்று. இப்புண்யபுராணமான யாதவாசலமாகாத்மியத்தைப்படிப்பவருங் கேட்பவருமேபகவத்பரரென்றுசொல்லப்பெறுவோர். அவரகத்தில்கல்வி செல்வமிரண்டும் வளர்கின்றன. இதைத்தினந்தோறும் பூஜிப்போர்க்கு அனைத்தும் ஸபலமாகின்றன. இதைத்தம்மனையில் வைத்திருப்பவர் ஆயுளும் ஆரோக்கியமும் சகலசம்பத்தும் பெற்று வாழ்வதுமன்றி அவர்க்கு அடிக்கடி புண்யசாலிகளான புத்திரரும் பிறக்கின்றனர். இங்ஙனம் யாவர்க்கும் இஷ்டத்தையருள்பவரும் தேவகுலத்துக்குந்திருமகளுக்கும் நாயகருமான எம்பெருமான் யதுகிரியின் தாழ்வரையில் வேண்டுகின்ற நமக்கு உத்தமபதகமலசேவையாகிற ராஜ்யத்தையாளத்தக்க சாம்ராஜ்யசம்பத்தைத் தருகின்றனர். இம்மலைமிசையெழுந்தருளியிருக்கும் மதுசூதனன்திருவடித்தாமரைகளில் ஒருகாலத்தில் ஒருகிருத்துழாய்த்தளமாயினும் அர்ச்சிப்பவர் முக்திமார்க்கத்திலுள்ள தேவர்கள் பெய்யுந்திசையெங்கும் மணக்கின்றபூமழையைப்பெறுகின்றனர். யதுகிரிமேல் வீற்றிருந்து சராசரமனைத்தையுங்கடாக்ஷித்துப்பரமபதத்திற்சேர்த்து அவைகளாற் பூஜிக்கப்பெற்ற திருவடிகளையுடைய எம்பெருமானது மோக்ஷவிருப்பம் ஹரிணகுலங்களுக்

குண்டானது அவர்க்கு இயற்கையேயாம். இந்த அனந்தசயனனது வேத வாதஞ்செய்கின்றதிருச்சின்னவோசையைச்செவியில் சேர்ப்பவர் பொறிகள டங்கிப்போகும்போது வைகுண்டசேவையிலுண்டாகின்ற ஜயபேரிகையி னோசையைக்கேட்கின்றனர். இத்திருமலையில்எவ்வுலகத்தையுங்காத்தருள்வ தில் ஜாகரூகராயெழுந்தருளியிருக்குந்திருநாராயணரின்திருமுகத்தையொரு கால்தெரிசிப்பவருடைய நல்வரவைத்திசையெங்குந்தெரியும்படி அவ்வெம் பெருமான் திருவைகுந்தத்தில் தமது மணமுள்ள முககமலத்தால்வினவுகின் றனர். ஒருகணப்பொழுதாயினும் இம்மலையில் வசித்தவர்ஆகாயத்தில்தேவ விமானத்திற்சென்று பரமபதமடைந்து பரமபுருஷகோஷ்டியின் பங்தி யின் மத்தியில் எக்காலும் இடையறாதவாசத்தைப்பெறுகின்றனர்.

வீணைமாமுனிவன்சொன்னவிழுமிதாமிதனைக்கேட்டுக்
கோணையாம்புலனைப் போக்கிக்குதலவைகுந்தமென்னும்
ஏணையாரெதுசைலத்திலிருந்தனர்சிலர்கள்மாயோன்
ஆணையாற்கலுழனுதியவருடனங்குமார்ந்தார்.

(இ—ள்.) (அத்தவசிகள்) வீணைவாசிப்பதில் பெருமைவாய்ந்த நாரத பகவான் சொன்ன மேன்மையான இந்த மாகாத்மியத்தைக்கேட்டு மாறுபா டான ஐம்புலவாசையுமொழித்துப்பலர் பூலோகவைகுந்தமென்று வழங்கப் பெற்ற அழியாது விளங்கும் யதுசைலத்தில் வசித்தனர்; சிலர் எம்பெரு மான் திருவருளால் ஸ்ரீவைகுண்டத்திலும் வைனதேயர் முதலானவர்களு டன் கூடினார்கள்.

ஸ்ரீமதேநாராயணாயநமஃ
ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

ஸ்ரீ மத்ஸ்யபுராணத்தில் க்ஷேத்திரகண்டத்திலுள்ள யாதவகிரிமாகாத்மியம்.

கங.-வது அத்தியாயம்.

சௌநகர் யாதவகிரிவைபவம் வினவியது.

சூதபுராணிகர் சௌனகாதிமுநிவர்களை நோக்கிப்புண்யமயமான வனத்தையடைந்தவரும் புண்யசீலரும் மகாமதிகளும் தயாசீலரும் அந்தணருமாகிய உமது ஏவலால் சகல புண்யதீர்த்தங்களின் பெருமையும் புண்ய க்ஷேத்திரமகிமையும் புகன்றேன்; இன்னமுங் கேட்கவேண்டியவற்றை விளம்பலாமென்கையில், சௌனகர், தர்ம்மவிசேஷங்களும் சகல்சாஸ்திரங்களுந்தெரிந்த சூதபுத்திரரே! கங்காதிசர்வதீர்த்தங்களும் க்ஷேத்திரங்களும் புஷ்கரமும் குருக்ஷேத்திரமும் மதுரையும் வாராணசியும் அயோத்தியும் துவாரகையும் வேங்கடாசலமும் யாதவசைலமும் பொதியவரையும் ஸ்ரீமுஷ்ணக்ஷேத்திரமும் ஸ்ரீரங்கம்முதலானமற்றுமுள்ளதீர்த்தக்ஷேத்திரங்களின் பெருமையான நும்வதனத்திலிருந்துபுறப்பட்ட அமுதத்தையாங்கள் அனைவரும் அற்புதமாய்ப்பருகித்திருப்தியடைந்தோம். அவற்றில் யாதவசைலவர்ணனையில் யாங்கள் அதிககுதூகலமுள்ளவராகையால் இன்னமும் அதிலுள்ளசந்தேகத்தை அகற்றிடவேண்டும். சர்வஞானியாயுள்ள தேவரீர் மறைவும்வெளிப்படையுமானயாவுமுணர்ந்தவரன்றோ? முன்புயாதவகிரியின் பெருமையையிசைத்திடுங்கால் மனிதராலும் பிரும்மருத்திரேந்திராதிதேவர்களாலுங்கொணர்தற்கரியதிருப்பாற்கடலில்சயனித்திடும் எம்பெருமானது கிரீடாகமனத்தை இயம்பினீர். துவாரகாநிலயரான கிருஷ்ணபகவான் ஏன் அவதரித்தனர்? அவையும் அவர் அக்கிரீடத்தைத்தரித்துவசித்ததும் பிரஹ்லாதாழ்வானுக்கு வரந்தந்தருளிய நரசிங்கரூபியாகிய அந்தபகவான் துவாரகையைவிட்டு அவ்விடத்திலெழுந்தருளியதும்அவிடத்திலுள்ள தீர்த்தங்களும் ஆலயங்களும் பதரிகாச்சிரமத்திலிருந்து பதரீவிருக்ஷம்அங்கு வந்ததும் பாவனமும் சுபகரமுமான சுவேதமிருத்திகைபோந்ததுமாகியயாவும் மொழிந்தருளவேண்டும். அன்புள்ள சீடனுக்கு ஆசிரியர்மறைபொருளனைத்தையும் ஆதரவாய் அறைகுவரன்றோ? என்று வினவக்கேட்ட சூத

புராணிகர் நீவிர் இங்ஙனம் கேட்டது நன்றுநன்று. மிகுந்தசாரமுள்ளதும் சுபகரமும்பாபங்களைப்பறக்கடிப்பதும்மங்களங்களைமகிழவளிப்பதுமாகிய கதையையேகேட்டீர்கள். முன்புகிருதயுகத்தில் கிருஷ்ணபக்தராய்த்தரும மனைத்துந்தெரிந்தவராய் விரதசீலராய்த்தவத்திற்சிறந்தவராய்ப்புகழ்பெற்ற தீப்திமானென்னுந்திருநாமமுள்ள அந்தணரொருவர் சத்தியலோகத்திற்செ ன்று சனத்குமாரரைநோக்கி யிப்போது நீங்கள் என்னை வினயவற்றையே வினவினர்.

அந்தணனவ்வணம்வினவநான்முகன்
தந்தவப்புதல்வனுந்தரணிதன்னகம்
முந்துறுமெதுகிரிமுடலையாவையும்
சிந்தையினுணர்ந்ததுசெப்பன்மேயினன்.

(இ-ள்.) தீப்திமான் அவ்வாறு கேட்கப்பிரும்மபுத்திரரான சனற்குமா ரர் பூமியில் முதன்மைபெற்றயதுகிரியின் பெருமையெல்லாவற்றையும் நன் றுயுணர்ந்து சொல்லத்தொடங்கினர்.

கச-வது அத்தியாயம்.

ஸ்ரீகிருஷ்ணாவதாரகம்ஸவதம் முதலான கதைகள்.

வாரீர் தீப்திமானென்னும் பிராம்மணச்ரேஷ்டரே! நீர்கேட்டபடியே அதிகஅற்புதமுள்ளதும் மகாபுண்யமயமுமான யாதவசைலவைபவத்தை மொழிகின்றேன்; ஏகமனதாயிருந்துகேட்பீராக. பூமிதேவி, கஞ்சன்முத லிய அசுரரின்பாரத்தால் தபிக்கப்பட்டுக்கோரூபத்துடன் பயந்தோடிப் பிரும்மருத்திரேந்திராதி தேவகணங்களுடன் கூடித்திருப்பாற்கடலின்தீரத் தையடைய, நான்முகக்கடவுள்நாரிபாகருடன்சாமளரும்சாந்தரூபியும்உயர்ந் தவரும் வரந்தருபவரும் அவதாரசீலரும் நன்றாய்த்துதிக்கத்தக்கவருமாகிய நாராயணனைப்பக்தியால் தழதழத்தவாக்கினால் துதிக்கத்தொடங்கினர். நாராயணநமஸ்கரிக்கின்றேன்; விச்வமூர்த்தியே வணங்காநின்றேன்; சாச்வதனே! ஸர்வயோகியே! போகியேவந்தனம்புரிகின்றேன்; சராசர ரூபமாகியசகலலோகமும்தேவரீரே. அவையெல்லாம்தேவரீரிடத்திலேயே வர்த்திக்கின்றனவென்று பெரியோர்வழங்குகின்றனர். காரணகாரணரே நமோஸ்து; கைவல்லியபயன்தருபவரேநமோஸ்து; ஜகன்மயமானவரே!

சரணம்; வேதாந்தவேத்யரேநம:; காரியக்கிரியைகளின்காரணரும் ஒப்பில்லாதவரும் கவியும் புராணபுருஷரும் புண்டரீகாக்ஷரும் குமாரவேத்யரும் கருணாரூபியும் கல்பதருவுமாகிய விஷ்ணுவையான் அடைகின்றேன்; திரிலோகநாதரும் தயாநிதியும் நான்முகனால் அர்ச்சிக்கத்தக்கபாதாம்புயத்தரும் மகாவலத்தரும் வேதநிதியும் சுரேசரும் சநாதனருமாகிய விஷ்ணுவையான் அடைகின்றேனென்று தோத்திரம்புரிகையில் கருணாநிதியாகுங்கமலகண்ணன்காட்சிதந்து சிவனுடன் சேர்ந்தவிதியைநோக்கி அமுதப்பெருக்கெனத்திருவாய்மலர்கின்றனர். உங்கள்உள்ளத்திலுள்ளதை யாம்உணர்ந்தனம், யாம்யதுகுலத்திலுதித்துப் பூபாரத்தைப்போக்குகின்றோம். நீவிர் கஞ்சன் முதலான சுராரிகளால் வரும்பயத்தையினிக்கருதாமற்செல்லுங்களென்று புகன்றருளி அந்தர்த்தானமாயெழுந்தபின் திசைமுகக்கடவுள் அவனிமாதையும் அமரர்களையுந்தேற்றி மேல்நடக்கவேண்டியதையும் விளம்பி அழைத்துக்கொண்டு தம்முலகம் புக்கனர். பின்பு பெருமாள் ஜன்மக்ஷேத்திரத்தை நிச்சயிக்கத்தொடங்கி யதுகுலதிலகராகிய வசுதேவரதுசுபக்ஷேத்திரத்திலேயே அவதரித்துப்பூபாரந்தீர்ப்போமெனத் துணிந்திருந்தனர். அதுநிற்க, வசுதேவர் தேவகிமுதலான பெண்களை விவாகஞ்செய்துகொள்கையில், கஞ்சன் களிப்போடு பெருமைபாராட்டி உடன் பிறந்தாளைப்பலவித தூரியம்முழங்கவீதியில்கோலமாகநடத்துங்கால், அம்பரத்தில் அசரீரி வாக்கு மேகம்போலதிர அடமூடா! நீ யிங்ஙனம்அன்புபாராட்டுகின்ற இவள்வயிற்றிலுதிக்கும் எட்டாவது புதல்வனேயுன்னைவதைத்திடுவான்; அதற்குத்தப்பிப்பிழைக்கும் வழியைச்சீக்கிரந்தேடிக்கொள்ளென்றுபுகலக்கேட்ட அம்மதிகெட்டமன்னன் தன்னிமித்தம் அவளிடத்துள்ள அன்பைவேரோடுகளைந்து அப்போதே அவளைக்கொலைபுரியயத்தனிக்க, வசுதேவர் குறுக்கேவீழ்ந்து தடுத்து அடபாவீ! நீயிம்மங்களகரமாயுள்ள மாதரசை மடிக்கவேண்டாம்; அவளிடத்தில் பிறக்கும் பிரஜைகளைத் தருகின்றேனென்று தாழ்மையா யுரைக்கவே அவன் சந்துஷ்டனாய்த் தம்பதிகளையனுப்பிவிட்டனன்.

பின்புகாலம் வாய்க்கையில் தேவகிபெற்றசிசுக்களையெல்லாம் அக்கொடியனாகிய கஞ்சன் அஞ்ஞானத்தாலும் நாரதருபதேசத்தாலும்நாசஞ்செய்து தங்கைவசுதேவரிருவரையும் காலில்தளைபூட்டிக்காராகிருகத்திலுமடைத்து எக்காலும் விஷ்ணுபகவானையே சிந்தித்துக்கொண்டுதுர்மதிகளான துஷ்டமந்திரிகளாற் சூழப்பட்டிருந்தனன். அப்புறந்தேவகிதேவி திருவுதரத்தில் ஏழுசிசுக்கள்பிறந்து கஞ்சனாலிறந்தபின் எவ்வுலகுங்காக்கும் எம்பெருமானாகிய மதுசூதனன் அவதரித்துமாதாபிதாக்களால் துதிக்கப்பெற்றுப்புத்திர

த்தன்மையால் நந்தகோபரைச்சந்தோஷப்படுத்தக்கோக்களால் அலங்கரிக்கப்பெற்ற கோகுலத்திற்கெழுந்தருளியபின், கண்கெட்டகஞ்சன் சண்டிகையின் மொழியால் அதிசயமுற்றுக் கண்ணபிரானைக்குறித்துப்பூதனைபகாசுரன் முதலிய துஷ்டர்களையேவினான். அவ்வெம்பெருமான் தன்னைக்கெடுக்கவந்தவரை நமனுக்கு விருந்தாக்கி யிடைச்சேரியில்பலவிந்தைகளைச் செய்துவிளையாடிப்பின்பு கஞ்சனது ஏவலால் வில்விழவைக்காணஅழைத்த அக்குரூரரோடு பலராமருந்தாமுமாய்த்தம் இஷ்டசெனத்திற்கும்பெற்றவருக்கும் சுகம் விளைக்கக்கருதி அணியணியாய் மாடமாளிகை அடர்ந்தமதுராபுரியிற் பிரவேசித்துத் தோழர்கள் புடைசூழ வீதிகளில் உலாவி நகரசம்பத்தைக்கடாக்ஷித்து அதிசயமும் ஆனந்தமுமுடையவராய்ப்போர்விளையாட்டில்விருப்பமுள்ளவராய்அரசவீதியிலெதிர்ந்த தூர்த்தனும்வலியவனுமானவண்ணான்தலையைக்கிள்ளியெறிந்து அவன் கொண்டுவந்த மன்னற்குரிய வேஷ்டிகளை நட்பாளருந்தாமுமாயுடுத்துக்காமவேட்கையுற்ற சைரந்திரியாகிய பணிப்பெண்ணுக்கு அற்புதமாகிய அன்பு புரிந்து அவள்கொணர்ந்தசந்தனக்குழம்பைச்சரீரமெங்குந்திமிர்ந்து தநுர்ப்பங்கஞ்செய்து அங்குள்ளாரை அந்தகனுலகஞ்சேர்த்துக்குவலயாபீடமென்னுங்குன்றுபோன்றகுஞ்சரத்தைக்கொன்று அரங்கத்துள்பிரவேசித்துச்சாணூரன் முட்டிகன் அரிஷ்டன் கௌசலன் ஆதியானமகாபலிஷ்டரையும்அவராசிரியரையும் மடித்துக் களிப்புடனே மிக்கவுயர்ந்த மஞ்சத்திலேறி அங்குவீற்றிருந்த பகைவனாகிய கஞ்சனென்னுங்களிற்றரசைக்கரங்களால் மோதியடித்து மடித்துக்கீழே தள்ளி இதுநல்லகாரியம் நல்லகாரியமென்று எல்லோரும் இரைந்திடக்களமெங்கும் அச்சவத்தையிழுத்திழுத்தெறிந்துவிட்டுப் பின்தாய்தந்தையரை அணுகி அவர்காலிற்பூட்டியவிலங்கை வெட்டிவிடுவித்துமோககரமான நல்வார்த்தைகளால் அவரைத்தேற்றி யாற்றித் தமயனுந்தாமுமாய்க் காயத்திரிவிரதமிருந்துசாந்தீபனரென்னும் அந்தணச்ரேஷ்டரிடத்தில் அறுபத்துநான்கு கலைகளையும் அதிவிரைவில் அப்பியாசித்து அவர்க்குக்குருதக்ஷிணையாக வெகுகாலத்துக்குமுன் இறந்தபுத்திரனை மீட்டுங்கொண்டுவந்துகொடுத்தருளினர்,

வாரீர் பிராம்மணோத்தமரே! அங்ஙனம் கண்ணபிரான் தன்மருமகனாகிய கஞ்சனைக்கொன்றசெய்தியைக்காதிற்கேட்டதும்பெரும்பெலமுள்ள ஜராசந்தன் மனங்கொதித்து இருப்பத்துமூன்று அக்குரோணிசேனையோடு புறப்பட்டுப்போய் மதுராபுரியைச்சூழ்ந்து பெருமாளுடன்பேரமர்புரிந்துங் கடைசியில் அவ்வெம்பெருமானால் அடியுண்டு தோல்வியடைந்து நாணத்

தால் தலைவணங்கி அவனைஅதிபலசாலியென்று மதித்துச்சிந்தையோடு திரும்பிப்போய்த்தன்பட்டணத்தையடைந்தும் அத்தோல்வியோடிராமல் பின்னையும் பதினாறுதரம் படையெடுத்துப்போய் அவராலபஜெயப்பட்டனன். அதன்மேல் பதனெட்டாந்தரமுஞ்சென்று பலமான போர்புரிகையில் யாவர்க்கும் இளைக்காதஅச்சுதன் அண்ணனுந்தாமுமாய் அவனுடன் அளவிடற்கரிய அமர்செய்து உலகத்தில்சித்திரகதியையும் சித்திரகதையையும் விளைக்கவும் செயாபசெயம் ஒருவர்பங்கல்லவென்னும்உணர்ச்சியெல்லார்க்குமுண்டாகவுந்திருவுள்ளத்திற்கருதிவெறுமனேதோற்றவர் போல்பின்னிட்டோடினார். அவ்வண்ணம்ஓடியமைவண்ணத் தண்ணல் தமையனுடன் தென்முகமாய் விரைந்துசெல்லுகையில் மகததேசாதிபன் மனக்கொதிப்புற்றுச்சேனைகளோடு யானையைக்குறித்தோடும்சிங்கத்தைச் சிறுநரி தொடர்ந்தோடுவதுபோல் துரத்திக்கொண்டுபோக, அவர் ஆகாயம் அளாவியமலைமீதேறிக்கொள்ள, அந்தத்துர்மதி அவரைக்காணமாட்டாமல் அம்மலையைச்சுற்றுந் தீயிட்டெரிக்க, அவர் அண்ணனுடன் அங்கிருந்து கிளம்பி அதிசீக்கிரமாய்த் துவாரகையை யடைந்தருளினார். அம்மூடசிகாமணி வசுதேவசுதர்இருவரும் இறந்தாரென்றுநினைத்துநகரஞ்சேர்ந்துதன்பகைவரொழிந்தனரேயென்று மகிழ்ந்திருந்தான். உலகப்படைப்புமுதலான திருவிளையாட்டுடையவராய்ப்பூசுரரைக்காப்பதின்கண்பூரிப்புள்ளவராய்மானிடவேடத்தால் நடிப்பவராயும் விளங்கும் அந்தஜகதீச்வரர் பின்பு சபையை அடைந்துமூத்தவரோடுசிங்காதனத்தில் வீற்றிருந்து அமைச்சர் அனைவரையும் வரவழைத்துச்சாத்தகி உத்தவர் அக்குரூரர் உக்கிரசேனர்முதலான புத்திமான்களான யதுசேகரரைநோக்கி நீவிர் எனக்கிஷ்டமாயும் சுபகரமாயுமுள்ளவார்த்தையைக்கேட்டிடுங்கள். புண்ணியமானசெடிகொடிகளுள்ளதும் புண்ணியதீர்த்தமுள்ளதும் புண்ணியத்விஜகணங்களுள்ளதும் நிர்மலமான நீர்நிலைகளுள்ளதும் மற்றும்பல சிறப்புவாய்ந்ததுமாய் விளங்கும் ஓரிடத்தில் யான் வசிக்கநினைத்தேனாகையால்அத்தகைய ஸ்தலத்தைத்தேடுதற்கு யான்பலராமருடன் போகின்றேன். நீவிர் பட்டணத்தைப்பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளுங்களென்று பகர்ந்து காலையிலெழுந்து அண்ணனுடன் புரத்தைவிட்டுப்புறப்பட்டுத்தென்முகமாய்ச்சென்று வெகுதேசங்களையுங்கானாறுகுன்றுகளையுங்கடந்து துங்கமாய் வளருந்துருமங்களுங்கொடிகளும் அடர்ந்த உன்னதமானகோமந்த பர்வதத்தையும் அதனடியிலுள்ள வெகுதூர்க்கங்களுடைய வாசுதேவனால் ரக்ஷிக்கப்பட்ட கரவீரபுரத்தையும்ஸ்ருகாலனையுங்கண்டு வியப்படைந்து கோட்டைவாசலிற்சென்று சங்கத்தைத்திருவதரத்தில்வைத்துப்பம்பம்மென்று முழக்கினார்.

அத்தொனியிற்சென்றெதிர்ந்தவற்புதமாமாபரணவேடத்தோடும்
சித்தமதிற்செருக்குடையசிருகாலன்றனைவதைத்துச்சினவுநாஞ்சில்
அத்தனுடனடுக்கடுக்காயலங்குமணிமனைநகரமதனுட்புக்கு
மத்தமதவாரணம்போற்கண்டெங்கும்மலைக்குவட்டினிவர்ந்தான்மன்னோ.

(இ-ள்.) கண்ணபிரான் அந்தச்சங்கத்தொனியாலே அற்புதமான ஆபரணவேஷங்களுடன் வந்தெதிர்த்தமனதில் கர்வத்தையுடைய ஸ்ருகாலனை வதைத்துப்பகைவனைக்கோபிக்கின்ற கலப்பையைக்கையிலேந்திய பலராமருடன் அடுக்கடுக்காய்விளங்காநின்ற மணிமாடங்களையுடையநகரத்துட் பிரவேசித்து மதயானைபோல் எல்லாவிடங்களையும்பார்த்துப்பின் மலையின் மேலேறினர்.

கரு-வது அத்தியாயம்.

ஸ்ரீகிருஷ்ணபகவானும் பலராமரும் கோமந்தபர்வதத்திலேறுதல்.

கேளும் மறையவரே! அற்புதபராக்கிரமமுள்ள அண்ணனுந்தாமுமாய் ஸ்ருகாலனைமடித்தபின் வரைமிசையேறிப்பாரிஜாதம் மந்தாரம் செண்பகம் பாடலம் பிரியாளம் சூதம் சாலம் பனை மதுகம் தமாலம் அர்ச்சுனம் வகுளம் இறலி ஆல் சிம்சுபம் அரிஷ்டம் அத்தி சந்தனம் பிசுமந்தம் சரளம் கோவிதாரம் திராக்ஷை கரும்பு நாவல் வாழைதேவதாரு கபித்தம் பில்வம் பதரி பிலக்ஷம் நெல்லி எலுமிச்சைதெங்கு கடம்பு அசோகு வஞ்சுளம் நளம் வேதசம் குந்தம் காட்டுவாகை குப்ஜம் சுவர்ணயூதி குடஜம் இங்குதம் நாகம் புந்நாகம் மல்லிகை சதபத்திரமாதியான ஆறுபருவங்களிலும்புட்பிக்கத்தக்க பூவரும்புகள்மலிந்த மரஞ்செடிகொடிகள் ஆங்காங்கு அடர்ந்துவிளங்கா நின்றனவும் பொற்றாமரைகல்லாரங்குமுதம் உற்பலம்முதலிய நீர்ப்பூவிலும் கரைகளிலுள்ள கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூவிலும் அன்னம்காரண்டம் சக்கரவாகம் நீர்க்கோழிசாரசம் முதலான மதித்தபக்ஷிகளின் மங்களகரமான இனியவோசையும் வண்டுகளின் ரீங்காரவொலியும் முறையே நிறையப்பெற்றனவும் மதுரமும்நிர்மலமுமான நீர் வாயால் வழியப்பெற்றனவும் எக்காலமும் பிரும்மவித்துக்கள் சேர்ந்துள்ளனவும் மகாபாபகங்களையெல்லாம் போக்குவனவுமாகிய தடாகங்களும் தரங்கிணிகளும் அதிகமாயுள்ளனவுமாகிய அம்மலைப்பிரதேசமெங்குங்கண்டுகளித்துஅதனுச்சியிலுள்ளபிரவர்

ஷணமென்னும் உயர்ந்தசிகரத்திலேறித்திசைகளெங்குமுள்ள அதிசயத்தை யெல்லாங்கடாக்ஷித்துக்கொண்டு ஆனந்தமாய் அவ்விடத்திலேயே வாசம் புரிந்தனர்.

திருப்பாற்கடற் பெருமாள் கிரீடாகமனம்.

ஓ தீப்திமானே! கிரீடாகமனத்தைவிளம்புகின்றேன்கேட்டிடும். மகா தவசியும்மேதாவியும் வெகுபுத்திரருடையவருமானகாச்யபமுநிவர்க்குள்ள பலமனையாட்டிகளில்பர்த்தாவின்பணிவிடையில் பரிவுள்ளதிதியென்பவளு க்குப்பலபராக்கிரமசாலிகளானபலபுதல்வருண்டு. அவர்கள் சக்களத்திமக் களால் சமர்க்களத்தில் அடிப்பட்டு அபஜயத்தோடு முதுகுகாட்டியோடக் கண்ட மாதாவானதிதி, இந்திரனைவெல்லத்தக்க வொருபுத்திரன்வேண்டு மென்று அந்திவேளையில்காமத்தால்மோகித்துக்கணவராகிய காச்யபரைப்பி ரார்த்திக்க, அவர் அதிசயமுற்று வாராய்தர்மசாரிணீ! இதுஓமகாலமாகை யால் சற்றேபொறு; ஒருமுகூர்த்தங்கழித்து நின்னிஷ்டப்படி செய்கிறே னென்று சமாதானஞ்சொல்லியுங்கேளாமல் இங்ஙனமேயெனது எண்ணத் தைப்பூர்த்தி செய்யவேண்டுமென்று முநிவரைப்பலவந்தமாயிழுத்துக்கொ ண்டுபள்ளியறையிற்புகுந்தாள். பின்புகாச்யபர்நீராடிப்பரிசுத்தராய்ப்பத்தி னியைப்பார்த்துக்கோபத்தோடு வரான்னையே! நீஅசுரவேளையில் என்னி டம் வந்ததால் உனக்குலோககண்டகரும்பயங்கரருமான இரண்டு அசுரர் பிறந்திடுவாரென, அவள்அதற்குமனம்நடுங்கிநாயகரைவணங்கிஅடியேனுக் குச்சற்புத்திரனேயுதிக்கும்படி அனுக்கிரகஞ்செய்யவேண்டுமெனப்பிரார்த் திக்க, அவர்திருவுள்ளமுவந்து வழங்கலாயினர். வாராய்பெண்மணியே! நினக்குப்பிரஹ்லாதனென்னும் பெயருள்ளபௌத்திரனொருவன்பிறந்துசா துக்களுக்குச்சம்மதனும் நன்மனத்தனும் பரமபாகவதனும் புண்யசாலியும் புகழ்பெற்றவனுமாய்விளங்கிப்பிரார்த்திக்கத்தக்க நற்குணங்களால் உலகத் தாரை உவக்கச்செய்திடுவன். அவன்பிதா அவனைவிரோதித்துநரசிங்கப் பெருமாளால் நாசமடைகுவன். அப்பிரஹ்லாதனுக்கு அதிமேதாவியாய் விரோசனனென்னுமொருவன் தோன்றித்தர்மாத்மாவும் பசுக்களையும் பார்ப் பாலாயும் பூஜிப்பவனுமாய் விளங்கி மூவுலகச்செல்வத்தையும் அனுபவித் துப்பெருவள்ளலென்று பேரெடுத்துவாழ்கையில், மருத்துவன் பிராம்மண வேஷத்தோடுபகலில் அவனருகில்வந்து மகாப்பிரபுவே எனக்கொருவரந் தரவேண்டுமென்றுயாசிக்க, அவன் அவ்விதமே கொடுக்கின்றேன்கேளென் றுரைக்க, நின்தலையைத்தரவேண்டுமென்றுகேட்கையில், அவன் அதற்குப் பின்னிடாமல் அவ்வண்ணமேதந்து அயனுலகம்புகுவன்.

கேளாய்சோபனையே! அவனுக்குமகாபலியென்னு மொருவனுதித்து மகாமகிமையுள்ளவனாய் மகாபாகவதனாய்ப் பிரசித்திபெற்றிருப்பனென்று வழங்கிஅம்மட்டில் வாயைமூடிக்கொண்டு வேறேகிரககிருத்தியத்திற் பிரவேசித்தபின் அவளுங்கணவன் மொழியைக்கேட்டுக் களிப்புற்றிருந்தாள். அதன்பின் அவள்சிலபகல்கழிந்து முநிவர்மொழிப்படிமகாபயங்கரனுகிய இரண்யாக்ஷனையும்கோரதர்சனனுகியஇரண்யகசிபுவையும்பெற,அவ்விரணியன் பிரஹ்லாதாழ்வானைப்பெற்றுக்கொள்ள, அவ்வுத்தமர்வயிற்றில் விரோசனனுதிக்க, அவனிடத்து மகாபலிபிறந்து மகாபலிஷ்டனும்மகாதேஜோவானும் மகாபாகவதோத்தமனுமாய் விளங்கித்தன்ஆசார்யசேவையால் திருலோகநாதனாய்த் திகழ்ந்தனனென்றுசொல்லக்கேட்ட தீப்திமான் ஆனந்தவாரியில் ஆழ்ந்து மறுபடியும் அப்பலியின் சரித்திரத்தையேநன்றாய்விளம்பவேண்டுமென்றுபிரார்த்திக்கச்சனத்குமாரர்சாற்றுகின்றனர். ஓ விப்பிரசிகாமணியே! சாரவித்துக்களிலுயர்ந்தநீர், சாரமும் மனிதர் மிகவியக்கத்தக்கதுமான மகாபலிகதையை நன்றாய் விரும்பினீர். மகிமைவாய்ந்ததும் மகாவிஷ்ணுலீலையோடு கூடியதும் சகல பயன் தருவதுமான அந்தபக்தனது அற்புதசரிதையை மனத்தை அயலிடத்தில் செலுத்தாமல் ஆதரவாய்க் கேட்டிடும்.

வாமனாவதாரகதை.

அதிமேதாவியானஅவ்விரோசனசுதன்அசுரகுருவை ஆராதித்துமூவுலகாட்சியைப்பெற்றுப்பாகசசானன்முதலானதேவரைவென்றுபறக்கடிக்கையில்அழகியநிதம்பமுள்ள அதிதி பர்த்தாவான காச்யபராநன்குஆராதித்துத் தன் புத்திரக்ஷேமத்தையாசிக்க அவர் துன்பமுற்றுவருந்துகின்றகற்புக்கரசியானதம் மனைவியைநோக்கி நீயிஷ்டமானவையெல்லாந் தரத்தக்கதும்முநிவர்களுக்கெல்லாம் முக்கியமானதும் ஸ்ரீகமலாநாதரது அனுக்கிரகத்தைப் பெறத்தக்கதுமானபயோவிரதத்தை அனுஷ்டித்துநின்இச்சைப்படிஅனைத்தையும் அடையக்கடவையென்று மொழிந்துவிதிப்படிஅதையுபதேசித்துத் தாமும் அவளுடன் கூடியிருந்து அவ்விரதத்தைஆசரிக்கையில்,விரதசீலரும் நிர்மலருமான முநிவர்களால் சூழப்பட்டுப்பிரும்மகோஷம் நிறைந்துள்ள அவ்விரதசாலையின்கண் தயாநேத்திரரும் தயாமூர்த்தியும் சர்வசாக்ஷியும் விபுவுமாய் விளங்கும் விஷ்ணுபகவான் ஆவிர்ப்பவித்தார்.

அவ்வாறு அவதரித்தபகவான் கார்காலமோம்போல் காந்தி வீசுந்திருமேனியுடையவராய்ப்பீதாம்பரமும் வெண்பட்டுந்தரித்தவராய் சதுர்ப்புயராய் விசாலாக்ஷராய்ப்பஞ்சாயுதராய் ஸ்ரீவற்சஆரசேயூரநூபுராதிபூஷணல

ங்கிருதராய்விளங்கக்கண்டகாச்யபர் வியப்படைந்து முநிவர்களோடு தண்டம் போல்தரையில் வீழ்ந்து பணிந்தெழுந்து பேரானந்தத்துடன் கைகுவித்து ஸாரமும் மேன்மையும் மநோகரமும் புண்ணியமும் காதிற்கினிமையுமான வாக்கியங்களால் துதித்து ஜயஜயஜகந்நாதரேநமஃ; கல்பவிருக்ஷம் போன்றதேவரீர்அடியேனுக்கும்ஜயந்தந்தருள்க; எக்காலும்இன்பமாய்த்திருமார்பில் வீற்றிருக்கும் திருமணாளர்திருவடிகளே சரணமென்று பிரார்த்திக்கையில் மற்ற இருடிகளுங்கூடித் தேவதேவ ஜகந்நாதா ஜகதீசா ஜகன்மயர் அடியேங்களைத்தாபத்ரயமாகியநெருப்பினின்றுந்தாங்கியருள்க. ஸ்ரீகிருஷ்ணா ஸ்ரீகரா ஸ்ரீராமா ஸ்ரீநிதி ஸ்ரீஹரி ஸ்ரீநாதா ஸ்ரீமகாவிஷ்ணுவே ஸ்ரீநரசிங்கா தயாநிதே! கர்ப்பஜன்மஜராவியாதிசகிதமான கோரஸம்ஸாரஸாகரத்தினின்றும் அடியோம்கரையேறக்கடாக்ஷித்தருளுமென்று பிரார்த்தித்தனர். பின்பு அதிதி, அவ்வெம்பெருமான்அடிகளில் வணங்கி யக்யேசா யக்யபுருஷா தீர்த்தபாதா காதுக்குக்கேட்கத்தக்க மங்களநாமதேயா தீனநாதா! இங்ஙனம் எமக்குச்சுகம் விளைத்தருள்க. ஆபன்னஜனங்களின்தீவினைகளை அகற்றியருள்க. எங்கும்நிறைந்து எல்லாப்புவனங்களையும் படைத்துஅளித்து அழித்தருளும் ஆண்டவரே! யதேச்சையாய்க்கிரகிக்கத்தக்க மிகுந்த சக்திகுணங்களுள்ளவரே! இஷ்டப்படியிருப்பவரே! அடிக்கடிவிருத்தியடைகின்றபூர்ணபோதத்தால் தமஸ் அழியப்பெற்றவரே! நமோநமஃ. சாதுக்களெல்லோருந் தேவரீரை அடைந்து மிருத்யுபயத்தையொழிப்பரென்றால், திரணம்போன்றசக்களத்தியின் பிள்ளைகளால் வரும்பயம் எவ்வளவென்று பலவிதமாய்ப்பரவுகையில் பகவான் திருவுள்ளமுவந்து தேவமாதாவே! உனதுவிரதத்தால் யாம் மிகமகிழ்ந்தோம்; கல்யாணீ! சுபாநநையே! தினமானம் உன்மக்களைக்காத்திடுகின்றோம்; எமது அம்சத்தாலுனக்குப்புத்திரனாய்ப்பிறந்து சத்தியமாய்ச்சத்துருக்களைவென்று நின்புதல்வரைக்காக்கின்றோமென்று திருவாய்மலர்ந்து அந்தர்த்தானமாயெழுந்து உடனே அதிதிவயிற்றில் வாமனனாயுதித்து மாமுநிவர்களால் விதிப்படி உபநயனஞ்செய்யப்பெற்று விண்ணவராலும் முநிகணங்களாலும் பூஜிக்கப்பட்டு விளங்காநிற்கையில், மகாகீர்த்திமானாமகாபலிநூறு அச்வமேதயாகஞ்செய்யநினைந்து சுக்கிராசாரியர்முதலானவரை வணங்கி யாகதீக்ஷைவகித்துக்கொண்டான்.

அன்னகாலயின்னந்தவாமனன்னசுரநாயகன்னதிக்வள்ளியோ
னென்னவேயுணர்ந்திருடி சஞ்சயம்விலகியேகனயிலகுசோதியாய்
மின்னுநூலுரந்தன்னொடுங்குடைத்தண்டுதாங்குறும்மென்கரத்தொடும்
மன்னுமாமறைத்துழனியார்ந்திடும்மன்னவன்மகச்சாலைநண்ணினான்.

(இ-ள்.) அச்சமயத்தில் வாமனரூபியாகியஅந்தப்பகவான் அசுரச்ரேஷ்டனானமகாபலி அதிக தாதாவென்றுகேட்டு இருடிகளை நீங்கித்தனிமையாய் த்தேஜோமயமாய்முப்புரிநூல் விளங்குந் திருமார்போடு கரத்தில் தடியுங் குடையுந்தரித்து நிலைபெற்ற வேதகோஷம் நிறைந்த அம்மன்னவன் யாகசாலையை அடைந்தருளினர்.

கசு-வது அத்தியாயம்.

ஸ்ரீவாமனருக்கு மகாபலிபூதானம் புரிந்தது.

சதுமுகன்பெற்ற சனற்குமாரரே! வாமனரூபியான விஷ்ணுபகவான் பக்திமானான பலியின்யாகசாலையிற் பிரவேசித்துப்பின்பு என்ன அற்புதம் புரிந்தார்? ஆசாரியரிடத்து அன்புள்ளவனும் தேவரீரிடத்திலுந் திருமணாளரிடத்தும் பக்தியுள்ளவனும் சாந்தமுள்ளவனுமாகிய சிஷ்யனுக்குவாமனன் சரிதத்தைவழங்கியருளுமெனக்கேட்ட தீப்திமானைநோக்கி அவரும்அவ்விதமே சொல்லத்தொடங்கினர். அவ்வாமனரூபியாகிய மாமலராள் கணவன் யாகசாலையில் புகுந்ததும் பிரும்மவாதிகளும் அக்கினியோடுகூடியவரும் பிருகுவம்சஸ்தருமான விப்பிரர்களும்யஜமானனும் ருத்விக்களும் முநிவர்களும் ஆதியாய் அனைவரும் பிராணனைக்கண்ட பிராணன் போல் பொருக்கென வெழுந்திருக்க, எஜமானன் பெருமகிழ்ச்சியோடுகிருதார்த்தனானேனென்று தன்னையும் மறந்து கூத்தாடிப்பின் மனந்தெளிந்து கரத்தினால் கண்களைத் துடைத்துக்கொண்டு மனதாரமதுரவசனங்களால் வடுரூபியே! யான் தன்யனுங்கிருதகிருத்தியனும்புண்யசாலியுமாயினேன். இன்றுதான்என்ஜன்மம் ஸபலமாயிற்று. ஆத்மாவும்சுத்திபெற்றது. ஞானமும்ஸபலமாயிற்று. யாகமும் பலித்தது. தேவரீரது தெரிசனத்தால் என் பிதிர்தேவாதிகள் என்பொருட்டால் இணையற்ற பிரீதியுள்ளவராயினரென்றுமொழிந்து வடுரூபியானவாமனரைப்பொற்பீடத்திலிருத்தி விதிப்படி பாதபூசைபுரிந்து பிரும்மருத்திராதிதேவர்களும் தவத்திற்சிறந்த இருடிகளும் பரிசமாத்திரத்தால் சகலபந்தங்களினின்று நீங்கிய அந்த ஸ்ரீபாததீர்த்தத்தைச்சிரத்தில் தெளித்துக்கொண்டு ஓ பிராம்மணச்ரேஷ்டரே! தேவரீரேதோவொன்றை இச்சித்துவந்தவராக எண்ணுகின்றேன். விரும்பியதை யுண்மையாயுதவச்சித்தமாயிருக்கிறேனாகையால்அதைஇசைத்தருளுமென்று பிரார்த்தித்தான். அங்ஙனம் பிரார்த்திக்கக்கேட்டஅரவிந்தலோசனன், வாராய் வள்ளலே! எனக்கு ஏதாவது தருவதற்கு இஷ்டமுண்டானால் எனது அடியால் மூன்றடி

மண் ஈந்திடுவையாயின் அதுவே யெனக்குத்தவம்புரிய அமையுமென்றுகே ட்கையில் அவ்விதமே அசுரேந்திரன் தாரைவார்த்தளிக்கயத்தனிக்க, எம் பெருமான் அதைப்பெற்றுக்கொள்ளச்சிறிது சங்கையோடு தேவகுருவை நோக்கிக்கண்சாடைகாட்டினர். அதைக்கண்ட அசுரகுரு சிஷ்யனாகியமா வலியைப்பார்த்து அடமூடா! இவ்வாமனரூபியாய் வந்தவர்சநாதனராகும் ஸ்ரீமந்நாராயணபகவானே; என்பேச்சைமீறிஅவர்க்கு அவ்வாறுதருகுவை யேல் ஓரடியால் பூவுலகையும் மற்றோரடியால் மேலுலகையும் அளந்துவிடு வர்; இதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை; இவர் விச்வகாயரும் ஒருவரா லும் அடையத்தகாதவருமாகையால் அவ்வண்ணம் அளந்துவிடின் மூன்ரு வது அடிக்குயாது செய்யத்தக்கது? ஆகையால் நீ யிவ்விதந்தரத்தகாது; மறுத்துவிட்டால் இவ்விஷயத்தில் தோஷமில்லையென்று புகலக்கேட்ட அசுரேசன் சுவாமீ! என் ஆசாரியரே! இவர் விஷ்ணுவானல் புண்யசாலி யாகின்றேன்; பிராம்மணரானலும் அவ்விதமே; யான்மொழிந்ததையினி மறுத்திடேன்; அனுக்கிரகஞ்செய்து பொறுத்தருளவேண்டுமென, மற்றும் சுக்கிராசாரியர் சினந்து அடா துர்புத்தியே! செல்வச்செருக்காலும் ஆசிரி யனை அவமதித்தலாலும்என்வாக்கியத்தாலும்இப்போதேசெல்வமிழக்கக்கட வையென்று வழங்கிச்சும்மாவிருந்தார்.

அதன்பின் மாவலி வாமனன்கையில் பூமியைத்தந்தேனென்று தாரை வார்க்க, எம்பெருமான் திருக்கரத்தில் தாரைவார்த்தநீர் வீழ்ந்ததும்வாமன பகவான் அவாமனனாகி ஆகாயமட்டும் வளர்ந்து ஓரடியால் பூவுலகையும் மற்றோரடியால் மேலுலகையும் அளந்து மறுபடியும் வாமனனாகி மூன்ரு வ தற்கு வழியென்ன வென்று கேட்க, அடியேன்தலைமிசையே வைத்தருள வேண்டுமென்கையில் ஆழிப்பிரானும் அவ்வாறே அவன் சிரத்தில் அடித் தாமரையைவைத்தருளித்தங்காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு மன்னனை நோக்கி மதுரமாய் வழங்கலாயினர். வாராய் விரோசனன் புதல்வனே! நீ யெமது பக்தரில் முதன்மைபெற்றவனாகிரூய்; இனிப்பிரஹ்லாதனுடன் சுதலம்சென்று அவ்வுலகத்தில் எம்மைத்தெரிசித்துக்கொண்டிரு; யாம் எக் காலுங்கதாபாணியாய் நின்தெரிசனார்த்தம் அங்கேயிருந்து நின்னகரத்தைக் காத்திருகின்ரேமென்று ஆஞ்ஞாபித்து இமையவரும் இருடிகளும்தம்மைச் சூழச்சென்று பரமபாவன புண்யதீர்த்தமான நர்மதா நதியில் அவபிருதமாடி ப்பிரஹ்லாதாழ்வான் மாவலி அசுரராகிய அனைவரோடுங்கூடிச்சுவர்க்கவா சிகளும் பிரார்த்திக்கத்தக்க சுதலத்திற்கெழுந்தருளி யெக்காலுங்கதாபாணி யாய் வீற்றிருக்க, அவனும் ஆனந்தமாய் அவரை ஆராதித்துக்கொண்டிருக் கின்றனன்.

ஒருகரிபுரந்துமொருகரியதனைவதைசெய்துமொருவனுடையுலகாட்சியைத்
தெரிவரியவஞ்சனையினபகரித்தொருவனுழைதிண்மையொடுதந்தாளுமென்
அரிசரிதைதனையதிகவதிசயக்கிடமானவயனருங்குமரனுடி
யிருமுநிவர்குழுவினிடையிதயமிகமகிழ்வாகியின்னுமுரைசெய்வானரோ.

(இ-ள்.) (முதலையால் பிடிக்கப்பட்ட) ஒருயானையைக்காத்தும் (குவலயா பீடமென்னு) மொருயானையைக்கொன்றும் மாவலியின் அரசாட்சியை ஒருவரும் உணர்தற்கருமையான வஞ்சனையால் அபகரித்து இந்திரனுக்குத்தந்தும் சாதுக்களைக்காக்கின்ற அதிக அதிசயத்திற்கு இடமான என் அரியினது கதையைப்பிரும்ம புத்திரராகும் சனற்குமாரர் நன்றாய் ஆராய்ந்து பெருமைவாய்ந்த முநிவர் கூட்டத்திடையில் அகம்மகிழ்ந்து மற்றும் உரைக்கத்தொடங்கினார்.

கஎ-வது அத்தியாயம்.

நாரதபகவான் கோமந்தபர்வதத்தைக் குறித்துச் செல்லுதல்.

கேளும் அந்தணச்ரேஷ்டரே! புண்ணியதீர்த்தமுள்ளதும் புண்ணியமான மரங் கொடிகள் அடர்ந்ததும் புண்ணியசீலரானமுநிவர்குழாம்நெருங்கியதும் புண்ணியசீலமான பறவைவிலங்குகள் சூழ்ந்ததுமான கோமந்தபர்வதத்தில் கிருஷ்ணபகவான் ஆங்காங்கு மனதிற்கினிமையாயுள்ளஉபவனங்களில் வலதேவருடன் சேர்ந்து விளையாடிப்பரமானந்தமுள்ளுத்தருமசீலரான அந்தணரும் அருந்தவரும் நந்தனரோடு கூடிய பிரும்மாதி தேவர்களும் எம்மைப்பூஜிக்க இத்தலத்திலேயே வசித்திடுவோமென்று நிச்சயித்து ஸ்ரீவைகுண்டம் துவாரகை சூர்யமண்டலம் விஷ்ணுபதம் கலசாம்போதி முதலான சகலபுண்யக்ஷேத்திரங்களையும் புண்யதீர்த்தங்களையும் மறந்து அத்தலத்திலேயே தங்கியருளினர். அச்சமயத்தில் மகாமகிமையுள்ளவராய் உலகதத்வங்களையுணர்வதில் உயர்ந்தவராய் விளங்கும்நாரதமுநிவர்நாராயணபகவானைத்தெரிசிக்க வைகுந்தஞ்சென்று காண்கையில் அங்கில்லாமையால் அங்கிருந்து புறப்பட்டு விஷ்ணுபதம்புக்கு நோக்கி அவ்விடத்து மில்லாமல் சூரியமண்டலமடைந்து அங்கேயுங்காணாமல் மற்றுஞ்சுவேதத்தீவிற் சென்று திருப்பாற்கடலை நோக்கி அதனிடத்தும் அகப்படாமல் துன்பமுற்றுத்திகைக்கையில், கேசவன் கோமந்தமலையில் களிப்போடு வீற்றிருக்கின்ற

மையின் அங்குச்சென்று அய்யமின்றித்தெரிசிக்கலாமென்று ஆகாயத்தில் அசரீரிமேகத்தொனிபோல் அறையக்கேட்டு அம்முநிபுங்கவர் ஆனந்தபரவசராய் அக்கணமேபுறப்பட்டு விரைவுடன்போய்க்கிரிகளிலுயர்ந்த கோமந்தகிரியை அடைந்துயாதவச்ரேஷ்டரானகண்ணபிரானைக்கண்டுவணங்கி மதுசூதனா தேவாதிதேவா ஜகதீசா ஜகன்மயா அற்புதரூபா அடைந்தவர் துன்பத்தை அரித்திடும்அரும்பொருளே! நமோநமஃ; சரணம் சரணமென்றுதுதித்து ஆச்சரியமுற்றுநின்றனர்.

அப்போது கண்ணபிரான்மனமகிழ்ந்துவாரீர் முநிபுங்கவரே! இம்மலையின் மிசையேயாம் வசிக்க விரும்பாநின்றோம்; இங்குநீர்வரவேண்டுமென்றேவைகுந்தம் முதலான ஸ்தலங்களில்உமக்குயாம்தரிசனம்தரவில்லை; சுவேதத்தீவும் மணிகளிழைத்த மகுடமும் பாற்கடலும் புண்ணியவனமும் இங்குவரத்தக்கவுபாயத்தைத் தேடுமென்று திருவாய்மலரக்கேட்ட முநிபுங்கவர் அவ்வாறேநடத்துகின்றேனென்று பிரதக்ஷிண நமஸ்காரம்செய்து விடைபெற்று மீண்டுசுதலத்திற் பிரவேசித்து அங்குமாவலியும் பிரஹ்லாதாழ்வானும் தம்மைப்பூஜித்தபின் பௌத்திரனோடுகூடிய பாகவதசிரோமணியான அந்தபக்தசிகாமணியைநோக்கி யெம்பெருமான் கதாபாணியாய் இங்குநும் பட்டணத்தைப் பரிபாலிக்கின்றமையின், இவ்வுலகில் நீரே பௌத்திரனோடு தன்னியராய் விளங்குகின்றீரென்கையில், மாவலமுள்ள மாவலியும் மனமகிழ்ந்து உரைக்கின்றனன். தேவரிஷயானதேவரீரதுதெரிசனத்தால்கிருதகிருத்தியனுந்தன்னியனுமாகினேன்; எவ்வுலகத்திருந்து எக்காரணத்தால் இங்கேயெழுந்தருளினீர்; உமக்கு வந்தனம்புரிகின்றேன்; உலகவிருத்தாந்தங்களை யுரைத்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்கையில், அவர் யான் விஷ்ணுசேவைக்கு வெகுவுலகங்களில் சென்று கடைசியாய்க் கலசாம்புதியை அடைந்து அதனிடையேநூபுரகடகங்களும் கடிசூத்திரமும் கணையாழியும் அருமணியிழைத்த அங்கதமும் பெருவிலைபெற்ற பீதாம்பரமும் தண்டரளத்தாழ்வடமும் மண்டியமணிமாலையும் வின்மணிபதித்தமகாகுண்டலமும் பொன்மலைக்குவடெனும் புயதண்டங்களும் வெண்ணிலாவீசும் புன்னகையொளியும் உன்னதமான மூக்கினழகும் மணிமயமானமகுடமுந்துலங்க வீற்றிருக்கும் விஷ்ணுபகவானுடைய அற்புதாகிருதியைத்தெரிசித்துப்பேரானந்தமுற்று அத்தன்மையாகிய அச்சுதன்திருமூர்த்தியை அடிக்கடிநினைத்து நினைத்து அவரது கிரீடத்தையும் அவ்வாறு சிந்தித்து மனம் தன்மயமாயது. அக்கிரீடத்தின்மாட்சிமையையான்என்னென்றியம்புவேன்? யான் அங்கையேவாசம் புரியச்செல்கின்றேனென்று வழங்கிஅப்பொழுதே புறப்பட்டுப்போயினர்.

பகவான்கிரீடத்தைக்கொண்டுவர மகாபலி பாற் கடலுக்குச் செல்லுதல்.

அதன்பின் மகா பாகவதனாகிய மகாபலி நாரதர் வசனத்தைக்கேட்டு நாராயணர் கிரீடத்தைத்தாராளமாய்க்கவரநினைந்து பிரஹ்லாதர் முதலான நட்பாளரோடு யோசித்துக்கீழுலகத்திருந்துகிளம்பி ஆழிப்பிரான் கண்வளரும் திருப்பாற்கடலை விருப்புடன் அணுகி அவிடத்தில் வீணையில்வல்லநாரதர் சொன்னநற்குணங்களோடு விளங்கும் தேவதேவரும் விருஷாகபியும் அநாமயருமானஅனந்தசயனனைக்கண்டு அகங்குளிர்ந்துதேவதேவேசா யோகேசா புண்யச்ரவணகீர்த்தனபக்தர்களின்இச்சைக்கனுகுணமானதிருவுருவமெடுக்கவல்லதேப்பெருமாளே! தேவரீர்க்கு வந்தனம்; பராவரகதியுணர்ந்த காலரூபியே தேவரீர்க்கு வந்தனம்; இருபத்துநான்கு குணஞ்ஞனும் இருபத்தைந்தாத்மாவுமான எம்பெருமானே நமஸ்கரிக்கின்றேன்; காரணரூபியே பரமானந்தமூர்த்தியே! வந்தனம்; அன்பனாகிய அடியேன்மீ துதயாநிதியாகிய தேவரீர்தயைபுரியவேண்டுமென்று துதிக்கையில் பக்தவற்சலரான பகவான் புன்னகையோடு நன்னயமாய்ப்புகல்கின்றனர். வாராய்பாகவதோத்தமனே! உனது தோத்திரத்தாலும் பக்தியாலும் மனமகிழ்ந்தோம்; உனக்குவேண்டியதை உதவுகின்றோம் கேட்கக்கடவையென்ன, அவன் லோகநாதசிகாமணியே! நவமணியிழைத்ததேவரீரதுகிரீடத்தைச்சுதலத்தில் எழுந்தருளியிருக்குங் கதாபாணியான எம்பெருமானுக்குத்தந்தருளும்படி பிரார்த்திக்கின்றேனென்ன, அடியவர்க்குஅதீனனாகும்அவ்வெம்பெருமான் அக்கிரீடத்தை யெடுத்து அவன் கையிற்கொடுத்து ஆதரத்தோ போய்வா வென்றனுப்பிவிட்டனர்.

கருடபகவான் கோமந்தபர்வதத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்குக் கிரீடம் ஸமர்ப்பித்தல்.

அவ்வசுரேசன் கிரீடத்தைப் பெற்றுக்கொண்டு அதிவேகமாய்ச்செல்லுகையில்வைனதேயர்வாசுதேவன்அருகிற்போய்த்தெரிசிக்கும்போது கிரீடம் மாத்திரமின்றிஸர்வாபரணபூஷிதராயெம்பெருமான் சேவைதரக்கண்டு வியப்படைந்து சினந்து பக்ஷத்தைப்படபடவென்றுஉதறிக்கொண்டுஎன்னவிது என்னவிது? யார் கிரீடத்தைக்கைக்கொண்டுபோனவர்? சொல்லும் சொல்லுமென்று உயரக்கிளம்பி நான்குபுறத்திலும் சுற்றிப்பார்த்துத்தென்திசையில் அற்புதமாய் விளங்குமோர்திவ்வியவிமானஞ்செல்லக்கண்டு மநோ

வேகமாய்ப்பறந்துபோய் மகாபலியை அணுகி அவனைக்கண்டவர் மயிர் புளகிக்கத்தக்கமகாயுத்தம்புரிந்து யாவராலும் வெல்லவொண்ணாத அவனை அதிகபிரயாசத்தால் வென்று கதிரவன் போல்விளங்கும் கனமணியிழைத்த கதிர்முடியைக்கவர்ந்துகொண்டு திரும்பிப்போகையில் கோமந்தவனாயின் கொடிமுடியில் முநிவரோடு வசிக்கின்ற தேவகேநந்தனரைக்கண்டு பாற்கடலிடையில்பாம்பணைமீதுபள்ளிகொள்ளும்பரந்தாமரென்றேநினைந்துஇந்திரநீலமோராயிரம் இழைத்ததும் கோமேதகமோர்சதம் அழுத்தியதும் பதுமராக மகாநீலமுத்துக்கள் பலபதித்ததும் புஷ்பராகமும் பவளமும் பூரணமாய் நிரைத்ததும் கதிர் இமைக்குங்காஞ்சனத்தால் செய்ததுமான அம்மகுடத்தை அக்கண்ணபிரான் திருமுடியிற் சூட்டி அவர்திருவடித்தாமரையை வணங்கித்தோத்திரம் புரிந்தார். அப்போது அயனும் விஷ்ணுபார்ஷதரும் தேவேந்திரன் முதலான தேவகந்தர்வரும் மகாரிஷிகளும் ஆனகசங்கத்தொனியோடு தோத்திரஞ்செய்து மகிழ்ச்சியோடு மலர்மழை தூவினார்கள்.

உலகபூஷணனுமுறுதயாபரனுமும்பர்கட்கிறைவனொருவனும்
இலகுமாமணியிழைத்தபொன்முடியையேன்றவீமனுமுடிக்கவே
அலகிலாமகிமைகொண்டுநிற்பவனுமாகுமாமுகிலினழகனை
மலர்தலத்துறையுமாமறைக்கிழவனுதியோர்பரவுபோழ்தினில். (க)

மற்றுமாமுநிவர் வித்தியாதரருமாகமீதுலவுசித்தரும்
கற்றைவெண்கவரிபத்தர்வீசவிருபாலுமேயிலகுகண்ணனை
மற்றடங்கிரியினைப்புயத்துமதுசூதனுவெனமகிழ்ந்துளம்
பற்றுமன்பினொடுவேறுவேறுதுதிபண்ணினார்பரிசையெண்ணினார். ()

(இ-ள்.) லோகங்களுக்கு ஆபரணமாயுள்ளவரும் மிகுந்ததயையுள்ளவரும் தேவாதிதேவரும் ஒப்பற்றவரும் பிரகாசிக்கின்றபெரியஇரத்தினங்களிழைத்த பொற்கிரீடத்தைப்பக்ஷிராஜனாகிய கெருடபகவான் முடிக்கப்பெற்று அளவற்றமகிமையோடு நிற்பவரும் பெருமைவாய்ந்த மேகம்போல்அழகாய்விளங்குபவரும் திரளான வெண்சாமரையையிருபக்கத்திலும்பக்தர்கள் வீசவிளங்குபவருமான கண்ணபிரானை மற்போர்செய்யவல்லபெரியமலைபோன்ற இரண்டுபுயங்களுடைய மதுசூதனுவென்று மனமகிழ்ந்து தாமரைப்பூவில் வாசஞ்செய்யும் பிரும்மா முதலானவர் துதிசெய்யும்போழ்தில், மற்றுமுள்ள அவ்வெம்பெருமான் கலியாணகுணங்களையுணர்ந்தவரான முநிவர் வித்தியாதரர் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற சித்தர் முதலான சகலரும் உறுதியான பக்தியுடன் அவரவர் வெவ்வேறாகத்துதித்தார்கள்.

கஅ-வது அத்தியாயம்.

பிரும்மா பெருமானைத் துதித்தல்.

வாரீர்பிராம்மணோத்தமரே! அந்தப்பகவானை அன்னவாகனன்பரவத் தொடங்கி ஸ்ரீமந்நாராயணபகவானே அபிராமா சத்யானந்த ஞானாத்மாவே தேவாதிதேவா பஞ்சாசத்வர்ணரூபியே சாந்தா தாந்தா ருத்ரப்பிரியா வித்தைக்கு நாயகனான ஹயக்ரீவா தேவாதிராஜா ஒளியுள்ளபொருட்கெல்லாம் உயர்வுள்ளபொருளே கையாயிரத்தனே காலாயிரத்தனே கருமுகில்வண்ணா கமலக்கண்ணா ஸர்வதோமுகனே அனந்தா அனந்தசயனா இரண்யகர்ப்பா பஞ்சபூதாத்மா மூலப்பிரகிருதியே இமையவர்க்கெல்லாம் இதஞ்செய்பவனே வேதகர்ப்பா ஸர்வலோகேசா துன்பமனைத்துந் துடைத்தருள்வள்ளலே சங்கசக்கரகதாபத்ம கிரீடதாரியே வாசுதேவா ராமாதேவேசா சகலசம்பத்துந்தந்தருள்பவனே காரணரூபியே கைவல்யபதியே யஞ்ஞேசா சகலகிருதுபாலகா கேசவா கிருஷ்ணா சார்ங்கி கோவிந்தா வேதா பரமாத்மா நாதா மதுசூதா திருவிக்கிரமா வாமனா அச்சுதா சேதுரக்ஷகா ஜநார்த்தனா புண்யசுலோகசிகாமணியே வேதாந்தசாரா பிரும்மாதிமுநிசேவிதா நித்தா சுத்தா புத்தா முத்தா ஞானரூபீ ஸத்தியா பரமானந்தமூர்த்தீ யோகரகஸ்யா ஆயிரஞ்சோதியே! நமோநம நமோநமவென்று ஸ்தோத்திரம் புரிந்து வாய்புதைத்துநின்றனர். வேதியர் குலத்து மாதவர் முநியே! மிகவும் மறைவானதும் திவ்வியமானதும் துர்லபமானதும் சகலவேதனைகளையுஞ்சாடத்தக்கதும் சகலகல்வியின் பயன் தருவதும் இஷ்டமானவற்றையெடுத்துக் கொடுப்பதும் அனைத்துலகுக்கும் அவசியமானதும் புண்ணியமானதும் எக்காலுங்கேட்பவர்க்கும் படிப்போர்க்கும் இணையற்றஞானத்தை விளைப்பதுமாய் விளங்கும் இத்தோத்திரத்தைப்பார்ப்பானாய்ப்பிறந்தவன் குருமுகமாய்க்கிரகித்துக்கூறக்கடவன். இவ்விதம் சிவபெருமான் முதலான சகலதேவரும் கந்தர்வரும் நிர்மலரான முநிவர்களும் தனித்தனிதுதித்து ஆனந்தமடைந்தார்கள்.

கெருடபகவான் திருமண் கொண்டுவருதல்.

அதன்பின் வைநதேயர் ஆனந்தமாயெழுந்து அச்சுதனெதிரில் அஞ்சலி செய்து காரணபுருஷாநாரணவாமனா அகில புருஷா அசுரசங்காரா காரணா சேஷசாயீசகலகர்மஸாக்ஷியே! தேவரீர்க்குத்தெண்டன்சமர்ப்பிக்கின்றேன்; யதுவம்சகரரானதேவரீரை அவ்வுலகத்திருந்து இவ்வுலகத்தெழுந்த சுரேச

ரான விருஷாகபியென்றே நிச்சயிக்கின்றேன்; அடியேன் உமது அடியனைவனதேயன்; தேவரீர் காலாலிட்டதொழிலைத்தலையாற்செய்யக்காத்திருக்கின்றேனாகையால் திருவுள்ளத்திலுள்ளதைத்திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கும்போது பகவான் பக்தஜனங்கள் அடர்ந்ததும் புண்ணியமயமுமான இக்கோமந்தபர்வதத்தின் பக்கத்தில் யாம்வாசம்புரிய விரும்பினமையால் நீ யிங்ஙனம் பாற்கடலையணுகி அதன் தீர்த்தமும் சுவேதத்தீவின் மிருத்தும் கற்பதருவின் கூட்டமும் கடிதிற்கொண்டுவரவேண்டுமென்று ஆஞ்ஞாபித்தருளினர். தேவர்முனிவர்களிடையில் அவ்வாறு மொழியக்கேட்ட அண்டஜேச்வரன் அக்கணமே சென்று அவையாவும் அதிசிக்கிரத்திற்கொண்டர்ந்தபின் இருடிகள்கண்ணனைநோக்கி மணிவண்ணா! இவைகளையெல்லாம் இங்குக்கொண்டுவருவதற்குக்காரணம்யாது? இவற்றையாம் என்னசெய்யவேண்டுமென்று வினவ, எம்பெருமான் இசைக்கலாயினர். ஓ விப்பிரோத்தமர்களே! இதுமுதல் இக்கோமந்தபர்வதம் யாதவகிரியென்றும் திருப்பாற்கடல் தீர்த்தம் பெரும் புண்யம் தரத்தக்ககலியாணியென்றும் பேர்பெற்று விளங்கும். முனிவரும் மனுக்களும் தேவரும் மனுபுத்திரரும் மந்திரவித்துக்களான மறையவரும் இத்திருப்பாற்கடலின் தருநிழலிலிருந்துதவம் புரிந்து முறைப்படி தர்மார்த்தகாமமோக்ஷங்களையடையப் போகின்றனர்.

பகவான் முனிவர்களுக்குச் சுவேத மிருத்திகாதிகளின் மகிமைகூறுதல்.

திருமண்ணின்பெருமையைத்தெரியச்சொல்லுகின்றோம் தேவாசுரரும் முனிவரும் முதலான நிர்மலராயுள்ள சகலருங்கேளுங்கள். இனிவரலாகுங் கலியுகத்தில் தருமங்களெல்லாம் பெரும்பாலுங் கழிந்திடும். அப்போது அந்தணர் ஆதியானநான்குவருணத்தாரும் அந்ய ஜாதியரும் பிரும்மருத்திரேந்திராதிதேவாசுரர்களும் விதிப்படி சுபகரமாயுள்ள கலியாணியிலாடித்திருவெண் மண்ணினால் புண்டரந்தரித்துத்தாமரை மணிவடமுந்துளசி மணிமாலையுங்கழுத்திலணிந்து மனந்தூய்மையாய்அர்ச்சாரூபத்தோடுஅனுக்கிரகஞ்செய்யக்காத்திருக்கின்றவெம்மை அன்புடன் அடிபணிந்து அநாயாசமாய் முக்தராகப்போகிறார்கள். இதில் எவ்வளவும் ஐயமில்லை. இவ்விடம்போந்துஎம்மைத்தெரிசிக்கச்சக்தியற்றவேதியர் எங்கிருந்தாலும் இத்திருமண்ணையிட்டுக் கொள்வரேல் அவர் மோக்ஷம் அடைவதிற்சிறிதும் சந்தேகமில்லை. பிரும்மருத்திரேந்திராதிதேவர்களே! பிராம்மணோத்தமர்களே! எம

தெண்ணத்தை யுண்மையாயுணைக்கின்றோம். யாம் அர்ச்சாரூபத்தோடு இவ்வெதுகிரியிலேயெ வசிக்கின்றோம். நீங்கள் இத்தலத்தியே யெமதுஸாந்நித்யம் சேய்யவேண்டுமென்று திருவாய்மலர்ந்து அர்ச்சாரூபமாய் அம்மலையருகேயிருந்தருளிமானிடவுருவத்தோடு துவாரகைக்கு எழுந்தருளினர்.

கண்ணன்னந்தவண்ணமுணைக்கக்கமலப்பூ
நண்ணும் வேதநான் முகனுதிநாகத்தோர்
எண்ணங்கொண்டாரவ்வனையோரத்திலகுந்நீர்
வண்ணற்கின் சாறுங்கதுசெய்யவகையோடும்.

(இ-ள்.) கண்ணபிரான் அவ்வாறு மொழிந்தருள்கையில் தாமரைப் பூவிலுறைகின்ற வேதத்திற்குரிய பிரும்மாமுதலான தேவர்கள் அந்தயாதவகிரியின் பக்கத்தில் வீற்றிருக்கின்ற ஜலம்போன்ற காந்தியுள்ள எம்பெருமானுக்கு இனிமையான உற்சவத்தை நன்றாகச்செய்யவேண்டுமென்று நிச்சயித்தார்கள்.

௧௬-வது அத்தியாயம்.

பிரும்மா புரநிர்ம்மாணம் உற்சவம் முதலியன செய்தல்.

கேளும் தீப்திமானே! அதன்பின் அன்னவர்கனன் தெய்வத்தச்சனை அழைத்து அற்புதமான ஆலயமொன்று அமைக்கும்படி கட்டளையிட, அவன் அவராணையச்சிரசாவகித்து மனதிற்கினிய தோரணங்களும் துசங்களுநெருங்கியமேகமண்டலத்தையளாவிய கோபுரங்களையுடையமதில்கள் சூழ்ந்ததும் நவமணியிழைத்துமுத்துக்களால் அலங்கரிக்கப்பெற்றுக் காந்திவீசுங் காஞ்சனத்தால் செய்தவிமானமுள்ளதும் புங்கமாகியபொற்கம்பங்கள் அடர்ந்துவயிரத்தால் கவாடமும் சோபானமும் வாய்ந்து விசித்திரமாய்விளங்கும் மண்டபங்கள் ஆங்காங்கு நிறைந்ததும்பொன்மயமாயும்மணிமயமாயுமுள்ள நாநாவிதவாகனங்களோடுபொலிவதுமானகோவிலையொருகணப்போழ்தில் சிருஷ்டித்துப்பரமேஷ்டியைப்பார்த்து எனதுசகலவல்லமையுங் கொண்டு இத்திருக்கோவிலைச்சமைத்தேன்;இனியதேச்சையாய் உற்சவம்புரிந்திடலாமென்று மொழிந்தான். அதுகேட்டநான்முகன்அமரரும்அந்தணர்ஆதிநான்கு வருணத்தோருமான சாதுக்கள் தம்மைச்சூழத்திருவிழா இயற்றத்தொடங்கி விஷ்ணுபாதோதகமாகிய விரஜாதீர்த்தங்கலந்தலோகபரிசுத்தஞ்செய்

யாநின்றகங்கையைநினைத்தார். இமயமலையின்பெண்ணாகியகங்கை முன்பு பிரும்மாவினது குண்டிகையிலிருந்து துஷ்கரமான தவமிழைத்து நதி ரூபமாயினாள். திருவிக்கிரமரூபியாகிய திருநாராயணன்ஈரேழுலகங்களையும் ஈரடியால் அளந்தபோதுமேலுலகத்தை யளக்கையில் அவர் திருவடியின் முனையால் அண்டமுகடும் பிளக்க அதற்கப்புறத்திருந்தவிரஜாதீர்த்தம்பெரு கித்தயையுடன் சத்தியலோகத்தை அடைய, அப்போது திருவிக்கிரமப்பெ ருமாளின் திருவடியைத்தெரிசித்த திசைமுகக்கடவுள் தமது கெங்காதீர்த் தபாத்திரத்தில் அவ்விரஜாதீர்த்தத்தையெடுத்து மகிழ்வோடு விதிப்படியெம் பெருமான் திருவடியைத் துலக்க, அப்பரிசுத்த ஜலம் ஆகாயகெங்கையெ ன்று சொல்லப்பட்ட நதியாய்ப்பெருகியது. அத்தகையநதியைநான்முகக் கடவுள் திருவிழாநடத்த நினைக்கையில் அது அங்கிருந்திழிந்து கோமந்தபர் வதத்தின் உத்தரபாகத்தில் இன்னுந்தாராரூபமாய்ப் பெருகாநின்றது. அப் போது அயனுலகத்தில் மூழ்கிய அவ்வுலகவாசிகளான அருந்தவர் அனைவ ரும் உடனே யாதவகிரியில் பெருகாநின்ற அத்தீர்த்தத்தினின்றும் வெளிக் கிளம்பி விளங்கினார்கள்.

ஓ பிராமணச்ரேஷ்டரே! பின்புவேதியர் யாவரும் விரஜாதீர்த்தங்க ளந்த அந்தங்காஜலத்தினால் சுகுமாரப்பெருமாளை அபிஷேகஞ்செய்து தா மும் அத்தோயத்திலாடிக்களிக்கையில் நான்முகனார் நாராயணர்க்குச்சிறப் புச்செய்யமுக்கியமானது விமானமன்றோ, அது இல்லாமல் யாம்செய்யத்தக் கது என்னவென்று சிந்திக்கும்போது அம்புயத்திற் பிறந்ததேவேசா! நீசிறி துஞ் சிந்திக்கவேண்டியதில்லை; இப்போதேவைகுந்தத்திலிருந்து அற்புத முள்ள திவ்விய விமானம் அவனியின்கண் வந்திடுமென்று மேகமுழக்கம் போல் ஆகாயவாணிமேலே அறையக்கேட்டுத் தலையையெடுத்துமேன்முக மாகவேபார்த்துக்கொண்டிருந்தார். அப்போது மின்னற்கூட்டம்போலும் ஆயிரஞ்சூரியர்போலும் பிரகாசிப்பதும் தேவமணிகள் திகழ்வதுமான திவ் வியவிமானமொன்று இறங்குவதையும் அதனுடன்அனந்தகுமுதர்கள்சூழ்ந்து வருவதையுங்கண்டனர். மகத்தான அந்த அற்புதவிமானத்தைக்கெருட பகவான்தாங்கிக்கொண்டுவந்தனர். அங்ஙனம்ஆதிசேஷன்ஆனந்தத்துடன் வெண்குடைகவித்தார். இருபுறமும் இருசுடரென்னுஞ் சந்திர சூரியர்கள் வெண்கவரிவீசினர். அவ்விதம் வருகின்ற விமானத்தைக் கண்டதும் பிதா மகன் பரபரப்போடும் பேரானந்தத்தோடும் நமோநமவென்றுபூமியில்வீழ்ந் து வீழ்ந்து நமஸ்கரித்து அதைஅவ்விடத்தில் திவ்விய முகூர்த்தத்தில்ஸ்தா பித்தனர். அப்போது அந்தரதுந்துபிதிம்திம்மென்று சுந்தரமாய்வழங்கின. பத்தியுள்ள சித்தசாரணர் சித்தமுவந்து மெத்தத்துதித்தனர். மாமணம்வீச

ந்தேமலர் மாரிதேவர்கள் பொழிந்தனர். அனைவரும் ஆனந்தமடைந்தனர். அகோ பிரும்மவிமானம், அகோ யாதவபூதரம், அகோ அதிகசுகுமாரரான நாராயணபகவான், அகோநாராயணக்ஷேத்திரம், அகோசுபஜலமுள்ளகல்லியாணி, அகோமகாபுண்யமயமான ஆகாசகங்கை, அகோ கல்பகவிருக்ஷமென்று தேவர்களும்மானிடரும் இரைந்தகோலாகலவொலி எங்குந்நிறைந்தது. லகங்களுக்கும்மகத்தானமங்களமுண்டாயது. பின்புபிரும்மாமகிழ்ச்சிமூவுயோடு மேலுலகத்தேவரும் கீழுலகத்தேவரும் தம்மைச்சூழப்பங்குனிமாஸ சுக்லபக்ஷநவமிதிதியில் கடகலக்நத்தில் உற்சவ ஆரம்பஞ்செய்து தசதினம் நடத்துகையில் வேதகோஷம் நிறைந்தன. பிராகிருதங்களான புராணங்களும்படித்தனர். அனைவரும் சுவேதமண்தரித்துப்பதுமாக்ஷமாலையுந் துளசிமணிமாலையும் பூண்டு சுபவஸ்திரமுடுத்துச் சுபாசாரமுள்ளவராய்ச்சுத்தமான அந்தக்கரணத்தோடிருந்து கடைசியில் கலியாணிதீர்த்தத்தில் அவபிருதமாடி மகிழும்போது பகவான் பிரஸன்னராகிப் பிரும்மருத்திரேந்திராதிதேவர்களையும் பிராம்மணர்களையுங் கடைக்கணித்து நீவிரெல்லோரும் இப்போது சுகமாகத்தங்கள் தங்களிடத்திற்குச்சென்று வருஷந்தோறும்இவ்வாறு உற்சவகாலங்களில் வந்து சேவித்துக்கொண்டிருமென்று திருவாய்மலர்ந்தருளக்கேட்ட யாவரும் ததாஸ்துவென்று தலைவணங்கிவிடைபெற்று நான்முகனைமுன்னிட்டுநடந்து அவரவரிடம் போய்ச்சேர்ந்தனர். வாரீர் விப்ரசிகாமணியே! அவ்விதம் அனைவரும்அகன்றபின்மகாபலி சர்வாபரணபூஷிதரும் கிரீடதாரியுமாய் அற்புதாகிருதியோடுவிளங்கும் எம்பெருமானை விட்டு நீங்கமனம் எழாமல் தளர்வதைப்பெருமாள் கடாக்ஷித்து ஆச்சரியத்துடன் மகாபாகவதனாகிய அசுரேசனே! நீசிந்தியாமல்சுவர்க்கவாசிகளும் விரும்பத்தக்க சுதலத்திற்சென்று அங்கும் இவ்விதமேகிரீடதாரியாய் விளங்குமெம்மையெப்போதும் சேவித்துக்கொண்டிரு. பரமபாகவதனாகியபிரஹ்லாதன் எமக்குமிகவும்இஷ்டமுள்ளவன்; அவனுடனும்நின்புத்திரபௌத்திராதியருடனுங்கூடிஅங்கேயேயெம்மைஅடைந்திடு. விளங்குகின்றவெண்மண்தரித்தவைஷ்ணவரே வீட்டின் பத்திற்கு உரியவராகையால் நீயும்சிரத்தைபத்தியுடன் அந்தச்சுபகரமாயுள்ள சுவேதமண்தரித்துச் சுகமாகவருஷந்தோறுந்திருநாளுக்கு இங்கேவந்துகொண்டிருவென்றுதிருவாய்மலர்ந்தனுப்ப, அவன் அதிகவருத்தத்துடன் சுதலம் போய் அவ்விதமே அவ்விடத்தும் அம்புஜாக்ஷன் கிரீடதாரியாய்த் தெரிசனந்தரக்கண்டு மனங்களித்துத்தினமானம் அப்பெருமானைச் சேவித்துக் கொண்டிருந்தான். முன்பு கரவீரபுரமென்று சொல்லப்பட்ட அந்நகரம் பின்புநாராயணபதாச்ரயத்தால் நாராயணபுரமென்று நவிலப்பெறுகின்றது. அகோ அந்தணச்ரேஷ்டரே! கலி

யாணிதீர்த்தத்தின் பெருமையும் யாதவகிரியின் மேன்மையும் சுவேதமிருத்திகையின் அதிசயமும் புண்யவிருக்ஷத்தின் வைபவமும் என்னென்றியும்புவேன்? அகோ தேவரிஷிகளேதன்யர்கள், அகோ மகாபலியேமகான், யாமும் அத்தலமேபோய் வாசஞ் செய்குவோம் வாருமென்று மொழிந்தருளினர்.

இன்னவாறியம் புகின்றசௌதியையினிதுநோக்கி
நன்னெறிவழுவிலாத சௌனக முனிவனல்லோய்
மன்னகக்களிப்புமற்று மதிசயமிகவுமோங்கும்
பன்னகசயனனெந்தைப் பரம்பொருள்சரிதைதன்னை. (க)

திசைமுகன்புதல்வன்றன் பாற்கேட்டிடுதீப்திமானும்
நசையொடுபிறவுங்கேட்கநவின்றிடு நலங்கள்யாவும்
வசையறவெமக்குமற்றும் வழங்குகவென்னவன்னேன்
குசைநுதிமதியினேடுங் கூறுவான்றொடங்கினனே. (உ)

(இ-ள்.) ஞாயமார்க்கத்திருந்துவழுவாதசௌனகமுநிவர், இவ்வாறு கதைசொல்லுகின்ற சூதபுத்திரரை இனிமையாகப்பார்த்து நல்ல பௌராணிகரே! நிலையான மனக்களிப்பும் அதிசயமும் வளர்தற்கிடமானஅனந்தசயனனாகியவெம்பரப்பிரும்மத்தினதுசரித்திரத்தைப்,பிரும்மபுத்திரராகும் சனற்குமாரரிடத்திற் கேட்டதீப்திமான் அன்போடுமெற்றவைகளையுங்கேட்கையில், அவர்சொன்ன நல்லகதைகளையெல்லாம் எங்களுக்குக்குற்றம் அறும்படிமறுபடியும்சொல்லியருளவேண்டுமென்றுகேட்க, அப்பௌராணிகர் தருப்பையின் முனைபோன்ற புத்திபலத்தால் அவ்விதமே சொல்லத்தொடங்கினர்.

உ0-வது அத்தியாயம்.

பிப்பாலாதோபாக்கியான பூர்வகமான கலியாணிதீர்த்தவைபவம்.

கேளும் சௌனகமுநிவரே! சனற்குமாரர் சாற்றிய அற்புதமான அரிசரிதையைக்கேட்ட தீப்திமான் தெவிட்டலின்றிப்பின்னும் பேரானந்தத்தோடு சனற்குமாரரே! சர்வக்கியரே! ஆசார்யரே! யாதவசைலத்தின் பெருமையைக்கேட்ட வென்மனம் இன்னும்திருப்திபெறவில்லை; க்ஷீரகுண்டம் கலியாணியானதையும் அங்கேநாராயணபகவான்நரசிங்கமூர்த்தியா

ய்த்திகழ்வதையும்அத்தலத்திலுள்ளபுண்யதீர்த்தங்களையும் மற்றுமுள்ளவைப வங்களையும் வழங்கியருளவேண்டும் ; தயாளுவாகுந் தேவரீர்க்குவந்தனம் புரிகின்றேனென்று வழங்கியபோது பிரும்ம குமாரர்பின்னையும்பிரீதியோடு தீர்த்தவைபவத்தை அருளிச்செய்ய ஆரம்பித்தார்.

முன்பொருகால் பிருகுவம் சத்திற்பிறந்த பிப்பலாதரென்னுமொரு தபோதனர் வெகுசிஷ்யருடன் கூடிப் பிரும்மவித்தையில் பூர்ணராய் நிறைந்தமனத்துடன் இமயமலையின் வடபுறத்தில் புஷ்பபத்திராநதிக்கரையில்ப திஞயிரவருஷம் பலமானதவம்புரிகையில் எம்பெருமான் சங்கசக்கரதரராய்ப்பிரசன்ன ராகையில், அம்முநிவர் கரியமேகம்போல்செங்கருடன் மீது நம்பெருமானைக்கண்டதும் பூரிப்புடன் பொள்ளெனவெழுந்து தண்டம்போல்தரைமிசைவிழுந்து சாஷ்டாங்கமாய்வணங்கியெழுந்து தேவதேவாதிருமணாளா ! அடியேன் தன்யனும் கிருதகிருத்யனுமாயினேன் ; தேவரீர்க்குத் திருவுள்ளமுண்டாயின்திருவைகுந்தந்தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, எம்பெருமானும்வாராய் பிருகுகுலக்கொழுந்தாகும்பிப்பலாதனே ! இனி நீ கலியாணனென்று பிரசித்திபெறப்போகின்றனை. மரங்களடர்ந்ததும் மூவுலகத்திலும்புகழ்பெற்றதும்மாமுனிகணங்கள் நெருங்கியதுமாகிய யாதவகிரியென்னுமோர் பெருமலைதென்திசையில் திகழ்கின்றது. அதனடிவாரத்தில் நிர்மலமான நீருள்ள தேவகந்தர்வமுநிவர்கூட்டம்நெருங்கியக்ஷீரஸரஸ் என்னுமொரு திவ்வியதீர்த்தமுண்டு. நீநல்ல சிஷ்யர்கள்புடைசூழ அவ்விடம்போய்அந்த த்தடாகத்தில்ஸ்நானஞ்செய்து அங்கேயும்பக்தரோடுவிளங்காநின்றவெம்மைத்தினந்தோறும்அர்ச்சித்துக்கொண்டிருப்பையேல், சுவல்பகாலத்திலுனக்கு முக்திதருகின்றோம். அந்தக்ஷீரகுண்டமும் உனதுசங்கத்தால் கலியாணத்தைத் தருகின்ற கலியாணியென்னும்பேர் பெற்று விளங்குமென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர்.

அக்கணமே அப்பிப்பலாதரும் அந்தேவாசிகளோடு விரைந்து சென்று யாதவசைலமடைந்து அத்தடாகத்தில்நீராடித்துவாதசாங்கத்திலும் சுவேதமிருத்திகையால் உளர்த்துவபுண்டரமிட்டுப்பதுமாக்ஷமாலையும் துளசிமணிமாலையும்பூண்டு விஷ்ணுஜநப்பிரியராய் விஷ்ணுஜனப்பிரியரான சுகுமாரரென்று சொல்லப்பட்ட விஷ்ணுவைச்சுகமாய் அர்ச்சித்துக்கொண்டு அத்தலத்திலேயே வெகுகாலம் வாசம்புரிந்தனர். அத்தடாகம் கலியாணகுணசீலத்தன்மையாலும் கலியாணமுநி ஆச்ரயத்தாலும் கலியாணியென்று பிரசித்திபெற்றது. அதுமுதலாகக்கலியாண முநிவர் மோக்ஷத்தையும் விரும்பாமல் அக்கலியாணியின்தீரத்திலேயே வாசம்புரிந்தார். ஓ திப்திமானே ! வைஷ்ணவராகிய பிராம்மணர்கள்அந்தநாராயண க்ஷேத்திரத்திற்குஅவசியம்

போகவேண்டும். முத்திதரத்தக்கசுத்தமாகிய கலியாணிதீர்த்தத்தில் மூழ்க வேண்டும். சுகுமாரப்பெருமானைத் தெரிசிக்கவேண்டும். அந்தக்ஷேத்திரத்தில் ஓரிரவுதங்குபவன் சுபாசுபங்களைக்கடந்து விஷ்ணுவின் பரமபதத்தை யடைந்தால், நித்தியவாசம் செய்பவன் பெருமை அளவிடலாகுமோ? அத்தலத்தையடைதற்கு அசக்தனாயிருப்பவன், அதையும்கலியாணியையும் வாயால்வழங்கினால் அவ்விடம் போந்துஅத்தீர்த்தத்திலாடிய பலனைப்பெறுகின்றான். அத்தீர்த்தத்தின் தீரத்திலொருபெரிய அரசமரமிருக்கின்றது. அது ஆதியில் சுவேதத்தீவிலிருந்து கொண்டுவரப்பட்டது. நல்லமணம் வீசுகின்ற இலைகளுள்ளதும் நல்ல நிழல்கொடுப்பதும் தேவகந்தர்வர்கள் அடையத்தக்கதுமாய் விளங்காநின்றது. அதைப்பார்த்தவன்பாவங்களெல்லாம்பறந்தோடுகின்றன. பரிசிப்பவன்செல்வத்தைப்பெறுகின்றனன். தழுவுவோன் ஞானியாகின்றான். வலம்வருபவன் பண்டிதனாகின்றனன். அதன் கீழ்செய்கின்ற ஓமமும் தானமும் அர்ச்சனமும் பிதிர்க்களுக்குத்தரும் பிண்டதானமும் அக்ஷயமாகின்றன. முநிகுலதிலகராகியகலியாணர் கலியாணிக்கரையில் சதாவசிக்கின்றனர். சண்டப்ரசண்டஜயவிஜயரென்னும் புண்யசீலரான நான்கு விஷ்ணுபார்ஷதரும் அத்தீர்த்தத்தை யெக்காலுங் காத்துக்கொண்டிருக்கின்றனர். அதற்குத்தேவதை கிருஷ்ணனென்று விளம்புகின்றனர். அசேஷஜகதாதாரா! சங்கசக்கரகதாதரா! உமதுதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வதற்கு உத்தரந்தரவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணனைப்பிரார்த்தித்துக்கணநாதனைநமஸ்கரித்துவிதிப்படி ஆசமனஞ்செய்துமூலமந்திரத்தாலும் புருஷ சூக்தத்தாலும் நீராடிக்கிருஷ்ணனையும் கலியாண முநிவரையும் கணநாதரையும் சண்டன் முதலிய தீர்த்தபாலகரையும் தர்ப்பித்துத் தம்மாலியன்றமட்டும் திலம் பசு வெல்லம் நெய் தான்னியம் வஸ்திரம் அன்னம் கம்பளம் முதலியதானமும் புரியவேண்டும். அவ்விடத்தில்திலதானமேமுக்கியமென்று மொழிகின்றனர். அக்கலியாணிதீர்த்தத்தின் பெருமையைச் சொல்லுதற்கு யார்தாம் சமர்த்தராவர்? ஏதோ ஒருவாறு சுருக்கிச்சொல்லினேன். அதன் ஸ்நானத்தாலிங்கு எவன்தான் புண்யத்தை விரும்புகிறான்? ஆதிசேஷனும் அதையளவிட்டுமுடியாது.

புல்லியனல்லறிவின்றிய பேதைபுகன்றிடுசீலமிலான்
சொல்லருமேன்மையிலாதவொரந்தணன் சொல்லுறுமப்புனலின்
மெல்லவடைந்துபிருத்தியர் புத்திரர்மேவநனைந்ததனால்
எல்லவரும்மனநன்குற வேயரியின்பதமேறினரே.

(இ-ள்.) அற்பனும் துர்புத்தியும் மூடனும்புகழத்தக்க நல்லொழுக்க

மில்லாதவனும் சொல்லுதற்கும் ஒவ்வாதமேன்மையில்லாதவனுமான வொருபிராம்மணன்பிரசித்தி பெற்ற அக்கலியாணி தீர்த்தத்தில் பயபக்தியோடு குறுகித்தனது ஏவலாளரும் புதல்வருமுதலானயாவரோடும் அதைப்பரிசித்த மாத்திரத்தாலேயே அவர்யாவரும் மனம்பரிசுத்தமாய்த் தெளிந்து ஸ்ரீவைகுந்தத்தை யடைந்தார்கள்.

உக-வது அத்தியாயம்.

சத்தியகாமோ பாக்கியானம்.

குருகுலதிலகரானகுமாரரே! இது வெகுவிநோதம்; மூர்க்கனாகிய மறையவன் தீண்டியதாலேயே முத்திபெற்றதீர்த்தவைபவத்தையின்னுங் கேட்கவேண்டும்; அப்பார்ப்பானார்? அவனெங்கிருந்தவன்? அவன்யார்மகன்? அவன்பெயர்யாது? அவன் மனைவியெவ்விதமானவள்? அப்பாவியாயிருந்தபார்ப்பானுக்குப் புத்திரரெத்தனைபேர்? இவைகளையெல்லாம் அடியேனுக்கு மொழிந்தருளவேண்டுமெனப்பிரார்த்திக்க அவரும்அவ்வாறேஅறையலாயினார்.

புண்யமயமும் ஸரஸ்வதிவாசஞ்செய்கின்றதும் அந்தணரனேகர்தங்கியதுமானகன்னியாபுரமென்றொருஅக்கிரகாரமுண்டு. அதில்மகாதர்மாத்மாவான சத்யவிரதரென்னும் பேருள்ள வொருவிப்பிரர்விசாலாக்ஷியானகௌதமியென்னும்பேர்வாய்ந்தகுடும்பினியோடுவேதவிதிப்படியில்லறம்நடத்திச் சுயதருமத்தாலேயே வெகுதனந்தேடித்தேவப்பிராம்மண பூஜகராய்விளங்குகையில் அவர்க்குச் சத்யகாமனென்னுமொருதனயன் பிறந்தான். அவன் இயற்கையாகவே நல்லொழுக்கங்குன்றியவனும் ஐம்புலவாசை அதிகரித்தவனுமாய்ச் சுககருமங்களையே நடத்திக்கொண்டிருக்கையில் அவன் பிதா குலம்விளங்கவேண்டிஅவனுக்கு விவாகஞ்செய்வித்தனர். அந்நாட்டுபெண் கற்புக்கரசியாய்ப் பரமகல்யாணியாய்த்தருமசீலையாய்க்குமுத்வதி யென்னும் பெயருள்ளவளாயிருந்தனள். பின்பு சத்திய விரதர் துச்சீலனாயொழுகிய புத்திரனையடக்கமாட்டாமல் மனைவியோடு தவஞ்செய்யவனஞ்சென்றபின் தர்மகாமங்களைவிட்டுத் துஷ்டனாகிய அச்சத்யகாமன் பத்தினியோடும் ஆறுபுத்திரரோடும் அநேக ஏவலாளரோடுங் கூடியில்லறம் நடத்துங்கால் வார்த்தாவிருத்தியாய் அற்பனாய் அளவற்றசெல்வத்தால் அதிகமதங்கொண்டு லோபியும் துர்மதியுமாய்த்தர்மங்களுங் கேளாமல் தர்மஞானியராகும் பெரியோரை அவமதிப்பதிலேயே அவாவுள்ளவனாய் அதிகோபிஷ்டனாய்ப்

பெண்டு பிள்ளைகளையும்பராபேக்ஷிதரானபார்ப்பாரையும்ஆதரியாமல்துரோகஞ்செய்து யாகத்தில் அவிர்ப்பாகம் பெறத்தக்க தேவர்களையும் வாக்கினாலும் அர்ச்சிக்காமல் யதேச்சையாய் நடக்கவே பதிவிரதையான அவன் பத்தினி பர்த்தாவைப்பார்த்து உமதுபிதா தர்மாத்மாவாய் ஸகலதர்மவித்துக்களிலு முயர்ந்தவராய்ச் சுயதருமத்தாலேயே திரளானதனமும் புகழும் படைத்து விளங்கினரன்றோ? அவ்விதமே நீரும் அன்போடுசெய்யத்தக்க தருமங்களைச் செய்திடும்; தர்மநஷ்டமாகுமேல் தனம் முதலானயாவும்நஷ்டமடையுமாகையால் பொருள் பெருகுமாறுதருமமே செய்திடும்; பொருளும்புகழும் பெருக அக்கினி சூரியன் அதிதி பசு அந்தணர் தென்புலத்தோராகியஅறுபாலரையும் ஆராதித்துவிழுமியோர்க்குவெகுமானம்புரியவேண்டுமென விளம்புகின்றனரென்று நற்புத்திபுகட்டக்கேட்டதுர்ப்புத்தி, மிகவுங் கோபித்துத்தனலோபத்தால் மனைவிமக்களை வாக்காகியபாணத்தால் அடித்துவெருட்டினான்.

அவ்வாறு சுற்றத்தாரையும் பீடிக்கையில் அனைவருந்துறந்துதானொன்றியாய்ச் சூன்னியமாயுள்ள வீட்டிலிருந்து போகத்தையுமிழந்து தடுமாறுகையில் உறவினரெல்லோரும் இவன் இவ்வாறு தர்மகாமங்களையிழந்து தவிக்கின்றானே! யாம்யாது செய்யலாமென்றுசிந்தித்து அவனிடத்தில் அன்பு செய்யாமல் துறந்து விட்டனர். அவன் கதியவ்வாறிருக்க, ஒருகாலத்தில் தயாநிதியான நாரதபகவான் இத்தகையதுராத்மாவுக்கு இதோபதேசஞ்செய்திடுவோமென்றுஇதயத்திலெண்ணி அவன்வீட்டிற்குள்பிரவேசிக்க,அவனும்ஆச்சரியத்தோடெழுந்துநாரதரென்றேயுணர்ந்து இவர்பற்றற்றவர்; பொருளாசைமுதலியவற்றைப்போக்கியவராகையால் நம்மையொன்றுங் கேட்கமாட்டாரெனநினைத்து அவர்க்குவந் தனைவழிபாடியற்றி முநிகாதரே!இவிடம்எழுந்தருளியதற்கென்னநிமித்தம்?திருவாய்மலர்ந்தருளவேண்டுமெனக்கேட்க, அவர் வாராய்வேதியனே! அந்தணன்செய்யவேண்டிய கர்மத்தை அறைகின்றேன் கேட்பாயாக. தருமம்தனத்தையும் ஞானத்தையும் தருகின்றது. தனவான் தருமத்தைச்செய்து அதனால் முத்தியைஅடைகின்றான். சத்திய விரதரின் புத்திரனாகிய நீ தனவானாயினும் புத்திமானாயிருந்திடு. உனது பிதாவும் பிதாமகனுந்தேடிய கணக்கற்ற பொருளை நீ அடைந்திருத்தலாலும் தருமத்தாலேயே குலம் விளங்குமாகையாலும் அத்தருமத்தையே செய்து தழைத்திடு. தேவப்பிராம்மணகோபூஜையும் பூதங்களிடத்திற்கருணையுமேமுக்கியமானவை. ஸ்ரீமந்நாராயணருக்குஇஷ்டமில்லாத கருமங்களையியற்றுவது வியர்த்தமேயாம். தர்மநஷ்டமாகுங்கால் ஜய

மின்றித்தனமும் நஷ்டமாகுமென்று தயைசெய்து இவ்வாறுபலவித நியாயங்களைப் புகட்டினார்.

அதைக்கேட்ட அப்பாபியான சத்தியகாமன் ஓ கோநாரதரே! அச்சுதன் அனுக்கிரகத்துக்குக் காரணமான தருமம் அனைத்தும் யான்அறிவேன்; நீர் இப்போது தனநாசகரமானதருமத்தை யுபதேசிக்கவேண்டாம்; என்னுயிரை அபகரிக்கின்ற இவ்விதவார்த்தையைச்சொல்லவேண்டாம்சொல்லவேண்டாம்சொல்லவேண்டாம்; தனக்ஷயமானவுபதேசஞ்செய்வதுபிராம்மணர்களுக்கு இயற்கையென்பதற்குஎள்ளளவும்சந்தேகமேயில்லை; ஆகையின் மகாமுநிவரே! அப்புறம்போம்போமென்றுதிரஸ்கரிக்கக்கண்டதேவரிஷி வியப்புற்று யாருடையமாயையால்பொருளாசைகொண்ட மூடர்கள்நன்மை தெரியாமல் தீமையைமேற்கொள்ளுகின்றனரோ அந்தநாராயணபகவானை நமஸ்கரிக்கின்றேனென்று நவின்றுகொண்டேபோய்விட்டனர். அப்பால் தர்மகாமவீனனும் மூடனும் தனகாமியுமானஅவ்வேதியன்பொருளிற்சிறிது அரசனும் சிறிது அக்கினியுமாய்க்கைக்கொள்ளவே தனமுழுதும் இழந்து கடைசியில் கடத்தற்கரிய சிந்தைகொண்டு அகோ கஷ்டம் தனமோநஷ்டம் இனியானென் செய்வேனென்று புலம்பிப் புத்திரமித்திரகளத்திராதியரால் விடப்பட்டும்பெரியோர்களாலும் உபேக்ஷிக்கப்பட்டும் பிராணனைவிடயத்தனிக்கையில், மகாகாருணிகரானநாரதமுநிவர்திருமாலின்மாயையால்திகைக்கின்ற அவனைத்தெளிவிக்கத் திருவுள்ளங்கொண்டு மற்றும் அவன்முன்பாக ஆவிர்ப்பவித்தனர். அவரைக்கண்ட சத்தியகாமன் ஓ அந்தணரே! ஆரையாநீர்? நிர்த்தனனாகிய வென்னையேன் மிக்கவருத்துகின்றீர்? இங்கு என்ன காரியமாயடைந்தீர்? யான் எந்த உறவினர்க்காகப் பொருள் தேடினேனோ அந்தப்பந்துக்களெல்லாம்இப்போதென்னைஅகற்றிவிட்டனரே; யான்புண்ணியலேசமுமில்லாத பேதையானேனே; என்னசெய்வேன்! எங்குச்செல்வேன்! அசத்தானயான் முன்புநாரதர் சொன்னவாக்கியத்தையுங்கேளாமல் அவமதித்தேன்; பகவத்பராயணரும் கருணைபெருகுங்கடாக்ஷமுள்ளவரும் விஷ்ணுபதத்தை விரும்பியடைந்தவரும் சுபமூர்த்திகளும்ஐம்புலவாசையைஅகற்றியவரும் என்போன்ற பேதையர்க்கு இதோபதேசஞ்செய்யத்தக்கவருமான அந்தணர் அவனியில் அனேகர் வசிக்கின்றனர்; அன்றியும் ருபு சனற்குமாரர் தேவரிஷியான ஆங்கிரசர் தேவலாதர் முதலான வெகுபக்தர்கள் ஞானகுமாரராய் விளங்காநின்றனர்; அவர்களிலொருவராயினும் எனக்கிப்போது நல்லஞானம்புகட்டுகவென்றுபுகன்றனன். அரிபாதாம்புயத்தையும்அவரடியாரடிகளையும் அடைவதிலேயே தீக்ஷித்துக்கொண்டிருக்கிற சத்தியவிரதரின் புத்திரன் சந்தாபத்தோடு இவ்வாறுசொல்லக்கேட்ட நாரதபகவான் அதிசய

மூற்று இவனுக்கு இப்போதே நற்புத்திபுகட்டுவோமென்று துணிந்து வாராய் சத்தியகாமனே ! யான் நாரதனென்னும் பேருள்ள நான்முகன்புதல்வன் ; தனலோபத்தால் தாண்டுதற்கரிய அந்தகாரத்தில் அழுந்திக்கிடக்கின்ற நின்னையெம்பெருமான் திருவடிக்கு விலக்காய்விட்டானே யென்று நினைத்து அனுக்கிரகம்புரிந்து துக்கத்தினின்றும்விடுவிக்கஇங்குவந்தேனாகையால், யான் புகல்வதைக் கேட்பையேல் உனக்குள்ளமோகம் ஒழிந்து ஞானம் தலையெடுக்கும். பணக்காரன் படும்பாட்டை நீயிப்போது அனுபவித்தறிந்தனையன்றோ ? செல்வமும்மனைவியும் மனையும் ஏவலாளரும் சப்தாதி விஷயங்களும் அரசச்செல்வமும் அஸ்திரமென்றே அறியவேண்டும். திரவிய ஞானதேகக்கிரியா ரூபமாகிய தேகிகளுக்கு இவ்வாசை நாநாவிததுக்க சந்தாபத்தையுண்டாக்குகின்றதென்று உணரத்தக்க தாகையால், இனி நீ சுத்தமனத்துடன் ஆத்மா அடைதற்குரிய நற்கதியை நினைந்து தேகத்திலும் அநிச்சயமான பொருளிலுமுள்ள ஆசையை யொழித்து விரக்தனாகக்கடவையென்று விளம்பக்கேட்டவேதியன், தயாநிதியே ! அடியேற்கு அருமையான ஆசார்யர் தேவரீரே! எனதாத்மாவைத்தேவரீருடையதிருவடித்தாமரைகளிலேயே சமர்ப்பித்துவிட்டேன் ; பற்றுவிடற்குரிய ஞானத்தையும் விசேஷ ஞானத்தையும் சேதநாசேதனங்களை விளக்குந்தத்வ மார்க்கத்தையும் உபதேசித்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, அவர் துஷ்டியடைந்து ஜீவேச்வரகதியையும் அசேதன சொரூபத்தையும் வழங்கலாயினர்.

வாராய் வற்ச ! சித்து அசித்து ஈச்வரரின் சொரூபத்தை இயம்புகின்றேன் சாவதானமாய்க் கேட்டிடு. நாராயணபகவான்தமது மாயையால் ஆதியில் சிருஷ்டித்த அனைத்தையும் கல்பாந்தத்தில் காலகலையால் அடக்கிக்கொண்டு தாமொருவரே சேஷித்து விளங்குவதால்சர்வசேஷியென்று சாற்றப்படுகின்றனர்.

அங்ஙனமெங்குமடங்குறவையன்
தங்கியொராலிலை தன்னுளடக்கிப்
பொங்கியவூழிமுடிந்திடுபோழ்தில்
சங்கடமின்றுபடைக்குமனைத்தும்.

(இ-ள்.) அந்தப்பிரளயத்தில்எம்பெருமான்எப்பொருள்களையும்ஒருங்கேதன்னுதரத்திலடக்கி யோராலிலையில் வீற்றருந்து மிகுந்த ஊழிமுடிவில் மற்றும் சகல சராசரப்பெருள்களையும் அநாயாசமாய்ப் படைதருளினர்.

உஉ-வது அத்தியாயம்.

ஜகத்ச்ருஷ்டியாதிக்ரமம்.

பிரதானபுருஷரும் ஸத்யஸங்கல்பரும்ஈச்வரருமாகிய ஸ்ரீமகாவிஷ்ணு வானவர் திருகுணஸ்வரூபமாகிய பிரகிருதியைக்காலத்தால்கலக்கியருளி னார். ஸத்வம் ரஜஸ் தமஸ் என்று குணங்கள் மூன்றுகின்றன.அவைகளி னின்றும்பொன்மயமானசூத்ரம்போன்றமகத்தத்வமுண்டாகியது. அதிலிருந் துகிரியாசக்தியுள்ளஅகங்காரம்பிறந்தது. அந்தஅகங்காரம்வைகாரிகம்தைஜ ஸம்தாமஸமென்றுமூன்றுவகையாம். விகாரத்தைச்செய்கின்றஅவ்வைகாரி கத்திலிருந்து மனஸ்தத்வமும் தசவைகாரிக தேவதைகளும் உற்பவித்தன. கலக்கப்பட்ட தைஜஸத்திலிருந்து தசேந்திரியங்க ளுண்டாயின. தாமஸத்திலிருந்து சப்தமும் அதிலிருந்து ஆகாயமும் ஆகா யத்திலிருந்து பரிசகுணமுள்ள அநிலமும் அதிலிருந்து ரூபவத்தான அக் கினியும் அதிலிருந்து ரஸகுணமுள்ள அப்புவும்அதிலிருந்துகந்தகுணமுள்ள பூமியும்முறையேதோன்றின. பின்பு அவைநாநாவிதமாயிருந்ததால்புருஷர்க ளைச்சிருஷ்டிக்கச் சக்தியில்லாமல்எம்பெருமானைநோக்கித்தேவதேவா! ஜகத் வியாபீ! சர்வசக்திதரா! அச்சுதா! ஸர்வபூதாத்மா! புருஷோத்தமா! தே வரீர்க்கு ஸ்தானமாயுள்ள அண்டத்தையுண்டுபண்ண அநீசராகிய யாங்கள் உமது ஆணையையெவ்வாறு நடத்துவோம்? இனி அதை நடத்துமாறுஅடி யேங்கட்கு அனுக்கிரகிக்க வேண்டுமெனப்பிரார்த்திக்கக், காரியகாரணகா ரணரான கமலக்கண்ணன் மறைவான கருமம் விளங்க இருபத்து நான்கு தத்வங்களில் ஏககாலத்திற் பிரவேசித்துப் பின்னமாயுள்ள வற்றையொன் றாய்ச் சேர்க்க, அவைகள் ஒருங்கேகலக்கப்பட்டுச் சராசரங்களுக்கு இருப் பிடமாயுள்ள அண்டத்தையுண்டாக்கின. அதனுள் மகாவிஷ்ணு ஆதிசே ஷன் போகமான சுகாசனத்தில் சயனித்துக்கொண்டனர். அவரது நாபியி லிருந்து விசுவமென்று விளம்பப்பெற்ற கமலந்தோன்ற அதிலிருந்து அயனு ருதிக்க. அவரால் தேவமானிடர் முதலான பசு பக்ஷிகளும் மரங்கள் முத லானவையும் வேதசாஸ்திர புராணாதிகளான யாவும் தோன்றின. இவ் வாறே யுலகசிருஷ்டி அப்போதைக்கப்போதுண்டாகின்றன. கேளாய் சத்தியகாமா! அவ்விதம் தேகம் முதலானயாவும் பிரகிருதியின் காரியமாத லால் அவற்றின் மோகத்தாலுண்டாகும் ஆசையையொழித்திடக் கடவை. வீட்டின்பத்தை விரும்புந்தத்வவித்துக்கள் பின்பும் பிறப்பதற்கேதுவாகும் வினையை யொருபோதுஞ் செய்திடாராகையால் நீயும் அழியாத இன்பத்

ஹதயடையக்கடவை. துர்லபமாயும் துன்பத்திற்கேகாரணமாயுமுள்ளதேக மெடுத்தலையும் சிறிது செப்புகின்றேன் கேட்பாயாக.

பாபிஷ்டர்கள் குரூரமும் மிக்கபயங்கரமுமான இருளாதியாகும் நரகங்களிலெல்லாம் உழன்று மற்றும் இவ்வுலகிற்பிறந்து பலதுக்கங்களையும் படுகின்றனர். தயாளுவாகுந்தருமதேவன் அப்பாவிகள் அனுபவித்துஞ் சேஷமான பாவங்களை நாய் உளர்ப்பன்றி ஒட்டகம் கழுதை புழு பூச்சிமுதலான புல்லிய ஜந்துக்களாய்ப்பிறந்து கழிக்கட்டுமென்றும் அப்பிராணிகள் படுந்துன்பத்தைக்கண்ட மனிதர் தீவினைக்குப்பயந்து நல்வினையில் ஆஸக்தராகட்டுமென்றும் கருணையோடு கருதி அவர்களைத்தன்னுலகிலிருந்து தள்ளிவிட்டுத்தான் சுகமாயிருக்க, அவர்களும் அவ்வாறே அவனியின்மேல்அற்பசெந்துக்களாய் உற்பவித்துப்படாப்பாடும்படுகின்றனர். பூவுலகத்துள்ள சகலரும் அவ்விததுன்பங்களைக்கண்ணாரக்கண்டிருந்தும் பொருளாசையால் மோகமுற்றுக்கச் மலத்தினின்றுந்திரும்பாமல் கலங்காநின்றனர். பாவிகள் கதிஅவ்வாறுகப்புண்யவான்களோ, சுவர்க்கத்தில் வெகுநாளிருந்து தாம் புரிந்த நல்வினைக்குரிய போகங்களையனுபவித்துப் புண்ணியங் கழிந்தபின் மூடர்களாய்க் காலத்தால்சலிப்புண்டு தலைகீழாய்விழுகின்றனர். அவ்வாறு வீழ்கையில் சந்திரமண்டல மார்க்கமாய்க் காசினியையடைந்து பனியுடன் கலந்து திலமாஷாதி ரூபத்தாலே பின்பு புருஷதேகத்தில்ரேதஸாய்ப்பரிணமித்து அவரிடத்திருந்து மங்கைமார் வயிற்றிற்கலந்து அன்றிரவில் கலவியும் அஞ்சுராத்திரியில் புற்புதமும் பத்துநாளிற்கற்கசமுமாகிஒருமாஸத்தில் அங்குராதிகளும் மூன்றுதிங்களில் நகாதிகளும் நான்குமதியில் தாதுக்களுமுண்டாகி ஆறு மாசத்தில் சராயுவால் நீங்கி யேழில்மயிருடன்கூடியெட்டாவதில்தேகபூர்த்தியடைந்துவலப்புறத்திலுழன்று நவமத்தில் நல்லஞானியாய்க் கடந்தஜன்மங்களை நினைந்து குக்ஷியிலுள்ள மலமூத்திரத்தோடும் பூச்சிகளோடுங்கலந்து அப்புழுக்கள் தமதுமென்மையான தேகத்தைப் பிடுங்குவதால் மிகவுந்துக்கித்துப் பொறுத்தற்கரிய துன்பத்தையும் பொறுத்துக்கொண்டுபோனகர்ப்பங்களில்புருஷோத்தமன்சந்நிதியில் தாம்செய்துகொண்டசங்கற்பத்தைநினைந்துநினைந்து வருந்திநடுங்கி அகோகஷ்டம், மறுபடியும் மகத்தான கர்ப்பசங்கடம்சம்பவித்ததே ; முன்செய்ததீவினையெல்லாம் இப்போது இதயத்தில் நன்றாய் விளங்குகின்றனவே ; அப்போதெல்லாம் அகாரியத்தைச்செய்தோமேயன்றி ஆத்மாவுக்கு இதமானகருமத்தைச் சிறிதும் செய்யாமற் போனோமே ; தாமோதரனையும்தயாபரரான அவன்தாசர்களையும் அடையாமல் அழிந்தோமே ; இனியாயினும்பகவத்பாகவதர்களின் பாதத்தைப்பற்றுவோம் ; நரகத்திற்கேகியஇக்கர்ப்பத்திலிருந்துஎப்போது

இழிந்திடுவோமென்று கலங்கியிருந்து பத்தாந்திங்களில் சூதிவாயுவால் பரிசிக்கப்பட்டு ஞானங்கெட்டுச் சிசுவாய் வெளிப்பட்டுப்பின்பு பாலியாதிகிழத்தன மளவாயுள்ள அவஸ்தைகளில் வரத்தக்கசங்கடங்களையும் படுகின்றனர். பிரளயகாலத்தில் காரணங்களின்மையாலும்சிருஷ்டியில்ஐம்பொறிகள்வலித்தலாலும் அவர்க்கு விஷ்ணுபாதத்தை விரும்பத்தக்க புத்தியெவ்வாறுநேர்ந்திடும்? ஆகையால் மோக்ஷத்தையிச்சிப்போர் இவ்வுடலைக்கொண்டே அச்சுதனையும் அவரடியார்களையும் அனுசரிக்கவேண்டும்.

தத்வத்ரயநிரூபணம்.

ஓ தீப்திமானே! இனி ஆத்மாநாத்மபரமாத்மாக்களின்வேறுபாட்டையும் சற்றுக்கேட்டிடுக. பரமாத்மா, அழியாததும் சுத்தமும் சகலாதாரமும் சகலரும் அடையத்தக்கதும் பக்தருக்கு அனுக்கிரகஞ்செய்தற்குரியரூபமுள்ளதும் நற்கதியும் நாராயணனென்று நாமமுள்ளதுமாய் விளங்காநின்றது. ஜீவனும் அவித்தையாலுண்டாகும் தேகாதிகுணங்களை நீங்கினால் நித்தனும் சுத்தனும் முத்தனும் சுத்தஸத்வமயனுமாகின்றான். அத்தகையசேதனன் பகவன் மாயையால்கட்டுண்டுபுத்திரபௌத்திரதனுதிகளையுடையவனாய் ஜனனமரண ஜராவியாதி சோகமோகங்களால் பீடிக்கப்படுகின்றான். அவ்விதம் அவத்தைப்படுகையில் புண்ணியவிசேஷததால்பெரியோர்களின் ஸஹவாஸம நேரிடுமாயின், அவர்கருணையால் அனந்தசயனன் அழகியசரித்திரங்களைப்படிக்கவும் கேட்கவும் விருப்பமுண்டாகி அதனால் அவரடியில் அருமையான நூதனபக்தியும் பிறக்கின்றது. எம்பெருமான்இணையடித்தாமரையில் இவ்விதபக்தியும் பிறக்குமாயின், அந்தவைஷ்ணவர் அடைதற்கருமையானதும் ஒன்றுளதோ? அநாத்மாவானது விகாரமும் பரிணமமுடைபதும் ஸதாஜடமுமாய்த் தேவாதி சகலஜீவன்களையும்எக்காலும்மோகிப்பிக்கின்றது. நல்லபக்தர்கள் இச்செய்தியை யுணர்ந்து பற்றற்றுமுக்தராகினார்கள். அவ்விதபக்தியில்லாமல்சாஸ்திரமாகிறசுழியில் அலைந்துகொண்டிருப்போர்க்கு ஞானமும்மோக்ஷமும்ஜன்மசதங்களிலுங்கிடைப்பதில்லை.

பலபகல்வருந்தித்தவமிழைத்தடையுமைந்திரபதத்தினுஞ்சிறந்து
மலமறுபரமப்பொருளிலக்கணமாமறைதனைமகிழ்வுடன்புகன்றேன்
நலமறுசடற்குநாரணனடிக்கீழ்நனியுறும்விழைவிலாநரற்கும்
இலகிடுமனகவிழிந்தவரெவர்க்குமியம்பிடாதிதனைநீபெறுவாய்.

(இ-ள்.) தோஷமற்றஸத்யகாமனே! அநேகநாள்வருந்தித்தவஞ்செய்து அடையப்பட்ட இந்திரபதவியினும் மேன்மையாய்க்குற்றமற்றஉயர்வான

பொருளினிலக்கணமாகியரகஸ்யத்தைஉனக்குஅன்போடு உபதேசித்தேன். அப்படிப்பட்ட இதனைநற்குணமில்லாத மூடனுக்கும் ஸ்ரீமந்நாராயணன் திருவடியில் மிகுந்தபக்தியில்லாத மனிதனுக்கும் இன்னும் இழிவானவரெவர்க்கும் சொல்லாமல் பெற்றுக்காப்பாற்றக்கடவை.

உ௩-வது அத்தியாயம்.

சத்தியகமானுக்கு நாரதபகவான் மேதாதிதியு பாக்கியான பூர்வகமான யதுகிரிகம்நோப தேசஞ் செய்தல்.

வாராய்சத்யகாமா! பொதிய மலைக்குக்கிழக்கில் காவேரிக்கு வடபுறத்தில் யாதவகிரியென்று பிரசித்தமாகியவொரு புண்ய பூதரமிருக்கின்றது. அதில் புண்ணியமான மரங்கொடிகளும் புண்யமும் அமலமுமானஜலாசயங்களும் புண்யமாயுள்ள பறவைவிலங்குகளும் புண்யதீர்த்தங்களும் நிறைந்துள்ளன. அதன் தாழ்வரையில் அறுபத்தாறுகோடி தீர்த்தங்கலந்ததாய்ச்சரணாகதரக்ஷகராகிய வெகுவிஷ்ணுபக்தர் சூழ்ந்ததுமான கலியாண தீர்த்தமென்றொரு திவ்வியதீர்த்தமிருக்கின்றது. அங்குள்ளவைகுண்டவர்த்தனமென்னும் க்ஷேத்திரத்தில் சுகுமாரரென்று திருநாமமுள்ள ஸ்ரீமந்நாராயணபகவான் வீற்றிருக்கின்றனர். பணம் முதலியவற்றில் ஆசையையொழித்து அவிடஞ்சென்று அந்த ஜகந்நாதனை ஆராதிக்கக்கடவை. அவர் வீற்றிருக்கும் விமானத்துக்குப் பிரும்மவிமானமென்றும் ஆனந்த விமானமென்றும் அப்புண்யதீர்த்தத்துக்குக்கலியாணமென்றும்கலியாணியென்றும் பேர்களுண்டு. அத்தடாகக்கரையில்வசிப்பவருடையபுண்ணியத்தைஅளவிட்டுச்சொல்ல என்னால்இயலுமோ? அந்தவைகுண்டவர்த்தனமென்னும் க்ஷேத்திரத்தில்மேதாதிதியென்று திருநாமமுள்ளவொருபரமபாகவதர்புத்ரவானும்களத்ரவானுமாயிருந்தனர். அவர் அரிலீலையையுந்திருநாமங்களையும்பாடுகிறதும் கேட்கிறதும் உற்சவத்தில் எதிர் முகமாய் ஆனந்தமாய் ஆடுகிறதும் ஆட்டுகிறதுமாய்க்காலக்ஷேபஞ் செய்துவந்தனர். அவ்வாறிருக்க வொருகாலத்தில் உலகத்தார்க்கு அனுக்கிரகஞ்செய்யவும் குடும்பத்தைக்காக்கும்பொருட்டும் தம்மூரைவிட்டுத்தேசந்தேசமாய்க்கிராமங்கிராமமாயெழுந்தருளிஆங்காங்குத் தண்டுலயாசகஞ் செய்து விஷ்ணுகதைகளைப்பாடித்திரிகையில், ச

ப்ரகவாசத்தால் மூகம் பாகு ஊரு பாதங்களிற் பிறந்தநான்குவர்ணத்தாரி லும் அநேகர் விஷ்ணுபக்தர்களும் முக்தர்களுமாய்த் துலங்கினார்கள்.

அப்போது ஸௌவீரதேசத்தரசனான வீரவிரதனென்பவன் தன்தேச வாசிகளான பெரியோரால் அரிகீர்த்தனத்தோடு தேசாடனஞ் செய்கின்ற அப்பாகவதர் மகிமையைக்கேட்டு அப்பெரியோர்களைநோக்கிச்சுவாமிகாள்! அப்பரம பாகவதர் எங்கிருப்பினும் அங்குச்சென்றுஅவரைவிரைவாய்அழைத்துக்கொண்டுவரவேண்டுமெனப்பிரார்த்திக்க, அவ்வாறேஅவர்களும்போய் ஏழுந்தருளப்பண்ணிக்கொண்டு வரக்கண்டமன்னவன் பொருக்கெனவெழுந்து அரிபக்தரடியில் தண்டம்போல் வீழ்ந்து தண்டன் சமர்ப்பித்து அவரை நவமணியிழைத்தபொற்பீடத்தில் வீற்றிருக்கச்செய்து பெண்டு பிள்ளைகளோடு விதிப்படி பாதபூசைபுரிந்து அத்தீர்த்தத்தைத்தங்கள்தலையில்புரோக்ஷித்துக்கொண்டு பூரிப்புடன் சற்றுநேரம் யோசித்து மகாமகிமையுள்ள மறையவர்க்கரசே! தேவரீரை ஜகதீசனாகிய விஷ்ணுபகவான்என்றேநினைக்கின்றேன். தேவரீரது தெரிசனத்தாலேயே யான் பவசாகரத்திலிருந்து கரையேறிவிட்டேன்; நீர்பரமதயாளுவாகையால் அடியேனுக்குப்பரமபாகவத தருமங்களைப்ரஸாதித்தருளவேண்டுமென்று பிராத்திக்கையில், அவருந் திருவாய் மலர்ந்தருளுகின்றனர். ஓ ராஜாதிராஜனே! யான் சொல்லுவதையெல்லோருங்கேளுங்கள். புருஷார்த்தத்தையடைதற்குரிய மானிடசென்மம் துர்லபமும் நிலையற்றதுமாயுள்ளது. எப்போதுங்காலனுக்கு வசப்பட்ட இச்சென்மமெடுத்தவர் விரைவாகத்தமக்கு நன்மையைத்தேடிக்கொள்ளவேண்டும். அபாயத்தோடுகூடிய அனைத்திலும் உறுதியைத்தரத்தக்கவுபாயம்இரண்டேயென்றுவிளம்புகின்றனர். அவைகளில்ஒன்றுஅரிநாமசங்கீர்த்தனமும் மற்றொன்று அவர்கதையைக்கேட்டுதலுமாம். இவ்விரண்டையும் பக்தியோடு குருமுகமாய் அடைந்துகொண்டாடுவதேயுசிதம். இங்ஙனம் பாவனமானபுண்யகதையொன்று புகல்கின்றேன்; அதைக் கேட்டதும் முன்சொன்னவிரண்டிலும் உண்மையாய்ச் சந்தேகமின்றி விருப்பமுண்டாகும். அதுபக்தர்களுக்குப்பிரியமும் விசித்திரமுமாயுள்ளது. பூர்வகாலத்தில் யமலோகத்தில் நாரதரால்செய்யப்பட்டது. மனதைவெறிடத்திற் செலுத்தாமற் கேட்டிடுக.

முன்பொருகால் நாரதபகவான் விஷ்ணுலோகம் போகையில், அவிடத்தில்ஹரேமுகுந்தா கோவிந்தா நாராயணா ஜநார்த்தனா கிருஷ்ணா வராகா கேசிகா வாசுதேவா அச்சுதா அனந்தாசங்கசக்கரகதாதராதிருவிக்கிரமா திருவோகேசா விச்வரக்ஷகா அநாதிமாயையை அறுத்தாளும்அண்ணலே ஸம்

ஸாரஸாகரத்தின்கரையேறச்செய்யுங்கருணாநிதியே அஞ்ஞானாந்தகாரத்தை யழிக்கும் அருட்கடலே ஸர்வஞானீ! என்னைக்காத்தருளுங் காத்தருளு மென்று துதிக்கின்றபக்தர்வாயிலிருந்துபெருகியநாமசங்கீர்த்தனமானஅமுத த்தைப்பரு கிப்பருகிப்பரமானந்தங்கொண்டுபெருமானைவலம்வந்துபாதத்தி ல்வீழ்ந்து நமஸ்கரித்து மனதிலொன்றைநினைந்து அங்கிருந்து புறப்பட்டுய மபுரம்போய்அதிகோரமானரௌரவாதிநரகத்தையும்அவற்றில்அழுந்தி வருந் தும் நரகவாசிகளையுங்கண்டு ஆச்சரியப்பட்டு அவர்களைக்கரையேற்றக் கரு ணைகூர்ந்து அங்கு நூறுயோசனையு யரமுள்ளவொரு பருவதத்தில் உன்னத மான வொருசிகரத்திலேறிக்கையை உயரவெடுத்துப் பூரிப்போடுநாராயணா அச்சுதா அனந்தா வாசுதேவா ஜநார்த்தனா சரணாகதவற்சலா ஜகந்நாதா! கிருபைசெய்து காத்திடும் காத்திடுமென்று உரக்கக்கூவினார். இதைக் கேட்ட நரகர் அனைவரும் தம்பாவந்தொலைந்து நரகத்திலிருந்து விடுபட்டுப் புண்யதேகஞானங்களை முறையேபெற்று விஷ்ணுநாமங்களையும் நாரதரை யும் கொண்டாடித்துதித்துக்கொண்டு விமானத்திலேறிஆகாயமார்க்கமாய்ச் சென்று வைகுண்டலோகத்தையடைந்து அரிகதாமிர்தத்தைப்பானம்பண் ணிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு அனைவரும் போய்விட்டபின் அந்த கன் தன்னகரம் நிர்ஜனமாகக்கண்டு அதிசயப்பட்டுத் தன்படர்களுடன் சும் மாவிருந்தனன். கேளாயரசனே! திருநாமத்தையுங் கதையையுங் கேட்ட லால் நரகத்திலழுந்திய பாவிகளும் அப்போதேமுக்தியடைந்தனரென்றால், மனிதஜன்மமெடுத்தவர் அரிகீர்த்தனம் செய்யாமலும் சும்மாவிருக்கக்கூடு மோ? நீயும் முக்தியடையும் பொருட்டு மானிடர் பந்தத்தைப்போக்குபவ ரும்அச்சுதரும்கருணாகரருமாகியஸ்ரீமந்நாராயணனைப்பக்தியோடுபஜித்திடெ ன்று பகர்ந்துநாராயணபுரத்தைக்குறித்து நடந்தனர். பின்பு வீரவிரதம காராஜன்மேதாதிதியின்சங்கத்தால்மகாபாகவதனாகிச் சுற்றத்தார்ஏவலாளர் புத்திரர்அமைச்சர்அந்தணர்ஆகிய இவர்களைக்கொண்டுதன்தேசத்திலுள்ளயா வரையும் அரிபக்தர்களாகச்செய்தனன். இங்ஙனம் அத்தேசவாசிகளின்மகி மையையுரைக்கஆயிரமுகமுள்ளஆதிசேஷனாலுமுடியுமோ? கேளாய்சத்திய காமா! இனி நீயிங்கிருந்துதாழாமல் சீக்கிரம்புறப்பட்டுப்போய்வைகுண்ட வர்த்தன க்ஷேத்திரத்தை யடைந்து வைகுண்டகங்கையிலும்கலியாணதீர்த் தத்திலும் மூழ்கி நாராயணனை அருச்சித்துநன்மைபெறக்கடவாயென்று மென்மேலும் விளம்புகின்றேனென்று உபதேசித்து அந்தர்த்தானமாயினார். அதன்பின் சத்தியகாமன் நாரதருபதேசத்தால் பொருள்முதலானவைகளி லுள்ள மோகத்தைவிட்டு யாதவகிரியிற்சென்று கலியாணதீர்த்தத்திலாடிச்

சுகுமாரனையும் பூஜித்துப் பேரானந்தமுற்று ஸ்வாத்தியாயஸ்துதிசிலராய்த் தவவொழுக்கங்குன்றாதவராய்த் தயாவான்களாய்ப் பரிபூர்ணராய்விளங்கும் பக்தர்களுக்கும் ஆசாரியனாயிருந்தனன். அப்போது கொஞ்சகாலத்தில் அவன்பெண்டு பிள்ளைகளும் தேசமெங்குந்திரிந்து யாதவகிரியின்மேல் வந்து சேரக்கண்டு மகிழ்ந்து அவர்களுடன் கூடிவிண்ணவரும் விரும்பத்தக்க செல்வமும் ஞானவைராக்யமும் பரமபக்தியும் பக்தசங்கத்தில் ஆசையும் பெற்று நற்கருமத்தால் அநேகரைக் கடைத்தேறச்செய்துஅத்தலத்திலேயே சிரகாலவாசஞ்செய்யக் கடைசியில் எம்பெருமான் பிரத்தியக்ஷமாயெழுந்தருளிவாராய்அந்தணர்கொழுந்தே!இப்போதுநீமாத்திரம்புண்யசீலையானபாரியையுடன் எமது வைகுந்தத்திற்கு வந்திடு ; நின்புதல்வர்இவ்வுலத்திலின்னமும் சிலகாலம் தயாவான்களாயிருந்து வெகுபேர்களை முக்தராக்கட்டும் ; அந்தத்தில் அவர்க்கும்அவரடியார்க்கும்அவர்தாசர்க்கும்யாம்மீளாக்கதியைத் தருகின்றோம் வாவென்று அழைத்துக்கொண்டு வைகுந்தத்திற்கெழுந்தருளினார். ஓ தீப்திமானே! நீர்வினவியபடியே ஆதியில்மூர்க்கனாயிருந்த சத்தியகாமனது புண்யதமமான சரித்திரமும் கலியாணதீர்த்தமகிமையும் ஒருவாறுகன்றேன் ; இதைவருஷசதமானாலும் வழங்குதற்கும் கேட்பதற்கும் ஆதிசேஷனாலுமாகாதென்றால், வேறேவல்லவரும் உளரோ? கலியாண முனியோடு கூடிய கலியாணியின் பெருமையுமேதோ எனக்குச்சக்தியுள்ளமட்டும் வழங்கினேனென்று விளம்பினார்.

அவ்விதம்மறையோனன்னவாகனன்மதலைதன்னால்
திவ்வியதீர்த்தமாகுந்திருக்கலியாணியாதி
பவ்வமேயனையசங்கசக்கரமுதலவெல்லாம்
செவ்விதினுரைக்கக்கேட்டுத்திருவுளமகிழ்ந்தானன்றெ.

(இ-ள்.) அந்தப்படி தீப்திமான் சனற்குமாரரால்திவ்வியதீர்த்தமான திருப்பாற்கடலை யொத்த முதன்மைப்பெற்ற திருக்கலியாணி சங்கசக்கரம் முதலான சகல தீர்த்தங்களையும்செம்மையாய்மொழியக்கேட்டு மனமகிழ்ந்தார்.

உச-வது அத்தியாயம்.

யாதவகிரியில் பதரீநாராயண ஸாந்நித்யம்.

சௌனக முனிவர் சூத புராணிகரை நோக்கி அற்புதமாகிய தீர்த்தமகிமையைச் சனற்குமாரர் தீப்திமானுக்குச்சொல்லியபடியேயிங்ஙனம்சொல்ல

வேண்டு மென்று கேட்க, அவர்தீர்த்தத்தின் பெருமையை ஆதரவோடு நீர் நன்றாய்க்கேட்டீர் ; ஆகையால் குமாரர்வழங்கியவாறே அவற்றைமுறைப் படி மொழிகின்றேனென்று கூறலாயினர். தீப்திமான் புண்யமாயும்புண்ய பூசுரர்களால் சூழப்பட்டதாயும் விளங்கும் பதரீவிருக்ஷம் பிருந்தாவனத்தி லிருந்து யாதுகாரணத்தால் என்னவிதமாய்ங்குவந்ததென்றுகேட்கச், சனற் குமாரர், வாரீர்பூசுரரே! முன்புகிருதயுகத்தில்யாதவசைலத்தில்சாண்டில்லி யமுநிவர்தர்ப்பதீர்த்தக்கரையில்தவஞ்செய்துகொண்டுவெகுகாலம் விஷ்ணு பராயணராயிருக்க, ஸ்ரீமந்நாராயணர் தாமேமுநிவர்க்கெதிரில் ஆமோ தத்துடன் ஆவிர்ப்பவித்துத் தபோதனரே! எழுந்திரும்மெழுந்திரும் ; உமது தவம் சித்தியும் எமது மனம் இஷ்டமும் அடைந்தனவென்று திருவா ய்மலர்ந்தருள; முநிவர்மகிழ்ந்துஎம்பெருமானே ! நான்நரநாராயணாச்ரமத் தைக்கண்டு அத்தலத்திலேயே வெகுகாலம் வாசம்புரிய விரும்புகின்றேனெ ன்ன, எம்பெருமான் கருணைகூர்ந்து அங்குநாராயண ரூபியாய் விளங்கும் விஷ்ணுபகவானும்யாமே ; மனிதர்கலியுகத்தில்டனியின்பீடையால்அங்கே போவது அருமையென்று இத்தலத்திலேயே வசிக்கின்றோம் ; ஆகையால் சகலகாமவரத்தைத் தருகின்றவெம்மை நீர்இங்கையேஆராதித்திடும் ;பிருந் தாவனலதைகளையும் தருக்களையும் கணப்பொழுதிலிங்கே தருவிக்கின்றோ மென்று வழங்கி அந்தர்த்தான மானபின், சாண்டில்லியர் அங்கேயே வாசம் புரிந்தனர்.

யாதவசைலத்தில் எழுந்தருளியிருக்கும் உற்சவபேரத்தின் பெருமை.

இவ்வாறு சொல்லிக்கொண்டுவருகையில் தீப்திமான் மகாமுநிவரே! உற்சவபேரத்தை வர்ணித்தருளுக ; அம்மூர்த்தியை ஆதியில்ஆரார் ஆரா தித்தவர் ? யாதுகாரணத்தால் அங்கெழுந்தருளியதென்றுவினவ ப்ரும்ம புத்திரர் விளம்புகின்றனர். ஆதியில் நாராயணபகவான் தம துமாயையால் சிருஷ்டித்தவனைத்தையும் கற்பாந்தத்தில் காலகலையால் அடக்கிக்கொண்டு தாமொருவரே ஸர்வசேஷியாய் விளங்காநிற்கையில், அந்நியவஸ்துக்களொ ன்றுமில்லாதிருந்தது. பின்பு அவ்வெம்பெருமான் நிச்வாஸத்தாலுண்டான நிகமங்களால் துதிக்கப் பெற்றுச் சேதனங்களுக் கிருப்பிடமான பிரும்மா ண்டத்தை முன்பு படைத்த பிரகிருதி முதலான தத்வங்களால் படைத்து அதனுள் ஆத்மகோடிகளையும் அமைத்தனர். அப்புறந்தாம்சிருஷ்டித்தகர்ப் பசலிலத்தில் சயனித்துக்கொண்ட பெருமாள் திருநாபியின்கண் விச்வமெ ன்று பேருள்ள கமலம்பிறக்க, அதிலிருந்து நான்முகன்தோன்ற, அவர்

மரீசியைப்பெற, அவர்காச்யபரையுண்டாக்க, அவரிடத்திலிருந்து சூரியனுதிக்க, அவன்மனுவைப்பெற, அவர் மகாமகிமையுள்ள தசபுத்திரரைப்பெற்றுக்கொண்டனர். அவர்களில் முற்பிறந்த நற்குணமுள்ளஇக்ஷ்வாகு பதரிகாச்ரமத்தில் தவஞ்செய்து மகாதேஜோவானாய்த் திகழ்கையில், நான்முகக் கடவுள் பிரத்தியக்ஷமாகக்கண்டு பரபரப்போடெழுந்து சாஷ்டாங்கமாய்த் தரையில் வீழ்ந்து நமஸ்கரிக்கப், பிதாமகன் அவரையெழுப்பி அன்போடு வாராய் பூபதியே ! ஏதுக்கு நீயித்தனைகடினமான தவம் புரிந்தனையென்று வினவ, அரசன் அகமகிழ்ந்து ஸ்ரீ மகாவிஷ்ணுவை ஆராதிக்கச் சுபகரமானவொரு திவ்வியமூர்த்திதந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கவே அவரும்விளம்பலாயினர். யான் வெகுகாலந்தவஞ்செய்ததால் சந்துஷ்டரான பதுநாபரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டதும் பரமாத்புதமும்என்னுயிரினுஞ் சிறந்ததுமான இம்மூர்த்தியைத்தருகின்றேன் ஏற்றுக் கொள்ளென்று சுந்தரமாகிய சுகுமாரரென்று திருநாமமுள்ள பெருமானைத்தந்தனுப்பிவிட்டு மற்றுந்திருப்பாற்கடலை யணுகித்தவமிழைத்து ரங்கவிமானத்தையெம்பெருமானிடம் பெற்றுக்கொண்டு பொங்கிய மனத்துடன் தங்களிருப்பிடமாகிய சத்தியலோகம் போய்ச்சேர்ந்தனர். இப்பால் மனுபுத்திரராகும்இக்ஷ்வாகுவும் தமக்குக்கிடைத்த மூர்த்தியோடு தம்புரியை அடைந்துஆராதிக்கப் பின்பு அவ்வம் சத்தார் முறைப்படி அவரவர் காலத்தில் அருச்சித்து வருகையில். கடைசியிலிருந்த சுமித்திரனென்னும் அரசனிடத்திருந்து பிதாமகன் பிராம்மணர்களால் அச்சுகுமாரப் பெருமானைத்தருவித்துக்கொண்டு யாதவகிரியில் எழுந்தருளப் பண்ணித்தேவர் முநிவர் பிதிர்க்கள்மானிடர் முதலான சகலரோடும் திவ்வியமான திருவிழாநடத்தினர்.

அன்றுமுதலாயமரரந்தணர்களாருங்
குன்றெதுவினின்றருளுங்கோகனகைநாய்கன்
தன்றுணைமலர்ப்பதம்வணங்கியவர்தத்தம்
நன்றுமனமெண்ணும்வகைநண்ணுவரனைத்தும்.

(இ-ள்.) அன்று முதற்கொண்டு தேவப்பிராம்மணர் முதலானயாவரும் அந்த எம்பெருமானுடைய இணையடியைவணங்கியவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படி சகலநன்மைகளையும் அடைகின்றனர்.

யாதவகிரி சமீபத்திலுள்ள சக்க ராதிதீர்த்த மகிமை.

ஓ தீப்திமானே ! ஆனந்தக்கண்ணீர் பெருகப்பெருக இவ்வாச்சரியமா

ககதையைச் சொல்லியுங்கேட்டுமாயிற்று ; இனிவெவ்வேறான புண்யதீர்த்தங்களையும் புகல்கின்றேன்கேட்பீராக. யாதவகிரியைச்சூழ்ந்துஸப்ததீர்த்தமிருக்கின்றன. கலியாணியின் பூர்வபர்கத்தில் சக்ரதீர்த்தமிருக்கின்றது ; அதன் கரையிலுள்ளது இறலிமரம் ; அதற்குரிஷி வேதசிரஸ் என்பவர் ; மகாபலன் தீர்த்தபாலகன் ; தேவதை கேசவப்பெருமாள் ; அவிடத்தில் திலதானஞ்செய்தால்பிதிர்க்களுக்குஅக்ஷயமாகின்றது. ஆக்நேயத்தில் சங்கதீர்த்தமுளது; அதற்குவிருக்ஷம் ஆம்பிரம் ; ரிஷி போத்யர் ; தீர்த்தபாலகன் பலன் ; தேவதையோ நாராயணபகவான் ; அவ்விடத்தில் அன்னதானம் முக்கியமாகின்றது. தென்புறத்தில் உத்தமமானகாபிலதீர்த்தமுளது ; அங்குள்ளமரம் பில்வம்; ரிஷியோ கபிலர் ; குமுதன் தீர்த்தபாலகன் ; தேவதை மாதவப்பெருமாள்; பூதானமேமர்தவனுக்குப்பிரீதியாகின்றது. மேற்புறத்தில் புலஹதீர்த்தமிருக்கின்றது ; அங்கு ஆலமரமும் புலஹரிஷியும் கோவிந்ததேவனும் குமுதேக்ஷணனாகிய தீர்த்தபாலகனும் விளங்குவதாயும் சுககரமான சயனதானமே கோவிந்தனுக்குப் பிரீதியென்றுஞ் சொல்லுகின்றனர். வாயுமூலையில் சுதாசதீர்த்தமிருக்கின்றது; அங்கே சிம்சுப விருக்ஷமும் சுதாசமுநிவரும் விஷ்ணுதேவதையும் விளங்குவதாயும் வஸ்திரதானம் விசேஷமென்றும் விளம்புகின்றனர். வடபுறத்தில் புண்யகரமான கோதீர்த்தமுளது ; அவிடத்தில் விருக்ஷமோசந்தனம் ; முநிவரோகாலவர் ; தேவதையோமது சூதனன் ; தீர்த்தபாலகரோ விஷ்வக்ஸேனர். அக்கோதீர்த்தத்துக்கு முற்பக்கத்தில் அனுத்தமமான மனுதீர்த்தமுளது ; அங்குப் பலாசமரமும் பாரத்வாஜமுநிவரும் கருடனாகியதீர்த்தபாலகனும் திருவிக்கிரமப்பெருமானாகிய தேவதையுந் திகழ்கின்றனர்; நெய் வெள்ளி மற்றதான்னியம் முதலானவையும் அங்கேதானஞ்செய்வதுவிசேஷமாம். இங்ஙனம் சக்கரசங்க கபில சுதாச பப்ரு மனு புலஹ வேத யாதவ கர்ப்ப பலாச பத்ம நாராயணமைத்ரேயதீர்த்தமென்கின்ற பதினான்கு திவ்வியதீர்த்தங்கள்சொல்லப்பட்டன. இன்னமும் புண்யமான வைகுண்டகங்கையும் அப்படிப்பட்ட தநுஷ்கோடியும் ஸர்வதீர்த்த ஸஹிதமான கலியாணியும்சேர்ந்துஇவ்வளவு புண்யதீர்த்தங்கள் யாதவசைலத்தில்விளங்காநின்றன. யாவரேனும் இவற்றை நினைப்பதாலேயே அய்யமின்றிப் பாவந்தொலைந்து பரமானந்தமடைகின்றனர். இவற்றில் மூழ்கியிவ்விடங்களில்ஜபஹோமவிரதமும் பிதிர்க்கள் முதலானோர்க்குச் செய்யத்தக்கவைகளும் செய்குவரேல், அவை அழியாமல் அநேகமாய்ப் பெருகாநின்றன.

யாதவசைலத்திலுள்ள நாரசிங்கப்பெருமாள்வைபவம்.

பிராம்மணச்ரேஷ்டரே ! சகலபுண்யதீர்த்தங்களும் புகலப்பட்டன ;

இனிநரசிங்கப்பெருமாளின் ஆகமனமும் நவில்கின்றேன் சாவதானமாய்க் கேட்டிடுக. முன்பு காச்யபமுனிவர்க்கு மகாவீரனான கனகனென்பவன் பிறந்து கடினமானதவமிழைத்துச் சுராசுரராலும் அழியாதவரம்பெற்று வாழ்கையில் அவனுக்குப்பிரஹ்லாதன் முதலான நான்குபுதல்வர்பிறந்தனர். அனைவர்க்குமானந்தம் விளைப்பவராய்ச் சற்சகவாஸத்திலேயே பற்றுள்ளவராய் ஊக்கமுள்ளவராய் நற்குணங்களுக்கிருப்பிடமாய் விளங்கும்அப்பிரஹ்லாதாழ்வான் தேவாதிதேவனாகிய திருநாராயணரிடத்தில் வைத்துள்ள திடமானபக்தியைக்கண்ட தீயனாகிய இரணியன்தனயனிடத்தில்பகைகொண்டு அவனையழைத்து அடமூடா! என்னைநீக்கி அன்னியனை அடைகின்றாய்; அவன் எனக்கு மட்டற்றபகையாளி; போகட்டும், அவன் எங்கிருக்கிறானென்றுஇயம்பக்கெட்டபாகவதர் கேளும்எனதப்பனே! மஹாவிஷ்ணுவென்னுந்திருநாமத்தால் எங்கும் நிறைந்து பலிஷ்டராயுள்ள யாவர்க்கும் பலிஷ்டராய் உமக்கும் எனக்கும்மற்றெல்லாவுலகங்களுக்கும்இரக்ஷகராய்த் துலங்கும் ஸ்ரீமந்நாராயண பகவானையேயான்கதியென்றடைந்தேன்; நீரும் க்ஷேமத்தை விரும்புவீரேல், அவ்வெம்பெருமானையே பக்தியுடன் அடைந்திடுமென்று மொழிந்தனர். அம்மொழிசெவியில் வீழ்வதன்முன் அவன்மிகவுங்கோபித்துப் புத்திரனைப் புடைக்கயத்தனித்து அடமூடா! அடமந்தா! அடதுர்ப்புத்தீ! இப்போதுஉன்சிரத்தையரிந்திடுகின்றேன்; நீயாரைச்சரணமாயடைந்தனையோ அவனிப்போது உன்னையிரக்ஷிக்கட்டுமென்று கோபத்துடன் உதடுதுடிக்கக் கரத்தில் கத்தியையெடுக்கையில், எள்ளின்கண் எண்ணெயைப்போல்எங்கும்வியாபித்துள்ள விஷ்ணுபகவான் நரசிங்கவுருவாய் ஸ்தம்பத்தைப்பிளந்துகொண்டே அதிலிருந்து புறப்பட்டு அசுரனுடன் அமராடிஅவனைப்பிடித்திழுத்துத் தம்மடிமீதுவைத்து நகங்களால்மறவன் மிருகங்களைப் பிளப்பதுபோல் பிளந்துகொன்றனர். அச்சமயத்தில் பிரும்மருத்திரர்ஆதியானதேவகந்தர்வர்களும்ரிஷிகணங்களும்வாத்திய கோஷத்தோடுதுதித்தனர். அமரர் மலர்மாரிபொழிந்தனர். கந்தர்வர்அரம்பையரோடு களித்தாடினர். அப்போது நரசிங்கபகவான் அவர்களால்பிரார்த்திக்கப்பட்டுஅக்கோமந்தபர்வதத்திலேயேபக்தவற்சலராய்த் தம்மையடைந்தவர்க்கு அனுக்கிரகஞ்செய்துகொண்டு இன்னுமெழுந்தருளி யிருக்கின்றனரென்று சொல்லிமுடித்த சனற்குமாரரைநோக்கித் தீப்திமான், உமதுதிருமுகத்தினின்றும் புறப்பட்டயாதவகிரியின்பெருமையாகும்அமுதத்தைப்பருகித்தன்யனும் கிருதகிருத்தியனு மாகினேன்; இனியான் அத்திருமலைக்குச் செல்கின்றேன்; விடைதந்தருளவேண்டுமென வணங்கிஅவ்விதமேவிடைபெற்றுச்சென்றனர். கேளீர் சௌனகாதிமுநிவர்களே! இதைத்தினமா

னங்கேட்கும்படி செய்பவரும் கேட்பவரும் ஆனந்திப்பவரும் வணங்குபவரும் சகலபாவத்தினின்றும்விடுபடுகின்றனர். இக்ஷேத்திரமாகாத்மியத்தை வைஷ்ணவர்க்கிடையில் வழங்குவோர் ஸர்வகாமபலத்தையும் அருள்கின்ற பெருமாளுக்குப் பிரீதியைவிளைத்துச்சுகப்படுகின்றனர். நாஸ்திகன்அபாகவதன் அலஸன் டம்பன் அழுகநாறுடையோன் ஆகியஇவர்கட்குச் சொல்லவேண்டாம், சொல்லவேண்டாம், சொல்லவேண்டாம்.

இத்தலச்சிறப்பெழுதியுமிதமுறக்கேட்டும்
வைத்துவாழ்மனைவகையுடன்செவிகொளமொழிந்தும்
பத்தியால்வருதினந்தொறும்பாவனைபுரிவோர்
முத்தராகுவரிருவினைமுதலறமுடிந்தே.

(இ—ள்.) இந்தயாதவகிரி மாகாத்மியத்தைப்பக்தியோடுஎழுதியும்இன்பமாகக்கேட்டும் தாம்வாழ்கின்ற வீட்டில்வைத்து ஆதரித்தும் அயலார்கேட்கும்படி வகையோடு மொழிந்தும் தினந்தோறும் தியானமும் செய்பவர் தமது பாவபுண்ய மிரண்டும் அடியோடே நீங்கி முத்திக்குஅருகாராய்விளங்குவார்கள்.

ஸ்ரீ

ஸ்ரீமதேநாராயணாயநமஃ
ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ
ஸ்ரீகாசீமாகாத்மியத்திற்குட்பட்ட
ஸ்ரீமத்யாதவகிரிமாகாத்மியம்.

உரு-வது அத்தியாயம்.

கௌரீ சங்கர ஸம்வாதம்.

பார்வதி பரமசிவனைநொக்கி யெங்காதலரே! காசிக்கொப்பானவை ஷ்ணவக்ஷேத்திரமில்லையென்றும் விஷ்ணுசாஸ்திரப் பிரவர்த்தகரில் உமக்கிடானவர் இல்லையென்றும் தேவரீர் விஷ்ணு தாஸரென்றும் விஷ்ணு பரரென்றும் அவரடியார்களின் ஆராதனத்திலேயே ஆசையுள்ளவரென்றும் கேட்டிருக்கின்றேன்; மூன்றுலகத்திலும் நீர் அறியாததொன்று மில்லையாகையால், இவ்வனைத்தையம் சந்தேகமறமொழிந்திட வேண்டுமென்னக், கங்காதரன் களிப்போடு கழறலாயினர்.

வாராய் மலையரசன்மகளே! விஷ்ணுக்ஷேத்திரங்கள் ஸ்ரீரங்கம் முதலாக அநேகமிருப்பினும் அவர்தமது அம்சத்தால் காசியின் கண்வாசஞ்செய்கின்றமையின் பூமியின்மேல் காசிக்ஷேத்திரம் மகாபெருமைபெற்றதென்று சொல்லக்கேட்ட பார்வதி மற்றும் மணவாளனை நோக்கி, நீரெனக்கு மிக்க விருப்பமுள்ளவரன்றோ? அப்புண்யமயமான புருஷோத்தமன் க்ஷேத்திரங்களைப்புகலவேண்டுமெனப்பிரார்த்திக்க, அவ்விதமே அவரும் அறையஆரம்பித்தார். கேளாய் பார்வதீ! ரகுவம் சவர்த்தனரான ரங்கநாதர் வீற்றிருக்கின்ற ஸ்ரீரங்கம் விஷ்ணுக்ஷேத்திரங்களின்முக்கியமானதொன்று. ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீவராக ஸ்வாமிக்குமிகவிருப்பமுள்ளது. அதில் வசிக்கின்றவர்திருவைகுந்தத்தை யடைகின்றனர். வேங்கடாசலம் ஸ்ரீநிவாசருக்கு முக்கிய வாஸஸ்தலமாயுள்ளது. அதைத்தெரிசித்தாலும் சிந்தித்தாலும் பாவமனைத்தும் பறந்தோடுகின்றன. அங்கே ஸரஸ்வதி புலஸ்திய சாபத்தால் வருந்தி நதிவடிவமாய் ஸ்வாமி தீர்த்தமென்னும் பெயரோடு விளங்காநின்றனள். குமாரக்கடவுள்முன்புஅத்தீர்த்தக்கரையில்தவமிழைத்துக்குஷ்டரோகத்தைப்போக்கடித்துக் கொண்டார். மற்றும்சாளக்கிராமாதிகளும்விருஷபாசலமும்வரதராஜர் வீற்றிருக்கின்ற கஜாசலமும்அமரர் அடையத்தக்ககடிகாசலமும்தோதாத்திரியும் விசேஷஸ்தலங்களாம். அன்றியும் மங்களகிரியென்றொருதிவ்யக்ஷேத்ரமுண்டு; அதனிடையேநரசிங்கப்பெருமான் துஷ்டனை

நமுசியோடு வெகுகாலம் போர் செய்துகடைசியில் அவ்வசுரனைமுடித்துக் கிருதயுகம் முதற்கொண்டு சயனித்திருக்கின்றனர். அவ்வெம்பெருமான் அசுரனுடன் போரடி அலுத்துத்தாகித்தவர்போலச்சுதைதேன்பால்பானகம் முதலியவற்றைப் பாதிதாம்பருகி மீதியைப்பக்தர்களுக்குக் கொடுத்துக்கொண்டுவிளங்காநின்றனர். அதற்கோனதிருப்பதியெவ்விடத்துங்கிடையாது. ஸிம்ஹாசல மென்றொரு க்ஷேத்திரமுண்டு. அதில்அனந்தசயனன் வராகநரசிங்க ரூபியாய் மூன்று நேத்திரத்தோடும் எட்டுப்புயங்களோடும் சதுஷ்பாணியாய் வீற்றிருக்கின்றனர். அங்கு மகாநதியாகிய கங்கை புண்ய நதியாகிய கண்டகீ சரயூ இரண்யையென்று பேருள்ள தாமோதரை சுந்தரியாகிய சொர்ணரேகையென்று அஞ்சுநதிகள் பெருகாநின்றன. யாதவசைலத்திலுள்ள தீர்த்தங்களும் ஆலயங்களும் அதனதன்அம்சத்தால்தன்னிடத்துந்தங்கினமையின்காசிக்ஷேத்திரம்அதிகமாய்ச்சிறந்துள்ளது. பதரிகாச்ரமம் குருக்ஷேத்ரம் யாமுனம் ஸ்ரீகூர்மம் ப்ரயாகக்ஷேத்திரம்வம்சதாரா லாங்கலா நதி மகாநதி தாம்ரபர்ணி காவேரி பல்குனி கயை திருவேணி நதிபதியாகிய கடல் இவையாவும் அதனதன் அம்சத்தால் தங்குவதாலும் வாராணசி விசேஷமாய்விளங்குகின்றதென்று மொழிந்த க்ஷேத்திரங்களின் மகிமையைக் கேட்டபார்வதிபரமானந்தங்கொண்டு வியப்புற்று மற்றும்சங்கரனை நோக்கியோஸ்வாமீ ! இங்ஙனம் யாதவகிரியின் மகிமையைச் சிறிது விளம்பினீரே யன்றி விஸ்தாரமாயுரைக்கவில்லை ; இன்னும் அதன் பெருமையையேற்றமாய்இயம்பவேண்டுமெனப்பிரார்த்திக்க, அவர், மாமகிமையுள்ள விஷ்ணுபக்தரில் சிறந்த என் காதலியே ! உனக்கு யாதவகிரியின் பெருமையைக்கேட்க வேண்டுமென்னும்விருப்பமுண்டானதுநன்றுநன்று; நீயுலகத்தைப் பரிபாலிககப் பிறந்தவளாகையால் மூவுலகத்துக்கும் பூஜ்யையாகின்றாய்; லோகநாயகராகிய எம்பெருமானிடத்தில் எனக்கும்மகத்தான மகிழ்ச்சியுண்டாகின்றது; சரணமாயடைந்தவரின்சங்கடங்களைப்போக்கத்தக்க நரசிங்கப்பெருமானும் பயநாசகரான நாராயணபகவானும் வீற்றிருக்கும் யாதவசைலப் பெருமையை யென்புத்திக்கு எட்டியமட்டும்இயம்புகின்றேன் ; அதன் மகிமையை விளம்பவல்லவர் மூவுலகத்தினும்இல்லை ; ஆயினும் விதியினால் அறிந்தமட்டும் மொழிகின்றேன் கேட்பாயாக. நான்முகக் கடவுள் நாராயணபகவானது நாவிக்கமலத்துதித்ததும்அவ்வெம்பெருமான் உவக்கு மாறுவெகுகாலம் சலிலத்திலிருந்து கோரமானதவஞ் செய்கையில், ஸ்ரீயப்பதியாய்த்தயாநிதியாய்க் கலியாணகுணவாரிதியாய்ச் சங்கசக்கரகதாபத் மங்களையுடைய புயங்களுள்ள வராய்த் திருமுடி கண் கால்கள் ஆயிரமா

யிர முள்ளவராய்ப் பிரும்மருத்திராதி முக்தர்களாலும் ஸனகாதிபார்ஷத கணங்களாலும் தமது குணங்களை விளக்காநின்ற பாஞ்சராத்ரம்முதலியவற்றாலும் சாங்கிய யோகங்களாலும் சூத்திர கணங்களாலும் பாரதோக்தமான வாக்கியங்களாலும் ஸ்ரீராமகதைகளாலும் அஷ்டாதச புராணங்களாலும் மன்வாதிஸ்மிருதிகளாலும் இன்னமுள்ள ஸ்துதிகணங்களாலுந் துதிக்கப்பட்டவராய் விளங்கும் அச்சுதன் மகாயுகங்கள் கழிந்தபின்பிரசன்னமாயினர்.

அங்ஙனம் பிரசன்னமாகக்கண்ட பரமேஷ்டி மகிழ்ந்து நாநாவிதமான வைதிக வாக்கியங்களால் தோத்திரம் புரியப், பகவான் சந்துஷ்டராய் வெகுவிதமாகப் பிரஜைகளைச் சிருஷ்டிக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். அயனர் அப்புறம் சனகாதிகளை மனதினால் சிருஷ்டிக்க, அவர்கள் ஊர்த்வ ரேதஸராய்ச் சிசுக்களைப்போல் விச்வம் நச்வரமென்று நினைந்து நாராயணனையே பஜித்துக் கொண்டிருக்க, அப்பரமேஷ்டி கோபாவிஷ்டராய் மனங்கலங்கிப் பார்க்கப்பயங்கரமான புருவநேத்திர நெற்றியோடு தோன்றுகையில், குரோதமயனான ருத்ரன் அந்தலலாடத்தினின்றும் உதித்தனன்.

அவ்வண்ணஞ்சினவடிவாய வதரித்தவுருத்திரனையயனுநோக்கி
யிவ்வண்ணம்விழுமிதெனவிம்மிதமுற்றிதரர்தமைப்பயந்தபின்னர்
மெய்வண்ணந்தோன்றல்செயவந்தவந்தத்தக்கன்முதன்மேன்மையாளர்
எவ்வண்ணத் துயிர்களையும் விதிவிதியின்விதம்விதமாயியற்றினரே.

(இ-ள்.) அவ்வாறு குரோதமயனாய்உதித்தருத்ரனைப் பிரும்மாவும்பார்த்து இதுநல்ல ஆச்சரியகரமான அவதாரமென்று அதிசயித்து மற்றவர்களையும்சிட்டித்தபின்மெய்ம்மையை விளக்கப்பிறந்த அந்ததக்ஷப்ரஜாபதி முதலான மேன்மையானவர்கள்சகல ஜீவகோடிகளையும் நான்முகன் ஆணைப்படி நாநாவிதமாய்ச் சிருஷ்டித்தார்கள்.

உசூ-வது அத்தியாயம்.

இதுவுமது.

வாராய் பார்வதீ! இவ்வாறு பலவிதமான பிரஜைகள் சிருஷ்டிக்கப்பட்ட பின் சிலர் சாத்விகரும் சிலர் ராஜஸரும் சிலர் தாராசாரரும் விஷ்ணு

விரோதிகளு மானதாமஸருமாயினர்கள். அம்மூவகையோர்நடக்கையும் சிறிது செப்புகின்றேன் கேட்பாயாக. ஸாத்விகர், எக்காலும் விஷ்ணுபராயணராய் விஷ்ணு கதாஸக்தராய் விஷ்ணுக்ஷேத்ரவாசிகளாய் விஷ்ணுவுக்கு நிவேதனஞ் செய்தவற்றையே புசிப்பவராய்ப் பரந்தாமனைப்பாஞ்சராத்ரவிதிப்படியே பூஜித்துப் பிரும்மருத்திராதி தேவர்களைப் பதுமநாபர்க்குப் பரிசாரகராய்ப்பாவித்துஸநாதனரும்நிர்த்தோஷமானவரும்நித்யரும் அவ்யக்தரும் பக்தானுக்கிரகரூபியும் சுமுகரும் அழகிய புன்னகையாளரும் சாந்தரும் பருத்து நீண்டபுயங்களுள்ளவரும் பரந்தமார்புடையவரும் பிரகாசிக்கின்ற கௌஸ்துவாபரண கந்தரமுள்ளவரும் வநமாலையும் வைஜயந்திமாலையும் அணிந்தவரும் ஸ்ரீபூமிசகிதரும் சங்கசக்கராதிகளைத் தரித்தவரும் காளமேகம்போல் சொலிப்பவரும் பராபரருமாகும்பரமாத்மாவைத்தியானித்துக்கொண்டு முக்தி மார்க்கத்தையே முக்கியமாயிச்சித்துச் சங்கசக்கராங்கிதராய் நித்யநைமித்திகவிதியில்வழுவாதவராய்க் குருசேவகராய்விளங்காநின்றனர். அவ்வாறன்றிப்பான போகத்திலேயே முக்கிய விருப்புள்ளவராய் * சிச்நோதரபராயணராய் அயன் அரன் இந்திரன் முதலாயுள்ள மற்றதேவர்களையும்விஷ்ணுவுக்குச் சமமாகநினைத்துச் சுகதுக்கங்களையனுபவித்து வீண்கருமங்களைப்புரிந்து விதிவிரோதமானஆஹாரத்தையும்தக்ஷிணையையுங்கைக்கொண்டு மக்கள் தேவர் நரகரதுகதிகளில் மாறிமாறி உழன்று ஒருகால்விஷ்ணுவையும்மற்றொருகால் அயனையும் பின்னொருகால்சிவனையும் இன்னொருகால்இதரதேவர்களையும்சிற்றின்பவிருப்பங்காரணமாகப்பூஜித்து விபரீதம்வரும்போது அதைப்பொறுக்கமாட்டாமல் அலைந்துதிரிபவரேராஜஸரென்பவர். தாமஸரோ அவரினுங் கேடராய்அலையாநின்றனர்.

இவ்விதம் உலகம் மூன்றுவிதமாகையில் அவர்களில் சாத்விகமனிதர் ஆங்காங்குத்திவ்விய தேசந்தோறும் வாசம்புரிந்து சதா சற்குணசாகரரும் குற்றமற்றவரும் வேதவேத்தியருமாய்த் திகழும் திருமணாளனைத்தினந்தோறுஞ் சோம்பலின்றி அடைந்து அந்தத்தில் மீளாக்கதியாகும்வைகுந்தத்திற்களாகின்றனர். வாராய் வராங்கே! இங்ஙனம் யான் இயம்புவதைப் பரிசுத்தமான மனத்துடன் கேட்டிடுக. ஸ்ரீரங்கம் வேங்கடாசலம் ஸ்ரீமுஷ்ணம் யாதவசைலம் இத்தலங்களில் வசிப்பவர் ஐயமின்றி முக்திக்குஅருகராகின்றனர். அவற்றினும் தேவர் குழாம் கலந்துள்ள யாதவகிரியில் வீற்றிருக்கும் நரசிங்காகும்நாராயண பகவானைநமஸ்கரித்துள்ளவர்க்கு மோ

---

* சிச்நோதர பராயணர்—பெண்களைச்சேர்வதும் வயிறுவளர்ப்பதுமே கதியாயுள்ளவர்.

க்ஷம் கையிலுள்ள தென்றேகருதவேண்டும். இதில் எள்ளளவும்விசாரணை வேண்டுவதில்லை. அப்பர்வதத்தின்மகிமையையுரைக்கின்றேன் சாவதானமாய்க் கேட்டிடு. சுவேதத்தீவின்பூர்வபாகத்தில் விசாலமாகியும் விமலமாகியுமொருபர்வதமிருக்கின்றது. அதன்பக்கத்தில்எக்காலும்பாற்கடலின் அலைகள் மோதிக்கொண்டிருக்கின்றன. சந்தானம் பாரிஜாதம் சண்பகம் வகுளம் காட்டுவாகை பாதிரி வெள்ளிலோத்திரம்மலைமல்லிகை குருந்தம் முதலியமரங்கொடிகளும் இலக்குமிக்கு வாஸஸ்தானமாயுள்ளமந்திரங்களும் அடர்ந்துள்ளன. சுந்தரமானசுந்தரீவர்க்கமும்அங்கமெங்கும்சந்தனக்குழம்பைப்பூசியபுருஷோத்தமர்களும் நிராமயராய்நித்யதிருப்தராய் இஷ்டப்படி விளையாடித்திரிகின்றனர். அன்றியும் செவிக்கினிமையாய்க் கூவுகின்றடக்ஷிமிதுனங்களுள்ளதடாகங்கள்எங்கும்நிறைந்ததும்வண்டுகள் ஜங்காரஞ்செய்கின்றதும் நாநாவிதநாதங்களால் செவிக்குஆனந்தம்விளைக்கின்றவேணுமத்தளம்முதலானபலவாத்தியங்களைஇடைவிடாமல்இசைக்கின்றவிஷ்ணுப்பிரியராகியகந்தர்வகின்னரயக்ஷர்கள்நெருங்கியதும் வாயுபக்ஷநரும்நிர்மலருமானவாலகில் யாதிமுநிவர்கள் சேர்ந்ததும் பிரும்மானந்தம் விளைக்கின்றவேதகோஷம் எங்கும்பரவியதுமாகியஅந்தமலையின்மேல் ஜகத்தைச்சிருஷ்டிப்பவரும் ஜகத்காரண காரணருமாயுள்ள பகவான் முன்பொருகால் விளையாட்டினிமித்தம் பெரிய பிராட்டியாருடன் சுவேதத்தீவிலிருந் தெழுந்தருளி அமரரால் துதிக்கப்பெற்று விளங்குகையில், நான்முகக்கடவுள்சத்தியலோகத்திலிருந்து தேவர்களோடு அங்குவந்து பரந்தாமனை விதிப்படிவணங்கித் துதித்துப் பிரார்த்திக்கலாயினர். சுவாமின் தயாநிதே தீனபந்தோ ஜகந்நாதா! கலியுகத்தில் பூலோகவாசிகள் தயையற்றவரும் நிஷ்டுரரும் குரூரரும் சிச்நோதரபராயணரும் ஞானமார்க்கம் வழுவியவரும் குருபக்திகொள்ளாதவருமாய் அலைகின்றனர். தேவரீரால் படைக்கப்பட்டவராய்ப் பேரானந்தமடைதற்குரியவராய் அதனுபாயத்தை யுணராமல் துக்கோபாயத்தையே அனுசரித்து அலையும் வர்களை உஜ்ஜீவிக்கச் செய்யுமாறு முக்தியை அளிப்பதில் முக்கியமான திருவுருவோடு தேவரீர் அவனியின்கண் எழுந்தருளி வீற்றிருக்கப் பிரார்த்திக்கின்றேன் ; பிராசீனகுலத்திற் பிறந்தவரும் சுவல்பஞானியருமான பக்தர்கள் புண்ணியலேசத்தால்உம்மையொருபோது பக்தியோடு பஜனைபண்ணுவராயின் அவர்க்கு உமது சாயுஜ்யபதத்தைத் தந்தருளவேண்டுமெனவேண்டிக்கொண்டனர்.

திசைமுகனிவ்வணந்தெரித்தகாலையில்
கசமதுகவிழ்த்தவன்கருத்தினுன்னுற
வசையறுநகைபுரிந்தெதிரில்வைகுறும்
சசிமுகவிமலையைநோக்கிச்சாற்றுமால்.

(இ-ன்.) நான்முகக்கடவுள் இவ்வாறு சொல்லுகையில்குவலயாபீட மென்னும் குஞ்சரத்தைக்கொன்ற கோவிந்தன் காரியக்கருத்தோடுஅழகாக கைத்துத் தமக்கெதிரில் வீற்றிருக்கும் சந்திரன்போன்றவதன்முன்னபெரி யபிசாட்டியாரை நோக்கித் திருவாய்மலர்ந்தருளுகின்றனர்.

உஎ-வது அத்தியாயம்.

இதுவுமது.

ஓ மநோரமையே! பூர்வநிச்சிதமானரகஸ்யத்தைப் புகல்கின்றேன்கே ட்பாயாக. யானும் நீயும் நித்யராய் எக்காலும் பிரியாதவராய் ஞானம் கா ந்தி பலம் ஐச்வர்யம் தேயு பிரபாவம் பௌருஷம் வைபவம் மகாபூதிமுத லானவைகளுடன் கூடியவராய் ஸர்வகாலிகராய் விளங்காநின்றோம். உல கங்களில் என்னைவிட்டு நீ ஸ்ரீயுமன்று; உன்னை விட்டுநான் பிரபுவுமன்று. ஓ ஜகதீச்வரீ! உலகமனைத்திற்கும் நீ மாதாவும் யான் பிதாவுமாகின்றோம். ஆகையாலேதான் நீயிப்போது சதுமுகனால் துதிக்கப்பெற்றனை. இனி யென்னுடன் ரமித்துக்கொண்டு பூலோகத்தில் வசிக்கக்கடவையென்றுதிரு வாய்மலர்ந்தருளக் கேட்ட கமலாசனை புன்னகையோடு ஓமெனவொத்துக் கொண்டனள். அப்புறம் ஆயிரநாமன் அயனைநோக்கி வாராய் மதலாய்! பூமியின்மேல் புண்யதீர்த்தங்களும்க்ஷேத்திரமும்கோயிலும்வெகுவாயுண்டு. ஆயினும்அவையெல்லாம் கலியுகத்தில் கலிபாதையால் நாளளவில்நசிக்கின் றமையால் யாம் அவிடங்களில் வாசஞ்செய்திடோம். ஆதியில் எம்மால் சிருஷ்டிக்கப்பட்டு எம்மைப்போல் அசஞ்சலமாய்ப் பதுமகூடமென்னும் பேரும் பிரசித்தியும் பெற்ற பருவதமொன்றுண்டு. அதுஎமது ரூபத்தால் பாபரகிதமாய்ப் புண்யத்துக்கிருப்பிடமாய் ஸஜ்ஜனருக்கே முக்கியவாஸஸ் தலமாய்க் காவேரிக்குவட புறத்தில் யோசனை தூரத்தில் மூன்றுகுரோச விஸ்தாரமும் ஒருகுரோச உன்னதமு முடையதாய்ப் பாற்கடல்போன்ற பலதடாகங்களுள்ளதாய்விளங்குகின்றது. முநிவர்களின்புண்யவிபவத்தால் அங்குக்கங்கை தானே ஸாந்நித்திய மாகாநிற்கும். அதைக்கிருதயுகத்தில் புஷ்கரமென்றும் திரேதாயுகத்தில் பதுமசேகரமென்றும் துவாபரத்தில் ஆனந்தமயமென்றும் ஒருகாரணத்தால் கலியுகத்தில்யாதவகிரியென்றும்புரா ணங்கள் வெவ்வேறாய்ப் புகல்கின்றன. இவ்விதசைலத்தில் உன்னாலும் மகாரிஷிகளாலும் பூஜிக்கப்பெற்று வாசஞ்செய்யப்போகின்றேனென்று மொழிந்து அக்கணமேதேவியுடன் பெரியதிருவடியின் மேலேறிக்கொண்டு

அனந்தாழ்வான் முதலானபரிஜனங்களோடு மனத்திற்கினிமையானஅம்மலை யண்டைக்கு எழுந்தருளினர்.

வாராய் மலையரசன் மகளே! அதுநிற்க, அம்மலையின்மேல்அஹியென் னும் அபிதானமுள்ள அசுரனொருவன் வெகுநாளாய் விசேஷமான தீர்த் தங்களையெல்லாங்கைப் பற்றிக்கொண்டு முனிவர்களின் ஸ்நானபானத்திற் கும் இடங்கொடாமல் வாசம்செய்தனன். அவன் அங்கு எம்பெருமாட்டி யுடன் கருடாழ்வான்மேல் எழுந்தருளிய நாராயணபகவானைக் கண்டுவெகு ண்டு பிராட்டியின் புயங்களிலும் மார்பிலும் பாணங்களைச் செலுத்த, ஆக் கல் அளித்தல் அழித்தலாகிய முத்தொழிலும் புரிகின்ற அவ்வுலகமாதா மிகக்கொதித்து மூன்றுவிழியோடும் எட்டுப்புயத்தோடுந் தோன்றிப்பரபரப் புடன்சார்ங்கத்தைக்கரத்திற்பிடித்துக் கண்ணனைநோக்கித் தேவரீர்சும்மா விருமென்று சொல்லியருளி அசுரனுடன் அமராடுகையில், அவன்கோபத் தால் உடலஞ்சிவந்து தாயாரையுருட்டி விழித்துச் சத்திரம் அத்திரம் சிலை மரம் ஆகிய இவற்றை யிடைவிடாமல் பொழிந்தான். அங்ஙனம் அசுரகா தகியாரும்அவனை மலர்ந்த பார்வையால் மருளவிழித்து உங்காரஞ்செய்து அடநிசாசரா! இப்போது உனது பராக்கிரமத்தைச் சற்றே வெளியிடுபார் ப்போம்; பிரும்மருத்திரர்வரத்தினால் கர்ஜிக்கின்றையோ, இங்கையே பார்ப்பவர்க்கெதிரில் உன்னை உயிர்நீங்கிக் கிடக்கச்செய்கின்றேனென்று வீரவாதத்தோடு போர்புரியுங்கால், திருமஞ்ஜளராகிய திருநாராயணரும்நா யகியபலத்தைச் சோதிக்கநினைந்து நான்முகனுதியரோடு வெறுமனே பார்த் துக்கொண்டிருந்தனர். அத்தருணத்தில் மகாகாயனாகிய அந்தத்தானவன் கோபாவேசங்கொண்டு மாயையில் மறைந்து பிரும்மாதிதேவர் முதலியயாவரையும் மோகிக்கச்செய்து கடலேழையும் தீவேழையும்மலையே ழையும்தாயார்தலையில் வர்ஷித்து மூவுலகத்தையும் அந்தகாரமாக்குகையில், அவன்மாயையின் மறைந்தமாதாவைத் தேவருங்காண்கிலர். பெருமாளும் இதென்னவென்று சிறிது சிந்தித்தனர். இவ்வாறு எம்பெருமானும் இதர தேவரும் எண்ணியதைக்கண்ட எந்தாயார், எக்காலும் இதயத்திலுள்ள மா மாயனாகிய மாதவனை மனத்திலிருத்தித்தமது மந்த்ரரத்நமயமாகியமாயாவித் தையையுச்சரித்து ராக்ஷஸமாயையைப்போக்கித்திசைகளைவிளங்கச்செய்து துரிதமாய்க்கேசவனிடத்துள்ள திருவாழியையுங்கேடகத்தையும்கைக்கொ ண்டு தமது கூந்தலைச் சேர்த்துக்கட்டிக் கேசரிபோல் கெர்ஜித்துத்தான வனிருக்கும் ஸ்தானத்திற்பாய்ந்து அவன்கேசத்தையொருமிக்கச்சேர்த்துத் தமதுதிருக்கரத்தால் பற்றிக்கொள்ள, அவன் லகுவாயெழும்பித்தாயாரைத் தூக்கிக்கொண்டு ககனத்திற்கிளம்பினன். அப்போது அனைவரும்பயந்து

ஹாஹாகாரம் புரிந்தனர். உடனே உலகமாதா அவன்கழுத்தைக் கரத்தா லிறுகப்பிடிக்கவே அவன் மூச்சுவிடமுடியாமல்நிராதாரனாய் மரணவஸ்தை யுடன் இரைந்து யதுசைலத்திலொருபாறைமேல்வீழ, எம்பெருமாட்டி யார் அவன் சிரத்தைச் சேதித்தெறிந்துவிட்டனர். அப்போதுநான்முகனு திவிண்ணவரும் மண்ணவரும் கண்ணனைப்பார்த்து அதிசயத்தோடுபிராட் டியின் மகிமையைப்பாரும்பாருமென்றுபுகழ, மணிவண்ணன் மாவலமுள் ளதானவன் மடிந்துகிடப்பதையும் மாமலராள் விக்கிரமத்தையுங்கண்டு மனம்பொங்கி அன்னையை ஆலிங்கனம்செய்துமானினீ! நீயிங்ஙனம் நல்ல சாகசம்புரிந்தனை; எனக்குமுன்னமேதெரியும்; இனியிளைப்பாறக்கடவை யென்று அன்புடன் மொழிந்து வைநதேயனைவிட்டிழிந்து யாதவபூதரத்திற் குடிகொண்டருளினர்.

கேளாய் கௌரீ! அவ்வாறு அகியென்னும் அசுரன் அழிந்தபின் அனை வர்க்கும் சுகமுண்டாயது. அம்மலையிலேயுள்ள தீர்த்தங்களும் யாவர்க்கும் உபயோகமாயின. அதுமுதலாக மகாலக்ஷ்மிதேவியார் அங்கே வாசம்புரி யும் அடியார்களுக்கு அனுக்கிரகஞ்செய்து நிசாசரனைக்கொன்ற சிரமத்தை ஆற்றிக்கொண்டிருக்கின்றனர். அசோகம் கதம்பம் அம்புஜம் புன்னை சுரப் புன்னை முதலான மலர் மணத்தோடு மந்தமாருதம் வீசுவதும் அளிகுலம்மரு மலரை மூக்கினாலுழுது நறுந்தேனைக்குடித்துப் பாடுவதும் சித்தகந்தர்வர் எந்நாளும் வசிப்பதும் பார்த்தற்கினிமையாய்ப் பச்சென்று தழைத்தவனங் களாலும் நருமதைபோன்றசரசுக்களாலும் மநோகரமானதும் மதுரமாயொ லிக்கின்ற பறவைமிதுனங்கள் உள்ளதும் உரகரும் தேவரும் உவப்போடுர மித்துக்கொண்டுதிரிவதுமாகியஅந்தக்கிரிதடத்தில் நான்முகன் தன்பிரார்த் தனைப்படி ஆனந்தமாய்ச் சேர்ந்து அனைத்தையும் கடாக்ஷித்துக்கொண்டு வசிக்கின்ற மாமலராளையும் மாதவனையுங்கண்டு களித்துத் தெண்டன் ஸமர்ப்பித்து மாதவா! கேசவா! சுவாமீ! இந்தயதுசைலத்தின்கண்யாவ ராலும் வெல்லவொண்ணாததானவனைத்தாயார் வென்றமையால்இதுஉத்தம மானதும் சர்வசம்பத்தும் விருத்தி செய்வதுமான இந்திராக்ஷேத்திரமெ ன்று உத்தேசிக்கப்படுகின்றது. இத்தலத்திலேயே யிவ்வுருவத்துடன் தே வரீரெழுந்தருளியெல்லோரையும்இரக்ஷித்தருள வேண்டுமெனப்பிரார்த்திக் க,எம்பெருமானும் அங்ஙனேயாகட்டுமென்றுசங்கசக்ரகதாபாணியாய் ஆதர வாய் அத்தலத்தின்கண் தேவியோடு வீற்றிருக்கின்றனர். கேளாயுமையே! சுயம் வியக்தனும் மகாதேவனும் அநாமயனுமாய் விளங்கும் நாராயணபக வானை அம்மலையின் மீது சேவிப்பவர் முக்தரென்பதற்குச் சற்றும் சந்தேக மில்லை. பிரயாகையைத் தீர்த்தராஜாவென்றும் யதுகிரியை க்ஷேத்திரரா

ஜாவென்றும் சொல்லுகின்றனர். அம்மலையின்மேல் இறக்கின்ற பசுபக்ஷி களும் விஷ்ணுசாரூப்பியம் பெற்று அங்கேயே வசிக்கின்றன. வேறிடங் களில் இருக்கின்ற விஷ்ணுபக்தர்களுக்கு வைகுந்தந்தவிர வேறுமோக்ஷம் கிடையாதென்பது நிச்சயம்; யதுசைலத்திலிறப்பவர்க்கு மதுசூதனன் வைகுண்டசுகத்தை அங்கையே அருள்கின்றமையின், அப்பர்வதத்தின் மேல்என்றும் அநேகமுக்தர்கள்வாசஞ்செய்திருக்கின்றனர். மகாப்பிரளயகா லத்திலும் அம்மலைக்குச் சிறிதுஞ் சேதமின்மையால் அதைக்ஷேத்திரமனைத் திற்கும் சிறந்ததென்று உணரவேண்டும்.

பூவைகுந்தமெனப்புகலும் பொருப்பிலுயர்ந்த பதியதனின்
தாவில்பதினாறுவது மேதலங்களயலின் பாதமுமே
மேவித்திகழும் மேன்மையினான்மேலோரெவரும் மிகவிழையுங்
காவிற்பொலியுங் காசிதனைச்சிறந்ததென்றுங் கழறுவரே.

(இ-ள்.) பூலோகவைகுந்தமென்று புகலத்தக்க மலைகளிலுயர்ந்த அந்தத்திருப்பதியினுடைய அழிவில்லாதபதினாறிலோருபாகமும் இதரதிவ் விய தேசங்களினதுநாலிலொருபங்கும் பொருந்திவிளங்குகின்ற மேன்மை யினால் பெரியோரெவரும் அதிகமாய் விரும்பப்பட்டசோலைகளால்விளங்கு கின்ற காசிக்ஷேத்திரம் உயர்ந்ததென்று உரைக்கின்றனர்.

ஸ்ரீமதேநாராயணாயநமஃ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

ஸ்ரீபாத்மபுராணத்திற்குள்ளிட்ட யாதவகிரிமாகாத்மியம்.

உ௫-வது அத்தியாயம்.

மாகமாகாத்மியம்.

வசிஷ்டபகவான், வாராய் அரசச்ரேஷ்டனே! யாதொன்றைக்கேட்பதாலேயேசகலதீவினைகளினின்றும்விலகுகின்றனரோ அத்தகைய மாகமாஸபலனைப் பகர்கின்றேன் கேட்பாயாக. முன்பு ராதந்தரகல்பத்தில் கிருதயுகத்தில் அகளங்கரும்பிரும்ம புத்திரருமான குத்ஸமுநிவர் கர்த்தமப்ரஜாபதியின் கன்னிகையை மணந்து வம்சவர்த்தனராகிய கௌத்ஸரைப்பெற்றார். அப்புதல்வர்க்குத்தந்தை அஞ்சாம்வயதில் உபநயனமும் பிரும்மோபதேசமும் புரிந்தபின் அவர் பிரும்மசர்யபராயணராய்த் தினந்தோறுங்குருகுலவாசஞ்செய்து சந்திகளில் அக்கினிகாரியங்களை இயற்றிமுக்காலும்நீராடிப் பிச்சையெடுத்துண்டு ஜிதேந்திரியராய்க் கிருஷ்ணாஜினம் தரித்துவேதம்மாதலில் விருப்பங்கொண்டு கேசாந்தமாயுள்ள காயம்படாத பலாசதண்டம் பிடித்து இடையில் மௌஞ்சியும் கையில் கமண்டலுவும் தரித்துவெள்ளிய கௌபீனமும் முப்புரிநூலுமுடையராய்ச் சுத்தராய்ச் சமித்தின்சுமையோடு துலங்கும் சிரத்தையுடையவராய்க் கண்டவர்கண்ணுக்குக்களிப்பைவிளைத்து மாதா பிதா குரு அந்நியராகிய விருத்தர்கள் பிரும்மவாதியரானயதீந்திரர்களாகிய இவர்களைநாடோறுநமஸ்கரித்துப்பிரும்மயஞ்ஞதரராய்அனுஷ்டான பரராய்ப் பவித்திரபாணியாய்த் தேவரிஷிபிதிர்தர்ப்பணம்புரிந்து புட்பசந்தனம் முதலியவற்றை யெப்போதுந்தொடாமல் மதுபிண்யாகலவணங்களையும் காரத்தையுந்துறந்து பாதத்திற்பாதுகை முதலியதொடுக்காமல் கண்ணுடியுங்காணாமல் தந்ததாவனதாம்பூலசிரோவேஷ்டனங்களை நீக்கி செம்மையும் கருமையும் பொன்மையுமான வர்ணமுள்ள வஸ்திரங்களையும் இன்னும் பிரும்மசர்யவிரதத்திற்குவிரோதமானயாவற்றையுந்துறந்து ஸதாசாரராய்ச் சாந்தராய்த்திகழ்ந்து காவேரியில் மகரமாசத்திலும் மாகமாசத்திலும் பக்தியோடு ஸ்நானம்புரிந்து சாந்திராயணாதிகிருச்சிரங்களால் சித்தசுத்தியும் தேகசுத்தியும் பெற்றுப் பச்சிம வாகினியான இக்காவேரியில்மகாமாசத்தில் மூழ்குதல் மனிதர்க்குத்துர்லபம்; ஆ! யான்பாக்கியவானுகையாலன்றோ எனக்குக்கிடைத்தது; சமுத்திரசங்கமமாகின்ற சகலநதிகளி

லும் மேற்காயும் வடக்காயும் பெருகுவது பிரயாகதீர்த்தத்திலும் விசேஷமென்று மேலோர் விளம்புகின்றனர். அதுயான் செய்தபூர்வபுண்யத்தால் இப்போது நேர்ந்ததாகையால் யான்கிருதார்த்தனானேன், கிருதார்த்தனானேன், கிருதார்த்தனானேனென்று மனமகிழ்ந்து அக்காவேரியில் திருகால ஸ்நானம் புரிந்தார்.

அவர் அங்கே மூன்று மாகஸ்நானஞ்செய்து அப்புண்யத்தால் பரிசுத்தாத்மாவாய் அவாவொழித்துத் தாய்தந்தையரிடத்துங் குருவிடத்தும்விடைபெற்றுத்தகுந்த விடஞ்சென்று தவம் புரியத் துணிந்து காவேரிக்குவடபறத்தில் யோஜனை தூரத்திலுள்ள நாராயணகிரியைக்குறித்து நடந்தார். அந்த மலையின்பெயரைவாயால் புகன்றமாத்திரமே பாவமெல்லாம் பறக்கின்றன. அது ஆகாயமளவும் உன்னதமான கொடிமுடிகளாலும் தாழ்வரைகளாலும் பார்ப்பதற் கினிமையானபழங்கள் பழுத்துத்தொங்கும் பாதபங்களாலும் மிருகங்களும் மலைப்பாம்புகளும் பக்ஷிகளும்யக்ஷர்களும்கூட்டங்கூட்டமாய் உலாவுகையாலும் தரையெங்கும் வெகுவாய்ப்புட்பித்தகொடிகள் மூடிப்படர்வதாலும் இளந்தென்றல் எக்காலும் வீசலாலும் சீதளோதகம்சேர்ந்துளதாலும் மதுகரங்கள் மலரிலுள்ள மது[illegible]த்து மதுரகீதம் பாடுவதாலும்மநோகரமாய்த்திகழ்கின்றது. அன்றியும், அதன்குகைகளிலெல்லாம் கருங்குயில்கள் காதிற்கினிமையாய்க் கூவிக்கொண்டிருக்கும். கந்தர்வர் கரும்பையுங்கைப்பிக்கின்ற கானம்செய்குவர். மயூரங்கள் எங்கும் கும்பல் கும்பலாய்த் தோகையை விரித்தாடித் திரிந்திடும். கின்னரேசரும் மின்னுகின்ற குண்டலதாரிகளாய் நன்னயமாப் பாடித்திரிகுவர். அரசு இறளி பில்வம் திலகம் கொன்றை புன்கு சந்தனம் தினிசம் கர்ச்சூரம் சாப்புன்னை தெங்கு சூதம் பனசம் பாடலம் மருதம் வீளாதிந்திருணி வேம்பு வாழை மாதுளை முதலான மலர் மாறாத நாநாவித விருக்ஷங்களும் நிறைந்துள்ளன. மற்றும் அதனிடையே கலியினாலுண்டாகுங் கல்மஷத்தைக் கடியத்தக்க ஜலமுள்ளதும் அடைபவர் இஷ்டத்தை அளிக்கவல்லதும் அலைகளில் அசைகின்ற கமலத்திலுள்ள ஹம்ஸபக்ஷிகளின் வரிசையால்கண்டவர்க்குக் களிப்பைவிளைப்பதும்கலியாணதீர்த்தமென்றுவழங்கத் தக்கதுமான பொய்கையொன்றுண்டு.

அவ்விதம் சென்ற கௌத்ஸர் அப்பொய்கையையடைந்து மாகஸ்நானஞ்செய்து அதன்மேற்குக்கரையில் அசையாத தீபம்போலும் கல்லைப்போலும் கட்டையைப்போலும் சலியாதிருந்து கொடுமையான புலனைந்தையும் ஒடுக்கி உள்ளும் புறம்பும் மேலுங் கீழுமுள்ள அனைத்துந் தன்மய

மாய் நினைத்து நிஷ்டையோடு கடுந்தவமிழைக்கையில், தாகத்தால்தண்ணீர் பருகவரும்மிருகங்கள்அவரை நட்டுவைத்த கட்டையென்று நினைந்து தினவினால் தந்தேகத்தை அவர்மீது தினந்தோறுந்தேய்த்துக்கொண்டுசெல்லும். அவர் அவ்வாறு நெடுநாள் அருந்தவம்புரியாநிற்க, ஜகன்மூர்த்தியும் ஜநார்த்தனனுமான பகவான் அவர் இதயத்தில் வீற்றிருக்குமாறு எதிரிலும்ஆவிர்ப்பவித்துமகாஞானியாகும்மிருகசிருங்கரே! மாதவனாகியயாம்உமதுமாதவத்தால் மனமகிழ்ந்தோமென்று மொழிந்துதவகியின்பிரும்மரந்திரத்தைத்தமது திருக்கரத்தால் பரிசித்தருள, அவர்கண்திறந்து சமாதியைவிட்டு ஆயிரம் சூரியர்போல் காந்திவீசும் மகுடத்தோடு தமக்கெதிரில் தரிசனந்தரும் புருஷோத்தமனைக்கண்டு பரபரப்பாயெழுந்துசாஷ்டாங்கமாய்வணங்கித்துதிக்கலாயினர். நாராயணா நளினாயதலோசனா நாதா பணிராஜவாகனா நாயகி வீற்றிருக்கும்நாளத்தையுடையநளினமலரால்விளங்குந்திருமார்பா நீருண்டமேகம்போல்அழகியதிருமேனியுள்ளபரமா? தேவரீர்க்குத்தென்டன்ஸமர்ப்பிக்கின்றேன்,

* ஓநமோவாசுதேவாவுலகினையுருளுமாயா
மாநிலத்தருமநாட்டமனந்தனக்கியையும்வண்ணம்
ஊனமிலுருவங்கொள்ளுமொருவனேதொழில்கண்மூன்றும்
மானதமதனாற்செய்யுமாயவாபோற்றிபோற்றி. ... ... (க)

உலகமுற்றுமுதரந்தன்னுளொன்றியுங்கிடந்திட
இலகுமோரிலைத்தலத்திலின்றுயில்புரிந்திடும்
அலகிலாதஞானரூபசாந்தரூபவானந்த
நிலைகெடாதநின்மலாவுன்னிள்கழல்கள்போற்றியே. ... ... (உ)

இச்சைக்கதினமான சரித்திரா நிரீசா ஈச்வரா மோக்ஷத்தை விரும்புவோர்க்கு அம்முக்தியை யளிக்கும் முதல்வா பக்குவசித்தயோகிகளுடைய மனமலரில்வசிக்கும்மாயவா ஸமஸ்தசராசரங்களிலுந் தேயுவால்வியாபித்

---

* (இ-ள்) ஓம் நம: வாசுதேவா உலகங்களைக்காப்பவரே உலகத்தில் தருமத்தை நிலைநாட்டுதற்கு மனதிற்கியைந்தஉருவமெடுப்பவரே ஒப்பற்றவரே மூத்தொழில்களையும் மனதினாற் புரியும் மகாசக்தியுள்ளவரே! வந்தனம், வந்தனம். பிரளயகாலத்திலுலகங்களையெல்லாம் உதரத்தில் அடக்கிக்கொண்டுஓராலிலையில்இனிமையாய்ப்படுக்கின்றஅளவிடற்கரியஞானஸ்வரூபியே! சாந்தரூபியே! ஸதாநந்தராகிய நின்மலரே! தேவரீரது பெருமைதங்கிய திருவடிகளைவணங்காநின்றேன்.

திருக்குந்திருமணாளா விச்வாதிகா மகத்துக்குமகத்தும் அணுவுக்கு அணுவு மாய்விளங்கும் அண்ணலே உபநிஷத்வாக்கியங்களால் துதிக்கப்பட்ட பா தாம்புயத்தா அபாரகோரஸம்ஸாரஸாகரோத்தாரகா! தேவரீர்க்குவந்தனம், வந்தனம்; லோகநாதா லோகாதீதா பரம கலியாண நிதியே பரமாத்மாவே அச்சுதா அப்ரமேயா ஆயிரஞ்சிரத்தா நிர்க்குண சந்ததம்விளங்குந்தேவகீநந் தன புண்டரீகாக்ஷா அனந்தா விஷ்ணுவே திருமூர்த்தி அறுவிதசக்தா! நமோநம:; உலகமனைத்திற்கு மினியவுத்தமா சந்ததஜயசீலா சங்கசக்ரகதா பத்மதாரியே லோகதாரியே பிரகாசிக்கின்றகிரீடகேயூரமகுடாங்கததாரியே! நமோநம: ; நிர்த்வந்துவா நிராசா நிர்விகாரா! நமோநம: ; சரண்யா! சரணாகதனானவென்னைக்காத்தருளும். நீரேசகலபூதங்கட்கும் அடையத் தக்க அருங்கதியாகின்றீர். என்மனம் தேவரீரது திருவடியில் அழுந்து மாயின் பின்பு ஒருபோதும் சஞ்சலமுறாது. யான்தேவரீரையே சரண மாயடைந்தமையின் அடியேனுக்கும் அவ்வண்ணம்அருள்செய்திடுக. நமோ நம:, பூயோ பூயோநமோநம:.

இன்னவாறரியையடிக்கடிவணங்கியிருகரஞ்சிரந்தனிற்குவித்து
மன்னுமானந்தவருபுனலிரண்டுவிழிகளின்மாறிடாதொழுக
மின்னுமாமேனிமயிர்சிலிர்ப்படையமேகமுங்கருவிளைமலரும்
பின்னிடுங்கரியமேனியனெதிரிற்பேசிடாதிருந்துளமகிழ்ந்தான்.

(இ-ள்) இவ்விதமாயிருகரத்தையும் தலைமேற் கூப்பியெம்பெருமானை அடிக்கடி நமஸ்கரித்து ஆனந்தத்தால் வருகின்ற அதிகஜலமானதுஇரண்டு கண்களினின்றும் ஓயாமலொழுகத் தவத்தால் விளங்காநின்ற தந்திருமேனி மயிர் சிலிர்க்கவும் காளமேகமும் கருவிளைமலரும் தோற்கப்பட்ட கரியதிரு மேனியையுடையகண்ணனுக்கெதிரில் மகிழ்ச்சியோடு பேசாது நின்றார்.

உ௯.வது அத்தியாயம்.

இதுவும் அது.

வாரீர் மிருகசிருங்கரே! இங்ஙனம்நீர்செய்தஸ்தோத்திரத்தாலும் இப் புண்யதீர்த்தத்திற் செய்தமாக மாஸஸ்நானத்தாலும் தவத்தாலும் யாம் மிக மகிழ்ச்சியடைந்தோம். நீர் அதிக வருத்தமுற்றீர். யாம்மாகமஜ்ஞனத்தால் அடையும் ஆனந்தம்போல் தக்ஷிணையாற்சிறந்தயாகத்தாலும் இதரமானதா னத்தாலும் நியமத்தாலும் யமத்தாலும் அடைந்திடோம். உமக்குவேண்டிய

வரத்தைப்பின்பு கேளும் தருகின்றோம். எமக்கு இதயங்களிக்குமாறு எம தாணையையிப்போது பரிபாலித்திடும். மூநிவர்கள் பிரும்மசர்யத்தால் சந் தோஷிப்பதுபோலும் தேவர்கள்யாகத்தால் ஆனந்திப்பதுபோலும் பிதிர்க் கள் பிரஜைகளால் மகிழ்கின்றமையின், நீர் விவாகத்திற்கே விசேஷமாய் முயற்சிசெய்யவேண்டும். இதுவேயெமக்கிஷ்டம். இதுவேயெமக்குப்பிரி யம். எமதிஷ்டத்தின்பொருட்டுநீர்மணம்புரியவேண்டும். வருஜனனத்தில் பிரும்ம புத்திரராய்ப் பிறந்து மகாஞானியாய் ஜீவன்முக்தராய் ருபுவென் னும் பெயரோடு வேதாந்தவாக்கிய ஞானத்தைநிதாகருக் குபதேசிக்துப் பின்பரமபதத்தை யடைந்திடுவீர். இதற்கெள்ளளவும் ஐயமில்லையென்று திருவாய்மலர்ந்தருளிய தேவதேவரும் கிருபாநிதியுமானபெருமானைநோக்கித் தேவதேவா ஜகந்நாதா சகலதேவராலும் வணங்கப்பட்ட நாராயணா அடை பவர் துயரை அழித்தாளும் அண்ணலே அச்சுதா! தேவரீர் இவிடத்தில் எக்காலும் எல்லோர்க்கும் இஷ்டத்தை யீந்து சகலசெந்துக்களுக்கும் சகல சம்பத்தையும் தந்துவீற்றிருக்கும்வரமொன்று அடியேனுக்குத் தந்தருள வேண்டுமெனப்பிரார்த்திக்க, எம்பெருமான்ததாஸ்து; யாம் இவிடத்தி லேயே வசிக்கின்றோம்; இத்தலத்தில் எம்மை அர்ச்சிப்பவர்க்கு எல்லாச் செல்வமும் கையிலுள்ளதென்றே கருதவேண்டும். விசேஷமாய் இக்கவி யாணியில் மகரமாதத்தில் நீராடு வோர் தீவினையாவையும் தொலைந்து திவ் வியமான எம்பதத்தைச் சேர்கின்றனர். வியதீபாதம்அயனம் சங்கிரமணம் பர்வம் அமாவாச்யை சந்திரசூரியக்கிரகணங்களாகிய இக்காலங்களில்இத் தீர்த்தத்தில் மூழ்கி யதாசக்திதத்தஞ் செய்பவர் பரமபதத்திற்கொண்டாடப் படுவரென்று மொழிந்தருள, மற்றுங் கௌத்சர், பக்தபராதீனராகியபரமாத் மாவே! குத்ஸபுத்திரனாகையால் கௌத்ஸன் என்று விளம்பத்தக்கயான் மிருகசிருங்கனென்னும் பேர்பெற்றதன் காரணத்தை உமது பக்தனாகு மெனக்கு உரைத்தருள வேண்டுமெனப்பிரார்த்தித்தனர். அதற்குஎம்பெரு மானும் நீர் கல்யாணதீர்த்தக்கரையில் தவம்புரியும்போது அங்கேநீர்குடிக்க வரும் மிருகங்களெல்லாம் அச்சமின்றித்தினந்தோறும் உமது தேகத்தில்தின வினால் உராய்ந்து சென்றதால் இருடிகளுமக்கு மிருகசிருங்கரென்றும்பே ரிட்டனர்; இனியிந்நாமமே யுலகத்தில் பிரசித்தி பெறட்டுமென்று வழங்கி யருளி நாராயணகிரியில் இப்போதும்தம்மைவணங்குவோர்க்குயாவையுங் கிருபைசெய்து வீற்றிருக்கின்றனர். அதன்பின்மிருகசிருங்கர், பெருமானைப் பூஜித்து விடைபெற்று மலையினின்றும் புறப்பட்டுத்தமதுஇருப்பிடத்திற்குச் சென்று லோகோபகாரமாயிரண்டாவது ஆச்ரமத்தைவகிக்க இச்சித்துஆதி மூலமாகிய அம்புயநேத்திரனை அந்தரங்கத்திலிருத்தி மௌஞ்சிமான்றோலும்

தண்டகமண்டலுவுந்தரித்து ஜிதேந்திரியராய்ப்போஜராஜன்புரமாகியதமது வாஸஸ்தானத்தை யடைந்தனர். இவர்தமது கிரகத்துக்கு வருவதன் முன்னமே மிருகசிருங்கரென்னுங் காரணப்பெயர் காசினியெங்கும் பரவியது. அவ்வாறு போந்தவர் தாய்தந்தையர் பாதங்களில் தண்டம்போல் வீழ்ந்து சாஷ்டாங்கமாய் விதிப்படி வணங்கித்தம்பெருமையைமொழிய, அவர்கள் அவரை மார்போடுதழுவி மேன்மேலும் உச்சிமோந்துஆனந்தபாஷ்பம் பெருகமகிழ்ந்தார்கள். மற்றுந் தங்குருவை வணங்கிவேதமோதும் விருப்புள்ளவராய்த் தாய் தந்தை குருபூஜையில் ஆசக்தராய் ஆசான் அனுமதியால் அகிலவேதங்களையும் ஓதியுணர்ந்து விரதஸ்நானமும் உத்ஸர்க்கமும் விதிப்படிமுடித்துப் பிதாவை வணங்கிப்பேசத்தொடங்கினர்.

எனது ஐயனே! புத்திரன் பிறப்பதால் மாதாபிதாக்களுக்கு நேருங் கிலேசத்தை அவர் சகித்தாலும் அப்புதல்வன் அதற்குப்பதிலுபகாரம்செய்வதற்கு வருஷசதம் முயன்றாலும் வல்லவனாகான். ஆயினும் பெற்றவர்க்கும் குருவுக்கும தம்மாலியன்றமட்டும் பிரீதிபுரியவேண்டும். இம்மூவரும் துஷ்டியடைகுவரேல், எல்லாமேன்மையும் கைகூடுமாகையால் அவரது கைங்கரியமே உயர்வானதவமென்று உணரத்தக்கது. அவரை அதிக்கிரமித்துச் செய்கின்றதவம் ஒருபோதும் சித்திடெறாது. புத்திசாலிகள் இம்மூவரையும் பூஜித்து மூன்றுலோகத்தையும்ஜயிக்கின்றார்கள். இத்தருமமேசதுர்வித புருஷார்த்த மென்றும் இதரமானவை உபதர்மமென்றும் உரைக்கின்றனர். ஒருவன் வேதம் முழுதும்ஓதாவிடினும்இரண்டாயினும் ஒன்றாயினும் தகப்பனிடத்திலோதிய பின்பே பிரும்மசர்யத்தைநீக்கி யில்லறத்தைத் தழுவவேண்டும். அகமுடையாள் அனுகூலமாயிருந்திடின், இல்வாழ்க்கையினும் ஏற்றமானதொன்றுமில்லை. தம்பதிகளின் ஒற்றுமையே தர்மார்த்தகாமங்களுக்கு ஏதுவாகின்றது. ஒருவனுக்குக்களத்திரம் அனுகூலமாயின் இல்வாழ்க்கை, சுவர்க்கமும் பிரதிகூலமாயின் நரகமுமாகின்றது. இல்லறம் வகிப்பது இன்பத்தின்பொருட்டு; அவ்வின்பமும்இல்லவள் மூலமாகவேயாகின்றது. மனைவி வணக்கமுள்ளவளாய் அமைந்திடின் அறம்பொருள்இன்பமும் உண்மையாய் வாய்ந்திடும். சிலமந்தபுத்திகள் பெண்டுகளைச் சளுகத்திற்கு ஒப்பாக உரைக்கின்றனர்; அதை நன்றாய் ஆராயுமிடத்து அங்கனைமார்க்கும் அட்டைகளுக்கும் அதிகதாரதம்மியம் ஆகின்றது. அட்டை உதிரத்தைமட்டும் உறிஞ்சிவிடும்; பெண்டுகளோ மனம் பணம் பலம் சுகம் முதலான சகலத்தையும் அபகரிக்கின்றனர். சாமர்த்தியமுள்ளவளும் சாதுவும் பிரஜையுள்ளவளும் படுவாயும் பிரியமாயும்

பேசுபவளுமாயிருப்பவள் சீதேவிக்கொப்பானவள். சமகுலத்திற் பிறந்து சாதுலக்ஷணமுள்ளவளையேமணம்புரியவேண்டும். அன்றியும் அந்தணர்கள், தர்மவிருத்தியின் பொருட்டு மாதிர்பிதிர்வம்சத்திற்கு அஸகோத்திரையான கன்னிகையையே கலியாணஞ்செய்யவேண்டும். ஸ்திரீசம்பந்தத்திலும் அபஸ்மாரம் க்ஷயம் குஷ்டம் இவ்விதரோகவம்சத்திற் பிறந்தவளையும்அதிக வயதானவளையும் கன்னிகையிடத்துஉதித்தவளையும்கடியவேண்டும். நோயற்றவளும்உடன் பிறந்தோருள்ளவளும் சுமுகியும் சந்திரன் போன்றவதனமுள்ளவளும் மென்மையாய்ப்பேசுபவளுமானபெண்மணியையே மணக்கவேண்டும். மலை நக்ஷத்ரம் நதி சர்ப்பம் ஆகிய இவற்றின்பெயரும் அயலார்வம்புக்கு அழைக்கும் அபிதானமும்பிரேதபூதங்களின் பேருமுள்ள பெண்களும் சரீரம் மிகப்பெருத்தும் மிக இளைத்தும் மிகவுயர்ந்தும் மிகத்தாழ்ந்தும் ரோமமேயின்றியும் அதிகமாய்முளைத்தும் மென்மையின்றிக்கடினமாயுமுள்ள காரிகைகளும் தலைமயிர்தடித்ததையலாரும் வேதியர் விவாகம்செய்தற்கு உரியவராகார். ஒருவன் மோகத்தால் இழிகுலமாதை மணந்திடின், அதனால் அவன் குலம் அய்யமின்றித்தாழ்ந்துவிடும். இவ்வித இலக்கணங்களைப் பரிக்ஷித்துச்சுலக்ஷணையும்சுசீலையுமான சுந்தரியைக் கலியாணம் புரிகின்றகணவன் தீர்க்காயுளுடன் நீடூழிவாழ்வனென்று மனுவும் அகஸ்தியரும் புகன்றனர். மற்றுமுள்ள பெரியோரும் இவ்விதமே புகல்கின்றனர். என்அப்பனே! இப்படிப்பட்ட மனைவியிப்போதுஎங்கேகிடைத்திடுவளென்றுஇயம்பியமகனதுவேதோக்தமானமதுரவசனத்தைக்கேட்டகுத்ஸர் மனமகிழ்ந்து வழங்காநின்றனர்.

பத்திபிற் சிறந்தவுத்தமனே! நீயிதுவிஷயத்திற்சிறிதும்சிந்திக்கவேண்டாம், இத்தன்மையான ஆசாரசீலனாகு முனக்குங்கிடைக்காத பொருள் உலகத்திலுண்டோ? அநாசாரனும் மந்தனும் மாகஸ்நானம்புரியாதவனுமான மனிதனுக்கன்றோ அப்படிப்பட்ட அங்கனைமார்அகப்படார்? அதிதிபூஜை செய்யாதவனும் ஏகாதசிவிரதம் ஏற்காதவனும் பிராம்மணவிச்வாசமில்லாதவனும் தாய்தந்தையர் பால் பக்தியற்றவனும் ஆசாரியனை அவமதித்தவனும் பசுக்களைப்பரிபாலிக்காதவனுமானஅசடனுக்கன்றோஅத்தகையபெண்மணி கிடைப்பது அருமை? தெய்வபிதிர்காரியத்தைவிட்டவனும் உதவாமலுண்பவனும் தானதர்மமில்லாதவனும் ஓமஞ்செய்யாமலுண்பவனும் கோபிசந்தனக்குறியில்லாதவனும் திருத்துழாயைச் சிரசாவகியாதவனும்கங்காதிதீர்த்தம் ஆடாதவனும் மகாவிரதம் புரியாதவனும் அதன்பெருமை அறியாதவனுமான ஆண்மகனுக்கன்றோ அத்தகைய அங்கனைஅகப்படாள்? காவேரியில்

மூழ்காதவனும்பலகற்றோம்யாமென்று கருவிப்பவனும்ஞானமுமின்றிவீண் அகங்காரங்கொள்பவனுமானமனிதனுக்கன்றோ அவ்விதமானகாரிகைவாய்த்திடாள்? கேளாய்கண்மணியே! மாகமாசமகிமை களங்கமற்றகல்வியையும் புகழையும் ஆரோக்யத்தையும் இந்திரபதத்தையும் ஈந்திடலால், இன்னும் எவற்றைத்தான் தாராது? அது சௌபாக்கியம் ஆசாரம் புத்திர போகம் சற்சகவாசம் சத்தியம் ஔதார்யம் பிரசித்தி சௌரியம் பலம் ஆகிய இவற்றையெல்லாந்தருகின்றமையின், பின்னும் எவற்றைத்தான் தாராது? அது புஷ்டியையும் பசுக்களையும் உத்தமவாக்கையும் அச்சுதனடிகளில் அசஞ்சலமானபக்தியையும் களத்ரபாக்யத்தையும் கமநீயரூபத்தையுங் கொடுப்பதால், இன்னும் ஏதேதுதான் உதவாது.

புண்டரீகவிழிமலர்ந்தபூமகட்குநாயகன்
மண்டலத்தினனைமாடுமாகமாதமாந்தர்கள்
கொண்டவண்ணமெந்தவண்ணமந்தவண்ணங்கொண்டருள்
அண்டரும்பெறற்குரூதவாறுவந்தளிக்குமே. ... ... (க)

இத்திறத்தவுண்மையாகுமீன்றவன்மொழிந்தசொல்
எத்திறத்தினுஞ்சிறந்ததென்றுகொண்டுபின்னையும்
அத்திறத்ததாதைபாதமன்புடன்வணங்கியே
எத்திறத்தபோழ்துமாலையெண்ணிநின்றிலங்கினன். ... ... (உ)

(இ-ள்.) தாமரைமலர்போல்அகன்றபார்வையையுடையதிருமணாளன் பூவுலகின்கண் மாகமாதஸ்நானம் புரிகின்றமனிதர் எந்தப்ரகாரம் நினைக்கின்றனரோ அந்தப்ரகாரம் அருள்சுரந்து தேவர்களும் அடைதற்கருமையான பேற்றை மகிழ்ந்து அளிக்கின்றனர்.

இவ்விதமான தம்பிதா உரைத்த சத்தியவசனத்தை எல்லாவற்றினும் மேலானதென்றுகொண்டு மற்றும் அப்படிப்பட்ட பிதாவின் அடியை அன்போடு தொழுதுஎக்காலத்தும் எம்பெருமானைத்தியானித்துக்கொண்டு விளங்கினர்.

ஸ்ரீமதேநாராயணாயநமஃ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

இஃது பாஞ்சராத்ரத்தில் ஸாத்வதஸம்மிதையில் புவனகோசத்தில்ஸ்வயம் வியக்தஸ்தல நிர்ணயபடலம்.

ஓ நான்முகனே! இனிப்பூலோகத்தின் விஸ்தாரத்தை இயம்புகின்றேன் கேட்டிடுக. இப்பூமி, சுற்றளவோடு பஞ்சாசத்கோடியொஜனை விசாலமுள்ளது. இதில் தீவேழுங்கடலேழுந் திகழ்கின்றன. இந்தக்கடலெல்லாம் கணையாழியைப்போல் காசினியைச் சூழ்ந்திருக்கின்றன. பூமியின்மத்தியில் ஜம்பூத்வீபம் லக்ஷயோஜனைவிஸ்தாரமும் அதைச்சூழ்ந்த கடல் அவ்வளவும் அதன்மேலுள்ள தீவுகள் ஒன்றினொன்றுஇரட்டிப்பான விசாலமுமாய் விளங்குகின்றமையின், பூமி த்வீபசமுத்திரங்களால் இரண்டு பாகமாக வகுக்கப்பட்டிருக்கின்றது. அவனியின்மத்தியில் ஒருலக்ஷயோசனையுயரமுள்ள மேருமலை நூறு நூறு யோசனையுயரமுள்ள நூறுயிரம் சிகரங்களோடு தாமரைமலரிடையில்கர்ணிகையைப்போல் அசையாது விளங்காநின்றது. அதைச்சூழ்ந்து அவ்வளவுகொண்டபக்கமலைகளிருக்கின்றன அதிகவிஸ்தாரமான அதன்மேற்புறத்தில் இருபத்துநாலாயிரம் யோசனை அளவுள்ள பிரும்மபுரி அசலாம்புயத்தின் கோட்டையைப்போல் பிரகாசிக்கின்றது. அதைச்சுற்றிலும் கிழக்கு முதலானதிக்குவிதிக்குக்களில்முறையே இந்திரன் முதலான லோகபாலரின்பட்டணங்களும் நூறுயோசனை விசாலத்தோடு முன்னிட்டிருக்கிற எம்பெருமான்மூர்த்திபேதங்களின் புரங்களும் விளங்குகின்றன. சைலங்களின் சந்துகளில் சித்தசாரணர் வசிக்கின்றனர். பூலோக சுவர்க்கமென்று சொல்லப்பட்டஇவைகள்பாவிகளுக்குத் துர்லபங்களாகையால் அகிருத்தியஞ் செய்கின்றதைத்தியதானவகின்னரர்கள்அடையத்தக்கவையன்று. கேளாய் திசைமுகனே! ஞானமூர்த்தியாய்த்திகழும்ஹயக்கிரீவர்பத்ராச்வமென்னுமிடத்தில் சுயமாய்விளங்காநின்றனர். அங்கு எப்போதுங் கிருதயுகமாகவேதர்மம் நான்கு பாதத்து ன் தங்காநின்றது. அவிடத்தில் சர்வகாலமும் விஷ்ணுத்யானமும் அர்ச்சனையுமேயன்றி வேறொன்றும்இன்று. மேருவுக்குத்தென் திசையில் ஒன்பதினாயிரம் யோசனைவிசாலமுள்ள சைலராஜாவானஇமயமலையிருக்கின்

றது. அதன்கண் மனிதர் சுவர்க்கமோக்ஷபலன்களைப் பெறத்தக்க க்ருமங்களைச் செய்தற்கு உரியவராகின்றனர். அதன்தென்புறத்தில்அருவிபெருகாநின்றவையும் சிங்கம் மஹேந்திரம் விந்தியம் மலயம் ஸ்ரீகிரி மாலியவான் சித்ரகூடம் கிஷ்கிந்தம் வேங்கடாசலம் நாராயணகிரியென்னும்பேருள்ளவையுமானபத்து மலைகளிருக்கின்றன. ஆங்காங்குமலைகளும்நதிகளும்புரங்களும் கிராமங்களும் அநேகமாய் அடர்ந்திருக்கின்றன. மற்றும் சுயதர்ம நிரதரானமறையோர்களும் பிரஜைகளைக்காக்க வல்லபூபாலருமுதலானஅவரவர்தொழிலில்வழுவாதநான்குவருணத்தோருமிருக்கின்றனர். இவ்விதமே நான்குவித ஆச்ரமமும் முன்னமேமொழிந்தேன். அவற்றை ஆசரிப்பவர் செய்யுங்கருமத்திற்குப்பலன்அதலாதி லோகங்களிற்கிடையாது. அவ்வுலகங்களில் மனிதற்கினிமையான மந்திரங்களும் சோலைகளும் ஆறுகளுமிருக்கின்றன. அழகிற்சிறந்தஅவயவமுள்ள நாககன்னிகையர் அநேகமாயிரவவசிக்கின்றனர். நாகரத்நங்களின் காந்திஸ மூகத்தால் அல்லும் பகலும் அந்தகாரம் அடிக்கப்படுகின்றமையால் அங்கு வாசம்செய்வோர் ஓரிடத்திலும் சூரியசந்திரராயிச்சிப்பதேயின்று. அவ்வுலகங்கள்முக்தராலும்விரும்பத்தக்கவை. அங்குள்ளவர் எந்தவஸ்துவைப்போகிக்கஇச்சித்தாலும்அது அங்ஙனமே முகத்திற்கெதிரில் வந்து தோன்றும். அதைப்போல் எவ்வுலகத்துங்கிடைப்பதுஅரிது. அங்கேசுவர்க்கத்திலும் எண்மடங்கதிகமான போகமுண்டு. அதைஅரக்கரும் தைதேயரும் தானவரும்அனுபவிக்கின்றனர். அங்கு விஷ்ணுபகவான் தாமஸதனுவை வகித்து விளங்காநின்ற மஹாபுரத்தில் சர்ப்பங்களாகிற பரிஜநத்தோடு வீற்றிருக்கின்றார். அதலமுதலான ஏழுலோகங்களுக்கும் ஆதிசேஷனே ப்லவந்தராய் விளங்காநின்றனர். அவரை மஹரிஷிகளெல்லோரும்அனந்தனென்று பிரசித்தமாய்ப் புகலுகின்றனர். அம்புயத்திற் பிறந்த அன்னவூர்தியே! அம்புவியிலுள்ள முக்திக்ஷேத்திரங்களைமொழிகின்றேன்கேட்பாயாக. மேருமலைக்குத்தென்புறத்திலுள்ள ஜம்பூத்வீபத்தில் அங்கங்கே முக்திக்ஷேத்திரங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளில் பரமபுருஷன் அநேகமூர்த்திபேதமாய் வீற்றிருக்கின்றனர். ஆங்காங்கு ஸ்ரீமந்நாராயணனோடுகூடுமுதாதிகணங்களும் சக்ராதிஆயுதங்களும் ஸ்ரீபூமியர்கிய தேவிமாரும்சேனைமுதலியாரும்கெருடபகவானும்சேர்ந்திருக்கின்றனர். சுவர்மிக்கும்பரிஜனங்களுக்கும்தக்கஸ்தலங்களுமிருக்கின்றனவென்றுசாற்றிக்கொண்டுவந்த சதுர்ப்புயத்தனாச்சதுர்முகன்வணங்கிஎந்தையே! அடியேனுக்குத்தேவரீர்அனுக்கிரகத்தால்அஞ்ஞான இருள் அழிந்துவிட்டது. ஞானமுங்கண்ணுடிபோல் விளங்காநின்றது.

சந்தேகமனைத்துந் தொலைந்ததென்று தோத்திரம் புரிய, மற்றும் மாதவனார் மகிழ்வுடன் திருவாய் மலர்ந்தருளுகின்றனர்.

ஸ்ரீரங்கம் வேங்கடாசலம் அத்திகிரி நாராயணகிரி இந்நாகும் எமது சுயம்வியக்தஸ்தலங்களில் இஷ்டமானவை. அநேகவிதமானதடாகங்களுள்ளதைலகுண்டத்தின்கண் பொன்மயமானபவனத்தில் வீற்றிருக்கும்அநாதி வாசுதேவர்பின்புஒருகாரணத்தால்விபவவாசுதேவராய்விளங்கினும்,மற்றும் பூமண்டலவாசிகளைப்போஷிக்கும்பொருட்டுக்கிருபைபுரிந்துகலசாம்போதியினிடையில்கோபுரமணிமண்டபங்கள்அடர்ந்ததிருக்கோவிலில்பூமாதுபுதுவிமாதுடன்அனந்தசயனத்தின்மேல் அமர்ந்திருக்கின்றனர். பின்புஸ்ரீரங்கவாசிகளைப்பரிபாலிக்குமாறுதயையோடுபோந்துஅத்தலத்தில்சுபகரமானபுளினத்திடையில் சேஷபோகத்தில் அத்தேவிமாரோடும்சயனகோலமாய் வீற்றிருக்கின்றனர். பின்னும்பீதாம்பரதாரியாய்எல்லாவுலகங்களின்இதத்தின்பொருட்டு வேங்கடாசலத்தில் வீற்றிருக்கின்றனர். அன்றியும் அத்திகிரியின்மேல் சக்கராதி ஆயுதத்தோடு முநிவரும் அமரரும் சேவிக்க ஆனந்தத்தோடு விளங்காநின்றனர். மற்றும் விச்வாத்மாவும் விச்வகிருத்துமாய் விளங்கி நாராயணகிரியில் நாராயணனென்னும் திருநாமத்துடன்சங்கசக்ரதாதரராய் ஸ்ரீபூமிசகிதராய்வைனதேயரால் வணங்கப்பெற்று வருபவர்க்கு வாழ்வளித்து வாழ்ந்தருளுகின்றனர். இன்னும் நாராயணபகவான் சகலபூமண்டலத்திலும் வியாபித்து அவைகளுக்கு உள்ளும் புறம்புமாப் விளங்கி ஸர்வஸாக்ஷியாய் ஸகலத்தையும் கடாக்ஷித்துக் கொண்டிருக்கின்றனர் அப்பருவதம் ஆதியில் கிருதயுகத்தில் அயனால் பூஜிக்கப்பட்டு நாராயணகிரியென்றும் திரேதாயுகத்தில் சனகாதிகளால் அர்ச்சிக்கப்பட்டு வேதாசலமென்றும் துவாபரயுகத்தில் ராமகிருஷ்ணர்களால் ஆராதிக்கப்பெற்றயாதவகிரியென்றும் கலியுகத்தில் யதீந்திரரால் ஆராதிக்கப்பட்டு யதிசைலமென்றும் பேர்பெறுகின்றது. வாராய்திசைமுகனே ! அவ்விதமானயாம் இவ்விதம் யுகந்தோறும் உதயஞ்செய்கின்றோம். அத்தகைய நாராயணகிரிஅழியாததும்அநாதியுமாய்எமக்குமுக்கியபரமபதமானபூவைகுண்டமென்றும்புலப்படுகின்றது. இவ்வண்ணம்நாராயணபகவானாகியயாம்நாராயணகிரியின் சிகரத்தில் கோபுராதிகளால் விளங்குங்கோயிலில்சேஷபோகாசனத்தில் சீதேவிபூதேவிகளுடன் பூசுரோத்தமர் சேவிக்கவும், சண்டாதிதுவாரபாலரும் குமுதாதி பூதேசரும் ஸேநாநாதரும் வைநதேயனும் சூழ்ந்து வணங்கவும், ஆனந்தத்தோடு நித்யஸ்ரீமானாய் ஒருவராலும்வெல்லவொண்ணாமலும் அழியாமலும் சாச்வதமாய் வீற்றிருக்கின்றோம்.

எமதின்வழிவருமிந்திரன்முதலானவரெவரும்
அமுதத்தொடுபாலித்திடுமனிருத்தனுமகிழ்வாய்
மூமதக்களிறுலவும்மரிசைலத்தினுமுநிவர்
அமரும்மெதுசைலத்தினுமரங்கத்தினுமிலகும். ... ... (க)

எம்மையந்தணர்களர்னுமெழிற்குருவிறைவரானும்
நன்மையேநவிலும்பஞ்சராத்திரநடையினனும்
வெம்மையைம்புலனைப்போக்கும்விழுமியபனுவலானும்
செம்மையினிதமும்பூசைசெய்குவித்திடுவன்மாதோ. ... ... (உ)

(இ-ள்.) எமதுவம்சஸ்தரான இந்திரன் முதலியயாவரும் பெருமையோடு பரிபாலிக்கின்ற அனிருத்தரும்மகிழ்ச்சியோடுமூன்றுமதங்களையுடைய யானைகள் சஞ்சரிக்கின்ற தாழ்வரையையுடைய அரிசைலத்திலும் முநிவர்கள் அடைந்துள்ள யாதவகிரியிலும் ஸ்ரீரங்கத்திலும் விளங்காநின்ற, எம்மைப்பிராம்மணச்ரேஷ்டர்களாலும் மேன்மைவாய்ந்த ஆசார்யச்ரேஷ்டமகளாலும் தத்துவத்தையுணர்த்துகின்ற பாஞ்சராத்ரவிதியினாலும்கொடுமையயாயுள்ள ஐம்புலவாசையைப்போக்கும் மேலான நூல்களாலும் செம்மையாய்த்தினந்தோறும் ஆராதனம்செய்விக்கின்றார்

ஸ்ரீயாதவகிரிமாகாத்மியம்



அரும்பத விளக்கம்.

அக்காரம்	சர்க்கரை
அங்கணம்	முற்றம்
அசனம்	சோறு
அஞ்சனவரை	நீலமலை
அடிசில்	சோறு
அதுகாறும்	அதுவரைக்கும்
அந்தேவாசியர்	சிஷ்யர்கள்
அபிதானம்	பேர்
அமைச்சர்	மந்திரிமார்
அம்பி	ஓடம்
அரம்பையர்	தெய்வப்பெண்கள்
ஹரிணங்கள்	மான்கள்
அலஸன்	மந்தன்
அலமந்து	வருந்தி
அவித்தை	அஞ்ஞானம்
அறம்	தர்மம்
அறைந்தனர்	சொன்னார்கள்
அனவரதம்	எப்போதும்
அனுசன்	தம்பி
அனுபநீதன்	உபநயநமாகாதவன்
ஆகண்டலன்	இந்திரன்
ஆகமனம்	வருகை
ஆமோதம்	சந்தோஷம்
ஆம்பிரம்	மாமரம்
ஆரகூடம்	பித்தளை
ஆரநாளம்	கஞ்சி
ஆனகம்	தம்பட்டம்
ஆனனம்	முகம்
இகந்து	நீங்கி
இந்திரை	இலக்குமி
உதகம்	ஜலம்
உதரம்	வயிறு
உபவனம்	தோட்டம்
உரகசாயி	மகாவிஷ்ணு
எகினம்	அன்னப்பக்ஷி
ஏமகூடம்	பொன்மலை
ஏனம்	பன்றி
ஓதிமம்	அன்னப்புள்
கடிசூத்ரம்	அரைநாண்
கடீயந்த்ரம்	ஏற்றம்
கமலாசனன்	பிரமன்
கமலை	இலக்குமி
கம்பு	சங்கு
கரணங்கள்	மநோவாக்குக்காயம்
கரவீரம்	அலரி
கர்ணிகை	தாமரைப்பூங்கொட்டை
கலசாம்போதி	பாற்கடல்
கல்லாரம்	குவளைமலர்
கல்மஷம்	அழுக்கு
கவரி	சமாரம்
காதிநந்தனர்	விசுவாமித்திரர்
காராகிருகம்	சிறைச்சாலை
கிருஷ்ணாஜினம்	மான்தோல்
குசம்	தர்பப்புல்
குசேசயம்	தாமரை
குடில்	குடிசை
குண்டிகை	கமண்டல
குழவி	குழந்தை
குழாம்	கூட்டம்
கொலைஞன்	வேடன்
சசாங்கன்	சந்திரன்
சட்டுவம்	கறண்டி
சமனன்	இயமன்
சராயு	கருப்பை
ஸர்வதோமுகன்	எங்குமுள்ளவன்
சலபம்	விளக்குவீழ்பூச்சி
சளுகம்	அட்டை
சாகேதபுரி	அயோத்தியாபுரி
ஜாந்நவி	கங்கை
சாரவித்துக்கள்	பெரியோர்கள்
சாரிகைக்குலம்	நாணகவாய்ப்புள் (ளின்கூட்டம்)
சிஞ்சிதம்	ஆபரணவோசை
சிரகாலம்	வெகுகாலம்
சிலதிங்கள்	சிலமாசம்
சினம்	கோபம்
சுவா	நாய்
சுடர்	விளக்கு
சூர்ப்பம்	முறம்
செந்தீவளர்ப்பவர்	பிராம்மணர்
சேஷசேஷாசனர்	அனந்தகருடர்கள்
சோபானம்	படி

அரும்பத விளக்கம்.

தசகண்டன் ராவணன்
தண்டலை தோப்பு
தண்டுலம் அரிசி
தம்பதிகள் நாயகியும்நாயகனும்
தரங்கிணி ஆறு
தாளம் முத்து
தளை விலங்கு
தாராமண்டலம் நக்ஷத்ரமண்டலம்
திந்திருணி புளி
திரை அலை
திலம் எள்
தீரம் கரை
துரகம் குதிரை
துருமம் விருக்ஷம்
தூரியம் வாத்தியம்
தெரிவை பெண்
தைன்னியம் தாழ்மை
தோயம் ஜலம்
தௌதம் சுத்தம்
நணுகி சார்ந்து
நன்காடு சுடுகாடு
நாசி மூக்கு
நாட்டுப்பெண் மருமகள்
நாவாய் ஓடம்
நாவிகர் ஓடம்செலுத்துவோர்
நான்குவர்க்கம் தர்மார்த்தகாம (மோக்ஷம்)
நிகமங்கள் வேதங்கள்
நிச்சலும் தினமும்
நிச்வாஸம் மூச்சுவிடல்
நிம்பம் வேம்பு
நீராஜனவிதி திருவ்ஷ்டி கழித்தல்
நீர்நிலை குளம், ஏரி
பகடு யானை
பஞ்சானனம் சிங்கம்
படலை மாலை
படர்கள் சேவகர்கள்
படிமிசை பூமியில்
பதிதர் இழிந்தவர்
பதுமை இலக்குமி
பதேபதே அடிக்கடி
பயோதரம் ஸ்தனம், மேகம்
பருவரல் துன்பம்
பருப்பதம் மலை
பவசாகரம் ஸம்ஸாரக்கடல்
பவனம் காற்று
பனிகிரணன் சந்திரன்
பன்னகம் பாம்பு
பாகசாசனன் இந்திரன்
பாகீரதி கங்கை
பாங்கர் பக்கம்
பாதபம் மரம்
பாரிசம் பக்கம்
பார்த்திபன் அரசன்
பாவனம் பரிசுத்தம்
பாளிதம் சோறு
பிதிர்பதி யமன்
பிராகாரம் மதிள்
பீடு பெருமை
பீதி பயம்
புராதனம் பழமை
புராரி சிவன்
புருகூதன் இந்திரன்
புலப்படல் தோன்றல்
புலால் மாம்ஸம்
புறம்பு வெளி
புனிதர் சுத்தமானவர்
பூசுரர் பிராமணர்
பூதரம் மலை
பெட்பு ஆசை
பெருமகன் அரசன்
பைரவம் பயம்
பொதுவர் இடையர்
பொள்ளென சீக்கிரமாக
பொற்படாம் பொன்வஸ்திரம்
போதம் ஞானம்
போனகம் சாப்பாடு
மகம் யாகம்
மகிபன் அரசன்
மகோததி சமுத்திரம்
மங்களதேவதை இலக்குமி
மஞ்சரி பூங்கொத்து

அரும்பத விளக்கம்.

மஞ்சம்	படுக்கை
மதலை	பிள்ளை
மதுகரம்	வண்டு
மந்தாகினி	கங்கை
மயூரம்	மயில்
மருத்துவன்	இந்திரன்
மர்க்கடம்	குரங்கு
மலைக்குவடு	மலைச்சிகரம்
மறம்	பாவம், கோபம்
மாகம்	ஆகாயம்
மாகந்தமலர்	மாம்பூ
மாஷம்	உளுந்து
மாருதம்	காற்று
மானினி	பெண்
மிருத்திகை	மண்
முதமுற்று	சந்தோஷித்து
முரசு	பேரிகை
முழவு	மத்தளம்
மேதாவி	புத்திசாலி
வடுரூபி	பிரும்மசாரி
வதனம்	முகம்
வந்தியர்	புகழ்பாடுவோர்
வரநதி	கங்கை
வலீமுகம்	குரங்கு
வளவு	வீடு
வறியவன்	தரித்திரன்
வன்மீகம்	புற்று
வாஞ்சை	ஆசை
வார்த்தாவிருததி	வம்பளப்பவன்
விபினம்	காடு
விம்மிதம்	அதிசயம்
வியப்பு	அதிசயம்
வியாதன்	வேடன்
வில்விழவு	வில்திருநாள்
விழுப்பம்	மேன்மை
விழுமியோர்	மேலோர்
வின்மணி	காந்தியுள்ளரத்நம்

அரும்பதவிளக்கம். முற்றுப் பெற்றது.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௩	௧௨	மதியங்கர	மகதியங்கர
௧௧	௩௫	விணுகானம்	வீணுகானம்
௧௧	௨௧	ஒருங்கு	ஒருங்கு
௧௨	௧	கேட்க்	கேட்க
௧௨	௫	பருபத	பருப்பத
௨௨	௨	பெற்றுக்கொண்டு	பெற்றுக்கொண்டு
௨௧	௨௩	மனிதர்கு	மனிதர்க்கு
௨௪	௧௩	உத்தபல	உத்தமபல
௧௨	௩அ	சுருதியேனெ	சுருதியோனெ
௧௧	௨௪	ஒத்திரு	ஒத்திரு
௪௧	௨	தண்னே	தன்னே
௫எ	௨	இங்குவந்தவாக்கியமேவந்ததுகாண்க	
௪௨	௧௦	வடத்தைச்சாதி	வடத்தைச்சாத்தி
௪௧	௨	மகிழச்சி	மகிழ்ச்சி
௪௧	௧௪	அசேஷ்	அசேஷ
௪௧	௧௪	சமுகம்	சமூகம்
எ௪	௨௦	மலந்தருளி	மலர்ந்தருளி
எஎ	௧	மறந்திவேர்	மறந்திடுவர்
எ௧	௧எ	ஒருமிக்க	ஒருமிக்க
அ௧	௧	பொருனனைத்தை	பொருளனைத்தை
௧௩	எ	வினயவற்றை	வினவியவற்றை
௧௪	௨௦	பாகச்சானன்	பாகசாசனன்
௧௪	௧௧	கார்காலமோம்	கார்காலமேகம்
௧எ	௧௧	னதிக்வள்ளி	னதிகவள்ளி
௩௪	௧	கிரியிலேயெ	கிரியிலேயே
௩அ	எ	லகங்களுக்கு	மூவுலகங்களுக்கு
௩அ	எ	மகிழ்ச்சிமூவுயோடு	மகிழ்சசியோடு
௩௦௫	௧௦	வீற்றருந்து	வீற்றிருந்து
௩௦அ	௩	ஒதீப்திமானே	ஒசத்யகாமனே
௩௧௧	எ	சத்தியகமானுக்கு	சத்யகாமனுக்கு
௩௧௪	ச	இருக்கின்ற	இறக்கின்ற